

# தேசிய இயக்கம்

# துயிலெழல்

வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய இயக்கம் துயிலெழல்

வேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தேசிய இயக்கம் துயிலெழல் |
| ஆசிரியர் | : | வேலன் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு<br>திருவள்ளுவர் ஆண்டு<br>2048 வைகாசி |
| நூல் அளவு | : | 140mm X 220mm |
| அச்சு எழுத்து அளவு | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | 160 பக்கங்கள் |
| வெளியீடு | : | புதிய குரல் வெளியீட்டகம் |
| உரிமை | : | ஆசிரியர் |
| விலை | : | 100/- (இந்திய ரூபாய்) |

புதிய குரல் வெளியீட்டகத்தின்
3ஆவது வெளியீடு

https://www.facebook.com/Tholar.Velan
http://velanவேலன்.blogspot.fr/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


என்னுரை 6

1.1 அறிமுகம் 9

1.2 உலகக் கண்ணோட்டம் 13

2. வரையறைகளின் காலப்பொருத்தம் பற்றி!!!

2.1 வரைவிலக்கணம் பற்றி 18

2.2 இனம் பற்றிய புரிதல் 21

2.3 சமூக ஒழுங்கமைவுகள்

2.3.1 நான்கு உற்பத்தி முறை 23

2.3.2 குடும்ப அமைப்பு 25

2.3.3 குலச்சமுதாயம் 27

2.3.4 வேலைப்பிரிவினை 30

2.3.5 நிலப்பிரபுத்துவத்தின் காலகட்டம் 33

2.3.6 தேசிய இனம் 38

2.3.7 இனங்கள் "20" சரியான வரையறையா? 41

2.3.8 பாகுபாட்டுச் சிந்தனைகள் 45

2.3.9 இலங்கையில் என்ன நடக்கின்றது 49

3. 'தேசியவாதம்' - 'சாதியவாதம்' - 'இனவெறி'

3.1 தேசத்தின் உருவாக்கம் 56

3.2 சுயநிர்ணய உரிமை 64

3.3 தேசியத்திற்கு எதிர் வாதங்கள்

3.3.1 தீவிரவெறி என்றால் என்ன? 71

3.3.2 சாதியவாதம் 78

3.3.3 தேசியவாதக் கோசங்கள் 85

3.3.4 தேசியச் சின்னம் - குறிப்பான 91

3.3.5 தமிழ் தேசியவாதம் 96

3.3.6 பாட்டாளிவர்க்க ஐக்கியத்தின் பெயரால் 99



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.3.7 அடையாள எதிர்வினைகள் 101
3.3.8 முள்ளிவாய்காலில் வீழ்ச்சி 104
3.3.9 போராடுவது பயங்கரவாதம் 107
3.3.10 பூர்சுவா தேசியவாதத்தின் போக்கு 109
3.3.11 இணக்க அரசியல் 111
3.3.12 நிறுவனக்கட்டமைப்பை எதிர்ப்பது 115

4. சிறுபான்மை தேசிய இனம் அல்ல அது ஒருதேசமே!!! 121
4.1 ஏகாதிபத்தியங்களை எதிர்ப்பது பற்றி 123
4.2 தோழர் லெனினின் இயங்கியல் முடிவு 125
4.3 தமிழ் தேசத்தின் போராட்டம் 131
4.4 தேசிய இனங்களை அழிப்பது 133
4.5 சிங்கள மக்களிடம் செல்ல வேண்டிய அவசியம் 139
4.6 "இனப்பகமை" 143
4.7 வரலாற்றுப் போக்கில் 146

5 சமூக மாற்றமும் தேசிய உரிமையும் 149

6 இறுதியாக 155
உசாத்துணை157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**சமர்ப்பணம்**

**சோவியத் புரட்சி**

**மாவீரர்களுக்கு!!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

இந்த ஆக்கம் என்பது குறிப்பாக நமது வாழ்வின் காலத்தின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகளை வெளிப்படுத்துவதாகும். இலங்கையில் பல போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றது.

இலங்கையில் நடைபெற்ற போராட்டங்கள் அனைத்தும் வெற்றிபெற முடியவில்லை. ஆனால் இலங்கையில் பலமாற்றங்களை ஏற்படுத்தித் தான் இருக்கின்றது. இலங்கையில் நடைபெற்ற போராட்டங்களின் தோல்வி என்பது இன்னொரு போராட்டம் நடைபெறக் கூடாது என்பதல்ல. அது ஆயுதப் போராட்டமாகவோ அல்லது வேறொரு வடிவத்திலோ அமையத் தான் போகின்றது. எவ்வகையான ஆயுதம் ஏந்த வேண்டும் என எதிரிகளே தீர்மானிக்கின்றார்கள். தமிழகத்தின் தை எழுச்சிக்குப் பின்னர் மக்கள் போராட்டங்களை நடத்துகின்றார்கள். இவைகள் ஒரு மாற்றமேயாகும். சமூகத்திற்கு விழிப்புணர்வு (COLLECTIVE CONSCIOUSNESS) ஏற்படுத்துவதன் ஊடாக சமூக மாற்றத்திற்கான போராட்டத்தை துரிதப்படுத்த முடியும். சமூக விழிப்புணர்வு என்பது ஒடுக்கும் தேசியத்தின் விடுதலை, சமூக விடுதலை, சர்வதேசிய ஒப்புறவு உயர்ந்த ஜனநாயக விழுமியங்களை நோக்கியதாக அமைதல் வேண்டும்.

மனித குலமானது வர்க்கங்களிடையே போராட்டங்கள் நடத்தியே ஒவ்வொரு கட்டத்தையும் நகர்த்தி வந்துள்ளது. 1970களில் இருந்து 2009 வரையில் மூன்று ஆயுதப்போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றது. இந்தப் போராட்டங்களின் தோல்விகளில் இருந்து பாடம் கற்பதுதான் புரட்சியின் வெற்றிக்கான முதல் படியாகும். தோல்வி மனப்பான்மையை வளர்ப்பதன் ஊடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கப் போராட்டத்தினை முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஏற்ப வழிநடத்துவது, பாட்டாளி வர்க்கத்திற்கு ஏற்ப வழிநடத்துவது என்ற இரண்டு கூறுகளுக்கிடையே தான் மாறுபாடுகள் இருக்கின்றது.

போராட்டத்தின் பாதை என்பது தலைமைதாங்கும் வர்க்கத்தின் பிரதிநிதித்துவம், சிந்தாந்தம் என்பது தான் வெற்றிப் பாதையை தீர்மானிக்கும். இன்று புரட்சி பேசிக் கொண்டே உழைக்கும் மக்களின் நலனின் என்பதற்கு அப்பால் பெருந் தேசியத்தினதும், முதலாளிய நலனின் அடிப்படையில் விலாங்கு மீன்களாகச் செயற்படும் சக்திகளின் செயல்கள் தான் உழைக்கும் வர்க்கத்தின் முற்போக்குச் சக்திகள் எதிர்க்கொள்ளும் பெரும் சவாலாக இருக்கின்றது.

இன்றையச் சமூகக்கட்டமைப்பு சமச்சீரற்ற சமூக விஞ்ஞான ஆய்வும், அறிவியல் ஆய்வு இல்லாத நிலையில் சில குறிப்பிட்ட நபர்களின் கருத்துருவாக்கம் சமூகத்தில் தாக்கத்தினை ஏற்படுத்த முடிகின்றது. இதனை எதிர்கொள்வது என்பது இலகுவான காரியம் இல்லைத் தான். ஆனால் இதனை எதிர்க்கொள்வதற்கான ஒரு அமைப்பு என்பது அவசியமாகும். புரட்சியை நடத்துவதற்கு மாத்திரம் அல்ல. புரட்சிகர செய்தியை அறிவிப்பதற்கும் ஒரு அமைப்பு அவசியமானதாகும்.

அமைப்புக்களே கருத்துருவாக்கத்தை ஏற்படுத்த முடிகின்ற வேளை அவர்களை அணிதிரட்டவும் முடியும். தனிமனிதர்களின் செயற்பாடுகள், கருத்துக்கள் தனிமனிதர்களுடன் முடிந்து விடுகின்றவையாகும்.

ஆனால் ஒரு அமைப்பே கருத்தை தொடர்ந்து சுமந்து கொண்டு செல்கின்ற ஊடகமாகவும், செயற்பாட்டுக் காரியவாதியாகவும் இருக்க முடியும் தனிமனிதர்களின் செயற் பாடுகள் யார் உயர்ந்த கோட்பாட்டுவாதிகள் என்பதற்கு அப்பால் முன்செல்ல முடியாது. இந்தச் சமூக அவலம் என்பது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. மேற்கண்ட கருத்து எனது முதல் புத்தகத்தில் முன்னுரையாக குறிப்பிட்டிருந்தது. இதுவே 15 வருடங்களின் பின்னரும் தொடர் நிலையாக இருக்கின்றது. இயங்கியல் அணுகுமுறையில் போதிய பரீட்சையம் அற்ற எழுத்தாளர்கள் தான் அதிகமாக உள்ளார்கள். மூன்று தத்துவக் கூறுகளை தவிர்த்த அணுகுமுறை மார்க்சியப் பார்வையாக இருக்க முடியாது.

இது தேசிய இனப்பிரச்சனையை மையமாகக் கொண்ட ஆக்கமாகும். இலங்கை சமூகத்திற்கிடையே இருக்கின்ற பிரதான முரண்பாடாகும். இது குறிப்பாக வர்க்கங்களின் வளர்ச்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கில் அமைந்தாகும். ஆட்சியதிகாரத்திற்கான புதிய நிறுவனக் கட்டமைப்பை கோரி இருப்பதாகும். எனவே இது ஒன்றும் தமிழ் "இனவாதம்"மாத்திரம் சம்பந்தப்பட்ட பிரச்சனை அல்ல என்பதை கட்டாயம் மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட வேண்டும். மார்க்சியத்தினை அரைகுறையாக புரிந்து கொண்ட திரிபுக் கருத்துக்களை மார்க்சியமாக எடுத்துக் கொள்ளும் பொதுப்புத்தி எங்கும் பரவியிருக்கின்றது.

சமூக மாற்றத்திற்கு உழைக்க வேண்டுமென்றால் சவால்களை எதிர்க்கொள்ள வேண்டும், எதனையும் கேள்விக் குட்படுத்தி சிந்திக்கும் புதிய சமூக உறுப்பினர்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். சுயாதீனமான சமூக உறுப்பினர்களை சமூக விஞ்ஞான ரீதியாக சிந்திக்கும் சூழலையும் சமூகக் கட்டமைப்பையும் உருவாக்க என்னாலான சிறு பங்களிப்பு இதுவாகும்.

இப்புத்தகத்தில் வெவ்வேறு காலப்பகுதியில் எழுதப்பட்டவை தொகுக்கப்படுகின்றன. வரையறைபற்றிய பிரச்சனை, சிறுபான்மை அல்ல ஒரு தேசமே, தேசிய - மத - சாதி வெறிகள் பற்றி ஒன்றுடன் ஒன்று தொடர்பு இருப்பதால் இதில் தொகுப்பானது பொருத்தமாக இருக்கும். தலைப்புக்களை ஒப்பிட்டு வாசிப்பது அவசியமாகும். இதேவேளை தேசிய இயக்கங்களின் காலம் என்ற முன்னைய புத்தகத்திற்கு முன்னர் இந்த புத்தகம் வெளிவந்திருக்க வேண்டும். அந்தப் புத்கத்தில் உள்ள பலவற்றிற்கு விளக்கம் இதில் உள்ளது. முடிந்தால் அதனையும் சேர்த்து வாசிப்பது நலம். சில தலைப்புக்களில் ஒரே விடயங்கள் திரும்பத் திரும்ப எழுதப்பட்டிருக்கும். கட்டுரை தவறான விளக்கம் கொடுக்கும் என்பதால் அகற்றவில்லை.

இந்த ஆய்வுக் கட்டுரை என்பது எனது சொந்தக் கண்டுபிடிப்பு எதுவும் இல்லை. எமது முன்னோர்கள் கற்பித்தவற்றை ஒன்றாக குவித்து உங்கள் முன்வைப்பதைத் தான் செய்திருக்கின்றேன். இதில் தவறு இருக்குமானால் முழுப் பொறுப்பும் என்னுடையதே. இதற்கான விமர்சனத்தை தாராளமாக முன்வையுங்கள். விமர்சனங்கள் கற்றல் கற்பித்தல் என்ற நிலையில் இருந்து அணுகும் போது சமூகத்திற்கு முன்னே ஒரு தெளிந்த பார்வையைக் கொடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.1 அறிமுகம்

எந்த ஆய்வும் முடிந்த முடிவில் இருந்து, ஆய்வுகள் முடிவில் இருந்தும் தொடர்ந்துவிட முடியாது. மனித வர்க்கத்தின் சுரண்டல் என்பது சர்வம் தழுவியதாக இருப்பதும், சர்வதேசம் முழுவதும் நடைபெற புரட்சி ஒரே நேரத்தில் நடைபெறவேண்டும் என்பது வேவ்வேறானவையாகும். ஏகபோக முதலாளித்துவ உலக ஒழுங்கில் தேசங்களின் சந்தையை மறுப்பதும், தேசங்களின் இருப்பை இல்லாதாக்குவதற்கும் எதிரானதாகும்.

தேசிய இன வாழ்க்கையும் தேசிய இன இயக்கங்கள் துயிலெழுதலும், எல்லா விதமான தேசிய இன ஒடுக்குமுறைக்கும் எதிராய் போராட்டம் மூளுதலும், தேசிய இன அரசுகள் அமைக்கப்படுதலும், இரண்டாவது - எல்லா வடிவங்களிலும் தேசிய இனங்களிடையே ஒட்டுறவு வளர்ந்து மேலும் மேலும் துரிதமாதலும், தேசிய இனப்பிரிவினைச் சுவர்கள் தகர்க்கப்படுதலும், மூலதனத்தின் பொதுவாகப் பொருளாதார வாழ்வின், அரசியல் விஞ்ஞானம் முதலானவற்றின் சர்வதேச ஒற்றுமை உண்டாக்கப்படுதலும் இவ்விரு போக்குகளும் முதலாளித்துவத்துக் குரிய உலகம் தழுவிய விதியாகும்.

இதனை மறுத்த வெவ்வேறான புரிதல்களை, நலன்களைக் கொண்டும், மற்றவர்களை முத்திரை குத்துவதும், திட்டித் தீர்ப்பதன் ஊடாக தம்மிடம் உள்ள அரசியல் திணிக்கப்படுகின்றது. இது தம்மையே புரட்சியாளர்களாக பிரகட -னப்படுத்துகின்ற சிங்கள - தமிழ் அன்பர்களிடம் இருக்கின்றது. தேசியக் கட்டத்தை மறுக்கின்ற இனமையவாதமாகவும் (Ethnocentrism) - மற்றொன்று நாம் பெருந்தேசியவாதியில்லை எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள் என்ற பச்சாத்தாப சிந்தனை வடிவம் முன்னிறுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவான ரொட்கிய கோட்பாடுகளைக் கொண்டதாகவும் இருக்கின்றது. இலங்கை அரசியல் வரலாற்றை மார்க்சிய அணுகு முறை ஊடாக முறையான ஆய்வு முடிவை கொடுக்க முடியும். கடந்தகால பார்வைகள் தேசிய இனங்கள் தேசமாக வளர்கின்றது என்ற இயங்கியலானது விளங்கிய அணுகுமுறையை கொண்டதாக இருக்கவில்லை என்பதைத் தான் வரலாறு மறுபடியும் நிரூபிக்கின்றது. முள்ளிவாய்காலில் நடந்து முடிந்த யுத்தம் என்பது ஒரு தேச(nation)த்தினை இனவழிப்பு செய்ததும், ஆக்கிரமிப்பின் மூலம் தான் முடிவிற்கு வந்தது. இதனை ஏற்க மறுக்கும் அரசியல் சிந்தனையாளர்கள் பலர் இருக்கின்றார்கள். சொத்துடமை வர்க்கம் மாத்திரம் பாதிக்கப்படுவதாக திரிபுவாதிகள் கற்பனை செய்கின் றார்கள் போலும், நேசன்- தேசத்திற்கான ஆட்சியுரிமையை மறுத்து என்பதற்கும் சைவ- வேளாள - தமிழ் சிந்தனைக்கு தொடர்புபடுத்தி திரிக்கப்படுகின்றது.

மாறாக தேசத்தின் சுயநிர்ணயத்தை அங்கீகரிப்பது என்பது புதிய ஜனநாயகப் புரட்சியின் முக்கிய நிபந்தனையாக இருக்கின்றது. தேசங்களின் ஆட்சியதிகாரத்திற்கான போராட்டத்தை புலியிசமாகவும், பிரிவினைவாதமாக, இனப்பகையானதாக முள்ளி வாய்க்கால் வீழ்ச்சியின் பின்னர் இலக்கிவாதிகளால் வேகமாக பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இது பேரினவாத கருத்துரு வாக்கிகளின் சிந்தனை வெளியீட்டின் தாக்கமேயாகும்.

சாதியத்தினையும், தேசத்தினையும் இணைத்து செய்யும் நுண்ணரசியல் என்பது எப்பவும் உழைக்கும் மக்களின் நலனுக்கு ஆதரவாக இருக்கமுடியாது. தேசிய இனரீதியான ஒடுக்குமுறைக் கெதிராக போராட வேண்டும் என்றால் அகமுரண்பாடுகளை இல்லா தொழித்த பின்பு தான் போராட முடியும் என்பது இயங்கியல் மறுப்பாகும். இது அகமுரண்பாட்டை முன்னிறுத்தும் அடையாள அரசியலின் எச்சமே.

ஏகபோக முதலாளித்துவத்தினை பாதுகாக்கும் பொருட்டு உலக வலையத்தினால் கட்டமைப்பில் சீரமைப்புத் திட்ட (structural adjustment programs) நிகழ்ச்சிக்கு ஒப்ப வேலைப்பிரிவினையில் செயற்படுகின்றது.

அதாவது முதலாளித்துவ பொருளாதார அமைப்பை பாதுகாத்துக் கொள்வதற்கு பற்பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பல்வேறு வகையான வேலைப்பிரிவினையை கொண்டு செயற்படுகின்றார்கள். இவர்களில் கருத்துருவாக்கிகள், ஊடகம், படைப்பாளிகள், அரச இயந்திரம் அனைத்தும் அடங்கும்.

பின்னவீனத்துவ சிந்தனைப் போக்கில் அமைந்த செயற்பாடுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த அணுகு முறைப் போக்கை இடதுசாரியமாக நமக்கு முன்னிறுத்தப் படுகின்றது.

இந்தப் போக்கிற்கு எதிரான அரசியல் விவாதத்திற்கான வெற்றிடம் கொண்டே உள்ளது. கடந்த 30 வருட கால வரலாற்றுக் காலத்தில் மார்க்சிய அணுகுமுறைபற்றிய தேடல்கள் என்பது கிளிப்பிள்ளைகள் போல ஒப்பிக்கப்பட்டதாகவே இருந்துள்ளது. மார்க்சிய லெனினிய அணுகுமுறையை வளர்த்துக் கொள்ளும் வகையாக சமூக ஆய்வுகள் நலமடிக்கப்பட்டுக் கொண்டே வந்துள்ளது.

வெவ்வேறு மனிதர்கள் தமது வல்லமைக்குள்ளான ஆய்வுமுறைகளை முன்வைத்து கொள்கின்ற வேளையில் இயங்கியல் ரீதியாக அணுகப்படாமல் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டுள்ளது. மார்க்சிய அணுகுமுறைக்கு அப்பால் தன்னார்வ அணுகுமுறை, சிந்தனை முறை முன்னிறுத்தப் பட்டுள்ளது. மறுபுறத்தே கலாசாலை மார்க்சிய அணுகுமுறை வடிவமும் முன்னிறுத்தப்பட்டு அதுவே புரட்சிகர மார்க்சியமாக முன்னிறுத்தப்பட்டும் வருகின்றது.

மார்க்சிய அணுகுமுறையை நிராகரித்துக் கொள்வதினால் தனிமனித புரிதல்களே மார்க்சியமாக முன்னிறுத்தப்படுகின்றது. இந்த சமூக அமைப்பு தனிமனிதர்களை தனித்தீவுகளாகக் கொண்ட சிந்தனை மையங்களை உருவாக்கிக் கொள்கின்றது. இங்கு தனிமனித புரிதல்களை முன்னிறுத்துகின்றது. தனிமனித புரிதல்களை முன்னிறுத்தும் போக்கும் தனிமனித மையப்போக்கும் ஆழுமை செலுத்துகின்ற சமூக அமைப்பில் தொடர்ச்சியாக ஒப்புறவு கொண்ட சமூக மனிதர்களின் கூட்டை உடைக்கின்றது. இதேவேளை முதலாளித்துவப் புரட்சி நடைபெற்றிராத சமூகத்தில் ஐரோப்பிய மையவாத, தாராளவாத சிந்தனைக் கண்ணோட்ட அளவுகோள் பயன்படுத்தப்படுகின்றது. இது இயங்கியலுக்கு புறம்பான கண்ணோட்டமாகும். பொருளாதாரத்தை மாற்றியமைக்கக் கூடிய புரட்சிகள் வெடிப்பதை தவிர்ப்பதும் அதன் நிபந்தனையில் இருந்து பல வழிகளிலும் செயற்பட்டுக் கொண்டுள்ளனர். இவர்களும் பாட்டாளி வர்க்கப் புரட்சியென்று கூறிக்கொண்டு சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவும் இல்லாமல் அடையாள அரசியலை முன்னிறுத்துகின்றனர். ஆகவே சமூகமாற்றத்தையும்,வர்க்க விடுதலையையும் வேண்டி நிற்பவர்கள் வெகுநிதானமாக கற்றலிலும் கற்பித்தலிலும் ஈடுபடுதல் அவசியமானதாகும். ஈழ தேசத்தின் போராட்டம் என்பது சமூக மாற்றத்துடன் இணைத்த ஆட்சியதிகாரத்திற்கான போராட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால அரசியல் தவறுகள் பல மோசமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இன்று "இனத்துவேச"த்திற்கு எதிரான சட்டவாக்கம் என்பது சிறிலங்கா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒடுக்கப்படும் மக்களின் உரிமைக்கான போராட்டத்தினை பயங்கரவாதமாக அடக்கியது போல 'இனத்துவேசத்தின்" பெயரில் ஒடுக்குமுறை தொடர வழிவகுக்கும்.

இங்கு வெறுப்பு அரசியல் கட்டுப்பாடு என்று திரிக்கப்படுகின்றது. ஆனால் ஒடுக்கப்படுபவர்களின் குரல் என்பது ஒடுக்குமுறைக்கு எதிரானதாகும். இவை இரண்டு வித்தியாசமான எதிர்வினைகளை ஒன்றாக்கிவிடும் நுண்ணரசியல் ஆபத்தானதாகும். இவைகள் அடையாள அரசியல், இணக்க அரசியல், கனவான் அரசியல், அரசியல் நீங்கம் என பல முனைகளின் வெளிப்படுகின்ற போது சேடம் இழுக்கின்ற சுயநிர்ணயத்திற்கான போராட்டத்தினை சிதைப்பதை தந்திரோபாயமாகக் கொண்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2 உலகக் கண்ணோட்டப் போக்கு

பலநாடுகளின் போராடுகின்ற மார்க்சிய அமைப்புக்கள் தோல்விக்கு உள்ளாகின்ற போதும் மீண்டும் மீண்டும் புத்துயிர் பெறுகின்றார்கள். மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்ராலின், மாவோ வழிவந்த சிந்தனைப் பள்ளிகளின் வழிவந்தவர்களே கொலம்பியா, பிலிப்பீன், நேபாளம், இந்தியா என்று தொடராக வீரியத்துடன் போராடுகின்றார்கள்.

இதன் படிப்பினையையும், புரட்சிகர அரசியலின் அவசியத்தையும் வெகுசனத் தளத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளது. ஈழப் போராட்டத் தலைமைக்கு புரட்சிகர மார்க்சிய அரசியல் இருந்திருக்குமானால் போராடிய நாட்டில் வேரோடு பிடிங்கியெறியப் பட்டிருக்கமாட்டார்கள். இங்கு புரட்சிகர அரசியல் என்பது புரட்சிக்கு அவசியமானது என்பதை முள்ளிவாய்க்கால் கொடுத்து விட்டுச் சென்ற பட்டறிவாக கொள்ள முடியும். பூர்சுவா தேசியவாதத்தில் இருந்து சமூக மாற்றத்தை நோக்கிய அரசியல் பாதையே முன்னால் உள்ள தெரிவாகும்.

முதலாளித்துவ (பூர்சுவா) தேசியவாதிகள் இடையில் சரணடைவர். ஆனால் புதிய சனநாயகப் புரட்சி இடையில் நின்றுவிடக் கூடாது. முதலாளித்துவ தேசியவாதிகளின் நலன்களுக்கு அப்பால் செல்ல வேண்டிருக்கின்றது. புதிய சனநாயகப் புரட்சியைப் பாதுகாப்பதும் முக்கியமானதாகும். முதலாளித்துவ தேசியவாதம் சரணடையும் அபாயம் இருக்கின்ற போது தேசிய ஒடுக்குமுறைக்கான போராட்டம் தொடர வேண்டும் என்றால் உழைப்பாளி வர்க்கத்தின் தலைமையில் போராட்டம் தொடரப்பட வேண்டும். புதிய சனநாயகப் புரட்சியில் தேசிய முதலாளி வர்க்க சிந்தனைப் பாங்கு முதன்மை எதிரியாக இருக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போவதில்லை. ஆனால் தரகும், வலதுசாரிய வர்க்கம் ஏகாதிபத்தியங்களிடம் சரணடையும். இதற்கு விழிப்பாக இருப்பது உழைப்பாளி வர்க்கத்தின் தேவையாகின்றது. ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் தலைமையானது இணக்க அரசியல், கனவான் (லொபி) அரசியல், அடையாள அரசியல், சட்டவாதம் என சமர அரசியல் முனைப்பில் ஈடுபட்டு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் உரிமைக்கான போராட்டத்தினை கேள்விக்குறியாக்குகின்றது.

தேசியத்தின் பெயரால் தரகு வர்க்கமே இன்றைய தலைமையைக் கொண்டிருப்பதும் அவர்களின் போக்கு விதேசிமாக இருக்கின்றது. தரகு வர்க்கத்திடம் ஆட்சியதிகாரம் பற்றிய கரிசனை இருக்கமாட்டாது. இன்று தலைமை வகுத்துள்ள தரகு வர்க்கம் தேசியமாக இருக்க முடியாது. இவர்களின் அரசியல் தவறுகளை தேசியவாதத்திற்கு உட்பட்டதாக வரையறுப்பது இயங்கியலாக முடியாது.

ஒடுக்கும் தேசமானது தன்னுடைய லங்கா தேசிய சிந்தனை எல்லைக்குள் தமது தேசிய இனமுதலாளி வர்க்கத்திற்கும், அதன் உயர்வர்க்கத்திற்கும் சலுகை கொடுத்து மற்றைய தேசிய இனத்தின் இருப்பை அழிக்கின்றது. உத்தியோகம், நிலம், மூலதனத்தின் பலம் என்பது பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பவே இருக்கும். மூலதனத்தின் பருமன் மாற்றமடையும். ஆனால் சந்தைக்கான தேவை என்பதும் தேசத்தின் ஆதாரமான பண்புகளில் ஒன்றாக இருக்கின்றது. தேசிய முதலாளிகளின் இருப்பு ஒன்றே தேசியத்திற்கான ஆதாரமாக தவறாக கற்பிக்கப்படுகின்றது. தேசிய இனவழிப்பை நிலம், பொருளாதாரம், கலாச்சாரம், பண்பாடு, மொழி என்பற்றில் பௌதீக ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்துகின்ற போது பாதிக்கப்படுவது அனைத்து வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுமே. இவ்வாறு பாதிக்கப்படும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் உழைப்பாளர் வர்க்கத்தவரிடையே பேரினவாதம் சந்தேகத்தை ஊட்டிக் கொண்டே இருக்கின்றது.

ஆட்சியதிகாரத்தைக் கொண்ட சிங்கள தேச ஒடுக்குமுறையாளர்கள் ஆட்சியை கைப்பற்றிக் கொள்ள முனையும் நடவடிக்கையாகும். சிங்கள தேசத்தில் ஆட்சியாளர்களாக வருவதற்கான போட்டியாகும். இந்தப் போட்டியில் ஆட்சியதிகாரம் அற்ற தமிழ் தேசம் தன்னை ஒடுக்குபவர்களுக்கு வாக்கு போடுவதேயாகும். போலி சனநாயகத்தை நிரூபிக்கவே தேர்தல் நடத்தப்படுவதன் ஊடாக தம்மை ஒடுக்க அனுமதிப்பத்திரம் கொடுக்கின்றார்கள். இவ்வாறு பெருந்தேசியவாதமும் தேசிய இனப்பற்றின் ஊடாக ஒடுக்குமுறையை மற்றைய தேசிய இனங்களின் மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துகின்றது. சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பான சமூகச் சிந்தனைகளிலும், ஆட்சியதிகாரத்திலும் நிறுவனமயப் பட்டுள்ளதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்சனையை முதலாளித்துவ ஜனநாயக உரிமை ஊடாக அணுகிடாது வெவ்வேறு மையப் போக்கில் இருந்து தேசிய இனப்பிரச்சனையை அணுகுகின்றார்கள். புதிய சனநாயகப் புரட்சிப் பாதை என்பது சிந்தனைப் பள்ளியில் அடிப்படையான மார்க்சிய- லெனினிய- மாவோ சிந்தனையாகும்.

இலங்கை போன்ற நாடுகளில் முதலாளித்துவம் என்பது தன்னியல்பாக வளர்ச்சியடையவில்லை. முதலாளித்துவ ஜனநாயகக் கடமை முற்றுப்பெறாத நிலையில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது.

புதிய ஜனநாயகப் புரட்சியான அகமுரண்பாடுகளை களைவதற்கும், அகமுரண்பாட்டிற்கு எதிரான போராட்டம் என்பது அவசியமானதாகும். அகமுரண்பாடுகளே முதன்மையானதாக ஊதிப்பெருக்கும் பின்னவீனத்துவச் சிந்தனை என்பது புறநிலையை புறக்கணித்துக் கொண்டு அடையாள அரசியலை முன்னிறுத்துவதாகும். இவர்களை இட்டு லெனின் எங்களுடைய போதனை, செயலுக்கு ஒரு வழி காட்டியே தவிர வறட்டுச் சூத்திரம் அல்ல என்கிறார் எங்கெல்ஸ் தம்மையும் புகழ் மிக்க தமது நண்பரையும் குறிக்கும் வண்ணம் எங்களுடையது என்கிறார். மார்க்சியத்தில் அடிக்கடி பலரும் மறந்துவிடும் ஓர் அம்சத்தைக் குறிப்பிடத்தகுந்த வலியுடனும் பொருள் நிறைவுடனும் இந்த ஒப்புயர்வற்ற வாசகம் வலியுறுத்துகிறது. இதை மறந்து விடுவதின் மூலமாக நாம் மார்க்சியத்தை ஒருதலைப்பட்சமான, உருக்குலைக் கப்பட்டதான, உயிரற்ற ஒன்றாய்த் திரித்துவிடுகிறோம்,

உயிர்த்தியங்கி வரும் உயிரை அதிலிருந்து பறித்து விடுகிறோம், மார்க்சியத்தின் மூலாதார கோட்பாட்டின் அடிப்படைகளை- அதாவது முரண்பாடுகள் நிறைந்தும் சர்வவியாபகமாயுமுள்ள சரித்திர வளர்ச்சியைப் பற்றிய போதனையாகிய இயக்கவியலை - தளர்த்திப் பலவீனப் படுத்துகிறோம், நமது சகாப்தத்தில் நம்முன்னுள்ள திட்டவட்டமான நடைமுறைக் கடமைகளுடன் வரலாற்றின் ஒவ்வொரு புதிய திருப்பத்தையும் தொடர்ந்து மாறும்படியான இந்தக் கடமைகளுடன் மார்க்சியத்துக்கு இருக்கும் தொடர்பை நாம் அறுத்தெறிகிறோம்." (ப.6 மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள்) இங்கு கருத்துமுதல்வாத, வர்ணாசிரம- மதவாத, சாதிய வெறி, பிரதேசவாதம் என்பது இந்தச் சமூகத்தில் நிகழும் பிற்போக்கு கருத்தியல்கள்- கருத்துமுதல்வாதம் என்பதுடன் இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கட்டுமானத்தின் உருவாக்கமாகும். இவை பழைய சமூகஉறவின் எச்சங்களாக தொடர்கின்றது. அரைநிலப்பிரபுத்துவ எச்சம் என்பது முதலாளித்துவ கட்டத்தினை அடைகின்ற போதும் தொடவே செய்யும்.

மனிதர்களின் வாழ்நிலை சிந்தனையை நிர்ணயிக்கின்றது அவர்களின் சமூக வாழ்நிலையே உணர்வுகளை நிர்ணயிக்கின்றதினால் பொருளாதாரத்தில் அமைந்த அரசியலும் உழைக்கும் மக்களின் அசைவியக்கத்தை தீர்மானிப்பதாக இருக்கின்றது. முள்ளிவாய்க்கால் , தேசிய இனவழிப்பில் அகப்பட்ட மக்களின் சிந்தனை வடிவம் என்பது இலகுவில் மாறக் கூடியது அல்ல. வீழ்த்தப்பட்ட தேசத்தின் எழுச்சி என்பது தவிர்க்க முடியாத அரசியல் நியதியாக இருக்கும். எந்தச் சிந்தனையும் முழுமையான மாற்றத்திற்கு உள்ளாக வேண்டுமென்றால் அதற்காக பொருளாதார அமைப்பு முறை மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும். இதனைத் தான் சோசலிச ஆட்சி கிடைத்த பின்னரும் வர்க்கப் போராட்டம் தொடர வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

தேசிய இனப்பிரச்சினையானது அடித்தளத்தில் ஏற்பட்ட முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சிப் போக்காகும். இது மேற்கட்டுமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்திவிடுகின்ற போது உருவாக்கப்படும் ஒரு ஜனநாயகக் கட்டமைப்பாகும். இங்கு தேசியம் என்பதை புனிதக் கட்டமைப்பாக்கலும் அதற்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்ட நிலையில் சுயநிர்ணயத்தை பிரிவினைவாதமாகக் பார்க்கப்படுகின்றது. ஒரு கட்சியின் வேலைத்திட்டத்தில் சுயநிர்ணயத்தைப் பற்றிய கருத்தாக்கம் என்ன உள்ளது என்ற அடிப்படையில் தான் விமர்சிக்கவோ அல்லது கருத்தாக்கத்தினை வைக்கவோ முடியும்.

ஒரு அமைப்பின் வேலைத்திட்டத்திற்கு அப்பால் வைக்கப்படும் கருத்துக்கள் இரட்டைத் தன்மையாக இருக்கமுடியாது. அதாவது சிங்கள் தேசத்திற்கு ஒரு நிலைப்பாடு மற்றைய தேசிய இனங்களுக்கு வேறொரு நிலைப்பாடு என வெவ்வேறு முகத்தினை கட்சி கொண்டிருக்க முடியாது. இங்கு போராடும் தேசமாகிய தமிழர்களுக்கும் சிறுபான்மையினராக இருப்பவர்களுக்குமான (மலையக, முசுலீம்கள்) சுயநிர்ணயத்தின் அடிப்படையை வலியுறுத்தப்படுகின்றது. இவ்வாறான கபடம் மக்கள் முன் செய்வது ஒரு புரட்சிகர கட்சியாக இருக்க முடியாது.

ஒவ்வொரு மனிதர்களும் ஒவ்வொரு வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள். மனிதர்களின் நடைமுறைகள் தான் அனைத்தையும் தீர்மானிக்கின்றது. சரியான தத்துவத்தையும், நடைமுறைக் கோட்பாடுகளையும் பகுப்பாராய மார்க்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெனினியச் சிந்தனை தாராளமாகவே வளர்ந்துள்ளது. மார்க்சிய லெனினிய அணுகுமுறையை நுட்பமாக பயன்படுத்திக் கொள்ள கடுமையான பயிற்சியினால் தான் சாத்தியமாகும். மார்க்சியத்தை வளர்ப்பது, இலகுபடுத்துவது, மார்க்சியத்தை விவிலியமாக ஒப்புவிப்பது என்ற கருத்துப் போக்கு உள்ளது. "அதிகாரத் தரப்பைச் சேர்ந்த விஞ்ஞானம் அனைத்தும், மிதவாதிகளது விஞ்ஞானம் அனைத்தும் ஏதாவதொரு விதத்தில் கூலி அடிமை முறையை ஆதரிக்கின்றது. மார்க்சியமோ கூலி அடிமை முறையை ஈவிரக்கமின்றி எதிர்த்துப் போர்ப் பிரகடனம் செய்துள்ளது. மூலதனத்துக்குக் கிடைக்கின்ற இலாபத்தைக் குறைப்பதன் மூலம் தொழிலாளர்களின் கூலியை உயர்த்தலாமா என்ற பிரச்சனையில் முதலாளிகள் ஒரு சார்பற்றவர்களாய் இருப்பார்களென எதிர்பார்ப்பது எப்படி அசட்டுத் தனமாகுமோ, ஏமாளித்தனமா குமோ, அப்படிக் கூலி அடிமை முறைச் சமுதாயத்தில் விஞ்ஞானம் ஒருசார்பற்றதாய் இருக்குமென எதிர்பார்ப்பதும் அசட்டுத்தனமாகும், ஏமாளித்தனமாகும்" (ப20 மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள்- முன்னேற்றப் பதிப்பகம் 1985) என மார்க்சிய அணுகுமுறை வளர்ந்துள்ளது.

ஆனால் மார்க்சியத்தை எவரும் வளர்க்க முடியாது. மாறாக சொந்த நாட்டிற்கான கோட்பாட்டை உருவாக்கிக் கொள்வதாகும். இவ்வாறு உருவாக்குவதற்கு வர்க்கம்- பொருளாதாரம்- விஞ்ஞானம் இவை அடிப்படையானது. இதற்கு அப்பால் எதுவும் இருக்க முடியாது.

இங்கு வளர்ந்துள்ள சிந்தாந்த - கோட்பாடுகளை மார்க்சிய வரலாற்று மாணவர்களாகிய நாம் படித்தறிந்து கொள்ளக் கூடியவகையில் அறிவை பெருக்கியுள்ளோமா என்பதில் தான் கேள்வி அடங்கியுள்ளது. ஆனால் ஆதிக்கச் சக்திகளை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் தீர்மானிக்கும் சக்திகளாக மாறிவிடுகின்றனர். நம்முன்னால் உள்ள கடமை என்பது மெய்யியலாளர்கள் உலகை விளக்குவதற்கு மட்டுமே பலவழிகளை கையாண்டுள்ளனர்- நோக்கம் அதனை மாற்றுவதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. வரையறைகளின் காலப்பொருத்தம் பற்றி!!!

### 2.1 வரைவிலக்கணம் பற்றி

ஒரு புதிய பண்பாட்டை, புதிய சிந்தனையை எம் சமூகத்திற்கு கொடுக்க முயல்கின்றோம் என்பது தான் அடிப்படை நோக்கமாக இருக்க முடியும். ஒட்டுமொத்த சிந்தனைகளையும் ஒன்றுகுவித்து சமூகத்திற்கு வழங்கிடும் பொறுப்பு நம்மிடம் உள்ளது. எந்த சமூக சக்தி - எந்த வர்க்கம் தமிழ் தேசத்தின் போராட்டத்தை கையாள்கின்றது? இவைமாத்திரம் அல்ல நிலப்பிரபுத்துவத்தில் இருந்து முதலாளித்துவத்திற்கு வளர்ச்சிக் கட்டத்தினை எவ்வாறு விளங்கிக் கொள்வதும், சமூகத்தில் கொடுக்கின்ற மாற்றங்கள், முரண்பாடுகள், வெவ்வேறு வர்க்கங்களின் நலன்கள் முட்டி மோதுகின்றன என்பதை இயற்கை-சமூகம் - முரண்பாடு என்ற பிரிவுகளை சமூக விஞ்ஞான ரீதியாக ஆய்விற்கு உட்படுத்த வேண்டும்.

இதனை நாம் செய்கின்றோமா? முயற்சிக்கின்றோமா? செயற்படுத்தும் போது ஏற்படும் இடறுகள் என்ன? இவைகளை புறநிலையில் இருந்து அணுக வேண்டும். மாறாக முன்னர் கற்றவைகளில் இருந்து அல்லது முன்னர் கற்பித்தவற்றை எதிர்ப்பது (rebellion) என்பதே நிலைப்பாடு என்று சிந்திக்கும் மனப்பான்மையில் இருந்து அல்ல. எனவே புறநிலை யதார்த்தம் என்பது புறநிலை வெளிப்பாடுகளில் இருந்து அகநிலையை ஆராய வேண்டும். ஆனால் அகநிலை என்பதில் இருந்து புறநிலையை ஆராய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனமயப்படுத்தப்பட்ட பாகுபாட்டுச் (discrimination of people) சிந்தனைகள் எவ்வகையாக உலகம் பூராக இருக்கின்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். உலகத்தில் உள்ள வெவ்வேறு அரசியல் பொருளாதாரச் சிந்தனைகளை பொதுமைப் படுத்த முடியாது. நாசீசம், நிறவெறி, சோவனிசம் (பெருந் தேசியவாதம்) சியோனிசம் என நிறுவனமயப்படுத்தப்பட்ட சிந்தனை, அதன் வெளிப்பாடுகள் திட்டமிட்ட வகையில் சமூகப் பொருளாதார அமைப்பை பாதுகாத்தே வந்துள்ளது. மனிதர்களிடம் உள்ள அகவுணர்வின் அடிப்படையில் நிறுவனமயப்பட்ட சிந்தனை வடிவத்திற்கு ஆதாரமாக இருக்கின்றது. மனிதர்களின் சிந்தனையை தீர்மானிப்பது அரசியல் பொருளாதார உற்பத்தி உறவேயாகும். மாறாக மனிதனின் தன்னியல்பான சிந்தனை, உணர்வு சமூகத்தை தீர்மானிப்பதில்லை.

இந்த நிலையில் தான் நிறுவனமயப்பட்ட உணர்வும், தன்னியல்பான உணர்வும் மாறுபடுகின்றது. நிறுவனமய மாக்கப்பட்ட சிந்தனை வடிவம் என்பதை சமூகத்திற்கு முன்தள்ளு வதற்கு என்று நிறுவனங்கள் பின்புலமாக இருக்கின்றது.

நாம் பொதுப்புத்தியில் சிந்திப்பதை வைத்துக் கொண்டு சமூக பொருளாதார ஓட்டத்தை விளங்கிட முடியாது. மனித வாழ்க்கையில் பழைய சமூக உறவினாலும், வளர்ந்து வரும் பொருளாதார உறவினாலும் கட்டமைக்கப்படுகின்ற போலி யுணர்வுகள் (கடவுள் நம்பிக்கை, பில்லி, சூனியம்) - அகவுணர்வில் தாக்கத்தை செலுத்திக் கொண்டு தான் இருக்கின்றன. இங்கு புறநிலை அழுத்தங்களை விளங்கிக் கொள்வது என்பது முக்கியமானதாகும். இது சிக்கலானதும் கூட என்பது இங்கு கவனிக்கப்படவேண்டும். மனிதர்களின் வயது, அனுபவம், அந்தஸ்து என்பவற்றை சமூக விஞ்ஞானம் மாற்றீடு செய்கின்றது.

நாம் பயன்படுத்திக் கொள்ளும் அரசியல் சொற்பதங்கள் என்பது புதியவையாகவும், சமூக விஞ்ஞானத்தின் அடிப்படையிலும் இருக்கின்றது. புதிய வரைவிலக்கணக்கங்கள் பொருளாதார வளர்ச்சி ஏற்பட புதிய சொற்கள் அறிமுகப்படுத்துவதும் அதன் பொருளின் விளக்கம் என்பது கொடுக்கப்படுவது இயல்பானது. சமூக விஞ்ஞானப் பார்வையில் வெளிப்படுத்தப்படும் சொற்கள் பற்றிய பரீட்சையம் போதியளவு இல்லாதது குறையாக இருப்பதும் இயல்பானதாகும்.

இந்த அடிப்படையில் இருந்ததான் வரைவிலக்கணம் பற்றிய கரிசனை அவசியமானதாகும். முள்ளிவாய்க்கால் வீழ்ச்சின் பின்னர் கூட தேசம், தாயகம், தேசியம், நாடு என்பது பற்றிய புரிதலில் பற்றாக்குறை இருந்திருப்பதை அறிய முடிகின்றது. ஐயவாதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிறுத்தும் எதிர்ப்புரட்சிகர, போலி இடதுசாரிய, ஓடுகாலிகள், ஒத்தோடிகளின் கருத்துருவாக்கம் வேகமாக செயற்படும் காலமாகும்.

விவிலியத்தை வைத்து தேசியப்பிரச்சினையாக யூதரின் வரலாற்றை வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. 2000 வருடத்திற்கு முற்பட்டதை ஆய்வுகள் மேற்கொள்ளும் போது வரைவிலக்கணங்கள் உபயோகிக்கப்படுவது இயல்பாகின்றது. ஒரு வரையறையில் இருந்து சமூகத்தை அணுகிட முடியாது என்பது கவனிக்க வேண்டும். அதேவேளை ஒவ்வொரு வரையறைகளும் பொருளாதார அமைப்பின் உற்பத்தி உறவிற்கு ஒப்பவே இருக்கின்றது. ஒரு காலத்தின் வரைவிலக்கணம் என்பது இன்னொரு காலத்திற்கு பொருத்தமில்லை. அவைகள் மாற்றத்திற்கு உள்ளாகி வந்திருக்கின்றன.

வரலாற்றை திரித்து தத்தமது தேவைகளுக்காக பயன்படுத்தும் போக்கை ஏற்படுத்துகின்றது. இவ்வாறே சமூகத்தில் உள்ள வெவ்வேறு சக்திகள் சமூக விஞ்ஞானப் பார்வையற்ற நிலையை பயன்படுத்தி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்களை திரித்து விடுகின்றார்கள். இந்த வகையில் முதன்மையான முரண்பாடான தேசிய இனப்பிரச்சனை பற்றிய தெளிவுகளும் விஞ்ஞானப் பார்வை கொண்டதாக அமைதல் வேண்டும்.

பல இடங்களில் நேசன் - தேசம் என்ற சொல்லாடல் குழப்பத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. இந்தச் சொல்லிற்கான விளக்கம் என்பது போதிய பரீட்சையம் இல்லை என்பது கவனிக்கத் தக்கதாகும். தேசியம் என்பது எவ்வளவு புனிதப்பட்டதே அதேயளவு கொச்சைப்படுத்தப்பட்ட அல்லது தவறாக பயன்படுத்தப்பட்ட சொல்லும் அதுவாகவே இருக்கின்றது. வரவிலக்கணங்கள் அந்தந்த பொருளாதார அமைப்பிற்குரியதாகும். ஏற்கனவே இருக்கின்ற வரையறைகளில் இருந்து ஆய்வினைச் செய்துவிடவும் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 இனம் பற்றிய புரிதல்

மனித இனத்தின் வகையை 3 வகையாக பிரிக்கின்றனர். 1. ஆப்ரீக்க வகை - அவுஸ்ரலெயிட் 2. இந்தோ ஐரோப்பிய 3. மொங்கோலிய வகையாகவும் பின்னர் உள்ளாக பல வகைக் கூறுகளாக பிரிந்து வந்துள்ளது.

இவை நாகரீக மனிதர்களின் மூதாதேயர்களாவர். இனம் என்பதை ஆங்கிலத்தில் race என்று அழைக்கப்படுகின்றது. இந்தச் சொல்லாடல் குறுக்கி வெவ்வேறு நிலைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இனவகையில் தூய்மை இருக்க முடியும் என்ற கருத்து வளர்ச்சி என்பது பிற்போக்கு கருத்தியலின் விளைவுகளில் ஒன்றாகும்.

இனம் (race) என்பது இரத்தவகை சார்ந்ததாக இருக்கின்றது பௌதீகமானதாக மரபணு என்பது பல்வேறு மாற்றங்களுக்கும் பல்வேறு மனித கூட்டங்கள் பல்வேறு கட்டங்களில் கலந்து வந்துள்ளது. மரபணுமாற்றம் நடைபெற்றே மனித குலம் இவ்வளவு பெரும் வளர்சியைக் கண்டடைந்துள்ளது. மனித குலம் ஆபிரிக்காவில் தோன்றினாலும் அந்த மக்கள் பல்வேறு பகுதிகளுக்கு பரந்தும் கூடியும் பிரிந்தும், மறுபடியும் கூடியும் உள்ளது. 80000 ஆண்டுகளில் தான் மனித குலம் உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. மனித கூட்டத்தின் கலப்புத் தான் இன்றைய நாகரீகவளர்ச்சி கொண்ட மனிதர்களாகும்.

இந்த பெரும் மனித கூட்டத்தில் ஆதியிலேயே சிறிய கணங்களாகவும், கூட்டாகவும், பிரிந்தும் வாழ்ந்துள்ளது. இனக்குழும வாழ்வு முறையே ஆயிரமாயிரம் ஆண்டுகளைக் கொண்டதாகும். அதாவது 80000 தான் நாகரீக மனிதர்களின் காலத்தில் பெரும்பகுதி ஆண்டுகள் காட்டுமிராண்டித் தனத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சமூகக் குழுக்களாக வாழ்ந்துள்ளனர். இதன் பின்னர் நாகரீக காலத்து இனங்குழுமங்களாக (tribal) வாழ்ந்துள்ளன.

இற்றைக்கு அண்ணளவாக 7000களில் நாகரீக நகரங்கள் தோண்றியது. இவ்வாறு வளர்ந்த நாகரீகமே நாங்கள் தெரிந்து கொள்ளும் நிலமானியம் என்று கருதிவிட முடியாது. எனினும் முன்னோர்கள் வெவ்வேறு அடையாளம் கொண்ட மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர்.

மனித வரலாற்றின் வளர்ச்சிக் கட்டம் ஆதிப்பொதுவுடமை, அடிமைச் சமூகம், நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என்று வளர்ந்து வந்துள்ளது. இந்த நிலையில் ஒவ்வொரு காலத்தையும் புறநிலையில் இருந்து அணுக வேண்டும், அதே வேளை அந்தக் காலத்துக்குரிய அரசியல் பொருளாதார மொழிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த வகையில் தான் இனம் என்ற சொல்லாடல் பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இனம் என்பதை விளங்கிக் கொள்ள விஞ்ஞானத்தினை ஏற்றுக் கொண்டால் மட்டுமே சாத்தியமாகும். இனம் - race - இரத்த வழிவந்ததாக பல நூற்றாண்டுகள் இருந்த சமூகமாகவும் புவியியல் காரணமாக வாழ்ந்த மக்கள் உடலமைப்பிலும், நிறத்திலும் மாறுபட்டு வருகின்றார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3 சமூக ஒழுங்கமைவுகள்

### 2.3.1 நான்கு உற்பத்தி முறை

இந்த உலக வரலாறு (புராதன கம்யூனிச சமூதாயம் தவிர) வர்க்கப் போராட்டங்களின் வரலாறு. இவ்வகையில் மார்க்ஸ் நான்கு வகையான உற்பத்தி முறைகளை வரையறுக்கின்றார்.

1. ஆதிப் பொதுவுடமை சமுதாயம்.
2. அடிமை சமுதாய உற்பத்தி முறை.
3. நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை.
4. முதலாளித்துவ உற்பத்தி முறை.

இச்சமூக உற்பத்தி முறையினூடே பார்ப்போமாயின் பூராதன கம்யூனிச சமுதாயத்தில் இயற்கைக்கும் மனிதனுக்கு இடையேயான போராட்டமும், அடிமையுடமை சமுதாயத்தில் அடிமைகளுக்கும் அடிமையுடமையாளனுக்கும் இடையேயான போராட்டமும், நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் நிலப் பிரபுக்களுக்கும், பண்ணை அடிமைகளுக்கும் இடையேயான போராட்டமும், முதலாளித்துவத்தில் பாட்டாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையேயான போராட்டமும் காணப்பட்டன.

உற்பத்தி முறை பற்றிய கருத்தில் எப்பொழுதும் அவர்கள் தொங்கிக் கொண்டிருக்கவில்லை என் அறியமுடிகிறது. "மார்க்ஸ் உடைமையின் முதல் வடிவம் பூர்வகுடி (stammeigentum) உடமையாகும். உற்பத்தியின் வளர்ச்சியற்ற கட்டத்துக்கு இது பொருத்தமானது, இந்த கட்டத்தில் மக்கள் வேட்டையாடுதல் மீன்பிடித்தல் மூலமும், விலங்குகளை வளர்த்தல் அல்லது ஆக உயர்ந்த கட்டத்தில் விவசாயம் மூலமும் வாழ்ந்து வந்தனர்." (பக்.23 மா.ஏ தேர்வு நூல்கள் 1) ஏங்கெல்ஸ் பின்வருமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகிறார். "அதாவது வரலாறு அனைத்தும். வரலாற்றுக்கு முற்பட்ட சமுதாயம் குறித்து, எழுத்தில் பதிவாகியுள்ள வரலாற்றிற்கு முன்பு நிலவிய சமூக ஒழுங்கமைப்புக் குறித்து, 1847 இல் அனேகமாய் ஏதும் அறியப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பிற்பாடு ஹாக்ஸ்த் ஹாவுசன் ருஸ்சியாவில் நிலம் பொதுவுடமையாய் இருந்தது என்று கண்டு பிடித்தார், டியூட்டானிய இனங்கள் யாவுமே நிலத்திலான பொதுவுடமையாகிய இந்தச் சமூக அடித்தளத்தில் இருந்து தான் வரலாற்றை ஆரம்பித்தனர் என்று மௌரர் நிருபித்துக் காட்டினார், இந்தியாவில் இருந்து அயர்லாந்து வரை எங்குமே நிலத்தைப் பொதுவுடமையாகக் கொண்ட கிராம சமுதாயங்கள் தான் சமுதாயத்தின் புராதன ஆதி வடிவமாய் இருக்கிறது அல்லது இருந்திருக்கிறது என்பது நாளாந்த வட்டத்தில் தெரியலாயிற்று. இவற்றிற்கு எல்லாம் மணிமுடி வைத்தாற் போல், கணம் என்பதன் மென்மையான தன்மையையும் அதற்கும் பூர்வீகக் குடிக்குமுள்ள உறவையும் மார்கன் கண்டுபிடித்தார். (ப 41 -க. கட்சி அறிக்கை) கம்யூனிச அறிக்கையின் திருத்திய பதிப்பில் கூறுகிறார்.

அன்றைய காலத்தில் அரசியல் பொருளாதார அறிவியலில் நிபுணர்களாய் இருந்து ஆசான்களுக்கு அவர்களின் கருத்தை மேலும் உறுதி செய்து கொள்ள மற்றைய அறிஞ்ஞர்களின் கண்டுபிடிப்பு உதவியாக இருந்தது. கணம் பற்றிய அறிவு என்பது சமூகத்தை நுண்ணியல் ரீதியாக ஆய்வு செய்யும் பொருட்டு துணைபுரிகின்றது.

இன்று உள்ளது போல் குடும்பம் என்பது முன்பு இருக்கவில்லை இன்று ஒருவீட்டில் தாய் தகப்பன் பிள்ளைகள் வாழ்கின்றனர். ஆனால் அன்று இவர்களை விட குடும்ப அங்கத்தவர்கள் பலர் கூடி வாழ்ந்தனர். குலச் சமுதாயமானது உருவாக முன்பாக சிறுசிறு குழுக்களாக கூடி வாழ்ந்து தமது தேவைகளை பூர்த்தி செய்து வந்தனர். அவ்வாறு கூடி வாழ்கின்ற போது தான் அந்தச் சமுதாயத்தில் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். இவை எந்த அலகை (scale) மையமாகக் கொண்டு உற்பத்தி முறையில் ஈடுபடுகின்றது என்பதை வைத்தே நிர்ணயம் செய்யப்படுகின்றது. "வீட்டுச்சமூகம் தான் ஆதியில் இருந்தது. அதில் சில தலைமுறைகள் அல்லது தனித்தனி குடும்பங்கள் அடங்கும். அநேகமாக சுதந்திரமில்லாத பலரும் இருந்தார்கள்." (பக்98. கு.த.அ.ஆ.தோற்றம்) கூடி வாழ்கின்ற மக்களுக்கு கூட்டுறவுச் சிந்தனை முக்கிய நிபந்தனையாக அமைகின்றது. இன்றைய காலத்தில் சிந்திப்பது போல் தனித்து வாழலாம் என்ற சிந்தனை தோன்ற இடம் இருந்திருக்காது. பல உறவுமுறையைச் சேர்ந்த மனித கூட்டத்தின் தொகுதியே குலமாகும். குலம் எனும் போது சில சமூக உறுப்பினர்களால் இணைக்கப்பட்ட அலகாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.2குடும்ப அமைப்பு

பலதனிமனிதர்களைக் கொண்ட உறுப்பினர்கள் சேர்ந்து வாழ்வது குடும்பமாக கருதப்பட்டது. இந்தக் குடும்பத்தில் பலர் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். இந்தி அவர்களுடைய பரம்பரையை வளர்ப்பது கடமையாகவும், கட்டாயமாகவும் இருந்தது. ஆனால் தனியுடமைச் சமுதாயத்தின் உருவாக்கமானது கூட்டுச் சமுதாயத்தின் தேவையை இல்லாமல் செய்கின்றது. ஆனால் குடும்பத்தில் முதல் உடைவினை பற்றி ஏங்கெல்ஸ் கூறுகின்றார். அதாவது பெண்களே ஒரு தார மணத்திற்கு முயற்சி எடுப்பவர்களாக இருந்திருக்கின்றனர். பெண்கள் தாமிருந்த நிலையில் இருந்து அடுத்த கட்டத்திற்கு மாற முற்படுவது இயல்பானதாகவே காணப்படுகிறது. ஒரு தார மணத்திற்கு முற்பட்ட சமுதாயத்தில் ஏற்பட்ட நெருக்கடியும், தமது சுமைகளில் இருந்து மீளும் பொருட்டும் போராட்டம் இடம்பெற்றுள்ளது. "பொருளாதார நிலைமைகளின் வளர்ச்சியின் விளைவாக, அதாவது பழைய சம்பிரதாய பாலியல் உணர்வுகள் தமது வெகுளித்தளமான, பூர்விகக் காட்டுத் தன்மையை இழந்து வர வர அந்த உறவுகள் மேன்மேலும் தரக்குறைவாக, ஒடுக்குபவையாகப் பெண்களுக்கு தோன்றியிருக்க வேண்டும். அவர்கள் கற்புரிமைக்கு விடுதலை என்ற முறையில் ஒரு குறிப்பிட்ட ஒரு நபரைத் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக திருமணம் செய்து கொள்வதில் வேட்கை கொண்டிருக்க வேண்டும். இந்த முன்னேற்றம் ஆண்களிடம் இருந்து தோன்றியிருக்க முடியாது. அவர்கள் நடைமுறைக் குழுமணத்தின் இன்பங்களைக் கைவிடுவதற்கு ஒருபோதும் - இன்றைய நாள் வரையிலுங் கூட- கனவுகூடக் கண்டதில்லை என்ற காரணமே இதற்குப் போதும். பெண்கள் முயன்று மணமுறையை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் கண்ட பிறகு தான் ஆண்கள் கண்டிப்பான ஒரு தார மணத்தை - அது பெண்களுக்கு மட்டுமே என்பதை சொல்ல வேண்டியதில்லை- புகுத்த முடிந்தது." (ஏங்கெலஸ் கு.அ.த.தோ) (கற்புரிமை என்று மொழிபெயர்த்துள்ளார்கள் பாலியல் சுதந்திரம் என்று மாற்றி எழுத முடியாது) இவ்வாறாக தோன்றி வளர்ந்த பண்பாட்டு மாற்றம் நிச்சயம் பொருளாதார நலனைக் கொண்டே அமைந்து விடுகின்றது. குடும்பம் என்கின்ற போது ஒரு பெண் பல கணவனை (Polyandry) மணந்து கொள்ளுதல், ஆண் பல பெண்களை மணந்து கொள்ளல் போன்ற குடும்ப நிலையும் இருந்து வந்துள்ளது. தந்தை வழிச் சமூக உருவாக்கத்தின் போது சொத்துக்களை தமது குடும்ப அலகில் வைத்திருக்கும் பொருட்டு பல கணவன் முறை அழிந்து போயிற்று. குடும்பம் பல வளர்ச்சிக் கட்டத்தை அடைந்துள்ளது. இது ஒவ்வொரு சமுதாயத்திலும் இருந்து மாறுபடுகின்றது.

குலச் சமுதாயத்தில் இருந்த போது நாடோடி வாழ்க்கை, வேட்டையாடி வாழ்பவர்கள் குழுக்களாக இருந்த போது பல பரம்பரையை கொண்ட உறுப்பினர்களை கொண்டது. எமது சமுதாயத்தில் இருப்பதைப் போன்று தார்மீகக் கடமை, கூட்டுக் குடும்ப உறவுக்கு முக்கியத்துவம். இங்கு ஒரு பேரன் பேத்தியுடன் வாழும் பரம்பரை, அல்லது கணவனை இழந்த, திருமணம் செய்து கொள்ளாத சகோதரம் இவர்களுடன் வாழலாம்.

நகரங்களில் தொழில் முயற்சி காரணமாக செல்லும் போது தனியே நெருங்கிய உறுப்பினர்கள் மாத்திரம் ஒரு குடியில் வாழ்தல் உண்டு. மேலை நாடுகளை எடுத்துக் கொண்டால் மணம் செய்யாது கூடி வாழ்கின்ற வாழ்க்கை முறை உள்ளது. அதேபோல் "வெட்டக்காட இருளர் என்ற இனக் குழுவினர்களிடையே கூடி வாழும் பழக்கம் இருக்கின்றன. (130 பதிப்பாசிரியர் நா. வானமாமலை மக்களும் மரபுகளும்) ஆனாலும் மணமுடிக்காமல் இறத்தலாகாது. கூடி வாழ்வது இங்கே பிள்ளைகள் இருக்க வேண்டும் என்ற அத்தியாவசியம் இல்லை. இங்கே தனித்துவவாதம் முக்கிய நிபந்தனையாக அமைந்து விடுகின்றது. இவர்களிடம் குடும்ப உறுப்பினர்கள் எவரையும் பராமரிக் வேண்டிய தேவையில்லை.

தனியே பெற்றோர் பிள்ளை ஒரு வீட்டில் இருந்தாலும் வயோதிபர்களை கவனிக்கும் பண்பை தொடர்ந்தும் பேணுகின்ற குடும்ப முறையானது இது எமது நாடுகளில் உள்ளது போன்ற நகர்ப்புற வாழ்க்கை முறையுடன் நெருங்கிய ஒற்றுமை இருப்பதாக கொள்ளலாம். குடும்ப உறவு முறை பொருளாதர உற்பத்திக்குத் தேவையான உற்பத்தி சக்தியின் தேவை கருதி நிர்ணயம் செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.3குலச்சமுதாயம்

குலச் சமுதாயத்திற்கு அடிப்படையானது உறவு முறையாகும். இந்த உறவு முறையை மையமாகக் கொண்ட சமூக அமைப்பானது ஏடறிந்த வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே ஏற்பட்டது எனலாம். இன்றைக்கும் பல இனக்குழுக்கள், குலங்களாக வாழ்கின்றன. இந்த வாழ்க்கைக்கு அடிப்படையே உறவு முறையாகும். இந்தக் குலங்கள் இன்றைய எமது பார்வையில் பண்பாடற்றவர்களாக இருக்கலாம். ஆனால் அதுவே அவர்களுக்குரிய பண்பாடும், உலகக் கண்ணோட்டமுமாகும். இன்றைக்கும் வேட்டையாடத் தெரியாத இனக்குழுக்கள் இருக்கின்றன. பளியர் என்ற இனக்குழுவினருக்கு வேட்டையாடத் தெரியாது. "காட்டிலுள்ள செந்நாய்கள், மான் போன்ற விலங்குகளை வேட்டையாடித் தின்று கொண்டிருக்கும் போது அவற்றை விரட்டிவிட்டு எடுத்துக் கொள்வார்கள்" (பக் 84. பதிப்பாசிரியர் வானமாமலை மக்களும் மரபுகளும்) இன்றும் இலங்கையிலும் பழங்குடிகள்(வேடர்கள்) இருக்கின்றனர்.

சகோதரி -சகோதரர்களுக்கு மிடையேயான பொறுப்புக்கள். மற்றும் எவருடன் உடலுறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற வரையறை, சகலனுக்கும், சகலிக்குமிடையேயான உறவு, என்பது விசேடமானதாகும். அதாவது சகலனும் சகலியும் சகோதரர்கள் என்ற கருத்தமைவுக்குட்பட்டு சமூக உறவுகளில் ஈடுபடுகின்றன.

தவறு எனப்படும், தவறுகள் ஏற்படும், ஆனால் எல்லாக் கால கட்டத்திலும் தூய்மையாக இருந்திருக்கும் எனக் கூறமுடியாது. அதேவேளை மனித வரலாற்றில் விரும்பியோ விரும்பாமலோ குறிப்பிட்ட சமூக உறவுகளில் அனைவரும் ஈடுபட்டே ஆகவேண்டும். அதேவேளை இன்றைக்குள்ள சமூக உறவுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கொண்டு அன்றைய சமூக நிலையில் மிகவும் பின் தங்கியும், உரிமை இல்லாதிருந்தனர் எனவும் வாதிட முடியாது. “குடும்பம் என்பது இயக்கமுள்ள கோட்பாட்டைக் குறிக்கிறது. அது ஒருபோதும் இயங்காதிருப்பதில்லை. சமூகம் கீழ் நிலையில் இருந்து மேல் நிலைக்கு முன்னேறுகின்ற பொழுது அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத்திற்கு முன்னேறுகிறது. அதற்கு மாறாக, இரத்த உறவு முறைகள் இயக்கமற்றவை. அவை குடும்பம் அடைகின்ற முன்னேற்றத்தை நீண்ட இடைவெளி விட்டு குறித்து வைக்கின்றனர். குடும்பம் தீவிரமாக மாற்றம் அடைந்து விட்டபொழுது மட்டுமே அவையும் தீவிரமாக மாறுகின்றன என்று மார்கன் கூறுகின்றார். இது அரசியல், சட்ட, சமய, தத்துவஞான அமைப்புக்களுக்கும் பொதுவாகவே பொருந்தும். என்று மார்க்ஸ் இத்துடன் சேர்த்துக் கொள்கின்றார். குடும்பம் தொடர்ந்து வளர்ந்து வரும் பொழுது இரத்த உறவு முறை கட்டிதட்டிப் போகிறது" (பக்கம் 50 கு.த.அ ஆகியவற்றின் தோற்றம் - ஏங்கெல்ஸ்)

குலச் சமுதாயத்திற்கு இரத்த உறவில் அமைந்த நிறுவனம் என்பது அந்த சமுதாயத்தைக் காத்து வந்தது. அதாவது இரத்த உறவை அடிப்படையாகக் கொண்ட குறுக்கு நெடுக்கு (cross/ multiplex relation) உறவுமுறை ஒத்துழைத்தது. இக்குலங்கள் என்பது ஒரு இனக் குழுவிற்குள் அடங்கப்பட்டதே, எனவே ஒரு இனக்குழுவிற்குள் பல குலங்கள் இருக்க முடியும். ஒரு குலம் மற்றைய குலங்களுடன் வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தி பரிமாற்றத்தை மேற்கொள்கின்றன. அதேபோல் ஒரு இனக் குழு மற்றைய இனக்குழுவுடன் பரிமாற்றத்தில் ஈடுபடுகின்ற பொழுது மற்றைய இனக்குழுக்களின் பண்பாடுகள், மொழி, உலகக் கண்ணோட்டம் ஆகியவற்றை உள்வாங்கிக் கொண்டு விடுகின்றன. இந்நிலை என்பது தனிப்பட்ட குடும்பங்கள் தாமே பொருளாதார அலகுகளாக செயற்படும் போது ஏற்படுவதில்லை. மாறாக பொருளாதார பரிவர்த்தனையில் ஈடுபடுகின்ற போதே இது சாத்தியமாகின்றது. ஏனெனில் பரிவர்த்தனை என்பது அச்சமூகத்தில் வரையறுக்கப்பட்டதே.

தமிழ் பேசும் பழங்குடிச் சந்ததியினர் பெரும்பான்மை யானவர்கள் தமிழ் தேசிய இனத்தினுள் இணைந்துள்ளார்கள். சிங்களமயமாக்கப்பட்ட கரையோரத் தமிழர்கள் போல் அல்லாது இயல்பான பரிவர்த்தணை, தொடர்பாடல் ஊடாக பழங்குடிச் சந்ததிகளுக்கான மொழியாக தமிழ் உள்ளது. எனினும் பழங்குடிகள் வாரிசுகள் ஒரு சாதியாகவே இணைந்துள்ளார்கள். பழங்குடிகள் அகவொடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். அகவொடுக்கு முறைக்கு எதிராக போராட வேண்டிய கடமை தமிழ் தேசிய இனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர்களுக்கு உண்டு. பழங்குடிச் சந்ததியினரின் பொருளியல் வாழ்க்கை முறை பெரும் மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. அவர்களின் உலகக் கண்ணோட்டம் என்பது பிரதான நீரோட்டத்தின் ஊடாக கலப்பிற்கு உட்பட்டதாகவும் தற்பொழுது இருக்கின்றது. மதமாற்றம், நிலப்பறிப்பு என்பது பெருந்தேசிய இனத்தவர்களாலும், முஸ்லீம்களாலும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. வேட்டையாடுதல், கூடிவாழல் சமூக உறவு என்பது மாற்றத்திற்கு உள்ளாகியிருக் கின்றது. உறவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடமைகளையும் பொறுப்புக்களையும் விலக்களிக்கப்பட்ட நியதிகளையும் கொண்டு வந்துள்ளது. ஆனால் கடந்த 25 வருடத்தில் பெரும் மாற்றத்தை அடைந்துள்ளது. பழைய இரத்த உறவுமுறைக் குழுக்கள் கலைக்கப்பட்டு இனக்குழும வேறுபாடுகள் இல்லாதாகின்றது இயல்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.4 வேலைப்பிரிவினை

வேலைப்பிரிவினை ஒவ்வொரு உற்பத்தி முறைகளிலும் தங்கியிருக்கின்றது. உற்பத்தி முறைகள் என்கின்ற போது நிலப் பிரபுத்துவம், முதலாளித்துவம் ஆகிய இரண்டு பொருளாதார உற்பத்தி முறைகளுக்கும் இடையேயான வேலைப் பிரிவினை மாற்றம் உடையதாக இருக்கும். சமூக உற்பத்தியில் மேற் கொள்ளும் உற்பத்தி முயற்சியில் எவ்வகையான நபர்கள் பங்களிப் பினை வழங்கி உற்பத்தியில் ஈடுபடுகின்றார்கள் என்பதைக் குறிக்கின்றது. வேலைப்பிரிவினை என்பது எந்த எந்த சமூக அமைப்பைக் கொண்டதாக இருக்கின்றதோ அதன்படியே இருக்கும். ஆரம்பத்தில் இருந்த வேலைப்பிரிவினை என்பது பால், வயது என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இருந்தது. ஏனெனில் இது சிறிய அலகைக் கொண்ட சமுதாயம் இங்கு வேலைப் பிரிவினை என்பது வளர்ச்சி அடையவில்லை. மாறாக 'மார்க்ஸ் கூறுவது போல் குழந்தை பெறுவதற்காக ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வேலைப் பிரிவினைதான் முதல் வேலைப் பிரிவினையாகும். இத்துடன் நான் பின்வருமாறு சேர்த்துக் கூறுவேன், வரலாற்றில் தோன்றிய முதல் வர்க்கப்பகைமை ஒரு தார மணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் பகைமை வளர்வதுடன் பொருந்துகிறது, முதல் வர்க்க ஒடுக்கு முறை பெண்பாலை ஆண்பால் ஒடுக்குகின்ற ஒடுக்குமுறையுடன் பொருந்துகிறது. ஒரு தார மணமுறை வரலாற்று ரீதியில் மகத்தான முன்னேற்றமாகும். ஆனால் அதே சமயத்தில் அது அடிமை முறையுடனும் தனிச் சொத்துடனும் சேர்ந்தாற் போலவே இன்றளவும் நீடிக்கின்ற ஒரு யுகத்தைத் தொடங்கியது. அந்த யுகத்தில் ஒவ்வொரு முன்னேற்றமும் அதேபோல் சார்பு நிலையில் ஒரு பின்னடைவாகவும் இருக்கின்றது. அதில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவின் துன்பத்தையும் ஒடுக்கப்படுதலையும் ஆதாரமாகக் கொண்டு மற்றொரு குழு நல்வாழ்க்கையும் வளர்ச்சியும் அடைகிறது. அது நாகரீக சமுதாயத்தின் உயிரணு வடிவமாகும். அதன் மூலமாக, அந்தச் சமுதாயத்தில் முழுவளர்ச்சி அடைகின்ற பகைமைகளின், முரண்பாடுகளின் தன்மையை நாம் ஏற்கனவே ஆராய முடியும்.' (ஏங்கல்ஸ் ப.108 கு.த.அ.ஆ.தோ)

நாடோடி வாழ்க்கை முறையைக் கொண்டு வாழ்ந்தவர்கள், தமது கால்நடைகளின் மூலமாகப்பெற்ற உபரியைக் கொண்டு நிரந்தர குடியிருப்பை நோக்கிசென்று தம்மை நிலை நிறுத்திக் கொண்டார்கள். அதேவேளை பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் போது போட்டி ஏற்படுகிறது. அதாவது நாடோடி வாழ்கையில் ஈடுபட்ட பின்னர் நிரந்தர குடியிருப்பை அடைந்தனர். அடுத்து குடியிருப்பை அமைத்து இவர்கள் அடுத்த கட்டத்தை நோக்கி நகருகின்றனர். நகருகின்ற பொழுது மற்றைய குழுக்களுடன் மோதலுக்கும் இடமுண்டாகின்றது.

இக்கட்டத்திலே தான் விவசாயத்தை நோக்கி வளர்கின்றனர். கால்நடைவளர்க்கும் மக்களினங்களுக்கும் மந்தைகள் இல்லாத பின்தங்கிய இனக்குழுக்களுக்கும் இடையில் உழைப்புப்பிரிவினை இருந்தமையும் கவனிக்கப்பட வேண்டும் (266) விவசாய வளர்ச்சிக் கால கட்டத்தில் தான் மனித குலத்தின் உயர்ந்த கலாச்சாரக் கட்டத்தை நோக்கி காலடி வைத்தனர். 'இரண்டாவது மாபெரும் உழைப்புப்பிரிவினை ஏற்பட்டது. விவசாயத்திலிருந்து கைத்தொழில்கள் பிரிந்தன. உற்பத்தி தொடர்ச்சியாக அதிகரித்தது, அதனுடன் உழைப்புச் சக்தியின் மதிப்பு உயர்ந்தது. முந்திய காலகட்டத்தில் ஆரம்ப நிலையிலும் அங்குமிங்குமாகவும் இருந்த அடிமை முறை இப்பொழுது சமூக அமைப்பின் ஒரு முக்கியமான பகுதியாகிவிட்டது. அடிமைகள் வெறும் உதவியாளர்களாக இருந்த நிலைமை மாறிவிட்டது அவர்கள் பட்டறைகளிலும் வேலை செய்வதற்குக் கூட்டம் கூட்டமாக அனுப்பப்பட்டார்கள். உற்பத்தி விவசாயம், கைத்தொழில் என்னும் இரண்டு மாபெரும் கிளைகளாக பிரிந்ததிலிருந்து பரிவர்த்தனைக்கு உற்பத்தி செய்யும் முறை, அதாவது பண்ட உற்பத்தி முறை பிறந்தது. அத்துடன் வர்த்தகமும் வந்து சேர்ந்தது. அது இனக்குழுவுக்குள் மட்டுமல்ல, இனக்குழுவின் எல்லையோரங்களில் மட்டுமல்ல கடல்கடந்த நாடுகளுடனும் நடைபெற்றது. இவையெல்லாம் இன்னும் மிகவும் வளர்ச்சி குன்றிய நிலையில்தான் இருந்தன. சர்வப்பொதுவான பணப்பண்டம் என்ற முறையில் தங்கமும் வெள்ளியும் முதன்மை அடைந்தன. எனினும் நாணயங்கள் இன்னும் அச்சிடப்படவில்லை. எடையைக் கொண்டுதான் அவை பரிவர்த்தனை செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமான மனிதன், அடிமை என்ற வேறுபாட்டுடன் பணக்காரன், ஏழை என்ற வேறுபாடும் சேர்ந்து கொண்டது புதிய உழைப்புப் பிரிவினையுடன் சேர்ந்து வர்க்கங்களின் அடிப்படையில் சமுதாயத்தில் புதிய பிரிவினை ஏற்பட்டது. பல்வேறு குடும்பத் தலைவர்களின் செல்வத்தில் ஏற்பட்ட வேறுபாடுகள் பொதுவுடைமை வீட்டுச் சமூகங்களை-அவை எங்கெல்லாம் இருந்தனவோ அங்கே-அழிந்துபோகச் செய்தன. இது சமூகத்தின் சாதனங்களின் அடிப்படையில் நிலத்தைப் பொதுவில் பயிரிடுவதை முடிவுக்குக் கொண்டுவந்தது. விளைநிலம் தனிப்பட்ட குடும்பங்களின் உபயோ கத்திற்கென்று, முதலில் ஒருகுறிப்பிட்ட காலத்திற்கும் பின்னர் சாசுவதமாகவும் கொடுக்கப்பட்டது இணை மணமுறை யிலிருந்து ஒருதார மணமுறைக்கு மாறுவதுடன் சேர்ந்து முழுமை யான தனியுடமைக்கு மாறுவதும் படிப்படியாகவும் அதேசமயத்திலும் நடைபெற்றது. தனிப்பட்ட குடும்பம் சமுதாயத்தின் பொருளாதார அலகு ஆயிற்று. (ப 267. கு.த.அ.ஆ.தோ)

உற்பத்தி சாதன வளர்ச்சி காரணமாக உற்பத்தி உறவுகளிலும் மாற்றம் ஏற்படுகின்றது. இந்த வளர்ச்சிக் கட்டத்தைப் போல் குடும்ப அமைப்பு முறையும் மாறுபடுகின்றது. குடும்ப அமைப்பானது வெவ்வேறுகால கட்டத்தில் வெவ்வேறு வடிவமாக இருக்கின்றது. பொருளாதார அலகிற்கு சேவகம் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.5 நிலப்பிரபுத்துவத்தின் காலகட்டம்

நிலப்பிரபுத்துவத்தில் அரசர்கள் ஆட்சியதிகாரத்தில் அமர்த்தப்படுகின்றனர். குலத்தின் தலைவர்கள், பூசாரிகள், மந்திரவாதிகள் எழுதாத சட்டங்களைக் கொண்டு தமது குலத்தை வழிநடத்திக் கொண்டு வந்தனர். குலஅமைப்பு நிலப்பிரபுத் துவத்தால் விழுங்கப்பட்டாலும் அந்தச் சமுதாயத்திற்குரிய பழக்க வழக்கங்கள், பண்பாடுகளின் எச்சங்கள் நிலப்பிரபுத்துவத்தில் மாத்திரம் அல்ல, இன்றைய சமுதாயத்திலும் தொடர்ந்தும் வழக்கத்தில் இருந்து வருகின்றது. மக்கள் ஆண்டாண்டு காலமாக தம் முன்னோர்கள் தொடர்ந்து வந்த பழக்க வழக்கங்களை இந்தக் காலத்தில் தமது சட்டத்திற்கு முரணானது என பிரகடனம் செய்ய முடிந்தது. இந்தக் காலம் மன்னர்கள் தமது ஆட்சியுரிமைக்காக, தமது பதவியை நிலை கொள்ள வைப்பதற்காக யுத்தங்களை நடத்தில் பழைய சமுதாயத்தின் பெருமைகளை அழித்தே வந்துள்ளனர். ஒவ்வொரு சமுதாயத்தின் மாற்றத்தின் போதும் பழைய போக்கிற்கும் புதிய போக்கிற்கும் அனைத்து தளங்களிலும் மோதல்கள் இடம் பெற்றுத் தான் வந்திருக்கின்றது.

வர்க்க சமுதாயம் தோற்றமுறும் போதே வேலைப் பிரிவினையின் பருமன் மாறுபடுகின்றன. வர்க்கங்களின் வளர்ச்சி சமூகத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இந்த மாற்றத்தை அடைகின்ற இறுதி நிலையில் ஒவ்வொரு வர்க்கமும் முரண்பாடு கொண்டதாகவே இருக்கின்றது. புதிய வர்க்கத்தின் தோற்றத்துடன் சமுதாயத்தில் இருக்கின்ற வேலைப் பிரிவினை அதிகரிக்கின்றன.

சிலப்பதிகாரத்திலே வர்த்தக வர்க்கத்தைச் சேர்ந்த கோவலனின் கொலைக்குப் பழிவாங்கியதாக இலக்கியம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு அரச குலத்தை விட பலம் பொருந்திய நிலையில் இருந்த வர்த்தக வர்க்கம் அவசியமானதாகும். கண்ணகி அரசனைப் பழிவாங்கினால். அரசனைப் பழிவாங்க வேண்டுமானால் அதனைவிட பலம் பொருந்திய வர்க்கம் இருந்திருக்க வேண்டும். (இக்கருத்தை முன்னர் பல மார்க்சியர்கள் கூறியுள்ளனர்.) பலம் பொருந்திய வர்க்கத்தைச் சேர்ந்த கண்ணகி மதுரையை எரித்தாள் என்பது வர்க்கங்களுக்கிடையேயான முரண்பாட்டை வெளிப்படுத்தும் காவியமாகும். மேற்கூறியவற்றில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருப்பது என்னவெனில் ஒரு வர்க்கமானது இன்னொரு வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுத்து அழிக்க முற்படும். இந்த அழிப்பானது பலாத்காரத்தினாலேயே நடைபெறுகிறது. அந்தப் பலாத்காலமானது மிகவும் கொடூரமானதாகவும் காட்டுமிராண்டித் தனமாகவும் இடம் பெற்றுள்ளது. இதேபோல தான் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த அல்லது ஒரு வர்க்கத்தை பிரதிபலிக்கின்ற வர்க்கமானது செயல்படும். "இது நம்மை நாகரீக நிலையின் வாயிலுக்குக் கொண்டு வந்து விடுகின்றது. உழைப்புப் பிரிவினையில் ஏற்பட்ட கூடுதலான முன்னேற்றம் இதைத் துவக்கி வைத்தது. கடைக் கட்டத்தில் மனிதர்கள் தமது நேரடித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே உற்பத்தி செயது வந்தனர், தற்செயலாகத் தேவைக்கு அதிகமாக ஏதாவது மிஞ்சினால் அவர்கள் எப்போதாவது அதைப் பரிவர்த்தனை செய்தார்கள். அநாகரீக நிலையின் இடைக்கட்டத்தில் கால்நடை வளர்க்கும் மக்களினங்கள் தம் கால்நடைகளின் மூலம் ஒருசொத்து வடிவத்தைப் பெற்றனர், போதுமான கால்நடை மந்தைகள் இருக்கும் பொழுது இந்தச் சொத்து அவர்களுடைய தேவைகளுக்கு அதிகமான உபரியை முறையாகக் கொடுத்து வந்தது என்பதைப் பார்க்கிறோம். மேலும், கால்நடை வளர்க்கும் மக்களினங்களுக்கும் மந்தைகள் இல்லாத பின்தங்கிய இனக்குழுக்களுக்கும் இடையில் உழைப்புப் பிரிவினை இருந்ததையும் பார்க்கிறோம். ஆக, உற்பத்தியில் இரண்டு கட்டங்கள் அடுத்தடுத்து இருந்தன, இவை முறையான பரிவர்த்தனைக்குரிய நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்தன. அநாகரீக நிலையின் தலைக்கட்டம் விவசாயத்துக்கும் கைத்தொழில்களுக்கும் இடையில் மேலும் உழைப்புப் பிரிவினையை உருவாக்கியது, குறிப்பாகப் பரிவர்த்தனைக்கு என்றே விளைபொருட்களில் மென்மேலும் அதிமான பகுதி உற்பத்தி செய்யப்பட்டது. இதனால் தனித்தனி உற்பத்தியாளர்களுக்கு இடையில் பரிவர்த்தனை நடைபெறுதல் சமுதாயத்துக்கு இன்றியமையாத தேவையாகி விட்டது. நிலைத்துவிட்ட இந்த உழைப்புப் பிரிவினைகளை எல்லாம் நாகரீக நிலை வலுப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகப்படுத்தி விட்டது, குறிப்பாக, நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான வேறுபாட்டைத் தீவிரப்படுத்தி (பண்டைக்காலத்தில் நாட்டுப்புறத்தின் மீது நகரம் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் வகித்த மாதிரி அல்லது மத்திய காலத்தில் நகரத்தின் மீது நாட்டுப்புறம் ஆதிக்கம் செலுத்திய மாதிரியில்) இந்த உழைப்புப் பிரிவினைகளை வலுப்படுத்தி அதிகப்படுத்தியது. அத்துடன், அது தனக்குப் பிரத்தியோகமான, தீர்மானகரமான முக்கியத்துவம் வாய்ந்த மூன்றாவது உழைப்புப் பிரிவினையையும் கூடச் சேர்த்து விட்டது. உற்பத்தியில் பங்கெடுக்காமல், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைப் பரிவர்த்தனை செய்வதில் மட்டும் ஈடுபடுகின்ற ஒரு வர்க்கத்தை, வர்த்தகர்களை அது படைத்தது. வர்க்கங்கள் தோன்றுவதற்குரிய முந்திய போக்குகள் எல்லாம் உற்பத்தியுடன் மட்டுமே முழுக்கத் தொடர்பு கொண்டிருந்தன. அவை உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்களை நிர்வாகிகள், வேலை செய்பவர்கள் என்று அல்லது பெரிய அளவு உற்பத்தியாளர்கள், சிறிய அளவு உற்பத்தியாளர்கள் எனறு பிரித்தன. இங்கே முதல் தடவையாக வர்க்கம் தோன்றுகின்றது, அது உற்பத்தியில் எந்தப் பங்கும் கொள்ளாமலே உற்பத்தி நிர்வாகம் முழுவதையும் கைப்பற்றுகிறது, பொருளாதார ரீதியில் தன் ஆட்சிக்கு உற்பத்தியாளர்களைப் பணியவைக்கவும் செய்கிறது, சமுதாயத்தின் எந்த இரண்டு உற்பத்தியாளர்களுக்கும் இடையில் தன்னை இன்றியமையாத இடைத்தரகனாக்கிக் கொண்டு இருவரையும் சுரண்டுகிறது. பரிவர்த்தனையில் உள்ள கஸ்டமும் ஆபத்தும் உற்பத்தியாளனுக்கு ஏற்படாமல் பாதுகாப்பதாக் கூறியும் அவர்களுடைய விளை பொருட்களுக்குத் தொலைதூரச் சந்தைகளைப் பிடித்துத் தருவதாக சாக்குச் கூறியும் புல்லுருவிகளைக் கொண்டு ஒரு வர்க்கம் தோன்றுகிறது. உடலுழைப்பில் ஈடுபடாத வர்த்தக வர்க்கம் தோன்றுகின்றது.

அவர்கள் மிகவும் அற்பமான சேவைகளுக்கு வெகுமதியாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உற்பத்தியின் சிறந்த பகுதியை எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள், பேரளவில் செல்வத்தையும் அதற்குத் தகுந்த சமூகச் செல்வாக்கையும் விரைவாகக் குவிக்கின்றார்கள். அதே காரணத்துக்காக நாகரீக நிலையின் காலகட்டத்தில் அவர்கள் புதிதுபுதிதாக கௌரவங்களைப் பெற்றுக் கொண்டே இருக்கவும் உற்பத்தி மீது மென்மேலும் அதிகமான பிடிப்பைப் பெறுவதற்கும் விதிக்குப் பெற்றுள்ளனர். அவர்கள் கடைசியில் சொந்தமாக ஒரு பொருளைப் படைத்துவிடுகிறார்கள், அதுதான் திரும்பத் திரும்பத் நடைபெறுகின்ற வர்த்தக நெருக்கடிகள் என்பதாகும்." (268-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு.த.அ.ஆ.தோ - ஏங்கெல்ஸ்) இந்த வர்க்கங்கள் தமது சுரண்டலை அதிகரிப்பதன் மூலம் உபரியையும் அதன் மூலம் தமது சொத்தை பெருக்கிக் கொள்கின்றனர். நிலப்பிரபுத்துவத்திற்கு மாற்றம் அடைந்த போது மன்னர்கள் ஆளும் பொறுப்பை வகித்துக் கொள்கின்றனர். இந்தியா போன்ற நாடுகளில் நிலப்பிரபுத்துவம் என்பது அடுத்த கட்டத்திற்கு நகரவில்லை. மாறாக பொருளாதார வளர்ச்சி என்பது மந்தம் அடைந்த நிலையியே இருந்துள்ளது எனலாம். கொலனித்துவ காலத்தின் பின்னரே முதலாளித்துவ உற்பத்தி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

பொருளாதார அமைப்பானது எல்லையைக் குறுக்கிக் கொண்டது மாத்திரம் அல்லாது பழைய உற்பத்தி முறைகளையும் தொடர்ச்சியான பழைமை பேணிய உற்பத்தி முறை நீடித்தது. இதனால் தேவைக்கு எற்ற முறையிலும், உற்பத்தி சக்தியையும், உற்பத்தி சாதனத்தையும் வளர்க்க முடியாது போய்விட்டது. பரிவர்த்தனைக்கு தேவையான பொருட்களின் உற்பத்தியில் செலுத்திய கவனத்துடன், உற்பத்தி பொருட்களும் அவசியமாகின்றது. இதுபற்றி மார்க்ஸ் எவ்வாறு இந்தியாவை புரிந்து வைத்துள்ளார் எனப்பார்ப்போம். 'உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறு பொருட்களை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்லவும், பரிவர்த்தனை செய்வதற்குமான சாதனங்கள் அறவே இல்லாத காரணத்தால், இந்தியாவின் உற்பத்தி சக்திகள் ஸ்தம்பித்துக் கிடப்பது நாடறிந்த அவலமாகும். பரிவர்த்தனைச் சாதனங்கள் இன்மையால், ஏராளமான இயற்கைச் செல்வத்தின் மத்தியில் சமுதாயம் தேவைக்குத் திண்டாடும் வறிய நிலையில் இருக்கும் காட்சியை வேறு எந்த நாட்டையும் விட இந்தியாவில் தான் அதிகமாகக் காணலாம். (208 மார்க்ஸ், இந்தியாவில் பிரிட்டிஸ் ஆட்சி, தொகுதி 3) உற்பத்தி சாதனங்களின் வளர்ச்சியடையாத நிலை மாத்திரம் அன்று அந்தக் காலச் சமுதாயம் என்பது நிலப்பிரபுத்துவ நிலையில் இருந்து மாற்றம் பெறக் கூடிய வகையில் இடம் பெற வேண்டியது அவசியமாகும். மார்க்ஸ் கொலனித்துவ இந்தியாவைப் பற்றிக் கூறுகின்ற போது கொலனித்துவத்தினால் ஏற்படுகின்ற மாற்றம் என்பது மட்டும் மாற்றத்தை ஏற்படுத்தி விடாது மாறாக "இந்த சாதனைகள் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை மட்டும் அன்றி அவற்றை மக்கள் தமக்கெனச் சுவீகரித்துக் கொள்வதையும் சார்ந்திருக்கின்றன. (212 மார்க்ஸ், இந்தியாவில் பிரிட்டிஸ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்) முதலாளித்துவ சிந்தனையும் இந்திய மக்கள் உள்வாங்கின் கொண்டு அதன்படி நடக்க வேண்டும். அதாவது முதலாளித்துவ வர்க்கமாகக் கொள்வதற்கு அந்த வர்க்கம் முதலாளித்துவ உற்பத்தி முறையில் கவனம் செலுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய சமுதாயத்தில் மக்கள் பல்வேறு வகையான நிதிகளையும், பல்வேறு பொருட்களையும் செலுத்த வேண்டும், என்பது பற்றி மன்னனே கட்டளையிட்டதை காண முடியும். இதே மன்னர் பணத்தை வட்டிக்கு விட்டு அந்த வட்டியை கோவிலுக்கு செலுத்துமாறு கட்டளையிட்டான். "கல்வெட்டிற் குறிக்கப்பட்டுள்ள ஊரார், சபையார், நகரத்தார் என்போர் காசில் ஒவ்வொரு பகுதி பெற்றுக் கொண்டு ஒரு காசுக்கு ஓராண்டுக்கு இரண்டு கலநெல் வீதம் வட்டி செலுத்த உடன்படுகின்றனர்" (ப.169 வேலுப்பிள்ளை தமிழர் சமய வரலாறு) இதனை பொருளாதார முனைப்பில் மூலதனமிடும் தற்கால முதலாளித்துவச் சிந்தனை அன்று அவர்கட்டு இல்லை. ஆனால் வட்டியை கோவிலுக்கு கொடுப்பது நீதிமுறைக்கு தவறானதாக அன்று இருக்கவில்லை என்பதையும் காட்டுகின்றது. நகைகளில் மோகம் கொண்டுள்ள இந்தியர்களைப் பற்றி மார்க்ஸ் கூறுகின்றார், ஒல்லாந்தர்கள் நகைகளுக்கு வரிஅறவிட்டாதாக யாழ்ப்பாண சரித்திரம் என்ற வரலாற்று நூல்களின் மூலமும், நகைகள் செய்வதிலும், கோவில், சிலைகள் வடிக்கப்பட்டன என்பதை வரலாற்றில் இருந்து பெறும் தரவுகளில் இருந்து நிலப்பிரபுத்துவ வர்க்கம் பணக்கார வர்க்கமாக வளராத நிலையில் முதலாளித்துவத்திற்கு மாற்றம் பெற முடியாது. பணக்கார விவசாயிகள், பண்ணை முதலாளிகள் பெருக்கிய மூலதனத்தின் மூலம் சந்தையைப் பிடித்து ஆதிக்கத்தை பெருக்காமலும், முதலீடு செய்வதில் கவனம் செலுத்தாமல் விட்டதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

நிலப்பிரபுத்துவமும் தனது மூலதனத்தை மூலதனமிடுவதன் மூலமும் புதிய தொழில் துறைகளை வளர்ச்சியடையச் செய்யமுடியும். ஆனால் நிலப்பிரபுத்துவ வர்க்கமானது பாரம்பரியமாக சொத்தை முடக்கி வைப்பதிலும், பொண்மணி சேர்ப்பதிலும் செலவிடுவதன் மூலம் முதலீடை செய்யாது விட்ட நிலையானது எமது தேசங்களின் வளர்ச்சி நிலை காலம் தாழ்ந்தப்பட்டது எனலாம். "அந்த உற்பத்திமுறை மூலதனத்தின் தலைமையான ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மூலதனம் ஒரு சுயேச்சையான சக்தியாகத் திகழ வேண்டுமானால் மூலதனம் மையப்படுத்துவது அத்தியாவசியாமாகும்.' (214 மார்க்ஸ், இந்தியாவில் பிரிட்டிஸ் ஆட்சியால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் விளைவுகள்) இன்றைய பொருளாதார அமைப்பு என்பது குறுகிய கிராம, நகர எல்லைக்குள் தன்னை அடக்கிக் கொள்ளாமல் அது தனது எல்லை கடந்துள்ளது. ஆனால் மேற்கு ஐரோப்பாவில் உருவாகிய மூலதனம் போல் எமது நாடுகளில் உருவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.6 தேசிய இனம்

குலங்கள் - கணம் (பல குடும்பங்களின் கூட்டு clan) இனக்குழுமங்கள் (பல குலங்களின் கூட்டு) நிலப்பிரபுத்துவத்திற்கு முன்னைய உற்பத்தி உறவில் அமைகின்ற சமூக ஒழுங்கமைவு ஆகும்.

தேசிய இனங்கள்- (பல இனக்குழுமங்களின் கூட்டு) மறுபடியும், தேசிய இனங்கள் தேசிய இனத்துடன் ஐக்கியமாக முடியும். இவைகள் நிலப்பிரபுத்துவம் உருவாக்கிக் கொள்கின்றது.

பின்னரே நிலப்பிரபுத்துவத்தில் இருந்து முதலாளித்துவத்திற்கு நகர்ந்து கொள்ளும் போது தேசத்திற்குரிய பண்பைக் கொண்டு தேசிய இனங்கள் வளர்கின்றது.

ஐரோப்பிய நாகரீகத்திற்கும் பல்வேறு தேசிய இனங்களுக்கும் முன்னோடிகளாக Etruscan, Teutons, Gauls, saxon, Briton போன்ற இனக்குழுக்கள் இருந்திருக்கின்றன. இவ்வாறே தமிழர்களுக்கு முன்னோடிகளாக சுமேரியர்கள் இருந்துள்ளார்கள். அவர்களின் நாகரீக வளர்ச்சி என்பது பல்வேறு மக்கள் கூட்டத்தினை உருவாக்கிக் கொண்டது. தமிழர்கள் மொழிரீதியாக இணைகின்ற போதிலும் பலஇனக்குழுமம் சங்ககாலம் வரை தொடர்கின்றது. நிலப்பிரபுத்துவத்திற்கு முன்னர் இனக்குமங்களான கைம்பர், வில்லவர், எயினர், ஒழியர், தோடர், மறவர், மாறர், தகாசர், குறும்பர், கங்கர், வானரர், நாகர், கருநாடார், துளுவர், ஆய், விறலியர், இசைவாணர், பாணர், பறையன், துடியன், கைம்பன் என்றும் வேளீர் என்று வாழ்ந்துள்ளார்கள். பழைய இரத்த உறவுமுறைக் குழுக்கள் கலைக்கப்பட்டு இனக்குழும வேறுபாடுகள் இல்லாதாகின்றது. இவ்வாறான இனக்குழுமக்களின் இணைப்பும் பின்னர் வெவ்வேறு தேசிய இனங்களாக மாறிக் கொண்டவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்புத் தான். அதாவது மொழிக்குழுவாகிய மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிக்குழுமங்களின் தொடர்ச்சியாக மீளவும் கலந்துள்ளது. இவ்வாறு தான் நவீன காலத்து தேசிய இனங்கள் உருவாகியிருக்கின்றது.

இனம் என்பதை பொதுப்படையாக பொதுப்புத்தியில் இருந்து வரையறைத்துக் கொள்வது என்பது சோம்பேறித்தனமாகும். இவ்வகையாக சோம்பேறித்தனம் இலகுவில் மக்களை திசைதிருப்பிக் கொள்ள முடிகின்றது. ஆகவே வெவ்வேறு காலகட்டத்தில் உள்ள சமூக உறவையும், பொருள் உற்பத்தி முறையை பிரதிநிதித்துவம் செய்யும் சமூக அமைப்பை வெளிப்படுத்தும் வகையில் வரைவிலக்கணங்கள், அரசியல் சொல்லாடல்கள் அமைய வேண்டும்.

இனக்குழு என்பதை இலங்கையில் உள்ள சமூகத்தவர்களை பகுப்பதற்கு பயன்படுத்தும் போது கவனமாக இருக்க வேண்டும். முதலாளித்துவத்திற்கு முன்னையை உற்பத்தி உறவைக் கொண்ட சமூகமைவு இருப்பது பழங்குடிகளாக வேடர்களே. இவர்களில் சிறிய அளவினரே சிங்கள மொழி பேசுகின்ற வேடர்களாகும். ஆனால் தமிழ் வேடர்கள் தமிழ் மக்களிடையே கலப்பிற்கு உள்ளாகி வருகின்ற வேளையில் அகமுரண்பாடுகளினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். பழைய இரத்த உறவுமுறைக் குழுக்கள் கலைக்கப்பட்டு இனக்குழும வேறுபாடுகள் இல்லாதாக்கியிருக்கின்றது. தமிழ் தேசிய இனத்திற்குள் சங்கமாகியிருக்கும் வேடர்களின் மீதான தீட்டு மனப்பாங்கிற்கு எதிராக போராட வேண்டும். இதற்குக் காரணம் எம்மிடையே இருக்கின்ற சாதிய மனோபாவமாகும். பழங்குடிகள் தமிழ் தேசத்தில் இணையும் இறுதிக் கட்டத்தில் இருக்கின்றனர். சமூக உற்பத்தியை தீர்மானிப்பதில் வெற்றிபெற்றாலும் தீண்டாமை சிந்தனையில் தொடர்கின்றது.

இனக்குழு என்பது முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு முன்னையது. எனவே இங்கு இனக்குழு என்று பயன்படுத்துவது தவறானதாகும். நிலப்பிரபுத்துவம் இனக்குழுக்களாக இருந்தவற்றை இணைத்து "தேசிய" இனங்களாக அதிகமானவை மொழிவழியில் (assimilation) நடைபெறுகின்றது. இது நீண்ட காலமெடுக்கும். எனவே இங்கு இனக்குழுமம் என்று வரையறுப்பது மானிடவியல் ரீதியாக கூட ஏற்றுக் கொள்ள முடியாது.

இனக்குழுமங்கள்- தேசிய இனங்களிடையே மோதல் என்பது அடையாளம், இருப்பு, வளம் சார்ந்தாக இருக்கின்றது. முதலாளித்துவத்திற்கு முற்பட்ட முரண்பாடுகளை இனமோதல்களாக கொள்ள முடியாது. பண்டைய உறவுமுறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளைக் கொண்ட பங்காளிகளை (மாமன் மச்சான், இரத்த உறவுகள், குலம் கோத்திரங்கள் ஒன்றிணைந்து எதிர்க்கும் கட்டமாகும்) இணைத்து எதிர் கொண்டு மோதும் நிலையும் அந்த காலகட்டமும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

இந்த நிலையில் இரத்தவகையில் தூய்மைவாதம் (சாதிய தேசியவாதிகள் போல அல்லது கிட்லரின் தூய்மையான இனம் போல) கணிப்பிடுவது நவீன தேசிய இனங்கள் ஆகும். மனிதவளர்ச்சிப் போக்கையும், சமூக ஒழுங்கமைவு பற்றிய புரிதல் இல்லாது சாதியத்தில் தூய சாதி, தூய தமிழ் இனம் என்ற கற்பனையும் வளர்ந்திருக்கின்றது. இவைகள் எல்லாம் சாத்தியம் இல்லாத அபர்த்தமான கருத்தியலாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.7 இனங்கள் "20" சரியான வரையறையா?

"சிங்களவர், ஈழத்தமிழர், முஸ்லிம்கள், மலையக தமிழர், மலாய், ஒல்லாந்து பறங்கியர், போர்த்துக்கல் பறங்கி, வேடர், பரதர், மலையாளிகள், கடல் வேடர், தெலுங்கர், இலங்கை சீனர், தாவூத் போரா, மேமன், கொழும்பு செட்டி, பார்சி, சிந்தி, ஆபிரிக்க வம்சாவளி கப்ரிஞா, கோஜா ஆகிய இருபது இனத்தவர்கள் இலங்கையில் வாழ்வதாக எனது அமைச்சில் பதிவாகியுள்ளது என Mano Ganesan https://www.facebook.com/mano.ganesan.3> அறிவித்துள்ளார். Caste - ethnic group அல்லது minority- nationality- Nation இவைகள் வெவ்வேறானவை. இவற்றை விரிவாகப் பார்க்க வேண்டும்.

முஸ்லீம்கள் மத அடையாளமாகக் கொண்டு அதனுள் இருக்கும் குழுக்கள் மேமன்- பார்சி- தாவூத் இவர்கள் இந்தியாவின் வர்த்தகத் தொடர்பினால் இலங்கையில் குடியேறியவர்களாவர். மலாய்- மலாயிலிருந்து நாடுகடத்தப்பட்டஅரச குடும்பம், வெவ்வேறு காரணத்திற்காய் இலங்கையில் குடியேறியவர்கள்.

வடக்கு கிழக்கு- வடக்கு கிழக்கில் வாழ்பவர்கள் பாரம்பரிய அவுஸ்ரோலைட் மக்களின் குடிகள். மதம் மாறி உள்ளார்கள் என்பதை விளக்க நம்மிடம் சக்தி உள்ளதா? காரணம் சமயத்தை புறந்தள்ளும் சிந்தனை வடிவத்திற்கு அப்பால் சிந்திக்க முடியாத மக்கள் கூட்டமும் உள்ளது. சமய போதனைகளை முதன்மைப்படுத்தி மறும வாழ்வியலில் இருந்து வெளியே வராத நிலை உள்ளது. சமயங்களை தனிமனித தெரிவிற்கு உட்பட்டதாக வரையில் அதாவது (secularism) - மதச் சார்பின்னை என்ற உயர்ந்த கட்டத்தை வளர முடியாது. நாம் ஏதோ அரைநிலமானிய கட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெளியே வந்து விட்டோம் என்று நடிக்கத் தேவையில்லை. ஆக அரைநிலமானியச் சிந்தனை முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தில் பிரச்சனைக்குரியதாக்கின்றது.

மதத்தினை வைத்தே தம்மை தேசிய இனம் என்று கருதும் முஸ்லீம் அரசியல் நிலைப்பாட்டிற்கு சிக்கலைத் தோற்றுகின்றது. காரணம் இனக்குழுக்கள், சாதி இவற்றின் எச்சங்கள் தொடர்ச்சியாக இருப்பதனால் முஸ்லிம்களிடையே பிரிவினைகள் தொடர்கின்றன. ஆனால் அவர்கள் தேசிய இனமாக உணர்கின்றனரா என்பதைத் தீர்மானிப்பது அவர்களாகவே இருக்க முடியும். ஆனாலும் தமிழ் தேசிய இனத்தின் ஒரு அங்கமாக முஸ்லீம்களை இணைப்பதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது.

**சாதிகள்**- பரதர், கொழும்பு செட்டி இது தமிழ் மக்களின் சாதிகள் தான். இவர்கள் முன்னர் இனக்குழு வாழ்வியலைத் துறந்தவர்கள்.

**பழங்குடி** - Tribals- வேடர் - இவர்களில் பெரும்பகுதியினர் சிங்கள, தமிழ் தேசிய இனங்களுக்குள் கலந்து விட்டனர். ஆனாலும் எச்சங்கள் தொடர்வது இயல்பானது.

**சிறுபான்மைத் தேசியஇனம்** - Ethnic Minorities - பறங்கியர், தெலுங்கு, மலையாளிகள் இவர்கள் 1933 பின்னர் ஒரு பகுதியினர் கேரளம் செல்ல மறுபகுதியினர் சிங்களவர்களாகவும், தமிழர்களாகவும் மாறியுள்ளனர். சிலர் தொடர்ந்தும் தமது அடையாளத்தைப் பேணுகின்றார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் புலம்பெயர் தமிழர்கள் சிறுபான்மைத் தேசிய இனம் என்ற வரையறைக்குள் அடங்குகின்றோம். இவ்வாறு சிறுபான்மைத் தேசிய இனம் என்பதால் பிரசைகளுக்கான சமவுரிமை - சமசந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

சிங்கள தேசத்தில் உள்ளவர்களும், அம்பாறை மாவட்டத்தில் இருப்பவர்கள் குறிசொல்பவர்களாக (சாத்திரம்) இருக்கின்றனர். இவர்களில் இன்னொரு பகுதியினர் சிங்கள தேசத்திலும் வாழ்கின்றார்கள். சிறு குழுவாக வாழும் நகரசுத்தி தொழிலாளர் (தெலுங்கு) அவர்கள் அந்த மொழியை மறந்தவர்களாகவும் உள்ளார்கள். சில தேசிய சிறுபான்மையினர் சொந்த மொழிகளை மறந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**தேசிய இனங்கள்**- nationality- இவைகளில் மலையக, சிங்கள, முஸ்லீம் - தமிழர் தேசிய இனங்களாகும். முஸ்லீம் மக்கள் தேசமாக வளரவில்லை. அவர்கள் சிறுபான்மையினராக பரந்து வாழ்கின்றார்கள். மலையக மக்கள் மலையகம், காலி கொழும்பு என்று சிறுபான்மையினராக வாழ்கின்றார்கள். SWRD பண்டாரநாயக்க 1956 மொழிபற்றிய நிலைப்பாட்டில் 70 வீதம் பெரும்பான்மையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மொழி என்றும் தமிழ் சிறுபான்மை என்கின்றார். இங்கு மொழி சிறுபான்மை என்றாலும் தமிழ் தேசம் என்பதை மறுத்துவிட முடியாது.

இரண்டு Nation - தேசமாக வளர்ந்த தமிழ் - சிங்கள தேசம் என்பன உள்ளது. இலங்கை என்பது நாட்டின் அரசிற்குரியதாகும். 20 இனங்கள் என்ற வரையறை அபர்த்தமான வரையறையாகும். இந்த கதையாடல் தேசங்களின் உரிமை தொடர்பான வாதத்தினை திசைதிருப்புவதற்காகும். தேசத்தின் - தேசிய இனங்களின் உரிமையைப் பற்றிய கரிசனை கொண்டவர்களையும், மக்களையும் குழப்புவதற்காக இந்தக் கூற்று முன்வைக்கப்படுகின்றது. பிரசைகளுக்கான உரிமை தேசங்களின் அரசியல் உரிமை பற்றிய ஜனநாயகம் சம்பந்தப்பட்ட விடயம். தேசிய இனங்களின், தேசங்களின் இறைமை சம்பந்தமான விடயங்களையும் தேசிய சிறுபான்மை (Ethnic Minorites or Groups) National Question தேசிய இனப்பிரச்சனை பற்றிய விடயத்தில் இருந்து பிரச்சனையை அணுகுவதும் கல்விசார் மானிடவியல் ஆய்வில் இருந்து பிரச்சனையை அணுகுவது இவை இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது. தேசிய இனம் பற்றியதை லூயி கென்றி மோர்கன், ஏங்கெஸ், ஸ்ராலின், லெனின் ஆகியோரிடம் உயர்ந்த ஜனநாயகக் கோட்பாடு தான் பயன்படும். தேசியக்குரலை திரித்துத் தான் காவி இடதுசாரிகள் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். காவி இடதுசாரிகளை விட படு பிற்போக்கான சமூக ஒழுங்கமைவு பற்றிய பார்வையை ஒரு அமைச்சரால் முன்வைக்கப்படுகின்றது. மேலும் இனம் என்பதே முதலில் தவறு இனம் என்பது Race அவைகள் ஆபீரிக்க- அவுஸ்ரோலைட், மொங்கோவிய, இந்தோ ஐரோப்பிய என நிறங்களைக் கொண்டது. இனம் என்பதும் நவீன தேசிய சிறுபான்மை, தேசிய இனங்கள், தேசங்கள் இவைகள் எல்லாம் ஒன்றல்ல. தனிப்பட்ட மனிதராக எத்தனை புத்தகமும் கருத்துக்களும் வெளியிடும் உரிமை உள்ளது. ஒரு மந்திரி மானிடவியல் மாணவர் போன்று பொதுவெளியில் எழுதிவிட முடியாது. ஆட்சியதிகாரத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு பிற்போக்கானதாக இருக்கின்றதையே வெளிப்படுத்துகின்றது.

அமைச்சின் பெருந்தேசிய நலன் மலையக மக்களை கண்டித் தமிழர்கள் என்று காவி இடதுகள் போல், மலைய தேசிய இனம் என்பதை மறுக்கும் கோட்பாட்டிற்குப் பின்னால் சென்றதன் வெளிப்பாடாகும். இப்போ தமிழ் தேசத்தின் மீதான தாக்குதல். மேலும் சிங்கள தேசத்தில் உள்ள குடிபற்றி ஆராய சிறிலங்கா - சிங்கள தேசத்திற்கு உண்டு. இது தமிழ் தேசத்தின் சுயநிர்ணயம் மீதான தாக்குதலாக இருக்கின்ற போது அவை எதிர்க்கப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வேண்டும். அமைச்சரின் கருத்தியல் என்பது ஏதோ தன்னிச்சையானதாக எழுந்ததாக கொள்ள முடியாது. அதேவேளை லெனினியம் போதிக்கும் தேசிய இயக்கங்களின் துயிலெழல் பற்றி புரிதல் அற்றவர்கள். தமிழ் இன உணர்வாளர்கள், இனவாதிகள் என்று முத்திரை குத்துவது திரிபுவாதமேயாகும். இதேவேளை தமிழ்தேசத்தின் உரிமையை ஆண்டபரம்பரை, தமிழர்களே தமிழர்களை ஆளவேண்டும் என்பது சுயநிர்ணயத்தை விளங்கிக் கொள்ளாத கோசமேயாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.8 பாகுபாட்டுச் சிந்தனைகள்

நிறுவனமயப்படுத்தப்பட்ட சிந்தனை என்பது மனித குலவரலாற்றில் பல்வேறு கட்டங்களில் மனித அழிவினை உண்டுபண்ணியிருக்கின்றது. நிறுவனமயப்பட்ட பாகுபாட்டுச் சிந்தனை என்பது ஒரு அரசியல் பொருளாதார கட்டமைப்பை பாதுகாப்பதாக உள்ளது. நிறுவனமயப்பட்ட (discrimination of people) பாகுபாட்டுச் சிந்தனைகள் வெவ்வேறு வடிவத்தில் உள்ளன.

**சிந்தனை நாசிச** - இரத்தத் தூய்மையில் அமைந்த சிந்தனை வடிவமாகும். நாசிச சிந்தனையின் அடியொற்றியே சாதிய - தேசியவாதம் தமிழகத்தில் உருப்பெற்றுள்ளது.

**சிங்கள பௌத்த பேரினவாதம்** (சோவனிசம்) ஆரியவாதம், விஜயன்- சிங்கள -பௌத்த பெருமையை அடிப்படையாகக் கொண்டது. சிறிலங்கா என்ற ஒரு நாடே தமக்கு இருக்கின்றது என்ற தாய்நாட்டுப் பெருமை.

**நிறவாதம்** - இது விவிலியத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு வளர்ந்த சிந்தனை வடிவமாகும். கறுப்பர்கள் எதற்கும் பொருத்தமற்றவர்கள் என்ற சிந்தனை வடிவம் இது தென்னாபீரிக்காவில் கறுப்பினர்த்தவர்களை ஒடுக்குவதற்கு முக்கிய பங்காற்றியது. கறுப்பு என்பது புறயினத்தார் - ஆபிரகாம் கோத்திர மதங்களாகிய யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மதங்களில் உள்ள சிந்தனைக் கூறு. இது அடிப்படையில் தம்மை விட மற்றவர்கள் (Heathendom) சரியான சிந்தனையை, கடவுளை கொண்டவர்கள் இல்லை என்று கருதுகின்றது. இன்றைய காலத்தில் இஸ்லாம் (காஃபீர், முனாபிக் - இறைமறுப்பாளர்கள்) தீவிர கிறிஸ்தவ மதக்குழுக்களும் மதமாற்றுவதிலும், மற்றைய உலகக் கண்ணோட்டத்தை தவறான போக்கைக் கொண்டதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிப்பார்கள். (புறயினத்தார் சிந்தனைக்கும் வர்ணாச்சிரமத்திற்கும் ஒப்புவமை உண்டு) இனவாதம் (Racism) நிறத்தினையும், பௌத்தீக ரீதியான உறவைக் கொண்டதாகும்.

**சியோனிசம்** - வாக்களிக்கப்பட்ட பூமி என்ற சிந்தனை வடிவம் ஏற்கனவே நிறுவனமயப்பட்டிருந்து. சியோனிசம் தொழிற் புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட யூதர்களின் மீதான ஒடுக்குமுறையின் காரணமாக எழுந்த சிந்தாந்த வடிவமாகும். 1850களின் பின்னராக அமைப்பு வடிவம் பெறுகின்றது. இதன் பின்னர் அதிக விழிப்புணர்வு ஏற்பட்டு வாக்களிக்கப்பட்ட பூமிக்கு செல்லல் என்ற வடிவம் ஊக்குவிக்கப்பட்டது.

**நாசிச** - இரத்தத் தூய்மையில் அமைந்த சிந்தனை வடிவமாகும். நிதிமூலதனத்தின் உச்சக்கட்ட வளர்ச்சில் வெளிப்படும் ஆக்கிரமிப்பு, பாகுபாட்டுச் சிந்தனையாகும். வர்ணாசிரம பிறப்பைக் கொண்டு மனிதர்களை பிரிக்கின்றது. வர்ணாசிரமச் சிந்தனை - இந்து - இந்தி - இந்தியா என்னும் ஆதிக்கச் சிந்தனையாகும்.

- இன்று சாதிகளாக இருப்பவை பழைய இனங்குழுமங்களின் எச்சங் கொண்ட பெயர்களாவும்
- குலங்களின் சின்னங்களை கொண்ட பெயர்களாவும்
- செய்த தொழில் மற்றும் அதிகாரி பதவிகளின் பெயர்களை கொண்டதாகவும்
- வதிவிடங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாகிய பெயர்
- சமூகங்களினால் வடுச் சொற்களைக் கொண்டு உருவாகிய பெயர்கள் சாதியமான வடிவில் தொடர்கின்றது. இந்தச் சிந்தனைகள் என்பது மனிதர்களின் உணர்வுகளுடன் சேர்ந்திருக்கின்றது. இவைகள் அரசியல், பொருளாதார நலன் கொண்டு வளர்த்தெடுக்கப்படும் போது ஆபத்தாகின்றது.

**சுதேசியம்-** நிதிமூலதனம் என்பது தேச அரசுகளை இல்லாதாக்கின்றது, ஆக்கிரமிக்கின்றது. இது ஏகாதிபத்திய எதிர்ப்பு, அன்னிய மூலதன எதிர்ப்பு என சுதேசிய (தேசியவாதம்) முன்வைக்கப்படுகின்றது. கொலனித்துவத்தில் இருந்து விடுதலைக்காக நாட்டுப்பற்றை வளர்த்தார்கள், தேசிய உணர்வை கட்டி எழுப்பினார்கள். தேசியவாதத்தை இனவாதம் என்றால் சுதந்திரத்திற்கான போராட்டங்களை இனவாதம் என்று வரையறுத்துவிட முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுந்தேசிய நடத்தையான தமிழ் தேசத்திற்கான போராட்டத்தில் கொலைகளின் ஊடாக நிர்கதியற்ற நிலையை ஏற்படுத்துவது, உளவு நிறுவனத்தின் பணிப்பின் பெயரில் நடைபெற்ற தாக்குதல், முஸ்லீம்கள் வெளியேற்றம் என்று ஒரு அமைப்பின் அரசியல், இராணுவத் தவறுகளை குறித்து நிற்கின்றது. இவைகள் எவையும் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படவில்லை. மறுபுறத்தே முஸ்லீம்களை பயன்படுத்திய அரசபடையும் அவர்களின் உளவு நடவடிக்கைகள், அழித்தொழிப்புக்கள், ஜிகாதிகளின் தாக்குதல், நாசகாரம், படுகொலைகள் பற்றி பேசாது விடுவது தான் வழமையாகியிருக்கின்றது. குறிப்பிட்ட நாட்டில் நடந்த சம்பவங்கள் தேசிய இன,மத, சாதி, மத ஒடுக்குமுறைக்கும் வித்தியாசம் உள்ளது.

உலக வரலாறு நெடுகிலும் விருப்பு வெறுப்பு என்பது தன்னியல்பிற்கு உட்பட்டதாகவும், நிறுவனமயப்பட்டதாகவும் இருந்திருக்கின்றது. இதில் புறயினர்த்தார், வர்ணாசிரமச் சிந்தனைகள் பழமையானது. அவைகள் கூட நிலப்பிரபுத்துவத்தின் வக்கிரச் (ஆசியபாணி கொடுங்கோண்மை) சிந்தனையாகும்.

இலங்கையில் இருக்கும் பிரதான முரண்பாடான தேசியப்பிரச்சனையை பேசுகின்ற போது பிற்போக்கானதாக கட்டமைக்கப்படுகின்றது. Nationalism teaches you take pride in shit you haven't done & hate people you have never met. முன்னர் அறிந்திராத நபர்களிடையே வெறுப்பை ஏற்படுத்துவதாக முன்வைக்கப் படுகின்றது. நிறுவனமயப்படுத்தப்பட்ட பாகுபாட்டுச் (discrimination of people) சிந்தனை வடிவம் என்ற வகையில் மேற்கண்ட பொதுப்பாடான கூற்றாகும். "இனவாதம் இனப்பகை" எனும் சொற்கள் "பெருந்தேசியவாதம் தேசிய இன முரண்பாடு என்பன நிறுவன மயப்பட்ட பெருந்தேசியவாதம், அதனை எதிர்த்த அமைப்பின் குறுந்தேசியவாதம் என்பதைப் பற்றிய பிரச்சனை திசைதிருப்பி விடுகின்றது. இனவாதத்தை வெறுக்கின்றோம் என பிரகடனப் படுத்தும் மேட்டுக்குடிவாதம் தேசிய ஜனநாயகக் கட்டத்தைப் பற்றி தவறான புரிதலை வைத்திருக்கின்றது.

"You dont fight fire with fire. You fight fire with water. Were gonna fight racism with solidarity. Were not gonna fight capitalism with Black capitalism. Were gonna fight capitalism with socialism. Socialism is the people. - Fred Hampton (30/8/48 - 4/12/69) "நீங்கள் நெருப்பைக் கொண்டு நெருப்பை எதிர்த்து போரிட முடியாது. நீங்கள் அதற்கு தண்ணீரை பயன்படுத்துவீர்கள். நாங்கள் தோழமை உணர்வு கொண்டு இனவாதத்தை எதிர்த்துப் போரிடுவோம். முதலாளித்துவத்தை எதிர்த்துப் போரிடுவதற்காக கருப்பர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவத்தை வளர்க்க மாட்டோம். நாங்கள் சோஷலிசத்தால் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போரிடுவோம். மக்கள் தான் சோசஷலிசம்." Fred Hampton (மேற்கண்ட நிலைப்பாடு என்பது அமெரிக்காவில் நிறவெறிக்கெதிரான போராட்டப் பாதைக்கு பொறுத்தமாக இருக்கும். இதனை இலங்கைக்கு பொருத்த முனைவது குட்டி முதலாளியச் சிந்தனையாகும்.

தோழர் லெனின் அமெரிக்க நிறவெறிக்கு எதிரான நிலைப்பாட்டில் கறுப்பு அமெரிக்கர்களுக்கு சுயநிர்ணயம் உடையது என எழுதுகின்றார். இங்கு Fred Hampton போன்றவர்களின் புரிதலை பொதுமைப்படுத்தி அப்பழுக்கற்ற மனிதாபிமானிகள் என்று பெயர் எடுத்து விடலாம். ஆனால் குறிப்பான எரியும் பிரச்சனை பற்றிய தீர்வாக அது இருக்க முடியாது.

"The rise of the Garvey movement and other political and cultural currents within the African-American community drew the attention of the communists. In 1920 the Second Congress of the Communist International developed its thesis on the right of oppressed nations to self-determination. Soviet leader V. I. Lenin noted that the right of self-determination applied both to the Irish in Ireland and to African Americans in the United States. http://www.workers.org/2011/us/african_americans_0224/> https://www.marxists.org/history/erol/ncm-7/bl-introduction.htm> மேலதிகமாக அமெரிக்க நிலைமை பற்றிப் பார்க்கலாம்.

தேசிய இயக்கங்களின் வளர்ச்சி என்பது ஒன்று மற்றைய மனிதர்களை நிற, மொழி, மேலாண்மைச் சிந்தனைகளால் அடக்குவதும் வெவ்வேறானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3.9 இலங்கையில் என்ன நடக்கின்றது?

மக்கள் கூட்டத்தினை குறிக்க இனம் என்ற சொல்லும் அதன் பொருட்டு வெளிப்படும் பாகுபாட்டுச் சிந்தனை என்பதை இனவாதமாக ஓட்டுமொத்தமான பார்வையில் பயன்படுத்தப் படுகின்றது. இலங்கையில் இருப்பது ஒடுக்கும் பாகுபாட்டுச் சிந்தனை மற்றையது அதனை எதிர்க்கும் போராடும் சிந்தனை யாகும். இது தேசிய இயக்கங்கள் துயிலெழுகின்ற போது மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைக்கு உட்பட்டதாகும். இவ்வாறு மென்மையான வரையறை என்பது அதன் அரசியலின் உள்ளார்ந்தப் போக்கை விளங்குவதாக இல்லை. இதற்கு அடிப்படையானது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தமிழ்தேசத்தினதும், தேசிய இனங்களின் மீதான ஆக்கிரமிப்பு அரசியலாகும். பெருந்தேசியவாதத்திற்கு எதிரான எதிர்ப்புணர்வு என்பது அமைப்பு வடிவமாக எதிர்க்கப்படுவது இருக்கின்ற போதிலும் பாதிக்கப்படுவதினால் ஏற்படும் உணர்வலை ஏற்படுகின்றது.

மற்றையது தேசிய எழுச்சி பெறும் பொருட்டு தேசிய இனத்தின் மரபு ரீதியாக கட்டமைக்கப்பட்ட சின்னங்கள், தேசிய வீரர்கள், வரலாறுகள் முன்வருவதும் அதில் குறிப்பான் என்பது முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இதனை தமிழ் மிதவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆண்ட பரம்பரைக் கோசம் என்பது இந்த தேசிய இனத்தின் எழுச்சிக்கு உட்பட்டதேயன்றி இது இனவாதத்திற்கு உட்பட்டதல்ல. ஆண்டபரம்பரை என்பது சாதியைக் குறிப்பது இல்லை. காரணம் ஒடுக்கும் சாதி ஆட்சியில் இல்லை அரசவம்சம் தான் இருந்தது. இங்கு சின்னங்கள், குறிப்பான் போன்றவற்றின் பயன்பாட்டை பூர்சுவா தேசியவாதிகள் பயன்படுத்துவதற்கும் அதன் பலவீனங்களுக்கு உட்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பாட்டாளி வர்க்கத் தலைமை அவற்றை அதே விதத்தில் பயன்படுத்திவிடப் போவதில்லை. தேசிய கோரிக்கையை பூர்சுவா தேசியவாதத்தில் உள்ள குறைபாடுகளை முன்னிறுத்தி மறுக்கப்படுகின்றது. ஆனால் எல்லாவற்றையும் சந்தர்ப்பவாதமாக இனவாதம் என்று வரையறுத்து தேசிய இனங்களின் உரிமையையும், தேசங்களின் வளர்ச்சி என்பது முதலாளித்துவம் ஏற்படுத்துகின்றதை மறுக்கின்றது. இதனை மறைக்கும் வகையில் பெருந்தேசியவாதம் திட்டமிட்டு செயற்படுகின்றது. இதேவேளையில் இதற்கு பின்னவீனத்துவ முதலாளித்துவ தாராளவாதச் சிந்தனையும், போலி இடதுசாரிகளும் துணை செய்கின்றனர்.

தமிழ் தேசத்தின் ஒடுக்குமுறை அதிகப்படுத்தப்படும் போதும் அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எத்தனிக்கின்ற போது (myth- symbol- national heroes) வரலாற்றுப் பெருமிதம், சின்னங்கள், தேசிய வீரர்கள் என்பது தேசியத்தின் நலனுக்காக உருவாக்கப்படுவார்கள். இது தேசிய அபிலாசைகளை அடைவதற்கு மக்களை ஒரு பண்பு- ஒரு மனச் சிந்தனையை உருவாக்கிக் கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. தேசிய அபிலாசைகளை ஒன்றிணைக்கும் ஒரு தேசியவாதக் கோசம் தான் ஆண்டபரம்பரை என்ற கோசமாகும். இங்கு ஆண்டபரம்பரை என்பது முன்னர் தமிழ் மன்னர்களின் வரலாற்றை முன்னிறுத்து நடைபெற்றது. அதேவேளை குறிப்பிட்ட விடயத்தை அடைவதற்கான குறிப்பான் பொதுவாக இருக்கின்றது. இதனை இனவாதம் என்று எமது தேவைக்காக சுருக்கிப் பார்த்துவிட்டுச் செல்லமுடியும். ஆனால் பொதுவாக அவ்வாறு இல்லை. இங்கு இனவாதம் என்ற வரையறை தன்னார்வம், தன்னியல்பு சார்ந்த வரையறையாகும். முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை பெருந்தேசியத்தின் இருப்பைப் பாதுகாத்துக் கொண்டு தேசிய இனப்பிரச்சனையை இனவாதமாகப் பார்ப்பது புறநிலை அணுகுமுறை அல்ல.

தேசங்களிடையேயான முரண்பாடுகள் தான் தேசிய உணர்வை தூண்டுகின்றது. ஏற்கனவே இருக்கின்ற சமூகத்தின் போலியுணர்வு- அகவுணர்வு- (spontaneous - subjective) என்பது ஒடுக்குமுறைக்கு எதிராக குவிக்கப்படுகின்றது. இது அரசியல் நோக்கத்திற்கானதாகவும் ஒடுக்குமுறையில் இருந்து வெளியேறுவதற்காகவும் இருக்கின்றது. இவ்வாறு தேசிய இனங்களின் முரண்பாடுகளால் ஏற்படுவது தேசியவாதமேயன்றி இனவாதம் அல்ல. அவை இரண்டும் தன்னிருப்பை, அடையாளத்தை, வளத்தைப் பாதுகாக்கும் நோக்கில் மரபுரீதியாக கடத்தப்படும் ஐதீகங்களை உருவாக்கிக் கொள்கின்றது, இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐதீகங்களில் இருந்து உருவாக்கப்படும் தேசிய வீரர்கள், தேசிய சின்னங்களாக முன்னிறுத்தப்படுகின்றது. ஒரு குறிப்பான நாட்டில் உள்ள சூழ்நிலையில் குறிப்பான ஆய்வுகளும் அதன் மீதான கோட்பாடுகளையும் உருவாக்க வேண்டும்.

முதலாளித்துவத்தின் வளர்ச்சி என்பது தேசங்களைக் கொண்ட பண்பைக் கொண்டு வளர்ந்து வருகின்றபோது ஏற்படுகின்றது. இந்த முரண்பாடுகளை இனவாதமாக அல்லது தனியே பொருளாதார நலன் சார்ந்த வர்க்கப் பிரச்சனையாக (பொருளாதாரவாதம்) குறுக்கிப் பார்க்கும் பார்வை இலங்கை இடதுசாரிகளிடையே விட்டுப்போகாத குறையாக இருந்து வருகின்றது. தேசத்தின் வளர்ச்சி பற்றிய புரிதல் இருந்திருப்பின் தமிழ் தேசத்தின் உரிமைக்காக போராடக் கூடியவகையில் வேலைத்திட்டத்தினை முன்வைத்திருக்க முடியும். தேசங்களாக வளரக்கூடிய ஆற்றல்வளம் (potential) கொண்ட தேசிய இனங்கள் நிர்வாக வசதிக்காக இணைக்கப்பட்டது வெவ்வேறு நாடுகளில் இடம்பெற்றிருக்கின்றன. அதேவேளை முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கு தேசிய இனங்களை தேசமாக பண்பு ரீதியாக உருவாக்குவதுடன் நிலப்பிரபுத்துவத்துடன் இருந்து அகன்றுவரும் ஜனநாயகக் கட்டமாகின்றது.

சமூகத்தின் பிற்போக்குப் பிரிவின் சிந்தனைகள் வெவ்வேறு வடிவத்தில் இருக்கின்றது. குறிப்பாக பின்னவீனத்துவ அரசியல் அதாவது இயற்கை- பொருளாதாரம்- வர்க்க முரண்பாடு என்ற மூன்று கூறுகளை மறுத்துரைக்கும் சிந்தனைவடிவம் வெவ்வேறு தளத்தில் வெளிப்படுகின்றது. இந்த சக்திகளின் கோட்பாடுகளை இயங்கியலுக்கு உட்பட்டதாக காட்டப்படுகின்றதேயன்றி அவைகள் இயங்கியலுக்கு ஒத்ததாக இருப்பதில்லை மாத்திரம் அல்ல இயங்கியலாகவும் இருக்க முடியாது.

தேசிய இன ஒடுக்குமுறைக்கு தீர்விற்கு மாற்றாக சிங்கள பௌத்த பேரினவாதமானது - இனவாதத்தினை பேசுபவர்களை தண்டிக்கும் சட்டம் - பாடசாலைகளில் சமாதானம் பற்றி கற்பிக்கப்படும் அதாவது சமாதானக் கல்வி மற்றும் முரண்பாட்டுத் தீர்வு என்ற பாடம் கல்வித் திட்டத்தில் இடம்பெறும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பௌத்தர்கள் வசிக்காத இடங்களில் புத்தர் சிலை வைப்பதும், தொல்லியல் தடயங்கள் கிடைக்கும் இடத்தில் அவைகள் பௌத்த- சிங்கள அடையாளமாகக் கொள்வது, மகாஜன பௌத்தத்தை பின்பற்றி தமிழர்கள் வாழ்ந்துள்ளதை மறுப்பது, பாடத் திட்டத்தில் வரலாற்றை மாற்றி எழுதுவது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்கின்றது. விஜயன் என்ற கற்பனைக்கதையும், சிங்களவர்கள் தான் பூர்வீகக் குடிகள் என்ற சிந்தனையை பள்ளிகளில் கற்பிப்பதை நிறுத்தாது எவ்வித முன்னேற்றத்தையும் கொண்டு வரப்போவதில்லை. இவர்களின் செயல் தந்திரம் என்பது தமிழ் மக்களுக்கு தான் அறிவுரையாக இருக்குமேயன்றி சிங்கள மக்களுக்கு அல்ல. விஜயன் என்ற கட்டுக்கதையே இடதுசாரி அமைப்பின் அரசியல் திட்டத்தில் உள்ள அவலமும் உண்டு.

முதலாளித்துவ தாராளவாத சிந்தனை தேசங்களின் ஆட்சியதிகாரத்தை இனவாதமாகக் கொள்கின்றது. அனைத்தையும் கறுப்பு வெள்ளையாகப் பார்க்கும் பின்னவீனத்துவப் பார்வையாகும். வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள், சமத்துவமற்ற தன்மை, வரலாற்றுப் போக்கை மறுத்துரைக்கும் அகவுணர்வுப் போக்காகும். ஆனால் அந்த கோசத்தின் புறநிலைத் தேவை என்பது தேசிய அரசியல் நோக்கிய பயணத்திற்கு பயன்படுத்திக் கொள்ளும் குறிப்பாக முன்வைக்கப்படுகின்றது. தமிழ் தேசத்தின் அரசியல் அபிலாசைகளை அடைவதற்கு தேசிய வீரர்கள் அடையாளப்படுத்தப்படுவார்கள், முன்னர் இருந்த எல்லாளனுக்கு பதிலாக புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இடம்பெறத் தான் போகின்றார். மக்கள் அவர்களை தம் தலைவராக கொள்ளுமிடத்தில் அந்த இடத்தை மாற்றியமைத்திட முடியாது. சேர் பொன் இராமநாதன் தரகு வர்க்கத்தை சேர்ந்தவராகவும், நிலமானியச் சிந்தனை கொண்டவர்களை தேசியவாத தலைவர்களாக சித்தரிக்கப் படுகின்றது. தேசிய நல, மனப்பாங்கைக் கொள்ளாத தரகு வர்க்கத்தவர்கள் தேசியவாதிகள் அல்லர். தரகு வர்க்கம் என்பது தேசிய நலனில் அக்கறை கொண்ட வர்க்கமாக இல்லாது தனது இருப்பை பாதுகாக்க அன்னிய சக்திகளுடன் எப்பவும் தொடர்பு கொண்டிருக்கும். தேசிய உற்பத்தி நலனின் அக்கறை இல்லாத வர்க்கமாகவும், ஆளும் வர்க்கத்தவர்களின் நம்பகம் உள்ள விசுவாசிகளாகவும் இருப்பது தரகு வர்க்க குணாம்சமாகின்றது.

தேசிய கட்டத்தை மறுத்த நிலை எப்பொழும் நீடிக்கப் போவதில்லை. சமூகத் தேவையை கொண்டவைகள் எவையும் அடுத்த கட்டத்திற்கு நகராமல் இருக்கப் போவதில்லை. இவ்வாறே தமிழ் தேசத்தின் அரசியல் அபிலாசைகள் பூர்த்தி செய்யாத வரையில் நீடிக்கப் போவதாகும்.

முதலாளித்துவ காலத்திற்கான தேசிய இனங்களின் வளர்ச்சி என்பது முதலாளித்துவ ஜனநாயகத்திற்கான காலகட்டமாகும். முதலாளித்துவ ஜனநாயகத்திற்கான தேசிய இனங்களின் வளர்ச்சியை அரைகுறையாக புரிந்து கொள்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது வர்க்கங்களின் வளர்ச்சிப் போக்கு என்பதை மறுத்துரைப்பதினால் உள்ளாகும் புரிதல் சிக்கல் இருந்து வருகின்றது.

பிரித்தானியா வழங்கிய போலிச் சுதந்திரத்தின் முன்னரே தமிழர்கள் அதிகாரத்தைக் கோரினர். முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்பத்தில் யாழ் இளைஞர் கொங்கிரஸ் போன்ற குட்டி முதலாளிய அமைப்புக்கள் முதலாளித்துவ ஜனநாயகத்தினை வேண்டிய அரசியல் பாதையை முன்வைத்திருக்கின்றது. யாழ் இளைஞர் கொங்கிரசின் அரசியல் நடவடிக்கையைப் போல தேசியக் கட்டம் முதிர்ச்சியடைந்த நிலையில் தீர்வாக மார்க்சியர்கள் வைக்க முடியாது. போலிச் சுதந்திரத்தின் பின்னர் இலங்கை ஒற்றைத் தேசியத்தினுள் மூழ்கியிருந்த வேளையில் தொழிலாளர் ஐக்கியம் என்பதையும் மீறி இனவெழுச்சி ஏன் உருவாகியது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஏதோ தற்செயலாக நிகழ்ந்ததாக கருதிவிட முடியாது. ஒரு புறம் ஒடுக்கப்படும் தேசம், தேசிய இனங்கள் நல்லெண்ணத்தை காட்டிக் கொண்டிருக்கின்றது. முன்னைய சமூகப் போக்கு என்பது குட்டிமுதலாளிய ஜனநாயக சீர்திருந்தங் கோரியதாக இருந்திருக்கின்றது. ஏனெனில் முதலாளித்துவ ஜனநாயகத்தை மறுத்து எதிர்வினையாற்றிய சைவம்- தமிழ்- வேளாளம் என்ற நிலமானிய பிற்போக்கு முதன்மை இடையூறாக இருந்ததே காரணமாகும்.

தமிழ் தேசத்தில் இருந்த அகமுரண்பாட்டை தீர்க்க முதலாளித்துவ (1966களில்) ஜனநாயகப் போராட்டத்தின் உச்ச வளர்ச்சி தேசிய இன எழுச்சியாகும். இது மற்றைய நாடுகளில் இருந்து மாறுபட்ட இந்திய- இலங்கை சமூகத்திற்குரிய பிரத்தியோகமான வளர்ச்சிப் போக்காகும். 1966 தீண்டாமை வெகுசன எழுச்சிப் போராட்டம் இந்தச் சாதிதான் இதனைச் செய்ய வேண்டும் என்ற நிர்பந்தம் உடைக்கப்பட்டது.

"தமிழ்நாட்டில் இருந்த, பெரியார் முன்வைத்த தமிழ்த் தேசியம், அது பிற்போக்கானது போலவும், ஈழத்திலே உருவாக்கி வளர்ந்து வந்த தமிழ் தேசியம் என்பது ஒரு முற்போக்கு தேசியம் என்பது போலவும் அவர்கள் காட்டுகிறார்கள். அது உண்மையல்ல. சொல்லப்போனால் திராவிட இயக்கத்திற்கு ஒப்பான ஒரு சீர்திருத்த இயக்கம் ஈழத்திலே கிடையாது.ஈழத்து தமிழ்த்தேசியம் என்பது எந்த முற்போக்கு அம்சங்களும் இல்லாத தேசியம் தான் அது. சைவம், பார்ப்பனீயம், சாதி உணர்வு இவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு தேசியம் தான் அது!

1970 களில் கூட அங்கே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலைய நுழைவு போராட்டம் நடாத்தும் பொழுது இவர்கள் விதந்து போற்றுகின்ற தமிழரசுக்கட்சி அதன் தலைமகள், பிரமுகர்கள் பல இடங்களிலே தாழ்த்தப்பட்ட மக்களைக் கோவிலுக்குள் அனுமதிக்கக்கூடாது என்று எதிர்த்து நின்றார்கள். சிங்களப் பேரினவாத தாக்குதல் நடைபெறுகின்ற சூழநிலைகளில் கூட தாழ்த்தப்பட்ட சிறுவர்கள் பள்ளிகூடம் போகின்ற போது பாடப்புத்தகங்களை பறித்து கொளுத்துகின்றார்கள். அப்போ தான் டானியல் வந்து யாழ் நூலகத்தைக் கொளுத்தியது சரி என்று ஒரு அறிக்கை விடுகிறார். அப்படிப்பட்ட சாதிவெறியோடு இணைந்த தேசியம் தான் அங்கிருக்கிற மரபு! அது முற்போக்கு போல இவர்கள் காட்டுகிறார்கள். இதெல்லாம் ஆர்.எஸ்.எஸ் க்கு ஒரு பொன்னான வாய்ப்பை வழங்குகிறது." (2013) என குறிப்பு வாசிக்கக் கிடைத்தது. சாதிய ஒடுக்குமுறையின் தாற்பரியத்தை விளக்கிட ஈழப் போராளிகள் சாதிய ஒடுக்குமுறையை முன்னுதாரனமாக காட்டி உழைப்பாளர் தினத்தில் பேசியும் உள்ளார்கள். இன்றும் இதைப் பற்றிப் பேசுவது சாதிய கொடுமையை உணர்ந்துப் பயன்படுத்திய உவமானமேயாகும் சமூகம் அடைந்த வளர்ச்சியை கவனத்தில் எடுக்கவில்லை என்பதைத் தான் காட்டுகின்றது.

தமிழகத்தைப் போல ஈழத்தின் சாதியம் சிக்கல் நிறைந்தது அல்ல. நெகிழ்வுத் தன்மைக்கு வந்துவிட்டது. முதலாவது 1966 எழுச்சி உற்பத்தியில் சாதியம் தீர்மானிக்கும் நிலை 1983 பின்னரும் யுத்தகாலத்திலும் இன்னும் மாற்றத்திற்கு உள்ளாகியிருந்தது. ஆனால் உணர்வு மட்டத்தில் தொடர்வது கலாச்சாரப்புரட்சி, உற்பத்தி முறையை முழுமையாக மாற்றுவதுடன் தொடர்புடையது. சாதிய உணர்வு நிலை நீறுபூர்த்த நெருப்பாக இப்பொழுதும் இருக்கின்றது. ஆனால் சாதியக் கட்டமைப்பு இன்றும் 25 வருடத்திற்கு முன்னர் இருந்தது போல இருப்பதாக கூறுவது மிகைப்படுத்தல். அது நிகழ்ச்சி நிரலுக்குள் வேலை செய்பவர்களின் கூற்று.

சாதியம் உணர்வில் உண்டா இல்லையா என்பது ஒன்று. மற்றையது இந்தச் சாதி தான் இந்த தொழில் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. மாறாக அனைவரும் பொருளாதார வறுமையில் தான் வாழ்கின்றார்கள். கடற்றொழில் செய்தவர்கள் பொதுவாக வேறு தொழிலுக்குப் போவது வெகு அபூர்வம். ஆனால் அவர்களும் இன்று கட்டடப்பணியாளர் வேலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இங்கு உணர்வையும்- தொழில (உற்பத்தி) முறையில் சாதியம் பற்றிய போதிய புரிதல் இலங்கை தலித்தியவாதிகள்- அரசசார்பு கருத்துருவாக்கிகளுக்கு இருப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் வாழும் மலையக வம்சாவழியினர் ஈழ தேசத்தவர்களாக மாறுகின்றனர். அது அவர்களின் உழைப்பினால் அவர்கள் பெற்ற அங்கீகாரம். ஆனால் அதனை அவர்களின் அடையாளத்தை முன்னிறுத்தி தமிழ் தேசிய இனத்தைப் பிளக்கும் சதி அரசியலுடன் சம்பந்தப்பட்டது. இதேவேளை தொடர்ந்தும் மலையகம், கொழும்புப் பகுதியில் இருக்கும் மலையக மக்கள் பற்றிய நிலைப்பாடு அவர்கள் ஒரு தேசிய இனமாக உருவாக ஜனநாயகப் பாதை அமைத்துக் கொடுப்பதேயாகும். முதலாளித்துவ சமூக உறவிற்குள்ளும் (கொச்சையாக) உற்பத்திக்குள் நுழைகின்ற போது ஏற்படுகின்ற முரண்பாடுகளை கையாளுகின்ற போது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

முதலாளித்துவ ஜனநாயகத்தை முன்னிறுத்திப் போராடிய கொம்யூனிஸ்ட்டுகள் தாங்கள் ஆற்றிய வரலாற்றுப் பாத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவர்களாக இல்லை. (2017இல் தலைவர்கள் சிலரை பேட்டி கண்ட பின்னரான கருத்து) 1966 சாதிய எதிர்ப்புப் போராட்டம் நிகழ்த்திய வரலாற்றுக் கட்டத்தின் வளர்ச்சியின் உச்சமே தேச விடுதலைக்கான எழுச்சியாகும். ஏற்கனவே தேசத்தின் போராட்டம் கிளர்ச்சியாக வெளிவந்த நிலையின் ஆரம்பத்தில் இருந்தது. இடதுசாரியம் தேசிய இனமுரண்பாடுகளை சரியாக கணித்து அதனை வழிநடத்தத் தவறிவிட்டது. தேசங்களின் பண்பை வளர்த்துக் கொண்ட தேசிய இனங்களின் அரசியல் குறிக்கோள் கூட வர்க்க நலன் சார்ந்ததாக விளங்கிக் கொண்டிருக்க வில்லை. (இன்று தேசிய சக்திகளை தலைமை தாங்கினால் தாமும் சேர்ந்து போராடலாம் என்கின்றார்கள்.) பூர்சுவாதேசியவாத -குட்டிமுதலாளிய வர்க்க தலைமைப் பாத்திரம் பெற்றுவிட்டது. தேசிய முரண்பாட்டில் அமைந்த தமிழ் தேசத்தின் உரிமையை முன்னிறுத்திய பாதுகாப்பு யுத்தத்தை தமிழ் தேசம் எதிர்க் கொண்டது.

முள்ளிவாய்க்காலின் பின்னரும் பெருந்தேசியவாதம் என்பதை பண்புருவில் இனவாதமாக குறுக்கிவிட முடியுமா? அதே போல பெருந்தேசியவாதத்தின் எதிர்வினை ஆற்றிய தரகு (கூட்டணி) - குட்டி முதலாளித்துவ வர்க்கத்தால் முன்வைக்கப்படும் குறுந்தேசியவாதத்தினையும் தேசத்தின் ஆட்சியதிகாரத்தையும் வகைப்படுத்த முடியுமா என்ற அடிப்படைக் கேள்வி. மற்றையவைகள் இயங்கியலுக்கு முரணான சந்தர்ப்பவாதமாகும்.

SOVEREIGNTY - Vs Right of Self Determination of NATIONS

இறைமை என்பது ஆளும் வர்க்க அரசியல் அதிகாரம். போலி சுதந்திரத்திற்கு முற்பட்ட அதிகாரப் பகிர்வு ஆளும் வர்க்கத்திற்கு ஆனதாகும் 50/50 என்ற முன்மொழிவுகளும் இவற்றுள் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. 'தேசியவாதம்' - 'சாதியவாதம்' - 'இனவெறி'

### 3.1 தேசத்தின் உருவாக்கம்

தேசமும் நாடும் ஒன்றாக கருதப்படுகின்ற நிலை சர்வசாதாரணமாகும். நாடு என்பது தேசங்களை நிர்வகிக்கும் சட்டரீதியான எல்லையைக் கொண்டதாகும். ஒரு நாட்டில் பல தேசிய இனங்கள், தேசங்கள் இருந்து கொள்ளமுடியும். இங்கு தேசம் என்பது ஆங்கிலத்தில் நேசன் (Nation) என்ற சொல்லிற்கு இணையாகும். தமிழ் தேசத்தின போராட்டத்தின் ஆரம்ப காலங்களில் தமிழர்களை தேசங்களாக வரையறுத்திருக் கின்றார்கள். எனினும் முள்ளிவாய்க்காலின் பின்னர் தேசம் என்றால் என்ன சுயநிர்ணயம் என்றால் என்ன என்று விவாதிக்கப்பட்டு வருகின்றது. சுயநிர்ணய உரிமையானது தரகு அணியான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அரசியலில் சிக்கித்தவிக்கின்றது. எனவே இனக்குழுமம் - தேசியஇனம் - தேசம்- இவற்றிற்கு இடையே உள்ள வித்தியாசங்களை கவனத்தில் கொள்ளல் தேவையானதாகும்.

மனித கூட்டம் பல நூற்றாண்டுகளாக வெவ்வேறான அலகுகளின் அடிப்படையில் வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் எல்லை என்பதற்கு அப்பால் சுதந்திரமான மனிதர்களாக இடம்பெயர்ந்து வந்துள்ளார்கள். முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது எல்லையை வகுத்துக் கொள்கின்ற போது மனித கூட்டத்தின் சுதந்திரமான இடப்பெயர் என்பது வரையறுக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு மட்டுப்பட்டதன் ஊடாக சுதந்திரமான இடப்பெயர்வுகளும், குடியேற்றங்களும் தடுக்கப்பட்டன. இவ்வாறான குறிப்பிட்ட எல்லைகள் என்பது அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் பொருளாதாரம், மொழி, கலாச்சார வாழ்வு என்பது தனித்துவம் கொண்ட மக்கள் கூட்டமாக வளருவதற்கு ஏற்றதாக இருக்கின்றது. முன்னைய பொருளாதார உற்பத்தி முறையானது நிரந்திர வாழ்வுக்கான ஆதாரமாக மாற்றியமைக்கப்படுகின்றது. 1948ற்குப் பின்னர் இலங்கைத் தேசியம் ஒன்றைக் கட்டமைக்க முயற்சி செய்ததாக காட்டப்பட்டது. ஆனால் முழு இலங்கையையும் சிங்கள பௌத்தர்களுக்கானது, சிங்களவர்களுக்கு என இருக்கும் ஒரே நாடு, விஜயன் பரம்பரையில் இருந்து வந்தவர்கள், மற்றவர்கள் வந்தேறிகள் என்ற சிந்தனைக் கட்டமைப்பு ஆட்சியதிகாரத்தில் நிறுவனமயப்பட்டுள்ளது.

உலகில் உள்ள பல நாடுகளின் ஒரே தேசிய இனத்தவர்கள் கூறுபோட்டுவிட்ட நாடுகள் உண்டு. குர்டர்கள் சிரியா, ஈராக், ஈரான், துருக்கி என்று பிரிந்து உள்ளார்கள். அவ்வாறே சாமிகள் (Samis) நோர்வே, சுவீடன், ரஸ்யா, பின்லாந்து என்று பிரிந்து வாழ்கின்றார்கள். ஒரு தேசிய இனம் எவ்வாறு பிரிந்து வாழ்கின்றார்கள் என்பதை வரலாற்று ரீதியாக பார்ப்போமானால் முதலாளித்துவ வளர்ச்சியானது தனது ஆட்சியின் எல்லையை வகுக்கின்ற போது எவ்வித தேசிய இனங்களின் விருப்புக்களை பெற்றதாக இருந்திருப்பதில்லை. அவர்கள் ஒரு தேசத்திற்கான ஆற்றலைக் கொண்டவர்களாகவும் தமது பாரம்பரிய வாழ்வைக் கொண்ட மனிதர்களாக இருந்திருக்கின்றார்கள். இவ்வாறு தேசிய இனங்கள் முதலாளித்துவ வளர்ச்சி கொண்ட சமூக உறவையும், வாழ்வியலில் முழுமையும் கொண்டிருக்காத நிலையில் பரந்து வாழ்வது நடைபெற்றிருக்கின்றது. இவ்வாறு தான் கொலனித்துவ காலத்தில் மனிதர்கள் இனக்குழுமங்களாகவும், தேசிய இனங்களாகவும் இருந்த போதிலும் ஒரு நாட்டிற்குள் உள்வாங் கியிருக்கின்றது. கொலனித்துவத்தில் ஆட்சியதிகாரம் செய்வதற்கு ஏற்ப வெவ்வேறு சிற்றரசுகள் வெல்லப்பட்டு ஒன்றிணைக்கப்படும் அரசியல் நிகழ்வும் நடைபெற்றுள்ளது. இவ்வாறான வளர்ச்சி மேற்கில் இருநூற்றாண்டுகளுக்கு முன்னரே முதலாளித்துவப் புரட்சி நடத்தி முடிக்கப்பட்டது.

தனிநபர்களின் கூட்டு குடும்பமாகின்றது, பலகுடும் பங்களின் கூட்டு குடியாகின்றது, பல குடிகளின் கூட்டு இனக்குழும (Tribal) மாகின்றது. பழங்குடிகளின் வாழ்வுமுறை இரத்த உறவை அடிப்படையாக இருக்கின்றது. இவர்கள் குலங்களாகவும், குலங்களில் தலைவர்களைக் கொண்டதாகவும் இருந்திருக்கின்றது. அவர்களின் நீதி முறை என்பது உறவையும், அவர்களின் பாதுகாப்பு, தேவை, இருப்பு என்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். இவர்கள் இவர்களின் வாழ்வு முறை பயன்பாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமானத்தையும் கொண்டதாகவும், வேட்டை, சிறுதானிய உற்பத்திக்கு உட்பட்டதாகவும் இருந்திருக்கின்றது. பழங்குடி வாழ்வு முறையில் ஏற்படுகின்ற மிகை உற்பத்தியும், பண்டமும் பரிவர்த்தனைக்கு உருவாகின்ற போது நிலப்பிரபுத்துவம் உருவாகின்றது. இவ்வாறு பொருளின் பரிவர்த்தனையும் அண்டைய குழுமங்களுடனான உறவும் தேசிய இனத்தை நிலப்பிரபுத்துவம் உருவாக்கிக் கொள்கின்றது.

சங்ககாலத்திலேயே பல இனக்குழுமங்களின் ஒன்றிணைவு ஏற்பட்டு தேசிய இனமாக தோன்றிவிட்டது. பண்டையக் காலத்தில் கடம்பர், வில்லவர், எயினர், ஒளியர், தோடர், மறவர், மாறர், கோசர், குறும்பர், கங்கர், வானரர், வேளீர் - வேள், கோடர், தோடர், நாகர், கருநாடர், துளுவர், ஆய், பரதர் (படக), பெரும, திச, பொருநர், கூத்தர், வயிரியர், கோடியர், விறலியர், இசை வாணர், பாணர், பறையன், துடியன், கடம்பன் என்றும் இவர்களின் எச்சங்களின் ஒன்றிணைவே தமிழ்தேசிய இனமாகும்.

இங்கு வெவ்வேறு தேசிய இனங்களும் ஒரு தேசத்தினுள் இணைந்து கொள்ள முடியும். இலங்கையில் வெவ்வேறு தேசிய இனங்களின் கலப்பு என்பது இருந்துள்ளது. இது தமிழகத்தின் தொடர்பின் ஊடாகவும் பெறப்பட்டதாகும். தமிழ் தேசம் என்பது தனியே தமிழ் மொழி பேசிய தேசிய இனம் தான் இருந்தது என்பது தவறான சமூக விஞ்ஞானப் பார்வையாகும். இங்கு மனித இனங்களின் கலப்பு என்பதை விஞ்ஞான ரீதியாக பார்க்காது தூய்மைவாதம் பேசும் இனத்தூய்மைவாதிகள், சாதியவாதிகள் இருக்கத்தான் செய்கின்றார்கள். குறிப்பாக சோழர் காலத்திலும், அவர்களின் வீழ்ச்சியின் பின்னரும் தெலுங்கு, மலையாள, கன்னட தேசிய இனங்கள் குடிபெயர்ந்திருக்கின்றது. இவைகள் மெதுவாக வரலாற்றோட்டத்தில் ஒன்று கலந்திருக்கின்றன. முன்னர் பேசிய மொழிகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. இவ்வாறு வெவ்வேறு தேசிய இனங்கள் கலக்கின்ற போது மொழி உச்சரிப்பிலும் மொழி வளத்திலும் கூட மாற்றத்திற்கு உள்ளாகிவிடுகின்றது.

இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் அண்டி வாழ்கின்ற நிலையில் இரண்டும் கெட்டான (இரண்டு மொழிக்கலப்பு) மொழியாடல் இருக்கின்றது. இவ்வாறான இரண்டும் கெட்டான் மொழிவழக்கு என்பது Hiniduma (காலிமாவட்டம்) - கினிடும என கோவிலுக்கு சென்ற வேளையில் அவதானிக்க முடிந்தது. இவ்வாறான மொழி என்பது சுதந்திரமான வளர்ச்சிக்கு உள்ளாகின்ற போது புதிய மொழியையும், புதிய தேசிய இனத்தையும் தோற்றுவிக்கும். அவ்வாறு இன்றைய அரசியல் சூழல் என்பது சாத்தியமற்றதாக்கியிருக்கின்றது. நோர்வே, சுவீடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க் போன்ற மொழிகளில் பெரும்பாலும் ஒற்றுமை கொண்டதாகும். இது மலையாளம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளை விட அதிகம் ஒற்றுமை கொண்டவைகள். நோர்வேயில் 1849 செம்மொழி – புதிய மொழி (bokmål - nynorsk)களில் புதிய மொழியுருவாக்கம் எழுத்துருவமாற்றத்தின் ஊடாக டென்மார்க் மொழியில் இருந்து வேறுபட்டு தனித்துவமானதாக உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த மொழியுருவாக்கம் அரச அங்கீகாரத்திற்கு உட்பட்ட மொழியாகின்றது.

புதிய தேசிய இனங்கள் தோன்றி இயல்பாக மறைவதற்கு நீண்டகாலமெடுக்கும். நிலப்பிரபுத்துவத்தின் சிதைவு முதலாளித் துவ காலத்திற்குள் நுழைகின்றது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது சந்தைக்கான எல்லையைக் கொண்டதாக இருக்கின்றது. முதலாளித்துவம் சட்டரீதியான நிர்வாக எல்லைகளை உருவாக்கிக் கொண்டு தத்தம் நாடுகளின் சந்தைகளை உறுதிப்படுத்துகின்றது.

வரலாற்றில் மூன்று வகையாக தேசங்கள் உருவாகி வந்துகொண்டிருப்பதை லெனின் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த வகையில் மூன்றாம் வகையான தேச உருவாக்கத்திற்கு உட்பட்டதே இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் உள்ள தேசிய இனப்பிரச்சனையாகும். இந்தவகையான தேசங்களின் வளர்ச்சியையே மார்க்சியர்கள் சரியாக தீர்வு வைக்கவில்லை என குற்றம் சாட்டப்படுகின்றது. "உலக முழுவதிலும் முதலாளித்துவமானது நிலப்பிரபுத்துவத்தின் மீது இறுதி வெற்றி கொள்ளும் காலகட்டம் தேசிய இயக்கங்களுடன் இணைந்துள்ளது. சரக்கு உற்பத்தியின் முழுவெற்றிக்கு உள்நாட்டு மார்க்கெட்டைப் பூர்சுவாக்கள் கைப்பற்ற வேண்டியது அவசியம். ஒரே மொழி பேசும் மக்களைக்கொண்ட அரசாங்க ரீதியில் ஐக்கியப்படுத்தப்பட்ட நிலப்பரப்புகள் அதற்கு வேண்டும். அம்மொழியின் வளர்ச்சிக்கும் அதன் இலக்கியம் உருப்பெற்றுத் திகழ்வதற்கும் முட்டுக் கட்டையாக உள்ள தடைகள் அகற்றப்பட்ட வேண்டும். இங்கேதான் தேசிய இயக்கங்களின் பொருளியல் அடித்தளம் இருக்கிறது. மனித உறவுகளுக்கு மிகமிக முக்கியமான சாதனம் மொழி. நவீன முதலாளித்துவத்துக்கு ஏற்ற அளவில் உண்மையிலேயே சுதந்திரமான, விரிவான வாணிகத்துக்கும், மக்கள் சுதந்திரமாகவும் விரிவாகவும் பல்வேறு வர்க்கங்களாக அமைவதற்கும், இறுதியாக மார்க்கெட்டுக்கும் ஒவ்வொரு சிறிய, பெரிய உடமையாளனுக்கும், விற்போருக்கும் வாங்குவோருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்கும் மிகமிக முக்கியமானத தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சூழ்நிலைகள், மொழியின் ஐக்கியமும் தடையற்ற வளர்ச்சியும்தான்." (லெனின்-தேசிய இயக்கங்களின் சுயநிர்ணய உரிமை) தேசத்தின் வளர்ச்சி பற்றிய லெனின் கூற்று முக்கியமானதாகும்.*

*இம்முரண்பாட்டிற்கு அடிப்படையாக தீர்க்கமான பொருளாதார காரணிகள் இருப்பதைப் பார்க்கமுடியும். வளரும் உற்பத்தி சக்திகளுக்கு உகந்த உற்பத்தி உறவுகள் நிலவுகின்றனவா இல்லையா, அந்நாட்டின் அரசமைப்பு முறை உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு இடையுறாக இருக்கின்றதா இல்லையா என்ற விடயங்கள் இப்பிரச்சனை தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்குகின்றன.*

*உற்பத்திச் சாதனம் என்பது வெவ்வேறு பொருளாதாரத்தில் வெவ்வேறு அலகைக் கொண்டு வளர்ந்துள்ளது. வேட்டையாடிய மனிதனுக்கு அம்பும் வில்லும் என்று தொடங்கி விவசாய நிலத்தில் ஏர்கலப்பை, எருதுகளின் துணைகொண்ட உற்பத்தி முறை உழவு இயந்திரத்தினை அறிமுகப்படுத்திக் கொண்டது. தொழிற்துறைப் புரட்சி என்பது போட்டி, ஏகபோக பொருளாதாரத்தில் பெரும் தன்னியக்கி தொழினுட்பத்தைக் கொண்டே ஆட்குறைப்புச் செய்யும் பொருளாதார நிலைக்கு வந்துள்ளது.*

*நிலம், கடற்பரப்பு என்பன இயற்கையாக கிடைத்த வளமாகும். இந்த நிலத்தைப் பண்படுத்திக் கொள்வதற்கு மிருகங்கள் பயன்படுத்தப்பட்டன. மனித உழைப்பைப் பயன்படுத்தி உழைத்து பண்படுத்திய நிலத்தில் இருந்து பெற்ற உற்பத்திதான் உணவாகின்றது. இதே போல் கடல்வளம் என்பது இயற்கை தந்தது எனினும் உயிரைப் பணயம் வைத்து கடற்தொழிலாளிகளால் மீன் பிடிக்கப்படுகின்றது. எவையும் உற்பத்திச் சக்தியை (உடல் உழைப்பு) வழங்காது சாத்தியம் இல்லை.*

*தொழிற்துறை உடைமையாளர் உற்பத்திச் சாதனத்தை வைத்திருப்பதால் தொழிலாளி உற்பத்தி சக்தியை விற்கின்றார்கள். இன்று பெரும்பான்மையான உலகச் சொத்துக்களை வெறும் 8% நபர்களே உரிமையாகக் கொண்டுள்ளார்கள். 1 வீதமானவர்களே 53 வீதமான சொத்துக்களை இந்தியாவில் உரிமையாகக் கொண்டுள்ளார்கள். மக்களே உற்பத்திச் சாதனங்களை கையப்படுத்த வேண்டும். இது இரண்டு கட்டங்களைக் கொண்டதாகும். தேசத்தின் ஆட்சியதிகாரம் பின்னர் அவற்றை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதாகும்.*

*தமிழ் தேசத்தைப் பொறுத்தவரையில் தமிழ் தேசத்தின் ஆட்சியரிகாரம் நிலவுரிமைக்கான போராட்டமும் உள்ளடக்கியதே. சிறிலங்காவின் கீழ் இருப்பது தான் சுமார் 80 வீதமான (முடிக்குரிய - Crown land) காணிகளாகும். அரச காணிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற போர்வையில் சிங்கள மக்களை தமிழர் பிரதேசங்களில் குடியேற்றுகின்றது. இராணுவம் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்களில் இராணுவம் உற்பத்தி செய்கின்றது. இந்த நிலையில் இரட்டிப்பு இழப்பு தமிழ் தேசத்திற்காகும். தமிழ் மக்கள் இடங்களை பறிகொடுத்தும், தமிழ் மக்கள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்த வேண்டியதை இராணுவம் செய்கின்றது. தமது காணிகளை மக்கள் கேட்கின்ற போது அரச காணிகளில் இராணுவம் இருக்கின்றது என்பதும், மாற்றீடாக பொதுமக்களுக்கு காணி கொடுப்பதாகவும் பேசப்படுவதை காணமுடிகின்றது. ஆனால் இராணுவம் மாற்றீடாக கொடுப்பதும் சிங்கள தேசத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தைத் தான் கொடுக்கின்றது என்ற புரிதல் அற்றவர்களாகவே எமது சமூகம் இருக்கின்றது. ஈழதேசத்தின் பகுதியில் இருக்கும் முடிக்குரிய காணிகள் தமிழ் தேசத்திற்கானதாகும்.

சிங்கள கடற்தொழிலாளர்கள் தமிழ் பகுதியில் குடியேற்றப் படுவது, அவர்களின் வளங்களைச் சுரண்டுவது என்பது நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆக்கிரமிப்பின் ஊடாக காணி உரிமை கொள்ளும் உரிமை தமிழர்களுக்கு மறுக்கப்படுகின்றது. தமிழ் தேசத்திற்கு விவசாயிகளின் நிலம், தொழிற்சாலைகளை உருவாக்கிக் கொள்வது என்கின்ற போது உற்பத்திச் சாதனத்துடன் தொடர்புடைய பொருளாதார பண்பை விளங்குவதாக இருக்க வேண்டும்.

இவ்வாறே ஏறுதழுவல் என்ற ஒரு விளையாட்டிற்கு அப்பால் பொருளாதாரத்துடன் சம்பந்தப் பட்டது. மாடுகளின் வளர்ச்சி, நலன் என்பது பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்டது. இது ஒரு தேசத்தின் உற்பத்திச் சாதனத்துடன் நேரடித் தொடர்பு கொண்டதாகும். இது அன்னிய நாட்டு வகை மாடுகள், சுற்றாடல், இயற்கை என்பவற்றுடன் தொடர்பு கொள்கின்றது. இது பொருளாதாரப் பிரச்சனையே என்பதை கவனத்தில் எடுக்க முடியும்.

முதலாளித்துவ வளர்ச்சியின் ஊடாக உருவாகும் தேசத்தினை தோழர் ஸ்ராலின் வரையறுத்துக் கொண்டார். தேசம் **(Nation)** என்பது நிலப்பரப்பு, பொருளாதார உறவுகள், மொழி, கலாச்சாரம், மனப்பாங்கு இவற்றில் காணும் சில தனித்தன்மைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மக்களிடையே வரலாற்று வழியில் உருவாகிய ஒற்றுமையைக் குறிக்கிறது. முதலாளித்துவப் பொருளாதாரத்துக்குரிய உறவுகள் உருவாகிய போது தேசிய இனத்தின் **(nationality)** காட்டிலும் மேலான சமூக-வரலாற்று வழிபட்டதாகிய தேசம் உருவாகி வளர்கிறது. மனித இனம் **(race)** இனக்குழுமம் **(tribe)** மதம், அரசு ஆகியவற்றிலிருந்து தேசத்தை வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.ஐரோப்பிய நாடுகளில் தொழிற்புரட்சியின் வாயிலாக பழைய உற்பத்தி முறையான நிலப்பிரபுத்துவ உறவுகள் சிதைக்கப்பட்டன. தொழிற்துறை வளர்ச்சியின் காரணமாக வளர்ந்த பொருளுற்பத்தி முறைக்கு புதிய வகை நிறுவன அமைப்பு வடிவமும் தேவைப்பட்டது. தொழிற்துறை வளர்ச்சியின் மூலம் முதலாளித்துவம் வளர்ச்சிடைகின்ற போது பழைய ஆட்சிமுறையை, உற்பத்தி முறை தேவைகளை நிவர்த்தி செய்ய முடியவில்லை. வளர்ச்சிடைந்த முதலாளித்துவ உறவிற்கு நிறுவனமயப் படுத்தப்பட்ட அலகுகள் நிர்வகிப்பதற்கு தேவையானது. முதலாளியம் வளர்ந்த போது வெவ்வேறு தேசங்களைச் சேர்ந்த முதலாளி வர்க்கம் இணக்கத்தின் ஊடாக எல்லைகளை இணைத்துக் கொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் செய்தனர். இவ்வாறு உருவாகியதே பெல்ஜியம், சுவீஸ் ஆகிய நாடுகளைக் கொள்ளமுடியும். 1789 - 1771 களில் முதலாளித்துவ சனநாயகப் புரட்சி நடந்து முடிந்துவிட்டது. அங்கு தேசிய இனங்களின் சுதந்திர அரசுகள் தோண்றிவிட்டன.

2. இதேபோல ரஸ்யா, போலந்து, பின்லாந்து, உக்கிரேன், செக் போன்ற முதலாளித்துவ வளர்ச்சி முழுமையாக அடையாத கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் விவசாயமும், வளர்ந்து வரும் நிலையில் இருந்த தொழிற்துறை வளர்ச்சிகளையும் கொண்டதாக இருந்தது. அந்தந்த நாடுகளில் தேசிய இனப்பிரச்சனை தோன்றியது.

3.இலங்கை போன்ற நாடுகளில் தொன்மையான இனக் குழுமங்கள், தேசிய இனங்கள் தேசங்களாக பரிணமிக்கின்றன. இதனை லெனின் கொலனித்துவத்தின் ஊடாக புதிய தேசங்கள் உருவாகிவருவதை குறிப்பிட்டிருப்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இங்கு லெனின் கூறுகின்ற தேசிய இயக்கங்கள் உருவாகும் என்பது ஏகாதிபத்திய காலத்திற்கானது. அவர் சரியாகவே வரையறுக்கின்றார், -In these countries the bourgeois-democratic movements have either hardly begun, or are far from having been completed. - இந்த நாடுகளில் முதலாளித்துவ - ஜனநாயக இயக்கங்கள் அநேகமாகத் தொடங்கவில்லை அல்லது அவை இன்னும் நெடுந்தூரம் போக வேண்டியிருக்கிறது. தேசங்கள் வளரும் என்பதை ஏற்றுக் கொள்ளாத, விளங்கிக் கொள்ளதா இடதுசாரி அமைப்புக்களே இருக்கின்றன.

தேசிய இனங்களின் முரண்பாடுகள் என்பது தனியே கொலனித்துவத்தின் காரணமாகத் தான் உருவாகியது என்பது பகுதி வெளிப்பாடு மாத்திரம் தான். தேசங்களாக பரிணமிக்கக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல்வளம் கொண்ட தேசிய இனங்கள் அவர்கள் விருப்பில்லாமல் இணைக்கப்பட்டது. பின்னர் போலிச் சுதந்திரத்தினை (தரகு வர்க்கம் உள்நாட்டில் முன்னைய கொலனி நாடுகளின் நலனை தொடர்ந்து பாதுகாத்து வந்துள்ளது) அறிவித்துவிட்டுச் சென்றது போது தேசிய இனங்களின் விருப்பை பெறாமலே இணைத்து விட்டுச் சென்றது. இங்கு பெருந்தேசியத்தில் இருந்து ஆளும் வர்க்கத்தின், உயர்வர்க்கத்தின் முரண்பாடுகள் என்பது வளங்களை பிரித்துக் கொள்வதில் ஏற்படுகின்றது என்பது வர்க்க நலனில் அமைந்ததாகும். ஆக வர்க்க முரண்பாடுகள், கொலனித்துவத்தின் அரசியல் போக்கு, தேசிய இனம் தேசமாக வளரும் என்ற அனைத்தையும் சேர்ந்தே ஆராயப்படவேண்டும். தமிழ்பேசும் இஸ்லாமியர்கள் மதச்சிறுபான்மையா / தேசிய இனமா என்பது விவாதிக்கப்பட வேண்டியது.

இலங்கை என்பது இரண்டு தேசங்களையும், 4 தேசிய இனங்களைக் கொண்ட நாடாகவும் மற்றும் பல சிறுபான்மை தேசிய இனங்களைக் கொண்டுள்ளது. அயல்நாடான இந்தியாவது பல தேசங்கள், பலதேசிய இனங்கள் மற்றும் பல நூற்றுக் கணக்கான இனக்குழுக்களைக் கொண்ட (Union) நாட்டரசாகும்.

தேசிய இனம் தேசத்தின் பண்பைக் கொண்டிருக்கின்ற போது தேசிய ஜனநாயக இயக்கத்திற்கான அடிப்படையை உருவாக்கிக் கொள்கின்றது. இலங்கை சமூகத்தில் இருந்து எழும் எழுச்சியை இவ்வாறுதான் விளங்கிக் கொள்ள வேண்டும். தேசிய இனம், தேசம் பற்றிய புரிதல் இல்லாது சுயநிர்ணயம் பற்றிய விவாதத்திற்குள் நுழைந்துவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.2 சுயநிர்ணய உரிமை

முதலாளித்துவ வளர்ச்சி என்பது தேசத்தினை உருவாக்கிக் கொள்கின்றது. அவ்வாறு உருவாக முயற்சி கொள்ளும் ஒரு தேசிய இனம் தனது இருப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு சட்டரீதியான அங்கீகாரம் கோருவதாகும். அப்படி சமாதான முறையில் நடைபெறாவிடின் பலாத்காரமாக நிறைவேற்ற முயல்கின்றனர். சுயநிர்ணய உரிமை என்பது தன்னுடைய தலைவிதியை தானே தீர்மானித்துக் கொள்வதாகும். தன்னுடைய இருப்பை அச்சுறுத்தும் நிலையில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதாகவும் இருக்கின்றது. முதலாளித்துவ வளர்ச்சியில் தான் ஒரு தேசிய இனத்தில் தேவையை அடிப்படையாக தீர்மானிக்கப்படுகின்றது. 'தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பது அரசியல் வழியில் சுதந்திரம் பெறும் உரிமையை ஒடுக்கும் தேசத்திலிருந்து அரசியல் வழியில் சுதந்திரமாகப் பிரிந்து போகும் உரிமை ஒன்றைத் தான் குறிக்கின்றது.' (பக் 306 லெனின்-நூல் திரட்டு 1) முதலாளி வர்க்கத்தின் சந்தையை உறுதி செய்வது மாத்திரம் அடங்கிவிடவில்லை.

ஒடுக்கும் தேசத்தின் ஆளும் வர்க்கம் தமது சந்தையை பாதுகாக்கும் பொருட்டு மற்றைய தேசிய இனத்தின் மீது நிர்ப்பந்தம் புரிகின்றது. அரசின் (state sponsored) நேரடி கண்காணிப்பிலும், அதிகாரம், முதலீட்டலின் ஊடாக இடப்பெயர் மாற்றம், பௌத்த சிலை, தொல்பொருள் கண்டுபிடிப்புக்களை பௌத்தமயமாக்கல், விகாரை, மடாலயம் கட்டப்படல் என்று சிங்கள பௌத்தமய மாக்கலுக்குள் உள்ளாகியிருக்கின்றது.

ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் மீதான பொருளாதார, மொழி, நிலஅபகரிப்பு, கலாச்சார வாழ்வின் மீதான நிர்ப்பந்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவு ஒரு இனத்தின் பிரதிநிதி என்பதால் தொழிலாளி வர்க்கமும் ஒடுக்குதலுக்கு உள்ளாகின்றது. அவர்களின் இருப்பை உறுதி செய்ய வேண்டியது முக்கியமாகின்றது.

தென்கிழக்காசியாவில் முதலாளித்துவப் புரட்சி பூர்த்தியடையாத நிலையில் தேசிய இயக்கம் வளர்ந்து வருக்கின்ற காலம். இதில் நிலமானியப் பின்புலம் கொண்ட பூர்சுவா தேசியவாதம் அரசியல் உரிமையை வைக்கின்றது. தரகு முதலாளிகளே 1977 வரையில் முன் நின்றனர். இது பின்னர் குட்முதலாளித்துவ வர்க்கம் தலைமை தாங்கியது. மாறாக பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலேயே சுயநிர்ணய போராட்டம் நிகழ வேண்டும். சுயநிர்ணயத்தை பின்வருமாறு ஸ்ராலின் வரையறுக்கின்றார். 'சுயநிர்ணய உரிமை என்பது ஒரு தேசிய இனம் தான் விரும்பக் கூடிய வகையில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்பதாகும். தன்னாட்சி அடிப்படையில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள அதற்கு உரிமையுண்டு. ஏனைய தேசிய இனங்களுடன் கூட்டரசுக் கோட்பாடு அடிப்படையில் உறவு வைத்துக் கொள்வதற்கும் அதற்கு உரிமையுண்டு. பின் அக்கூட்டரசிலிருந்து முழுமையாக பிரிந்து செல்வதற்கும் அதற்கு உரிமை உண்டு. தேசங்கள், இறைமைத் தன்மை கொண்டவை, தேசங்கள் அனைத்தும் சமமானவை ஆகும்.' (ப.32 மா.தே. இ.பி. ஸ்ராலின்) குறிப்பிட்ட பிரச்சினையை எடுத்துக் கொண்டால் இது தேச மக்கள் பிரிந்து போகக் கூடாது என்ற பொருட்படாது. அதேவேளை ஒருநாட்டினுள் இருந்து பிரிகிறதா? அல்லது சேர்ந்திருப்பதா என சுயமாக தீர்மானிப்பதாகும். எனவே பிரிந்து போவதன் கூடிய சுயநிர்ணயம் என்ற பேச்சிற்கே இடமில்லை.

பொதுவுடமைவாதிகளுக்கு தேசிய இனம், மதம், மொழி, சாதி, இல்லை என்ற நிலைப்பாட்டிற்கு மாறாக அல்லாமல், பாட்டாளிகளின் ஒற்றுமையை முதன்மையாகக் கொண்டும், வர்க்கப் புரட்சியை நிபந்தனையாகக் கொண்டே சுயநிர்ணயப் பேராட்டம் இடம்பெறவேண்டும் என வகுப்பு எடுக்கப்படுகின்றது. இது சமூகக் கட்டமைப்பைப் பற்றிய புரிதல் அற்ற வாய்ப்பாட்டு வாதமேயாகும். ஆனால் ஏகாதிபத்திய கால கட்டத்தில் எழுகின்ற தேசங்களின் போராட்டம் என்பது இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் தேசத்தின் விடுதலை அவசியமானது. ஆனால் சுயநிர்ணயத்தை மறுத்துக் கொண்டே மேற்கண்ட நிபந்தனை முன்வைக்கப் படுவதுதான் இடதுசாரிய முற்றிய நோயாகும். பாட்டாளி மக்களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்ற நிலைமைகளில், எவ்வாறான போராட்ட யுக்தியை பொதுவுடமைக் கட்சி வகுக்க வேண்டும் என்பதில், முதலாளித்துவ தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிகளுக்கும், பொதுவுடமைவாதிகளுக்கும் இடையில் மாறுபாடான யுக்திகள் அடங்கியிருக்கின்றது. தமிழ் தேசத்தினதும், தேசிய இனங்களின் சுயநிர்ணயப் போராட்டமே ஒடுக்கப்படும் வர்க்கங்களின் தேசிய இனம் கடந்து ஐக்கியத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். இலங்கைச் சூழலில் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பு இறுக்கமாக இருக்கையில் தொழிலாளி வர்க்கத்தை காட்டிக் கொடுப்பதாக கூறுவது வெறும் அபர்த்தமாகும். ஒரு பொதுவுடமைவாதி தேசியவாதியாக இருக்க முடியும். ஆனால் தேசியவாதி பொதுவுடமைவாதியாக இருக்க முடியாது. பொது வுடமைவாதி பாட்டாளி வர்க்க நலனில் இருந்து தேசியவாதியாகின்றார்.

'சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வது, ஒரு கோட்பாடு என்ற முறையில் கூட்டாட்சியை ஏற்றுக் கொள்வதற்குச் சமமல்ல, ஒருவர் அக்கோட்பாட்டை உறுதியாக எதிர்ப்பவராகவும், ஜனநாயக மையப்பாட்டை ஆதரிப்பவராகவும் இருக்கலாம், ஆயினும் முழுமையான ஜனநாயக மையப்பாட்டை அடைவதற்குரிய ஒரே வழி என்ற முறையில் தேசங்களின் ஏற்றத் தாழ்வுகளைவிடக் கூட்டாட்சி நல்லதென்று விரும்பலாம். இதே கண்ணோட்டத்துடன் தான் மையவாதியான மார்க்ஸ், ஆங்கிலேயர்கள் அயர்லாந்தை வன்முறையில் அடிமைப்படுத்தி வைத்திருப்பதை விட அயர்லாந்தும் இங்கிலாந்தும் சேர்ந்த ஒரு கூட்டாட்சி மேலானது என்று கருதினார். (பக் 307 நூல் தொகுப்பு 1 - லெனின்) ஒவ்வொரு நாட்டின் உடைய இணைவானது சுதந்திரமாக இணைந்து கொள்வதில் நிர்ணயம் பெறுகின்றது. அதாவது உதிர்ந்த நிலையில் இருக்கின்ற போது ஒவ்வொரு தனிநபர்கள், இனங்கள் இணைந்து கொள்ளும் போதே சுயநிர்ணயம் என்பது பொருள் உள்ளதாகவும், விருப்பு வெறுப்பைக் கவனத்தில் கொண்டு முரண்பட்ட சக்திகள் ஒன்றிணைந்ததாக கொள்ள முடியும், அதிலெயே உண்மையான சுதந்திரம் அடங்கியுள்ளது.

ஏகாதிபத்தியத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே உயர்ந்த ஜனநாயக விழுமியம் பற்றி லெனின் தேசிய இனம் பற்றிய உரிமைக்கு ஈடாக உதாரணமாகக் கொண்டார் என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

தோழர் லெனின் முன்னிறுத்துகின்ற ஏற்றத் தாழ்வற்ற கூட்டாட்சி என்பதும் அல்லது தேசிய இனம், குலம், மதம் கடந்த இலங்கையர் என்ற கோசமும் ஒன்றல்ல. ஒன்று கலத்தல் என்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தை இல்லாதாக்குவது அல்ல. மாறாக உயர்ந்த ஜனநாயக வடிவத்தை அனைத்து தேசிய இனங்களும் வளர்த்துவிடுவது என்ற அடிப்படையில் இருந்து வருவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் ஒன்றியத்தில் சுயநிர்ணயம் பெற்ற தேசங்கள் பல இருந்தது. அந்த தேசங்கள் பின்னர் சோவியத் உடைவின் பின்னர் இரத்தக் களரி இல்லாது தனித்துச் சென்றதை இங்கு கவனிக்க வேண்டும். சோவியத் காலத்தில் தான் ஒன்று கலத்தல் என்பது உயர்ந்த ஜனநாயக வடிவமாக இருந்துள்ளது. குறைந்த பட்சம் முதலாளித்துவ ஜனநாயக உரிமையான சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொள்ளாது இன, குல, மத பேதமற்ற மக்களாக ஒன்றிணைவோம் என்பது பேரினவாதக் கூற்றேயாகும்.

இலங்கையர் என்ற தேசியம் என்பது லங்கா - என்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தினை அனுசரித்துச் செல்லும் - அடக்கிவிடும் பெருந்தேசியவாதம். இதுதான் இலங்கையர் தேசியம் என்று கூறுகின்றார்கள். எண்கணக்கை வைத்துக் கொண்டு தமிழர் ஒரு தேசம் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை மலையக மக்களை ஒரு தேசிய இனம் என்று பேரினவாத இடதுசாரியம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அவர்களையும் பாட்டாளிகள் என்ற அடையாளத்தின் கீழ் மலையக மக்களின் தனித்துவத்தை அழிக்க முற்படுகின்றார்கள். இதேபோல 'பாரம்பரிய இடதுசாரிகள்' நாம் இலங்கையர் என்று முதலாளித்துவ தாராளவாதச் சிந்தனை கொண்டு இரண்டு தேசத்திற்கு அப்பால் 4 தேசமாக கொள்ளும் கொள்வதன் ஊடாக 'பெருந்தேசியபக்தியை' வெளிப்படுத்து கின்றார்கள்.

அதாவது விவாகரத்துப் போன்றது என்ற உள்ளடக்கம் என்பது உதிரியான மனிதர்கள் உடன்படுவது இல்லாவிடின் சுதந்திரமாக விலகும் உரிமை. இது தனித்துவவாத பொருளாதார சிந்தனை வடிவம், உரிமை பெற்றபின்னரே பூரணமாகும் விடயமாக இருக்கின்றது. ஆனால் விவாகரத்து என்பது குறைவிருத்தி கொண்ட நாடுகளில் பெரும் எண்ணிக்கை விகிதத்தில் இல்லாத நிலையை அறிந்து கொள்ள முடியும். மணவிலக்கு என்பது பொருளாதார ரீதியாக தனித்துவமான மனிதர்களை உருவாக்க முடிகின்ற நிலை முதலாளித்துவ- ஏகாதிபத்தியக் கட்டத்தில் தான் அதிக வளர்ச்சி கொண்டதாக இருக்கின்றது. (இலங்கை போன்ற நாடுகளில் பொருளாதாரச் சுதந்திரம், சமஅந்தஸ்து அற்ற நிலையில் தான் பெண்கள் உள்ளார்கள்) தனித்துவவாத மனித உறவுகளை முன்கூட்டியே கணித்த பெரும் அறிவியல் மூலவர்களைச் சாரும். நாடுகள் பிரிந்த பின்னர் அவைகள் இணைந்து கொள்ளவும் முடியும். 'பிரிவினைக்குப் பிறகு ஒரு வேளை கூட்டாட்சி ஏற்படலாம்' (பக். 313 மார்க்ஸ் - லெனின் நூல் தொகுதி 1 ) இவைகள் சுதந்திரமாக நடைபெறவேண்டும். உண்மைச் சுதந்திரம் என்பது இதில் தான் அடங்கி இருக்கின்றது. சுதந்திரமான விலகும் உரிமை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்கானதாகவும், புரட்சியின் மேன்மை என்பதும் தான் தோழர் லெனின் கூற்றாகும். ஒரு தேசிய இனம் என்றால் கட்டாயம் பிரிந்து போகவேண்டும் என்றில்லை. எல்லா வகையான தேசியப் பிரிவினைகளையும் நிபந்தனையுடனே அல்லது நிபந்தனை இன்றியே ஆதரிக்க வேண்டும் என்பதில்லை. உதாரணமாக தமிழ் மக்களுக்கு என்று உலகில் எந்தவொரு நாடுகளும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் உலகில் நாடு இல்லை என்பதற்காக, ஒரு நாடு உருவாக்கப்படவேண்டும் என்பது அகவுணர்வு சார்ந்தாகும். இந்த அடிப்படையில் ஈழ தேசத்தின் சுயநிர்ணயம் பற்றி முடிவெடுப்பதில்லை.

1917 ஏப்ரல் 24 ம் தேதி போல்ஸ்விக் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தோழர் ஸ்டாலின் அவர்கள் எழுதிய நூலின் தேர்ந்த பகுதிகள் கீழே ."தேசிய இனங்களை ஒடுக்கும் கொள்கை எதேச்சதிகாரம், முடியாட்சி ஆகியவற்றின் கொள்கையாகும். நிலச்சுவாந்தர்களும், முதலாளிகளும், சிறு முதலாளிகளும் தங்களுடைய தனித்த வர்க்க உரிமைகளைப் பாதுகாக்கவும், பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களிடையே பிளவு ஏற்படுத்துவதற்காகவும் இந்தக் கொள்கையை ஆதரிக்கிறார்கள். பலவீனமான தேசங்களை அடிமைப்படுத்த முயற்சி செய்யும் நவீனகால ஏகாதிபத்தியம் தேசிய ஒடுக்குமுறையை முன்னைக் காட்டிலும் அதிகமாக தீவிரப்படுத்தும்."

"முதலாளித்துவ சமூகத்தில் தேசிய இனங்களை அடக்கி ஒடுக்கும் முறையை ஒழிப்பதென்பது ஓரளவுக்குத்தான் சாத்தியமாகும் அதுவுங்கூட பரிபூரண ஜனநாயகக் குடியரசுமுறையும் சகல தேசிய இனங்களுக்கும் மொழிகளுக்கும் பரிபூரண சமத்துவத்தை உத்தரவாதம் அளிக்கும் அரசாங்க அமைப்பும், எந்த அளவிற்கு ஏற்படுகிறதோ அந்த அளவிற்கு சாத்தியம்"

"ரஸ்சியாவின் பகுதிகளாக இருக்கும் எல்லா தேசிய இனங்களுக்கும் சுயேட்சையான அரசாங்கங்களை அமைத்துக் கொள்வதற்கும், பிரிந்து போவதற்கும் உரிமை உண்டு என்பதை ஏற்க வேண்டும். இந்த உரிமையை மறுப்பது என்றால், பிற தேசங்களை ஆக்கிரமிப்பது என்ற கொள்கையை கடைப்பிடிப்பதற்கு சமம். பிரிந்து போகும் உரிமையை பாட்டாளிவர்க்கம், ஒப்புக்கொண்டு ஏற்க வேண்டும். இது ஒன்றுதான் தொழிலாளர்களிடையே பரிபூரண ஒற்றுமை நிலவுவதற்கும், உண்மையான ஜனநாயக பாதையில் தேசிய இனங்களை மிகவும் நெருங்கச் செய்யும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேலிருந்து மேற்பார்வை வேலை பார்ப்பதை ஒழிக்க வேண்டும். கட்டாய அரசாங்க மொழி என்று ஒரு குறிப்பிட்ட மொழி திணிக்கப்பட்டிருப்பதையும் ஒழிக்க வேண்டும். அந்தந்த இடங்களில் வாழும் மக்களாலேயே சுய ஆட்சிப் பிரதேசங்களுடைய எல்லைக்கோடுகள் நிர்ணயிக்கப்பட வேண்டும்." பெருந்தேசியம் முன்வைக்கும் சம உரிமை பற்றிய கூற்றை ஸ்டாலின் வார்த்தையிலேயே அம்பலப்படுத்த முடிகிறது.

"தேசிய கலாச்சார சுயாட்சி (அதாவது தேசிய பண்பாட்டு தன்னாட்சி) என்னும் தன்னாட்சிக் கொள்கையை பாட்டாளி வர்க்கக் கட்சி அழுத்தந் திருத்தமாக மறுக்கிறது. தேசிய பண்பாட்டுத்தன்னாட்சி என்பது ஒரே இடத்தில் வாழ்கின்ற தொழிலாளரை, ஒரே தொழிற்சாலையில் வேலை செய்கின்ற தொழிலாளரைக்கூட அவரவர்களுடைய வெவ்வேறான தேசிய பண்பாட்டின்படி பிரித்து பிளவுபடுத்துகின்றது."

"குறிப்பிட்ட தேசிய இனங்கள் மட்டும் அனுபவித்து வரும் தனி உரிமைகளை ரத்து செய்தும், தேசிய சிறுபான்மையோரின் பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் தரச்செய்தும், அடிப்படையான அரசியல் சட்டதிட்டம் கொண்டுவரப்பட வேண்டும். சகல தேசிய இனங்களைச் சார்ந்த சகல தொழிலாளர்களுக்கும் பொதுவான பாட்டாளிவர்க்க அமைப்பு இருக்க வேண்டும். சர்வதேச மூலதனத்தை எதிர்த்தும் முதலாளித்துவ தேசியத்தை எதிர்த்தும், வெற்றிகரமான போராட்டத்தை பாட்டாளி வர்க்கம் நடத்த, இந்த பொதுவான அமைப்பே உதவி செய்யமுடியும். பாட்டாளி வர்க்கம் இந்தப் போராட்டத்தை நடத்துவது என்பதையே சாத்திய மாக்கும்." (ஸ்டாலின்).

பாராம்பரிய தத்துவாசிரியர்கள் புரட்சிக்குப் பின்னரான நிக்கரகுவாவையும், சீனாவையும் உதாரணம் காட்டுகின்றார்கள். சுயநிர்ணயம் என்பது முதலாளித்துவப் புரட்சியுடன் தீர்த்துவைக்கப்பட்ட உதாரணத்தை இலங்கையில் பிரதியிட முடியாது. இலங்கையின் பிரத்தியோகமான சூழலை கவனத்தில் எடுக்கவில்லை. "திரும்பவும் சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசுகின்றார்கள். தமிழ்த் தேசியவாத அகராதியில் அதற்கு ஒரு பொருள் மட்டுமே இருந்துள்ளது. பிரிந்து போகும் உரிமை என்பதைப் பிரிந்து போகும் கட்டாயம் என விளக்குமளவுக்குத் தமிழ்த் தேசியவாதிகள் தாங்களும் குழம்பிப் பிறரையும் குழப்பினார்கள்" (தினக்குரல் 19022017- கோகர்ணன்) பிரிந்து சென்று தனியாக அரசை அமைப்பதை மறுப்பதேயாகும்.

தேசத்தினை ஆட்சியுரிமையை புறம்பாக இரட்டைத் தேசியம், தலித்தியம், அதிகார பகிர்வை உள்ளக - வெளியக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநிர்ணயம் என்று பகுதியாக்கிப் பார்த்த நிலை கடந்த காலத்தில் இடம்பெற்றிருக்கின்றது. பேரலையின் (சுனாமி) பின்னரான காலத்தில் நிதிக்கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது புலிகளால் பயன்படுத்தப்பட்டு வந்தது. நிவாரணத்தை யார் கையாள்வது என்ற பிரச்சனையில் எழுந்ததாகும். புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தம்மால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிலையில் எழுந்ததாகும். இங்கு தேசத்தின் வளர்ச்சியை கூறுபோட்டுப் பார்க்க முடியாது. சுயநிர்ணயம் என்பது அனைத்து அம்சங்களையும் தீர்மானிப்பதாக அமைவதாகும். இவ்வாறே சட்டத்தின் ஊடாக பொது உரிமையை உறுதிப்படுத்தும் சலுகை அல்ல தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாகும். சுயநிர்ணயத்திற்கு பதிலாக முன்னிறுத்தப்படும் பொதுவான - சம (equal) உரிமையை உறுதிப்படுத்தல் என்ற கோசம் தேசத்தினை ஏற்றுக் கொள்வதில் இருந்து அமைந்து விடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3 தேசியத்திற்கு எதிர் வாதங்கள்

### 3. 3.1 தீவிரவெறி என்றால் என்ன?

மனிதகுலத்தின் வளர்ச்சியடைந்த அறநெறி கொண்ட ஜனநாயகத்தின் அடிப்படையே ஜனநாயகமாகக் கொள்ளப்படுகின்றது. இன்றைய சமூகத்தின் ஜனநாயக விதிக்கு அப்பால் எடுக்கப்படுகின்ற நிலைப்பாடுகளை வெறியாகக் கொள்ளப்படுகின்றது. முதலாளித்துவ பொருளாதாரத்தில் அடிப்படை உரிமைகள் நிறுவனமயப் படுத்தப்படுகின்றன. இந்த பொருளாதார அமைப்புக் கேற்ப சுதந்திரமான மனிதர்களை உருவாக்கிக் கொள்கின்றது. இவ்வாறு உரிமைகள் ஏதோ மரபுசார்ந்த விதிமுறை, மதம் போன்ற விழுமியங்களின் அடிப்படையில் மனிதர்களை பார்க்காது தனிமனிதனாக பார்க்கும் பார்வையை தொழில் புரட்சியின் ஊடாக வெளிப்படுகின்றது. இந்த அடிப்படையில் வளர்ச்சியடைந்ததாக தனித்துவவாதம் என்பது தனிமனிதர்களை உதிரிகள் ஆக்கிவிட்டு தனிமனிதர்களின் கருத்துக்களின் மேல் கட்டப்பட்ட தீவுகளாக அதன்மேல் மனிதர் வாழ்கின்ற நிலைக்கு அடைந்துள்ளது. இங்கு தனிமனிதர்களின் சிந்தனைத் தளத்தின் மையநிலையில் இருந்துதான் பொதுமைப்படுத்தும் நிலையில் உருவாகியிருக்கின்றது.

இன்றைய புலம்பெயர் வாழ்வின் சமூக உறவுகளை என்பது இந்த பொருளாதார உற்பத்தி உறவிற்கேற்ப மாற்றம் அடையவைத்துள்ளது. இந்த மாற்றத்திற்கு கொடுத்த விலைகளோ அதிகம். அந்த இழப்புக்களின் சோக அத்தியாயம் முழுமையாக பதியப்பட வேண்டும். அந்த துயர அத்தியாயம் ஏதோ போக்கடிபோக்காக பதியப்பட்டிருக்கின்றது. மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளுக்கிடையேயான மாற்றம் என்பது பலதுன்பங்களை கொடுத்ததாகவே இருக்கின்றது. இந்த மாற்றங்களினால் ஏற்பட்ட துன்பங்கள், துயரங்கள், வெற்றிகள் என்பன நிலமானிய பெருமிதங்களுள் அடங்கியமிழ்ந்துள்ளது. சமூக விழுமியங்களின் சிதைவுகளில் ஏற்படுகின்ற மனித உறவின் மீதான அச்சம் என்பது பழைமை நோக்கிச் சிந்திக்கின்ற போக்கினை உருவாக்குகின்றது. இதன் வெளிப்பாடுகளாக தீவிர மதப்பிடிப்பையும், அகமண முறையை தீவிரமாக வலியுறுத்துவது, ஒற்றை மொழியைக் கொண்டவர்களுடன், ஒரேமாதிரியான சமூகப் பிரிவினருடனும் உறவுகளை மேற்கொள்கின்றனர். இடைநிலைமாறும் காலத்தில் கௌரவ- ஆணவக் கொலைகள் (தமிழர்களிடம் அதிகம் இல்லை) என்று மேற்கு நாடுகளில் புலம்பெயர்ந்த வர்களிடையே நடைபெறுகின்றது.

இங்கு அரைநிலமானியச் சிந்தனையின் உடைவும் முதலாளித்துவ ஏகாதிபத்திய (Transitional stage- Priod) சமூக உறவினுள் நுழையும் காலத்தில் இடம்பெறும் சமூக உறவின் விளைவாகும். சாதி- மத- பால்- இன-பிரதேச- குடும்ப எல்லை- என்று விரிந்து செல்கின்றது. இங்கு வெறி என்பது வெவ்வேறு அலகுகளில் மாற்றம் கொள்கின்றது. இது சர்வதேச அரசியலில் இருந்து குடும்பம் வரை வெவ்வேறு அளவில் உள்ளது. இங்கு பழமைக்கும் புதுமைக்குமான (முதலாளித்துவம்- ஏகாதிபத்திய சமூக உறவு ஈடாக) மாறுபாடான சிந்தனை வடிவங்கள் உருவாகுவதும் அதற்கு எதிரான - ஆதரவான நிலை என்றும் உருவாகின்றது. நான் - நாம்- அவர்கள் என்ற பாகுபாடும் தொண்டு தொட்டே வந்துகொண்டிருப்பவைதான். இதற்கு எதிராக கணியன் பூங்கொன்றனாரின் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று சிந்தனை மரபும் இருந்து கொண்டு வந்துள்ளது. இந்த நாம் - மற்றவர்கள் என்பது அநாகரிக சமூக அமைப்பில் இருந்தே வருகின்ற ஒன்றுதான். அன்றைய மனிதர் உடை, உணவு, உறவிடம், மனிதஇனப் பெருக்கம், தமது பாதுகாப்பு என சிந்தித்த போதே தாம் மற்றவர்கள் என்றும் எதிரி- நண்பர் என்றும் பாகுபாடு ஏற்பட்டு விடுகின்றது.

இவ்வாறான பாகுபாடு உடலுழைப்பை வழங்காது மூளைஉழைப்பை மட்டும் நம்பி வாழும் வேலைப்பிரிவினையும் சிந்தனை வளர்ச்சியின் மேம்பாடும் தாம் - மற்றவர்கள் என்று பிரித்து விடுகின்றது. இவ்வாறான வர்க்க முரண்பாடுகள், வித்தியாசங்கள் ஏற்படுகின்றன.

ஆபிரகாம் கோத்திர மதம் விவிலியத்தில் புறயினத்தார் என்று அழைப்பதும், வர்ணாசிரமத்தில் அரக்கர்கள் என பூர்வீகக் குடிகள் அழைக்கப்பட்டதை கவனத்தில் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே நல்லது கெட்டது என்பதற்கும் கறுப்பு -வெள்ளை என்ற சிந்தனைவடிவமும் ஏற்படுகின்றது. இதிலிருந்து கறுப்பு மனிதத் தன்மையற்றது என சிந்தனையோட்டம் ஏற்படுகின்றது. மனிதர்களிடையே இனவாத, சாதியவாத, பிரதேசவாத, மதவாத பிரிவுகள் உணர்வுகள் உண்டு. இவைகள் மனிதர்களிடையே இருக்கின்ற கருத்துமுதல்வாத - போலியுணர்வுடன் தொடர்புடை யதாக இருக்கின்றது. மக்களிடையே இருக்கின்ற போலியுணர்வு - கருத்துமுதல்வாதம் என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவான தாகும். கடவுளையும், மதத்தையும் நம்புபவர்களுக்கு கல்லும் புல்லும் சாமியாகின்ற போது ஆசாமிகளும் சாமிகள் தான்.

அவ்வாறே தேசியப் பெருமை ஒன்று அடக்குவதற்கும் மற்றையது எதிர்த்துப் போராடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

1. மற்றைய மனிதர்களை கீழாகப் பார்ப்பது (இனவாதம்- சாதியவாதம்- பிரதேசவாதம்- குடும்பவாதம்)

2. சமூக உறவுகளின் சிதைவு பழைமையை நோக்கிப் பயணிப்பது இதனால் மதத்திடம், பழைய சமூக விழுமியங்களில் சரணடைவது.

இங்கு யார் வெறி என்பதை தீர்மானிப்பதாகவும் யார் நலனில் இருந்து என்பதும் முக்கியமானதாகும். இதனைத் தீர்மானிப்பது அரசியல் பொருளாதார நலனேயன்றி வேறு எதுவுமாக இருக்க முடியாது. வெறி என்ற வரைவிலக்கணத்திற்குப் பின்னால் உள்ள வர்க்க நலன் அடக்கியிருக்கும். இங்கு ஒவ்வொருவரின் நலனைப் பாதுகாக்க மதவாதம், தேசியவாதம், சாதியவாதம், பிரதேசவாதம் என்று பிரிவினைகளை முன்வைத்து தமது சுயநலனுக்காக செயற்படுகின்றார்கள். இங்கு கிட்லர் தொடக்கம் இன்றைய இந்துத்துவவாதிகள், சிங்கள பேரினவாதம் வரை வலது தேசியம் கதைக்கின்றார்கள்.

கிட்லரின் தேசிய வெறி என்பது இனத்தின் (Race) என்ற அடிப்படையில் ஆரியவாதம் முன்வைக்கப்பட்டது. இதில் யூதர்கள், சிந்தி, ரோமா என்ற தேசிய இனங்கள் தூய்மையற்ற இரத்த மாதிரியான இனங்கள் என அழிக்கப்பட்டது. இங்கு கிட்லரின் தேசியவெறியாகிய நாசிக் கருத்தாக்கத்தினையும் தேசியவாத மாகவே பார்க்கப்படுகின்றது. அனாகரிக தர்மபாலாவின் பௌத்த சிந்தனை மேன்மை, ஆரிய மேன்மைவாதம் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்திற்கான அத்திவாரமாகும்.

இங்கு வலது பிற்போக்குவாதிகளின் தேசியம் என்பது வேறு முற்போக்கு தேசியம் என்பது இருக்க முடியாது என்ற வாதமும் பரவலாக வைக்கப்படுகின்றது. தன்னார்வ எழுத்தாளர்கள் போலித் தேசியம் என்ற சொல்லாடலை பயன்படுத்தும் போக்கு என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்செயலானது அல்ல. மாறாக அது ஒரு நிகழ்ச்சி நிரலுக்குப் பின்னால் இயக்கப்படுவதாகும். சுதேசியம் என்பது அடிப்படையில் சந்தையின் நுகர்வினை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரச் சிந்தனையை எதிர்த்து நிற்கவேண்டும். முற்போக்குத் தேசியம் என்பது சுதேசியமாக அமைகின்ற போது இது ஜனநாயகம் பெற்றதாக இருக்கின்றது. ஏகபோக மூலதனத்தையும், தனிச் சந்தையை கோருவதை எதிர்ப்பதையும் பிற்போக்காக காட்டப்படுகின்றது.

சமத்துவம் அற்ற உலகில் பாகுபாட்டுச் சிந்தனையை தவிர் என ஊருக்கு உபதேசம் செய்யப்படுகின்றது. இவ்வாறு உபதேசம் செய்துகொண்டு சமூகத்தை பிளவுபடுத்தி தமது நலனைப் பாதுகாத்துக் கொண்டிருப்பதாகும். ஒடுக்கப்படுப வர்களின் உரிமையை ஏற்றுக் கொள்ளாது தமது நலனுக்காக இனவாதம் பேசுவது சட்டத்திற்கு முரணானது, அறத்திற்கு முரணானது, உழைக்கும் மக்களை பிரிக்கின்றது என்று பிரச்சாரத்தினை முடுக்கிவிட்டிருக்கின்றது. இவைகள் இலங்கை யைப் பொறுத்தவரையில் பெருந்தேசியத்தின் ஆதரவுக் குரல் தான் இனவாதம் என்ற வரையறையாகும்.

இங்கு தேசத்தின் எழுச்சியை இனவெறியாக அல்லது தேசியவெறியை ஒன்றுபடுத்துவது தவறானதாகும். இங்கு தேசம்-நேசம் என்பதை இனவெறி- இனவாதம்- தேசியவாதம் என்ற சொல்லாடலுக்குள் அழுத்திவிடும் அவலம் இருக்கின்றது. இங்கு குறைந்த பட்சம் ஜனநாயக உரிமையை அங்கீகரிக்காத நிலைகளை முன்னிறுத்துவதே வெறியாகும்.

மக்களின் மொழி, பண்பாடு, நிலம், பொருளாதரா வாழ்வு என்பது வளர்ச்சியடையவேண்டும். இங்கு புதிய சனநாயக கடமை என்பது மக்களின் சனநாயக வாழ்வும் வாழ்வியல் மாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்வதும் ஆகும். இங்கு சனநாயகப் புரட்சியை நிறைவுசெய்ய முடியும். இது ஒவ்வொரு தேசிய இனமும் முழுமையான நவீன தேசங்களாக வளரும் நிகழ்வுடன் இணைந் துள்ளது. ஆனால் ஒவ்வொரு தேசிய இனமும் முழுமை யான வளர்ச்சி பெற்ற நவீன தேசங்களாக வளர்ச்சி அடைவ தற்கான சந்தர்ப்பம் என்பது உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு உருவாக்க வேண்டும் என்றால் அந்த மக்களுக்கான சுயநிர்ணய உரிமை என்பது அவசியமாகும். இங்கு தேசம் என்பது கூட முதலாளித்துவ பொருளாதார வழிவந்த ஒரு ஆட்சிமுறை முறையாகும். முதலாளித்துவம் நிர்வாக வசதிக்காக சந்தைக்கான எல்லைக் கோட்டை வகுத்துக் கொண்டார்கள். இங்கு பெரும்பான்மை இனமானது மற்றைய தேசியஇனமான தனக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தையைக் கோரிய வளர்ச்சியை அடையமுற்படுகின்ற போது ஒடுக்குமுறை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் முதலில் பாதிக்கப்படுவது உழைக்கும் வர்க்கமே.

இங்கு ஆண்டபரம்பரை (இதுவும் தேசியயினப் பெருமிதம் தான்) மீண்டும் ஆளவேண்டும் என்பதற்காகவோ, தமிழர்களே தொன்மையானவர்கள் என்பதற்காக அல்ல. இங்கு இனவாதத்தையும் தேசத்தையும் போட்டுக் குழப்பும் அறிவாளிகளே அதிகம். பேரினவாதத்தின் வெளிப்பாடு குறுந்தேசியவாதமாகும். குறுங்குழுவாதம் (தன்னுணர்ச்சி மிகை கொண்ட போக்கு இது மதமாகவோ அல்லது தேசிய இனமாகவோ அமைய முடிகின்றது) குறுங்குழுவாதம் மற்றைய தேசிய இனங்களின் மீது குரோதத்தை வெளிப்படுத்தியதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒடுக்குமுறையின் விளைவாகவும், பிற்போக்கு சித்தாந்தத்தின் வெளிப்பாடாக குறுந்தேசிய இனப்பெருமையை முன்னிறுத்துவதாகும். ஒடுக்கப்படுபவர்களின் சின்னங்கள் மீதான புனரமைப்பு என்பது தனது ஒடுக்குமுறையில் இருந்து மீள்வதற்காகும். இதன் பொருள் குறுங்குழுவாதத்தின் (அனைத்து தேசிய இனங்களைப் போலவே கருத்துமுதல்வாதச் சிந்தனைக்குள்ளும், போலிப் பெருமை கொண்டு இருப்பது மறுப்பதற்கு இல்லை. ஏற்கனவே சமூகத்தில் இருக்கின்ற பிற்போக்குக் கருத்தியலின் கூட்டு வடிவம் என்பதையும் மறுத்துவிட முடியாது.) இனப்பெருமை என்பது கவனத்தில் கொள்ளக் கூடாது என்பதல்ல. அது முதன்மையானது என்பதோ அல்லது பெருந்தேசியவாதத்திற்கு ஒப்பானது என்ற அடிப்படையே தவறானதாகும். பேரினவாதத்தை இனவாதம் என்ற அடை மொழிக்குள் அடக்கிக் கொள்வதன் ஊடாக போராடும் தேசிய இனங்களின் உரிமையை மறுக்கின்ற பிரச்சார வேட்டையாகும்.

படித்த மத்தியதர வர்க்க இளைஞர்களின் வருகை வரலாற்றில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. 1970களில் தேசிய எழுச்சிக்கு உட்பட்ட காலத்தில் எழுந்த அரைமானிய கட்டப்பட்ட அரசியல் அமைப்புக்களில் உயர்ந்த ஜனநாயக வடிவம் கொண்டதாக இருந்திருக்கும் என எதிர்பார்க்க முடியாது. இன்றைய முதலாளித்துவ தாராளவாதச் சிந்தனையில் அடிப்படையில் இருந்தும் அளவிட முடியாது. போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் மற்றைய தேசிய இனங்களின் மீதான ஆயுதத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் ஒடுக்கப்படும் தேசிய இனங்களையும், பெருந்தேசிய இனத்தில் உள்ள ஒடுக்கப்படும் மக்களின் ஒத்துழைப்புடன் போராட்டம் நடத்தப்பட்டிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்.

தென்னிலங்கைப் புரட்சியாளர்கள் ஒடுக்கப்படும் தேசத்தின் போராட்டத்தை ஆதரித்து இருக்க வேண்டும். மாறாக முள்ளிவாய்க்காலில் பதுங்குகுழியை அமைத்துக் கொடுத்தனர். இன்று தேசத்தின் மீது ஆக்கிரமிப்பை ஏற்று நடத்தி விட்டு இனமதகுல பேதமின்றி ஐக்கியப்பட்ட போராட்டத்தினை கட்டமைக்க அழைப்பு விடுகின்றார்கள்.

ஆயுத இயக்கங்கள் குறுந்தேசியப் போக்கிற்கு துணையாக ஆயுதத் துணை என்பது (de facto Government) ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைக் கொண்டு வந்த பின்னரான காலத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகள் மாறியிருந்தன. ஆயுதப் போராட்டத்தினை வளர்த்தெடுத்தது போல நிர்வாகக் கட்டமைப்புகளையும் உருவாக்கி வந்துள்ளார்கள். (இதில் உள்ள சாதகபாதம் பற்றி தனியே ஆராயப்பட வேண்டும்) எனவே இன்று தொடர்ந்தும் குறுந்தேசிய சிந்தனையின் ஆயுத அச்சுறுத்தல் இன்றில்லை. முள்ளிவாய்க்காலின் பின்னர் தரகுவர்க்கம் தலைமைதாங்கிக் கொண்டிருக்கையில் தரகுவர்க்கத்தையும், தேசியவாதிகள் (சுதேசியவாதிகள்) என்று வரையறுப்பது அபர்த்தமாகும். பெருந்தேசியவாதத்தினை பாதுகாத்துக் கொண்டிருக்கும் சக்திகள் தரகு அணியை தேசியவாதிகளாக, இனவாதிகளாக வரையறுப்பதை இட்டு ஆச்சரியப்படத் தேவையில்லை. இதே வேளை வலதுகுட்டிமுதலாளி ஊசலாட்டப் பிரிவானது குறிப்பிட்ட எல்லைக்குள் இருந்து அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

திரிபுவாதிகள் தொடர்ச்சியாக இனவாதம் என்று பெருந் தேசியவாதத்தை சிறுமைப்படுத்தி அரசியல் செய்ய முடியாது. புரையோடிப்போயுள்ள பெருந்தேசிய, மதவாதத்துக்கு அரசியல மைப்பில் பாதுகாப்பு இருக்கும் வரையில் மற்றைய தேசிய இனங்களின் மீதான தாக்குதல் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். இலங்கையில் மதவாத -இனவாத ஆட்சி இல்லை என்றும் கூறக்கூடும். கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த பாப்பரசர் இலங்கை வந்திருந்தார். அப்போது நாடாளுமன்றத்தில் முதன்மை புத்த பிக்குக்கள் இருக்கையில் அமர்ந்திருந்தனர். பாப்பரசர் வருகின்ற போது இருக்கையில் இருந்த நிலையில் இருந்தே வரவேற்றனர். புத்தபிக்குக்கள் இருந்தவாறு வரவேற்பது அவர்களின் சம்பிரதாயம் என்று ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் மதச் சார்பற்ற பல்லினங்கள் வாழும் நாட்டின் நாடாளுமன்றத்தில் பௌத்த மதத்திற்கு முன்னிடம் கொடுப்பதை இட்டு போலி மார்க்சியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு கொள்வததில்லை. அன்றாடம் பயணத்தின் போது குருக்களுக்கு முதலிடம் என அறிவித்திருக்கின்ற போதும் நித்தமும் தொல்லைகள் ஏற்படுகின்றது என்பதையும் கடந்து போக முடிகின்றது. பௌத்த மதபீடத்திற்கு அடிபணியாத அரசியல் சக்திகளின் முன்னெடுப்பு என்பது இன்றையப் பொழுதில் அவசியமானதாகும். பௌத்த மதச் சக்திகள் விருப்பு வெறுப்புகள் நிறுவனமயப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகின்ற நிலையில் மற்றைய தேசிய இனங்களின் சமத்துவம் ஏற்றுக் கொள்ளப்படப் போவதில்லை.

தேசிய இனம்- தேசத்திற்கான வளர்ச்சியை நோக்கியதாக ஒன்றும் ஒடுக்குவதுமாக இன்னொரு தேசம் இருக்கின்றது. இந்தப் பிரச்சனையை வெறுமனே இனவாதமாகவும், குறுந்தேசியமாகவும் பிதற்றும் அரசியல் வங்குரோத்துத்தனம். முரண்பாடுகளுக்கான தீர்வுகள் குறுக்குவழியில் இல்லை, அது அவ்வாறு இருக்கவும் முடியாது. இது ஒன்றும் மதப்பிரச்சாரம் அல்ல மதவாதிகள் தமது பாவத்தைப் போக்குதவற்கான பிரதியுபகாரங்களை செய்வதன் ஊடாக நன்மதிப்பையும் விண்ணுலகில் இடம் எடுப்பது போல் அல்ல. கொலனித்துவத்திற்கு எதிராக போராடி அவர்களை அகற்றி விட்டு சுதேச அதிகார வர்க்கத்தை அந்த இடத்தில் இருத்தினோம். புரட்சிகரத் தலைமை தாங்கி விடுதலைப் போராட்டம் நடைபெறவில்லை. ஆனால் போலிச் சுதந்திரத்தின் பின்னர் சுதேசிய அதிகார வர்க்கம் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டு சுரண்டாவா நாம் போராட வேண்டும் என்று எவரும் சிந்திக்கவில்லை. அவ்வாறு போராடியது தவறு என்று எவரும் கூறமாட்டார்கள். இவ்வாறான குதர்க்கச் சிந்தனையானது வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கை தவறாக புரிந்ததன் விளைவேயாகும். அதேவேளை முன்னோக்கிச் செல்லத் தயாராக இருக்கின்ற வர்க்கத்தின் நலன்கள் என்பதை கணித்து அதில் இருந்து முன்னேறுவதான் சரியான வர்க்க போராட்ட அணுகுமுறையாக இருக்கும். அவ்வேளை சமூகமாற்றமும், உற்பத்திச் சாதனத்தை அரசின் கையகப்படுத்திக் கொள்ளும் செயற்பாட்டை நோக்கி நகர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. 3. 2 சாதியவாதம்

சாதியின் கொடுமைகளை எதிர்ப்பது என்பது தீர்க்கமாக செயற்பட வேண்டிய விடயமாகும். சாதிய ஒடுக்குமுறைகளை எதிர் கொள்வது எவ்வாறு என்பதையும் சாதியத்தினை உயிர்ப்புடன் வைத்துக் கொள்ளும் சமூக- பொருளாதாரக் காரணிகளை அரசியல் செயற்பாடுகள் இருக்க வேண்டும். இங்கு அடையாள - சாதிய அரசியல் முன்னிலைக்கு வரும் நிலையை வெறும் அலட்சியம் கொள்ள முடியாதுள்ளது. தேசியஇனத்தில் உள்ள அகமுரண்பாடுகள் வெவ்வேறு தளத்தில் தீர்க்கப்பட வேண்டியவையாகும்.

இலங்கையில் 1966களில் ஜனநாயக சக்திகளின் தலைமையில் சேர்ந்து நடத்தப்பட்ட போராட்ட வடிவம் என்பது இன்றைய காலத்தில் முன்னெழும் அடையாள அரசியலில் இருந்து மாறுபட்டதாகும். உதாரணத்திற்கு தமிழகத்தில் இனக்குழுமங்களாக இருக்கின்ற இருளர்களை தமிழ் தேசத்தினுள் (assimilate) உள்வாங்கல் செய்யப்படவில்லை. அவர்களை ஒரு சாதியாக முத்திரை குத்தி வைத்திருக்கும் ஜனநாயகப் பண்பற்ற சமூகக் கட்டமைப்பை எதிர்க்காது தமிழ் தேசியம் பேசமுடியாது. ஆனால் ஜனநாயக சக்திகள் ஐக்கியப்பட்ட சாதிய எதிர்ப்புப் போராட்டம் தமிழ் தேசத்தினை இலங்கையில் உருவாக்கியது. தனித்துவத்தை இழக்கின்ற இனக்குழுமங்கள் வெவ்வேறு தேசிய இனத்திற்குள் இணைவது இயல்பானதாகும். பொருளாதார பரிவர்த்தனை இணைப்பு, மொழி இல்லாது போகுதல், பண்பாடு என்பது ஒன்று கலப்பது என்று நீண்ட காலத்தின் மூலமே கலப்பிற்கு உள்ளாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிகளாகவும், ஆண்டபரம்பரையாகவும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் நிலை என்பது சுயசாதியப் பெருமையின் வெளிப்பாடு. சுயசாதியப் பெருமையை மறைப்பதற்கான முகமூடி அணிந்து கொண்டு சாதிய- தேசியம் பேசுபவர்கள் சமூகத்தை பிரிப்பவர்களேயன்றி ஜனநாயகப் பண்புடன் இணைப்பவர்கள் அல்ல. சாதிக்கட்சிகள், தூயதமிழ் சாதிகள் என்ற சிந்தனை வடிவம், திராவிடஎதிர்ப்பு, தந்தை பெரியார் எதிர்ப்பு, வடுகர் மீதான எதிர்ப்பு என்று அடையாள அரசியல் முன்வைக்கப்படுகின்றது.

சாதியப் பெயர்கள் வருவதற்கு1. இனக்குழும எச்சத்தின் பெயர் 2. குலங்களின் சின்னங்கள் 3. வசித்த இடங்கள் 4. வடுச் சொற்கள் 5. வகித்த நிர்வாகப் பதவிகள் போன்ற காரணங்களினால் அழைக்கப்படும் சாதிகளை இணைத்து சாதிகள் அற்ற ஜனநாயப் பண்பு கொண்ட தேசத்தை (நேசன்) உருவாக்குவதற்கு எதிராக உள்ளனர்.

இந்தியாவில் இனக்குழுமங்கள் தேசிய இனங்களில் இணைகின்றன. இணைப்புக்கள் சாதியம் என்ற அகமுரண்பாட்டை கொண்டதாக இருக்கின்றது. மொழிப் பிரதேசங்களில் (இந்திய பிறமானநிலங்களில்) இருந்த சாதிகள் எனப்பட்டவைகள் அந்தந்த தேசிய இனங்களுள் சங்கமமாகின்றது. சமூகஒழுங்கமைவின் உருவாக்கத்தில் தூயதமிழ் இரத்தம், மரபணுச் சாதி என்பதற்கு அப்பால் நிகழ்பவையாகும். இவைகள் எவையும் சில சகாப்தங்களில் நடத்துவிடுபவைகள் அல்ல.

இது மாநில எல்லைகளை பிரிக்கின்ற போதும் சிதறுபவர்களும் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வருபவர்கள் கலப்பதும் வெவ்வேறு சமூகக் கூறுகள் இன்னொரு தேசத்தினுள் மொழிச் சிறுபான்மையாகவும் இருக்க முடியும். இங்கு வெவ்வேறு தேசிய இனங்களின் எச்சங்களின் இணைவு என்பது நவீன தேசிய இனங்களின் உருவாக்கத்தில் இயல்பான ஒன்றேயாகும்.

மலையாள, தெலுங்கு தேசத்தில் உள்ள தெலுங்குச் செட்டிச் சமூகம் தெலுங்கர்களேயன்றி தமிழர்கள் அல்ல. தெலுங்கு தேசத்தில் வாழ்பவர்கள் தெலுங்கு தேசத்தவர்களேயாகும். இவற்றிற்கு மாற்றாக சிந்திப்பது சமூக விஞ்ஞானப் பார்வையற்ற பிரபுகுல (உயர்வர்க்கச் சிந்தனை) த்தவர்களின் அரசியல் பார்வை என்பது அரைகுறைப் புரிதலாகும். சாதியத்தினை மறுவுயிர்ப்புச் செய்யும் நிலையில் அமைந்த செயற்பாடுகளும், சமூக முரண்பாடுகளை முதன்மை முரண்பாடுகளாக முன்னிறுத்தும் அரசியல் போக்கில் இருந்து வெளிவருகின்றது. மனித சமூக உறவில் இருக்கின்ற சமூக ஓட்டம், சமூக இயக்கப் போக்காகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக உறவில் புறநிலை அழுத்தம் கற்புலனா காதவை. மாறாக புறநிலை அழுத்தம் தீர்க்கமாக அகநிலை மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. நவீன காலத்தில் உறவுகள் வெவ்வேறு காரணிகளைக் கூடியே சமூக உறவை இல்லாதாக்கிவிடுகின்றது. தனிமனித சமூக உறவு என்பதால் அனைத்தையும் தொலைத்துவிட்ட சமூக உறவு (நூற்றாண்டுகள் தேவை - தனித்துவவாத சமூக உறவு மிக வேகமாக வளரும்) அடையாள அரசியலுக்குள் செயற்படும் ஒடுக்கப்படும் சமூகத்தில் உள்ள பிரபுகுலத்தவர்களின் - உயர் வர்க்கத்தவர்களின் செயற்பாடுகளில் உள்ள பிற்போக்குத் தனத்தை சுட்டிக்காட்டி விமர்சிக்கின்ற போதும், அவர்களின் செயற்பாடுகளை ஒடுக்கப்படும் சாதிகள் அனைத்திற்கும் எதிரான கருத்தாக வெளிப்படுத்திக் கொண்டு இருப்பவர்கள். தமக்கெதிரான கருத்துக்களை கருத்து ரீதியாக எதிர்கொள்ளமுடியாத நிலையில் தாம் சார்ந்த சமூகப்பிரிவிற்கு எதிரான ஒட்டுமொத்த தாக்குதலாக திசைதிருப்பும் குறுக்குத் தந்திரத்தினை பயன்படுத்திக் கொண்டு செயற்படுகின்றார்கள்.

இவர்களின் செயற்பாடுகளுக்கு அரசியல் விளக்கமே சாதியவாதம் அதற்கு அப்பால் சமூகத்திற்கு முற்போக்கு பாத்திரம் வகிக்க முடியாது. ஆனால் மக்களின் உரிமை என்பது ஆண்ட பரம்பரைச் (அரசபரம்பரை என்பது சமூகத்தில் சிறிய அளவினரே) சிந்தனை வடிவத்தில் இருந்து வருவதல்ல. அது ஜனநாயக உரிமையை மையமாகக் கொண்டது அதுவே உயர்ந்த ஜனநாயக பண்பாகவும் இருக்கின்றது. அந்த ஜனநாயக பண்பு என்பது வியாபகமாக மக்களின் மொழி, பண்பாடு, நிலம், பொருளாதார வாழ்வு என்பது வளர்ச்சியடையவேண்டும். இங்கு புதிய சனநாயக கடமை (முதலாளித்துவ உரிமை பெற்ற) என்பது மக்களின் சனநாயக வாழ்வும் வாழ்வியல் மாற்றத்தினை ஏற்படுத்திக் கொள்வதும் ஆகும். இது ஒவ்வொரு தேசிய இனமும் முழுமையான நவீன தேசங்களாக வளரும் நிகழ்வுடன் இணைந்துள்ளது. ஆனால் ஒவ்வொரு தேசிய இனமும் முழுமையான வளர்ச்சி பெற்ற நவீன தேசங்களாக வளர்ச்சி அடைவதற்கான சந்தர்ப்பம் என்பது உருவாக்கப்பட வேண்டும். இதன் ஊடாக சாதியவாதத்தை விதைத்து தமிழ் தேசத்தின் (நேசன்) ஜனநாயக விழுமியங்களை சிதைக்கும் நோக்கைக் கொண்டதாக இருப்பது என்பதும், ஒடுக்கும் வர்க்கம் ஒன்றிணையக் கூடாது என்ற இரண்டு தளத்திலும் தந்திரமாக செயற்படும். தூயதமிழ் சாதிகளின் கூட்டுறவின் ஊடான தமிழ் தேசியம் என்ற போர்வையில் செயற்படுகின்றார்கள். இவ்வாறான நிலை அகமுரண்பாடுகளை முன்னிறுத்தும் சிந்தனைக் கட்டமைப்புக்குள்ளேயே கால நேரத்தை செலவிட வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை ஏற்படுத்துகின்றது. ஒன்றுபட்ட வளர்ச்சிக்கு எதிராக வகுப்புவாத- மதவாத பிளவுகளை உண்டாக்குவதன் ஊடாக மக்கள் ஜனநாயக ரீதியாக இணைவதை தடுக்கின்றார்கள். இவர்களைப் பொறுத்தவரை சாதிகளாக பிரிந்துள்ள சமூகப் பிரிவுகளை ஜனநாயகப் பண்புகளை வளர்த்துக் கொண்டு இணைவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை மாறான ஒன்றிணைவைச் சிதைப்பதே தூயசாதிய -தமிழ்தேசியம்.

ஆறுமுகநாவலரின் வழிவந்த சிந்தனையான சைவ- தமிழ்- வேளாளம் என்பதும் முஸ்லீம் மக்களை தமிழ் தேசியத்துடன் இணைப்பதைத் தடுப்பதற்கு துணைபோனதும் ஒரு காரணமாகும். (முஸ்லீம்கள் தமது தனித்துவம் காப்பாற்றும் சிந்தனை பற்றி ஆழமாக விவாதிக்கப்பட வேண்டியவை) இதற்கு மாறாக தமிழகத்தில் முஸ்லீம்களை தமிழ் தேசத்துடன் இணைத்துக் கொண்டதற்கு தந்தை பெரியாரின்- மற்றும் திராவிட அரசியலில் பகுத்தறிவுவாதிகளின் அரசியல் செயற்பாடு அமைந்திருக்கின்றது எனலாம். நிலமானியச் சிந்தனைத் தகர்ப்பை பெரியார், பொதுவுடமைவாதிகள் செய்தார்கள்.

இன்றைக்கு தமிழகத்தில் சாதியத்தின் இணைவை அதுவும் உயர் மற்றும் இடை நிலையில் உள்ள ஒடுக்கப்படும் சாதிகள் (உதாரணத்திற்கு- கௌண்டர், தேவேந்திர வெள்ளாளர், முக்குலத்தவர், வன்னியர் இதில் ஒப்புக்கு பறையர்களையும் இணைக்கின்றார்கள்.) தமிழ் சாதிகள் என்ற அடிப்படையில் இணைந்து கொள்வதும் பின்னர் அதிலிருந்து தூய தமிழ் தேசியத்தை கட்டமைக்கின்ற சிந்தனை வடிவம் முன்னிறுத்தப் படுகின்றது. ஆனால் அனைவராலும் ஒடுக்கப்பட்ட சமூகமாகிய சக்கிலியர் என்போரை தெலுங்குச் சமூகமாக ஒதுக்குகின்றது. இந்தப் போக்கு தமிழகத்தில் தற்பொழுது பெரும் தாக்கத்தை கொண்டதாக இல்லாவிடினும் ஆங்காங்கே ஊசலாட்டம் கொள்ள வைக்கின்றது. நீண்ட நெடுங்காலமாக தமிழராக மாறிய தெலுங்கு வம்சாவழியினை சாதியை அடையாளப்படுத்தி அதன் ஊடாக தெலுங்கர், கன்னடர் எனப் பிரிக்கும் போக்கு என்பது நவீன தேசிய இனங்கள் தேசங்களின் வளர்ச்சிப் போக்கை மறுக்கின்ற ஜனநாயக விரோதப் பண்பாகும். மனித குல வரலாற்றில் இடப்பெயர்வுகள் மூலமாக மக்கள் குடியேறியும் கலந்தும் புதிய மக்கள் கூட்டமாக உருவாகுவது என்பது ஒன்றும் புதிதல்ல. இதில் தூய இரத்தவகை கொண்ட இன அடையாளம் என்பது ஜனநாயக விரோதப் பார்வையாகும்.

இவர்களின் தமிழ்தேசிய இனத்தை சாதிய தூய்மை வாதத்தின் ஊடாக (தமிழ் தேசிய இனம் என்ற அடையாளத்தினுள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேசமாக இணைவைக் கொள்ள முடியாது. இன்றைய காலத்தில் தமிழகத்தில் தந்தை பெரியார் - திராவிட எதிர்ப்பு என்பதன் பின்னால் உள்ள நுண்ணரசியலை கவனத்தில் கொள்ள வேண்டும். இங்கு திராவிடக் கட்சிகளின் தோல்விகண்ட போராட்ட முறை, அந்தக் கட்சிகளின் சுரண்டல், பெரும்முதலாளிகளாக ஆகிய நிலையில் - குடும்ப அரசியல்- ஊழல் அரசியலை எதிர்ப்பதில் ஒடுக்கப்பட்ட வர்க்கம் ஒன்றிணைவதை திசைதிருப்பி "வகுப்புவாதத்தை" விதைக்கும் அரசியலைக் கொண்டதே சாதிவாதிகளின் தேசியமாக இருக்கின்றது. இதுவே தான் தந்தை பெரியார்- திராவிட எதிர்ப்பரசியலாகும். முதலாளித்துவ ஜனநாயகத்தை முன்வைத்த போராட்டங்களே சீர்திருத்த இயக்கங்களால் போராட முடிந்தது. உற்பத்தி முறையை மாற்றியமைப்பதற்கான போராட்டம் நடத்தப்படவில்லை. முதலாளித்துவப் புரட்சி நடைபெற்றுவிடவில்லை.

சாதியை முதன்மைப்படுத்திய அடையாள அரசியலை முன்னுக்கு கொண்டு வரும் வெவ்வேறு முறைகள் ஊடாக முன்னிறுத்தப்படுகின்றது. இவர்கள் சாதியந்தன் புத்தி குலம் அந்தன் ஆசாரம் என்று சிந்திக்கும் போக்கினை நுணுக்கமாக அவதானித்தால் கண்டுபிடிக்க முடியும்.

இவ்வாறே இலங்கையில் தலித்தியத்தின் பெயரில் அரசியலை முன்னெடுக்கும் அடையாள அரசியல் சக்திகள் செயற்படுகின்றார்கள். தமிழ்தேசத்தில் உள்ள மலையகமக்கள், பழங்குடிகளின் சந்ததிகளை சாதிகளாக உள்வாங்கப் பட்டுள்ளார்கள். இவர்களின் ஜனநாயக மறுப்புக்கு எதிராக போராட வேண்டியது அனைவரினதும் கடமையாக உள்ளது. தமிழ் தேசத்தில் வாழும் மலையகத் தமிழர்கள், பழங்குச் சந்ததியினர் தமிழ் தேசத்துடன் இணைந்து போராட்டத்தில் தம்மை பலிகொடுத் துள்ளார்கள். மக்களின் பங்களிப்பு என்பது தம்மை தமிழர்களாக உணர்ந்த காரணத்தினால் இரண்டறக் கலந்தார்கள். இதே வேளை அவர்களின் பின்புலத்தை தோண்டியெடுத்து அடையாளப்படுத்தி அன்னியப்படுத்தும் வேலைகள் செய்யப்படுகின்றது. இது அதிதீவிர ஜனநாயகவாதம், அடையாள அரசியலை முன்னிறுத்தும் போக்கில் இருந்து எழுவதாகும்.

சிறுபான்மைத் தேசியஇனம், பழங்குடிகள் என்பன பரிவர்த்தனை, சமூக உறவு, உலகக் கண்ணோட்டம் ஒன்று கலத்தல், மொழியை இழப்பது போன்ற காரணங்களால் நீண்ட காலங்களில் தனித்துவத்தை இழந்து விடுகின்றன. இவ்வாறு ஒன்று கலப்பது உலகம் முழுவதும் சகஜமானதாகும். தனித்த சமூகமாக இயங்குதவற்கான சமூகப் பொருளாதார கட்டமைப்பு உடைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தனித்துவமாக இயங்க முடிவதில்லை. பெரும்பான்மையான மக்கள் பிரதான தொழில் முறைகளுக்குள் தங்களை ஐக்கியமாக்கியுள்ளார்கள். பழங்குடி வம்வாசாழியினர் வெகுசிறிய அளவினரே பழமையான தொழில் முறைகளை பின்பற்றுகின்றார்கள். இதற்கு புதிய சட்டங்கள் என்பன அதற்கு தடையாக இருக்கின்றது. தேன் எடுப்பது, வேட்டையாடுவது என்பது தடுக்கப்படுகின்றது. தேன் எடுப்பது எவ்விதத்திலும் சுற்றாடலுக்கோ அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு அல்ல. ஆனால் நடைமுறையில் அதிகார வர்க்கத்தின் கெடுபிடி என்பது அவர்களை மரவெட்டும் திருடர்களாக ஆக்கி விடுகின்றார்கள். இவர்களின் படிப்பறிவு, பொருளாதார நிலையைக் கொண்டு காணிகளை அபகரிப்பதும் நடைபெறுகின்றது. இவ்வகையான சுரண்டலுக்கு எதிராக போராட வேண்டியுள்ளது. இவை நிலைமாறும் காலத்தில் ஏற்படுகின்ற சமூக முரண்பாடுகள், ஏற்றத் தாழ்வுகளை முதலாளித்துவ புரட்சி நடந்து முடிந்திராத நிலையில் அதிகார வர்க்கத்திடம், சமூகத்திடம் அரைநிலமானிய சிந்தனையை கொண்டதாக இருப்பதால் ஜனநாயக உணர்வு என்பது தாழ்ந்த நிலையில் இருக்கும். இதனை கையாள்வதற்கு அடையாள அரசியல் தீர்வாக முடியாது. இந்த விடயம் பற்றிய சமூகத்திடம் பேசுபொருளாக மாற்றப்பட வேண்டும். தற்காலத்தில் தலித்துக்களும் தேசிய இனம் என்ற பிரித்தாளும் ஆளும் வர்க்க அரசியல் நிலைப்பாடுகளில் கவனம் கொள்ள வேண்டும்.

மலையக, பழங்குடிச் சந்ததியினரின் ஜனநாயகக் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். இதேவேளை பெருந்தேசியத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளாகியிருக்கின்ற வகையில் பொது எதிரிக்கு எதிரான அணிவகுப்பில் அகமுரண்பாடுகளுக்கு எதிராகப் போராடுவதன் ஊடாகவே தமிழ் தேசிய இனத்தினரிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும்.

தமிழ் தேசத்தின் போராட்டம் மக்களை கையாண்ட முறையில் ஏற்பட்ட தவறுகளை முன்னிறுத்தி அந்தச் சமூகத்தை பிரிப்பதன் ஊடாக தமிழ் தேசத்தில் பிளவை ஏற்படுத்தும் ஒடுக்குமுறையாளரின் திட்டத்திற்கு பலியாகிவிட முடியாது. தமிழ்மொழி பேசுகின்ற மக்களை ஜனநாயகத்தின் ஊடாக ஒன்று கலத்தல் (assimilation) நடைபெற வேண்டும். தமிழ் பேசுபவர்களை ஒன்றுகலக்க வைப்பது என்பது சிங்கள பௌத்த பேரினவாத இனமதகுல பேதங்களை மறப்போம், என ஓத்தோடிகள், ஜீவகாருண்யம் பேசும் மேட்டுக்குடிகளின் கருத்தும் ஒன்றல்ல.

ஒரு சமூகத்தில் உள்ள அகமுரண்பாடுகளை பிரதான முரண்பாடுகளாக முன்னிறுத்துகின்றார்கள். இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசவாதம், தலித்தியம் போன்றவற்றை முன்னிறுத்தி சமூகத்தின் ஜனநாயக வளர்ச்சிப் போக்கை எதிர்த்து நிற்கின்றார்கள். இந்த நிலையானது தமிழகத்தில் இருந்து இலங்கையில் மெதுவாக திட்டமிட்டு புகுத்தப்படுகின்றது. தலித்தியம் என்ற அடையாள அரசியல் தமிழகத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தால் புகுத்தப்பட்டது. இது தோல்வியுற்ற ஒரு கோட்பாடு. சமூகத்தை சாதிகளாக பிளவுபடுத்தி, அந்தந்த சமூகத்தில் உள்ள உயர் வர்க்கத்தவர்களின் தேவைக்காக ஒடுக்கப்படுபவர்களை பயன்படுத்துவதில் மாத்திரம் வெற்றி கண்டுள்ளது. தேர்தலில் இடம் கேட்டு அலையும் அரசியல்வாதிகளையும் உருவாக்கியுள்ளது.

சாதிகளின் பெயர்களிலும் பழங்கால சாதியப் பெருமைகளையும் வெவ்வேறு வடிவத்தில் புகுத்தப்படுகின்றது. இது தலித்தியத்தின் ஊடாகவும் வளர்க்கப்படுகின்றது. இது பிரதிநிதித்துவப்படுத்தக் (பொதுமைப்படுத்தக்) கூடிய வகையில் இல்லாவிடினும் இது ஒரு நச்சுவிதை என்பதையிட்டு அவதானமாக இருக்க வேண்டியுள்ளது. இந்தச் சக்திகள் தேசத்தின் சிதைவை விரும்புகின்றது என்பது வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கை புரிந்து கொள்ளாத ஏதிர்ப்புரட்சிகர சிந்தனையேயாகும்.

மொழி, நிலம், பண்பாடு, பொருளாதார வாழ்விற்கு அப்பால் உள்ளவற்றை தேசியத்திற்குள் கொண்டு வரமுடியாது. இங்கு தான் தலித்தியத்தினை தேசியத்துடன் ஒப்பிடுவது அடிக்கட்டுமானத்தினை மறுப்பதன் விளைவாகும். முதலாளித்துவ ஜனநாயகத்தை முன்னிறுத்தி போராடுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. ஈழத்தில் முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கையை முன்வைத்து தீண்டாமை ஒழிப்பு போராட்டம் நடைபெற்றது. இதன் வெற்றி என்பது ஈழப்போராட்டத்தினை நடத்தும் நிலைக்கு உயர்ந்தது. ஆனால் தலித்தியம் என்பது இந்தச் சமூகக் கட்டமைப்பில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தச் சிந்தனையும், சலுகைகளையும் முன்னிறுத்தும் போராட்ட முறையாகும். தலித்தியல் ஒடுக்கப்படும் மக்களில் உள்ள உயர் வர்க்கத்தவர்களின் நலனை முன்னிறுத்துக் கொள்ளும் கோட் பாடாகும். இங்கு அடிக்கட்டுமானம் தீர்க்கமானதாகும் ஏனெனில் அதன் மேல் உருவாகும் கட்டமைப்பான சாதி என்ற கருத்துமுதல்வாதத்திற்கு உட்பட்டதாகும். தலித்தியம் என்ற இரண்டைத் தேசியம் என்பது மேற்கட்டுமானத்தில் அமைந்தது என்பதை மறுத்து அடிக்கட்டுமானமாக பார்க்கும் பார்வை என்பது கருத்துமுதல்வாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.3 தேசியவாதக் கோசங்கள்

தேசியம் என்பது பல்வேறு சக்திகளினால் வெவ்வேறு காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இங்கு தேசியவாதம் என்ற சொல்லாடல் பல்வேறு குழப்பத்திற்கும் இந்த சமூகத்தினை ஆழ்த்தியிருக்கின்றது. தேசியம் என்பதை சமூக விஞ்ஞானரீதியாக ஆய்விற்கு உட்படுத்தப்படவேண்டும். தேசியவாதம் என்பது பல்வேறு வடிவங்களை கொண்டிருக்கின்றதை வரலாற்று ரீதியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

யூத இனப்பெருமையை முன்னிறுத்தும் பிறயினத்தார்- தாம் மற்றவர்கள்- போன்றவையும் கறுப்பு- வெள்ளை என்ற பாகுபாட்டுச் சிந்தனை என்பது விவிலியத்தின் ஊடாக தொடரப்பட்டு வருகின்றது. வர்ணாசிரமச் சிந்தனை கொண்டு சமூகத்தினை மற்றவர்களை கீழாகப் பார்க்கும் பார்வை என்பதை முன்னர் அவதானித் திருந்தோம். இவ்வாறான பெருமை கொள்ளும் நிலை வரலாற்றில் இருந்து வந்துள்ளது.

இலங்கையைப் பொறுத்த வரையில் தேசிய உரிமை முதலாளித்துவ ஜனநாயகத்துடன் தொடர்புடையாகும். இங்கு தேசிய இனப்பெருமையை சமூக விஞ்ஞான ரீதியாக ஆய்விற்கு உட்படுத்தப் படவேண்டும். இங்கு நாம் தேசியவாதம் என்று கருதப்படும் வரலாற்று நிகழ்வுகளை கிட்லர், முசோலினி தொடக்கம் வெவ்வேறு காலகட்டப்பகுதிகளில் வெளிப்பட்ட நாசீசமாக (இனத்தூய்மை) இருந்துள்ளது. இங்கு தேசியம் என்ற சொல்லாடலை வெவ்வேறு நிலைகளில் நாம் கடந்து வந்த வரலாற்றுகளில் இருந்து அவதானிக்கலாம்.

1991களின் பின்னரான அமெரிக்க அரசியல் என்பது ஒற்றைத் துருவத்தின் வெளிப்பாடான அரசியல் என்பது தீவிரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இங்கு தனது ஆக்கிரமிப்பை நிலைநிறுத்தும் தனது பெருமையை முன்னிறுத்துகின்றது.

அமெரிக்க தேசியவாதத்தினைப் பார்க்கின்றபோது godbless america, We are Americans vd;wNfhrk; we shall overcome என்றபாடல் போன்றவையும், கொடியை அசைத்துக் காட்டுவதும், நாட்டின் கொடியின் வடிவத்தில் உடுப்புக்கள் அணிவது போன்றவை முன்னிறுத்தப்படுகின்றன. சர்வதேச பயங்கரவாதிகளுக்கு எதிராக சிலுவைப்போர் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

11-9 பின்னரான காலத்தில் தமது பெருமை கொண்ட பாடல் இசைக்கப்படல், நடிகர், பிரமுகர்களின் நிகழ்ச்சிகள் பணம் சேகரிப்பு (பல்மதவழிபாடுகள்) பலர் சுயமாக படைகளில் இணைந்து சேவை செய்வதற்கு முன்வந்துள்ளனர். இது போன்ற பெருமைவாதச் சிந்தனை முன்னெடுக்கப்பட்டது.

11-9 பின்னரான காலத்தில் அமெரிக்காவின் ஈராக்கின் மீதான தாக்குதல் அமெரிக்க அதிபர் தனது பதவியை பாதுகாக்கும் நோக்குடன் நடத்தப்பட்டதாக கருதப்படுகின்றது. இந்தக் தாக்குதல் இடம் பெற் நேரமும் கிளின்ரனுக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டும் (impeachment) மணித்தியால வித்தியாசத்தில் இடம் பெற்றது. தாக்குதலை அடுத்து கொங்கிரசில் எடுக்க விருந்த வாக்கெடுப்பு பின்போடப்பட்டது. பலவாரங்கள் பின்போடப்படும் என எதிர்பார்க் கப்பட்ட வாக்கெடுப்பு மறுநாளே வாக்கெடுக்கப்பட்டது. அதேநாளில் கில்லரி கிளின்ரன் நாடு இக்கட்டான சூழலில் இருப்பதாகவும், படையினர் யுத்தகளத்தில் இருப்பதாகவும் அனைத்து முரண்பாடுகளையும் மறந்து விட்டு நாட்டின் நலனில் அக்கறை கொண்டு ஒன்று சேரும் படி இரங்கலாக வேண்டுகோள் விடுத்தார். இவ்வாறான சந்தர்ப்பவாத தேசியவாதம் என்பது தனிநபர்களின் நலனில் இருந்து வெளிப்படுவதும் உண்டு.

இங்கும் தேசியவாதம் என்பதை (மேல்தட்டு அகம்பாவம் உட்பட) பெருமையை முன்னிறுத்துபம் போக்கை அவதானிக்க வேண்டும். இதற்கு எதிராக விளைந்த இஸ்லாமிய தேசிய வாதமானது ஹிகாத் எனப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தப் பிரகடனம் கூட ஒரு வரலாற்றின் நிகழ்வுப் போக்கில் அணுகிட வேண்டும். சமயத்துக்கும் அரசியலுக்கும் தொடர்பு என்ன என்பதைப் பார்க்கின்ற போதே இந்த சின்னத்தின் உள்விளக்கத்தை அறிந்து கொள்ள முடியும். இவர்களின் மதத்தின் கட்டுப்பாட்டில் அமைந்த சமூக உறவை நிலைப்படுத்திக் கொள்ளவும், மதஅடையாளத்தின் ஊடாக சக மனிதர்களை இணைத்துக் கொள்ளும் வழிமுறையாகக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய மத ஒற்றுமையைப் பயன்படுத்தி சதாம் ஆதரவாக திரட்டிக் கொண்டாலும் மேற்கு நாடுகள் வரையறுத்துக் கொள்கின்ற இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற வரையறைக்குள் சதாமை இஸ்லாமிய அடிப்படைவாதியாக கொள்ள முடியாது. பெரும் எதிரியை எதிர்ப்பதற்கான அணிதிரட்டலும், ஒடுக்குதலுக்கும் உள்ளாகின்ற நிலையிலும், புதிய உற்பத்தி முறைக்கு உள்ளாகின்ற போது ஏற்படும் மாற்றங்கள் தம்மை பாதுகாக்கும் பொது அடையாளத்தை முன்னிறுத்தப்படுகின்றது.

இந்த சமூக அழுத்தம் என்பது சோவியத் உடைவின் பின்னர் புதிய எதிரியாக உருவாக்கப்பட்ட இஸ்லாமிய அச்சுறுத்தல் என்ற கருத்துருவாக்கத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. இஸ்லாமிய மத ஒற்றுமையும், அரபு தேசிய -இன ஒற்றுமையையும் பொது அடையாளச் சின்னமாக முன்னிறுத்தி மத்திய கிழக்கு மக்களை தனக்கு ஆதரவாக திரள முழுமையாக முடியவில்லை. (இலங்கையிலும் சமூகத் தாக்கம் ஏற்பட்டது. ஏற்கனவே மறுமை என்ற சிந்தனைக் கட்டமைப்புக்குள் வாழ்ந்த சமூகம் மேலும் பிற்போக்கு கருத்தியலுக்குள் மூழ்கியது)

சாதாரண மக்கள் ஈராக்கிற்கு கொடுத்த ஆதரவை "இஸ்லாமிய அடிப்படைவாதம்" என்று முத்திரை குத்தி தப்பித்துக் கொள்ளவும் முயற்சி செய்தது. இஸ்லாமிய அடிப்படைவாதம் என்பது நேரிடையாகவே மேற்கத்தைய, அமெரிக்க எதிர்ப்பு என கூறி எதிர்ப்புக் குரல்கள் அனைத்தையும் ஒரே அளவு கோள் கொண்டு கணிப்பிட்டு ஏகாதிபத்தியங்கள் திசைதிருப்பிக் கொள்ள முயற்சித்து. ஆனாலும் இங்கு அமெரிக்க ஆயுத மேலாதிக்கமே வெற்றி கொண்டது.

மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மீலேச்சத் தனத்திற்கு எதிராக எழுந்த சக்திகள் என்று வெளிப்படையாக தெரிகின்ற போதும் அவைகள் அமெரிக்காவின் வளர்ப்பு என்பது தெரிய வருகின்றது. அது பின்லாடன் தொடக்கம், ஐ.எ.எஸ் என்றும் இஸ்ரேலில் உருவாக்கப்பட்ட கமாஸ் போன்ற அமைப்புக்களாகும். இந்த அமைப்புக்கள் திட்டமிட்டு சமூகத்தின் வளர்ச்சிப் போக்கிற்கு மதத்தில் இருந்து பெற்ற சிந்தனை வடிவத்தை தீவிரத் தன்மை கொண்டதாக சமூகமயப்படுத்துவதில் வெற்றி கொண்டுள்ளது. புதிய உற்பத்தி முறைக்கு மாறுகின்ற போது ஏற்படும் சமூகச் சிதைவிற்கான மாற்றாக தீவிரமதவாதம் என்பது தீவிர நிலப்பிரபுத்துவக் கூறுகளை முன்னிறுத்துகின்றது.

இங்கு இரண்டு விதமான தேசியத்திற்கு விடுக்கும் வேண்டுகோள்களை உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டும். அமெரிக்காவும், ஈராக்கும் தத்தமது தேசியத்தவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். இரண்டும் தேசிய கோசங்களே இரண்டு விதமான நாடுகள் தத்தமது தேசங்களுக்கு வேண்டு கோள் விடுக்கப்படுவதை ஒவ்வொரு நாட்டவரும் சரியென வாதிடுகின்ற காரணத்தால் இந்த மாதிரியான கோசங்களை மக்கள் முன் வைக்கின்றனர்.

பொதுச் சின்னத்தை அடையாளத்தை மையப்படுத்தி தேசிய இனங்களை அணிவகுப்பது அனைத்து தேசியப் போராட்டங்களுக்கும் பொதுவானதாகும். இங்கு இரண்டு வகை தேசிய கோசங்களுக்கும் இடையே நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றன. அதாவது அமெரிக்காவும் ஈராக்கும் தேசிய கோசத்தை முன் நிறுத்தி மக்களை அணிதிரட்ட முற்பட்டது. இரண்டும் சுரண்டும் வர்க்கத்தை சேர்ந்தவர்கள் தான் தாம் ஒரு தேசிய இனத்தவர் தாம் ஒரே இரத்தம் என நடந்தாலும் எமது தேசம் என்ற எண்ணப்பாடு மக்களிடத்தில் உறைந்திருப்பதினால் அந்த உணர்வைப் பாவித்து ஒன்று சேர்க்க முயற்சிக்கப்பட்டது. இங்கு தேசியவாதம் ஏகாதிபத்தியம் சந்தையை விஸ்தரிப்பதற்காக முன்னிறுத்தியது. மறுபுறத்தே ஈராக்கினால் தம்மை பாதுகாத்துக் கொள்ளும் கேடயமாகவும், மக்களை அணிதிரட்டும் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒன்று ஒடுக்குமுறைக்கு எதிரானதாகும், மற்றையது உலகை ஆக்கிரமிக்கும் நோக்கத்தைக் கொண்டது.

அறைகூவல் விடுவது சுரண்டும் பொருளாதாரச் சிந்தனை யாகவும் சுரண்டலை எதிர்ப்பதாகவும் இரண்டு வகையாக இருக்கின்றது. ஏகாதிபத்தியக் கட்டத்தில் நிதிமூலதனத்தின் பரவலை முன்னிறுத்துவதாகும். இது வளங்களை தனியார் மயமாக்கல், அடிப்படை ஆதாரங்களை பணத்திற்கான பண்ட மாக்குவது, அரச திணைக்களங்களை தனியார்மயமாக்கல், கட்டற்ற சந்தையைக் கோருவது என்ற தீவிர சுரண்டலை எதிர் கொள்ளவும் முடியும் அப்போ சுதேசியவாதமாகவும் இருக்கின்றது. இந்த வேளையில் தேசியம் என்பதே முதலாளித்துவத்தின் கோரிக் கையாக கொள்ள முடியாது. அனைத்தும் இனவாதம், தேசிய வெறி எவ்வாறு இலகுவாக கடந்துவிட முடியும், அனைத்தையும் பிற்போக்காக பொதுமைப்படுத்த முடியும்.

உள்ளூர் தரகுவர்க்கத்தையும், நிதி மூலதனத்தை எதிர்ப்பதற்கான தந்திரோபாயத்தில் ஏகாதிபத்திய சுரண்டலைக் காட்டி தேசங்களின் வளர்ச்சியை எதிர்க்கும் போக்கு என்பது புதிய ஜனநாயகப் புரட்சியை எதிர்ப்பதில் வந்தடைகின்றது. ஏனெனில் ஏகாதிபத்தியத்தினை எதிர்ப்பதும், தரகுமுதலாளியத்தினை எதிர்ப்பதும் ஒன்றிணைந்த போராட்டத்தின் ஊடாக சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் அரசையும், தேசங்களையும், தேசிய இனங்களுக்கு எதிரானதாக தரகுவர்க்கமும், பூகோள ரீதியாக ஏகாதிபத்தியம் தனக்கு கவசமாக கருத்தமைவுகளை வளர்த்துக் கொண்டுதான் இருக்கின்றது. இரண்டு வகை வேலைப்பிரிவினை ஊடாக எதிர் கருத்தமைவு கட்டமைக்கின்றது.

இங்கு ஒடுக்கப்படும் தேசிய இனங்கள், தேசங்களின் போராட்டத்தினையும் முதலாளித்துவ - மதவாத - நிதிமூலதன தேசியக் கோசங்களை ஒற்றைத் தட்டில் வைத்து பார்க்கும் பார்வை என்பது ஆபத்தானதாகும்.

இங்கு ஒடுக்கப்படும் வர்க்கங்களின், தேசங்களின், தேசியயினங்களின் சுதேசிய வளர்ச்சியை நோக்கியதை சிதைக்கும் சிந்தனை வடிவமே ஒற்றைத் தட்டில் வைத்துப் பார்க்கும் பார்வையாகும்.

இங்கு ஒடுக்கப்படும் வர்க்கங்களின், தேசிய இனங்களின், தேசங்களின் பிற்போக்குப் பார்வைக்கு மாற்றாக புரட்சிகர சிந்தனை வளர்ப்பதும், போலியுணர்வை எதிர்ப்பது என்பது வேறாகும். நாம் அரசியல்மயமாக்கல் ஊடாகவே புரட்சிகரமாக சிந்திக்கின்ற மக்கள் சமூகத்தினை உருவாக்கிக் கொள்ள முடியும். மாறாக தீடீர்பாச்சல் ஊடாகவும், எல்லாவற்றையும் ஒன்றாக திரிப்பதன் ஊடாக அல்ல. அன்னிய ஆக்கிரமிப்பு, தேசிய இயக்கங்களின் துயிலெழல் என்ற அடிப்படையில் இருந்து மார்க்சியம் அணுகுகின்றது. இதற்கு எதிரான போக்கை ஜேவிவி உட்பட பல சக்திகளின் வரலாறு எங்கும் காணமுடிகின்றது.

நமது பொதுத்தளத்தில் உள்ள பொதுப்புத்தி என்பது எல்லாவற்றையும் இனவாதம், தேசிய வெறி என்று பார்ப்பது போலவே புரட்சிபேசுபவர்கள் மத்தியிலும் உள்ளது. இவர்களை தேசிய இனங்களின் சுயநிர்ணயம் பற்றிக் கதைக்கின்ற போது இனவாதம் என்று முத்திரை குத்துபவர்கள் ஆகும். இங்கு தேசியம் என்பதை மார்க்சியம் புனிதக் கட்டமைப்பாக பார்ப்பதில்லை. மனிதர்களின் எந்த உணர்வும் புதிய உற்பத்தி முறைக்கு உட்படுத்தும் போதுதான் சாத்தியமானது. அப்போ விரைவாக அல்லது மெதுவாகவோ தான் மாற்றத்திற்கு உள்ளாகும். சமூகத் தேவையும், அவசியமும் இருக்கின்ற போது தொடர்ச்சியாக கோரிக்கை இருந்து கொண்டேயிருக்கும்.

ஆக மொத்தத்தில் தேசியம் என்ற கோசத்தை வைத்து பிழைக்க முடியும் என்பது உண்மையே. குறிப்பான தேர்தல் அரசியல்வாதிகள் பதவிக்காக பயன்படுத்திக் கொள்வார்கள். இதில் குரோதத்தை வளர்ப்பது என்பது உண்மை. அதேவேளை அதற்கு உடந்தையாக இருப்பது அந்த சமூகக் கட்டமைப்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகின்றது. சிந்தனை வடிவம், சமூக உறவின் ஓட்டத்தை விளங்கிக் கொள்வது அவசியமாகின்றது. சிங்கள பௌத்த பெருந்தேசியக்கட்டமைப்பு சமூகத்திலும் ஆட்சியதிகாரத்திலும் நிறுவனமயப்பட்டுள்ளது. இதைத் தவிர்த்து பிற்போக்குவாதிகள் தேர்தலுக்கு பயன்படுத்துகின்றார்கள் என்ற கூற்றை வைத்து தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராட வேண்டியதில்லை என்பது தவறான பார்வையாகும். தேசியம் என்பது பல சிக்கலானதும் பலரால் துஸ்பிரயோகப்படுத்தப்பட்ட சொல்லாகவும், புனிதமாக்கப் பட்ட சொல்லாகவும் உள்ளது. எனவே தேசியம் என்பதற்கு புனித விம்பம் கொடுக்கப்பட வேண்டிய தேவையில்லை.

தேசியம் என்பதே பிற்போக்குத் தனமானது என்ற கருத்துருவாக்கம் திடமாக செயற்படுகின்றது. வலது தேசியவாதமான நாசீச, சியோனிச, சோவனிசத்தையும், ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசியக்கட்டம், நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியுடன் தொடர்பு கொண்டதாகவும் தென்கிழக்காசிய நாடுகளில் இருக்கின்றது. சமூகத் தேவையை திரித்து தேசியம் என்பது முதலாளித்துவக் கோரிக்கை திரிக்கப்படுகின்றது. ஆனால் தேசியக்கட்டத்தை முன்னே நகர்த்துவதற்கு பூர்சுவா தேசியவாதத்திற்கு மாற்றாக காரியமாற்ற வேண்டியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.4 தேசியச் சின்னம் - குறிப்பான்

ஒவ்வொரு குலங்களும் தம்மகத்தே ஒவ்வொரு சின்னங்களையும், அடையாளங்களையும் கொண்டுள்ளன. அந்தச் குலச்சின்னங்களின் பெயர்கள் என்பது அதன் புவியியல் இருப்பில் இருந்து வேறுபடுகின்றன. குலங்களை அப்பெயர் கொண்டு அழைப்பது இன்று வரைக்கும் வரலாற்றில் காணப்படுகின்றன. அன்றைய காலத்தில் தமிழ் மக்கள் மரங்கள், (நாவல் மரம்) புலி, கயல், மலைகள், கல், மீன், கலப்பை (Totem) போன்றவற்றை தமது குலச்சின்னமாக கொண்டுள்ளனர். அத்துடன் ஒவ்வொரு குழுக்களும் மணமுறைகளை வரையறுத்துக் கொள்கின்றன. குலங்களில் அக- புற மணமுறையைக் கொண்டுள்ளன. ஆனால் இந்த மணமுறைகள் காலத்துக்கு காலம் மாறுபட்டு வந்துள்ளது. குலச் சின்னங்கள் அரச, தேசிய இனங்களின் கொடிகள், குறிப்பான் என்பவற்றிக்கு முன்னோடியாகின்றது.

தேசியக் கோரிக்கை எழுகின்ற போது பழைய அடையாளங்களை முன்னிறுத்தும் போக்கினை தமிழ் மக்களின் வரலாற்றில் கண்டிருக்க முடியும். இங்கு சின்னங்களின் புத்துயிர்ப்பும், தேசிய சின்னங்களை ஒட்டிய பெருமையை முன்னிறுத்திய போக்கினை கண்டுள்ளோம். இங்கு "சிங்களவனின் தோலை உரித்து செருப்புப் போடுவது", "ஆண்டபரம்பரை மீண்டும் ஆள நினைப்பது தவறா" என்ற கோசங்கள் என்பன ஈழப் போராட்டத்தின் ஆரம்பத்தில் மேடையெங்கும் இடம்பெற்றது. (இன்று தமிழகத்தில் அரை நிலமானிய சிந்தனையில் அமைந்த நாம் தமிழர் கட்சியினர் செய்கின்றதைப் போல அன்று தமிழ் தேசத்தின் போராட்ட ஆரம்பகாலங்களில் அமைந்திருந்தது.) இவை அரச கட்டமைப்பிற்கு இல்லாத தேசிய இனங்களின் ஆயுதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கோசங்கள் இருக்கின்றது. பூர்சுவா தமிழ் தேசியத்தின் தேசியப் பெருமிதம், அதன் வெளிப்பாடுகளும் பழைய சின்னங் களை முன்னிறுத்தி தமது அடையாளத்தை மீட்கும் முயற்சியும் இடம் பெற்றது. இந்த தேசிய அடையாள சின்னத்தின் மீட்சி என்பது தேசிய உருவாக்கத்தில் இடம் பெறுவது சகஜமானது. பழைய மாயைக் கதைகள், குலச் சின்னங்களின் அடையாள எச்சம், குல-சமூகத்திற்காய் போராடிய வீரர்களை முன்னிறுத்துவதும் இடம் பெற்று வந்துள்ளது. இந்த எச்சங்களினால் உருவாக்கப்படும் தனிமனித வழிபாடும், விசுவாசம், பக்தி என்பன சமூகத்தின் விம்பங்களாக முன்னிறுத்தப்படுகின்றது.

இந்த அடையாளக் கட்டமைப்புக்கள் அனைத்தும் உண்மையாக இருக்க வேண்டியதில்லை. சமூகத்தில் பண்புருவங்கள், சம்பிரதாயம் வைதீக தொன்மையாக சமூகமயப்படுத்தப்படுகின்றது.

கட்டுக் கதைகளை, வரலாற்றுக் கதைகளை வியாக்கியானம் செய்வதிலும், படித்துக் கொள்வதில் உள்ள பிரச்சினைகளை இங்கு அவதானிப்போம். சமூகத்தில் நடந்த சம்பவத்தை அப்படியே ஒப்பித்தல், நடந்ததை இன்றும் மெருகூட்டிக் வர்ணிப்புடன் கூறல், கதை மருவித் திரிதல், புனைவுகள் கொள்ளல், கதையினை குறிப்பிட்ட கருத்து நிலைக்கு ஆதரவாக இருந்து வெளிப்படுத்துதல், கதை சொல்பவர் தன்மை முதன்மைப்படுத்தி அதில் ஒரு பாத்திரமாக காட்டிக் கூறுமிடத்தில் அவரின் தன்னார்வம் அதிகம் கலக்கப்படுகின்றது. இதனால் கதையில் மிகைப்படுத்தல் காணப்படலாம். அக்கதையைச் சொல்பவரின் சமூக அந்தஸ்து என்ன என்பதும் நிபந்தனையாகின்றது. அவரின் பதவி, பொருளாதார நிலை, ஆணா அல்லது பெண்ணா கதையைக் கூறுவது என்பது கூட கதையின் உள்ளடக்கம் தங்கியிருக்கின்றது. வரலாறு தொடர்பான பெருமையைக் கொண்டதுடன், பெருமைகள் மக்களிடையே ஆழமாக புரையோடியுள்ளது. இந்த நிலையானது கீழ்வரும் பருமன்களைக் கொண்டது.

1. பரம்பரை பரம்பரையாக வாய்மொழிமூலமாக பாரம்பரிய மாக தொடர்கின்றது. இந்த நிலையானது நாம் விரும்பியோ விரும்பவில்லையோ அவை எம்மீது திணிக்கப்பட்டு வருபவை ஆனால் அவை ஆடல், பாடல், என்பவை மரபுவழியாக பின்பற்றப்பட்டுவருகின்றது.

2. எல்லா நம்பிக்கைகளும் உண்மையானவை என பின்பற்றப்பட்டு வருகின்றது.

3. இவைகள் எம்சமுதாயத்தில் காணப்படுகின்ற புராண, இதிகாசங்கள் ஆகும். இவைகள் எம் முன்னோர்கள் மிகப்பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதாநாயகர்கள் என வரையறுக்கப்பட்டிருக்கும். மக்கள் தாம் கண்ட அனுவங்கள், சோகங்கள், வீரங்கள் எல்லாம் குல ரகசியங்களாக, மற்றவர்களை விட மேன்மை கொண்டவர்கள் என்ற மனோபாவத்தை உருவாக்குகின்றது.

இனி ஆன்மா, கடவுள், மதம் பற்றிய கருத்தானது மனிதரின் அனுபவத்திலிருந்து பிறந்தவைகளே. அறிவு வளர்ச்சி அடைந்திராத காலத்தில் தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட அல்லது உருவகம் கொடுக்கப் பட்டவைகளுக்கு அவர்களே அடிமையானார்கள். தேசிய அடையாளம் என்பது தொன்று தொட்டு பரப்பப்பட்டு வருவதாகும்.

இங்கு சிந்தனையின் தோற்றுவாய் தத்துவத்தின் வளர்ச்சிக் கட்டமாக சமுதாயத்தில் இடம் பெறுகின்றது. இது பொருளுக்கும், கருத்துக்கும் அதாவது ஆன்மா இடையே உள்ள மாறுபட்ட கருத்துக்களாகும். மனிதர்கள் பெறப்படும் உருவகம் எல்லாம் அவர்களுடைய அனுபவ வாயிலாக பெறப்பட்டதே. அந்த அனுபவங்கள் சித்தாந்தங்கள் சமய நெறிகள் இவைகள் எல்லாம் அந்தந்த காலத்தைப் பொறுத்தே அவைகள் நியாயம் பெறுகின்றன. விஞ்ஞான அறிவு வளர்ந்த நிலையில் ஐதீகங்கள், கற்பனாவாதத்திற்கு மாற்றாக விஞ்ஞான பூர்வமான சிந்தனை மாற்றாகின்றது. ஐதீகங்கள் வரலாறுகளை விஞ்ஞானப் பார்வைக்கு உட்படுத்துகின்ற போது மனித குலத்தின் போக்கை விளங்கிட முடியும்.

நாசீசத்திற்கு எதிரான போரில் 1672 ரஸ்ய சாம்ராச்சியத்தை கட்டமைத்த பீற்றர் (Peter The Great) தேசியவீரனாக எடுத்தாளப்பட்டது. சில வருடங்களுக்கு முன்னர் ஜோர்ஜிய நாட்டவர் தோழர் ஸ்ராலினை தேசிய (Icon) வீரராக முன்னிறுத்தினர். முள்ளிவாய்க்காலின் பின்னர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தேடும் செய்தி வந்துள்ளது அதுவும் சகோதர தேசிய சக்திகளால் என்பது ஆச்சரியப்படத்தக்கதல்ல. ஆனால் அவற்றை முன்னிறுத்திக் கொண்டு தற்குறித்தனமான தமது அரசியலை நிர்ணயம் செய்ய முற்படுவது அதைவிட பயங்கரமானது. திரு. வே. பிரபாகரன் (விடுதலைப்புலிகள்) இருந்தால் என்பது ஒரு இலச்சினையே குறிப்பான்- (symbol) அவ்வளவே. ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் உரிமையை முதலாளித்துவ ஜனநாயக வடிங்களினுள் அங்கீகரிக்காதுவிடின் திரு வே பிரபாகரன் தேசிய வீரனாகவோ அல்லது முன் உதாரணமாவோ உருப்பெறும். இதுவேதான் வரலாறுகள் காட்டி நிற்கின்றது. இங்கு பெருந்தேசியவாதத்தை இனவாதமாக குறுக்கி அரசியல் செய்ய நினைப்பது குட்டி முதலாளிய "பதட்டத்தின்" குறுக்கு வழியாகும் . ஆனால் மார்க்சியம் என்பது ஒற்றை வழிப்பாதை. அந்தப் பாதை வெளிப்படையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக உரிமையை அங்கீகரித்துக் கொள்வதும் பிற்போக்கு சக்திகளை வெற்றி கொள்வதுமாகும். ஒரு தேசத்தின் அபிலாசைகளை புறக்கணித்து சமூகமாற்றத்தையும், உழைப்பாளி வர்க்க சமுதாயத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும் என்பது கற்பனையானதாகும். ஒரு கட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு நகரும் திமர்பாச்சல் சிந்தனை வடிவமாகும்.

முள்ளிவாய்க்காலின் அழிவின் ஊடாக பொது அடையாளத்தை உருவாக்கிக் கொள்ளவும், நிலைப்படுத்தவும் எப்பவும் அதிகார வர்க்கம் எதிராகவே இருக்கும். இங்கு சின்னத்தை (குறிப்பான்- symbol) உருவாக்கிக் கொள்வதற்கும், சமூகத்தின் அடுத்த கட்டத்திற்கு கடத்துவதன் ஊடாக எதிர்மறை நிகழ்வைக் கொடுக்கும் என்பது ஒடுக்குமுறையாளர்களுக்கு தெரியும். இந்த நிலையில் தேசத்தின் அடையாளத்தின் அழிப்பிற்கு அவசியமாகின்றது. இதன் அடிப்படையில் இருந்து முள்ளிவாய்க்காலின் நினைவை திட்டமிட்டு எதிர்க்கின்றது. இவ்வாறான திட்டமிட்ட இனவழிப்புக்கான செயற்பாடுகளை மொழி, நிலம், பொருளாதாரம் என்று சிங்கள பௌத்த பேரினவாதம் முன்னெடுக்கின்றது.

இங்கு தேசியம் அல்லது தேசம் என்ற வரைவிலக்கணத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது அவதானத்தில் கொள்ள வேண்டும். இங்கு 1977களில் தேர்தல் மேடைகளில் பேசிய பேச்சிற்கு நிகரான சிந்தனை வடிவத்தில் இருந்து எவ்வாறு மாறுபடுகின்றது என்பது கவனத்தில் கொள்வதாகும்.

இங்கு தேசம் என்பது முதலாளித்துவ உற்பத்தி சார்ந்த தேசிய இனத்திற்குரிய அரசியல் கட்டுமானம் பற்றியதாகும். ஏனெனில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது தேசத்தினை உருவாக்கிக் கொள்வதாகும். இங்கு தமிழ், மலையக, முஸ்லீம் மக்களைப் பொறுத்தவரையில் தேசமாக வளரும் உரிமை அங்கீகரிப்பதாகும். தேசிய இனங்களுடன் கலக்கும் உரிமையுடன் கூடியதாகும்.

தேசிய இனங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து கொள்வது நடைபெற்றுத் தான் வந்துள்ளது. தெலுங்கு, கன்னட, மலையாள தேசிய இனங்களின் கலப்பு என்பது சிங்கள, தமிழ் தேசிய இனத்தினுள் கலந்துள்ளது. அவை வரலாற்றோட்டத்தில் எவ்வித ஆட்சியாளர்களின் திணிப்பின் ஊடாக கலப்பு ஏற்படவில்லை. இவ்வாறு பல தேசிய இனங்கள் கலந்ததே தமிழ்- சிங்கள தேசங்களாக பரிணமித்துள்ளன.

தேசிய இனங்களாக இருக்கின்ற மலையக, முஸ்லீம்கள் புதிய ஜனநாயகப் புரட்சியின் ஊடாகவும், சோசலிச சமூகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி வளர்கின்ற போது தமிழ் தேசத்துடன் ஐக்கியமாக முடியும். இன்றும் பல நூற்றாண்டுகளின் இரு வெவ்வேறு தேசிய இனங்கள், மொழிகள் சேர்ந்து புதிய மொழி உருவாகி ஒரு தேசமாகவும் பரிணமிக்க முடியும். இவைகள் வரலாற்றுப் போக்கில் சுயதெரிவுடன் வளர்ந்து வருகின்ற உற்பத்திக்கேற்ற சமூக உறவுடனும் தொடர்புபட்டதாகும். இன்று சிங்கள - தமிழ் தேசங்களாக வளர்ந்துள்ள நிலையில் அதற்கு ஏற்ற சமூக பொருளாதார அலகுகளை அமைத்துக் கொள்ள முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.5 தமிழ் தேசியவாதம்

கொலனித்துவததின் கீழ் இருந்ததினால் விரைவான தேசத்தின் வளர்ச்சியைக் கொண்டதாக இருந்திருக்கவில்லை. அது மெதுமெதுவாக வளர்ந்து வந்திருந்த போதிலும் சர்வதேச சூழல் உள்நாட்டிலும் மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தது. சுதந்திரப் போராட்டத்தின் ஆரம்பத்தில் என்பது தேசிய இனக் குரோதங்கள் வெகுவாக உருவாக்கப்படவில்லை.

தமிழ் தேசத்தின் அதிகார அரசியல் ஆட்டம் காணுவதை உணர்ந்த ஒருவரான சேர். பொன்.அருணாசலம், தனது சகோதரருக்கு நேர்எதிராக 1920 இல் தமிழர் முதிர்ச்சிபெறாத தேசியவாத எழுச்சியைத் தோற்றுவித்தார். சமூக உருவாக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் கருத்துருவாக்கம் ஏற்படுத்தப்பட்டதாகும். இங்கு அனாகரிக தர்மபாலாவின் சிங்கள தேசிய கருத்துருவாக்கம் மாறுபட்டதாகும். ஆறுமுகநாவலரின் சைவம் - தமிழ் - வேளாளம் என்ற கருத்துருவாக்கம் நிலப்பிரபுத்துவ பிற்போக்குச் சிந்தனை சார்ந்ததாகும். இது தர்மபாலாவின் சிங்கள தேசத்தினை உருவாக்குவதற்கு எதிர்நிலை கொண்டதாகும். தேசிய இனப்பெருமைக்கான கருத்துருவாக்கம் என்பது சிங்கள மக்கள் மத்தியில் முதலில் உருவாகியிருக்கின்றது. சிங்கள தேசிய இனப்பெருமைக்கு எதிர்வினையாக தமிழ் தேசிய உருவாக்கத்தின் கருத்துருவாக்கம் மெதுவாக உருவாக்கம் பெற்றிருக்கின்றது.

தேசத்தின் கட்டமைப்பை பாட்டாளி வர்க்கங்களின் நலனில் இருந்து பார்க்கும் பார்வை இருக்கவில்லை. 1920களில் பூர்சுவா வர்க்கத்தின் தலைமையில் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு தலைமை தாங்கி வந்துள்ளது. ஆனால் பெருந்தேசியவாதத்தின் வயதே அதனை விட கூடியது என்பதையும் கவனத்தில் கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். பெருந்தேசியவாதத்திற்கு எதிரான மறுமொழியாகவே தமிழ்தேசியவாதம் உருவாக்கப்பட்டது. (பெருந்தேசியம் ஆட்சியதிகாரத்தை தனது கைகளில் வைத்திருக்கின்றது. சிங்கள தேசத்திற்கு சுயநிர்ணயம் இல்லை என்று பேசுவோர் உண்டு. ஆனால் அவர்கள் தமது இறைமையை அன்னிய சக்திக்கு இடம் கொடுத்தது அவர்களின் சுயநிர்ணயத்தின் அடிப்படையிலே யேயாகும்.) பெருந்தேசியவாதம் ஆயுதத்தின் ஊடாகவும் பதில் கொடுத்தது. தமிழ் தேசியக் கோசம் என்பது அகிம்சை மூலமும், அரசியல் ரீதியாக சட்டவரம்புக்குள் நின்றுதான் போராடியது. பின்னரே ஒடுக்கும் தேசம் ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளப்படுகின்றது.

இங்கு இனங்களின் ஜனநாயகக் கோரிக்கை என்பது அது வழிநடத்தும் தத்துவத்தின் பலத்தினைப் பொறுத்தது. குறுந்தேசியமே தற்காலம் வரை தமிழ் மக்களை வழிநடத்தி வந்துள்ளது.

பொதுவுடமைச் (உதாரணம் தோழர் சண்தலைமை, பு.ஜமா.லெ கட்சி) சக்திகள் தமிழ் மக்களின் ஜனநாயகப் போராட்டத்திற்கு தலைமை தாங்கும் சமூகச் சூழல் என்பது கைநழுவிச் சென்றதைத்தான் வரலாற்றில் காணமுடிகின்றது. பாரம்பரிய இடதுசாரியம் தேசிய இயக்கம் துயிலெழல் பற்றிய லெனினிய கோட்பாட்டை உள்வாங்க மறுக்கின்றனர். 1966 எழுச்சி என்பது தேசிய இயக்கத்தை துயிலெழுப்பியது. அந்தச் சாதனையை தொடர்ச்சியாக வளர்த்தெடுக்கத் தவறிவிட்டார்கள்.

ஜேவிபி சுயநிர்ணயத்தை ஏற்று புலிகள் போராடிய போதே பக்கம் பக்கமாக போராட்டத்தை நடத்தவில்லை. தேசத்தின் போராட்டத்தை பிரிவினைவாதமாகக் கணித்தார்கள். முள்ளி வாய்க்காலில் புலிகளே முதன்மை எதிரியாகக் கொண்டு அவர்களின் அழிவிற்கு ஒடுக்கும் அரச இயந்திரத்திற்கு உதவினார்கள். இத்துடன் தமிழ் தேசத்தின் தாயக நிலத்தை நீதிமன்றத்தின் ஊடாக பிரித்தார்கள்.

மகிந்த ஜேவிபியும் புலிகளும் ஒன்றல்ல என்று 2012 இறுதியில் கூறியிருந்தார். ஜேவிபியும், விடுதலை புலிகளும் நாட்டின் அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதம் தூக்கியவர்கள். இரண்டும் வர்க்கப் போராட்டம் தான். இரண்டும் ஆட்சியதிகாரத்திற்கு எதிரானதுதான். சுயநிர்ணயம், மற்றைய பொருளாதார மாற்றமாகும் இவை இரண்டும் வர்க்கப் போராட்டமேயாகும். தமிழ் தேசிய நலனை பிரதிபலித்த போதும் சதிகளின் ஊடாக புலிகள் அழித்தொழிக்கப்பட்டனர். தமிழ் தேசிய இனத்தின் போராட்டம் என்பது சமூக மாற்றத்தை நோக்கிய உலகம் தழுவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தின் ஒரு அங்கம் தான். இரண்டும் வெவ்வேறு வர்க்கத்தினை பிரதிபலித்த போராட்டம் தான். மகிந்த சொல்வது ஒடுக்குமுறையை நியாயப்படுத்தும் பேச்சிற்கு அப்பால் ஒன்றுமில்லை. தமிழ் மக்களின் போராட்டம் புரட்சிகரமானதுதான். ஆனால் அமைப்பின் தவறுகளில் இருந்து விமர்சிக்கப்படுகின்றது. முதலில் போராட்டத்தின் நியாயத்தை ஏற்றுக் கொண்டு போராடத்தயாரில்லை. மாறாக தவறுகளை விமர்சிப்பதில் தான் கவனம் செலுத்தப்படுகின்றது. முள்ளிவாய்க்காலில் தோற்றது ஆயுதப் போராட்டமேயன்றி தேசத்தின் ஆட்சியதிகார அரசியல் சாகவில்லை. தமிழ் மக்களின் போராட்டம் நியாமற்றது என்று சொல்ல முடியாது. அவ்வாறு வரையறுத்துக் கொள்வது தவறானதாகும். தமிழ் மக்களின் போராட்டம் அனைத்து தேசிய இனங்களின் ஜனநாயக உரிமையை அங்கீகரித்தும், அவர்களை இணைத்தும் சென்றிருக்குமானால் அது ஆற்றியிருக்கும் "முற்போக்குப்" பாத்திரம் முக்கியமானதாக இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை என்பதே வரலாறு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.3.6 பாட்டாளிவர்க்க ஐக்கியத்தின் பெயரால்

அரிவாளையும் சுத்தியலையும் போட்டுக் கொண்டு கட்சி வைத்திருப்பவர் தமிழ் மக்களுக்குப் சுயநிர்ணய உரிமையுண்டு என்பதை ஏற்றுக் கொண்டு பின்னர் அந்த மக்களிடம் முற்போக்கு சிங்கள சக்திகள், தனிநாட்டை அமைப்பதற்கான அச்சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள முடியும். இதனை விடுத்து கட்சியில் சின்னத்தையும் நடைமுறையில் பெருந்தேசிய மனோபாவத்தையும் செயற்படுத்திக் கொண்டு உழைக்கும் மக்களுக்கான விடுதலைக்கு ஒரு மைல் கல்லையும் முன்னோக்கி நகர்த்த முடியாது. பெருந்தேசிய வாதம் நோகக் கூடாது, சிங்களமக்கள் தம்மை தவறாக எண்ணிக் கொள்வார்கள் என்பதெல்லாம் பெருந்தேசிய மையவாதச் சிந்தனையாகும்.

புதியஜனநாயகப் புரட்சியின் ஒரு அங்கமாக இனங்களின் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். தேசிய இயக்கங்களை அங்கீகரித்துச் செல்லாது ஆட்சியதிகாரத்தின் ஊடாகத் தான் புதிய ஜனநாயகப் புரட்சியை நடத்தி முடிக்க முடியும். தேசிய இனங்களின் உரிமையை அங்கீகரிக்காத போக்கு என்பது புதிய ஜனநாயகப் புரட்சிக்கு எதிரான நிலையைதான் கொடுக்கும் என்பதை அரிவாளையும் சுத்தியலையும் கொண்ட எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். புரட்சியின் பிரதான முரண்பாடுகளை நிவர்த்தி செய்து கொண்டே அடுத்த கட்டத்தினை நகர்த்த முடியும் என்பது மூலவர்கள் போதிக்கும் அடிப்படைப் பாடமாகும்.

பின்தங்கிய உற்பத்திச் சக்தியை தொடர்ச்சியாக வைத்திருப்பது அடிப்படையான ஒடுக்குமுறைக்கான தந்திரமாகின்றது. சமூக அமைப்பிலனை மொத்தத்துவ பார்வையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(holistic approach) அணுக வேண்டும். சமூக அமைப்பின் ஓட்டுமொத்தமான பிரச்சனைகளில் இருந்து அணுகுவதும் மற்றும் குறிப்பான பிரச்சனையில் இருந்து அணுகுவதற்குமான வேறுபாடு உண்டு. அன்றாட வாழ்வில் மனக்கசப்பு என்பது வளமானது தன்னிடம் இல்லை என்பதில் இருந்து தொடங்குகின்றது. அந்த வளத்தை யார் எதற்காக பயன்படுத்திக் கொள்கின்றார்கள் என்ற பிரச்சனையில் இருந்து நோக்கப்பட வேண்டும். கிளிநொச்சியில், அம்பாறை மாவட்ட பட்டதாரிகள் போராடினார்கள். இன்றும் போதிய பயிற்சி பெற்ற உற்பத்தி சக்தி என்பது தமிழ் தேசிய இனத்தில் இல்லை. தன்தேசிய இனத்திற்கு முன்னுரிமை கொடுத்து தமிழ் பிரதேசங்களுக்கு அனுப்பியது. இவ்வாறு செய்ய வேண்டிய தேவையென்ன? தன்னினத்திற்கு சலுகை வழங்கல், லங்கா என்ற ஒற்றை நாடு மனோநிலையைத் தொடர்வது, தமிழர் வளம் அவர்களுக்கு சென்றுவிடக் கூடாது. இன்னொரு பகுதியில் தகுதியற்ற தொழிலாளர்களை வைத்துக் கொள்வது தொடர் வறுமை தொடர்ச்சியான உற்பத்தி திறன் அற்ற தொழிலாளர்களை உருவாக்கி வைத்துக் கொள்வது என செயற்படுகையில் தொழிலாளர்களிடையே ஒற்றுமையை இலகுவாக சிதைக்க முடிகின்றது. நிறுவனமயப்பட்ட பேரினவாதச் சிந்தனைப் போக்கு என்பது மறுவுற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இங்கு குறுக்கு வழி என்பது அடையாள, தொழிற்சங்க அரசியலாக வர்க்கப் புரட்சி சுருங்கி தீராத இடதுசாரிய நோயாக உள்ளது.

இங்கு தேசத்தின் வளர்ச்சியைப் புரிந்து கொள்ளாத நிலையை உறுதியிட்டுக் கூற முடியும். இவர்களை இட்டு ஏங்கெல்ஸ் "இந்தக் கனவான்கள் எல்லோரிடமும் இயக்கவியல் கிடையாது. அவர்கள் எப்பொழுதும் ஓரிடத்தில் காரணத்தையும் இன்னோர் இடத்தில் விளைவையும் பார்க்கிறார்கள். அது ஒன்றுமில்லாத சூக்குமம், அத்தகைய இயக்க மறுப்பியலான எதிர்முனைக் கோடிகள் மெய்யுலகத்தில் நெருக்கடிகளில் மட்டுமே நிலவுகின்றன, அப்பொழுது மொத்த, பரந்தகன்ற நிகழ்வுப் போக்கும் இடைச்செயலின் வடிவத்தில் நடைபெறுகிறது (இடைச்செயலில் ஈடுபடும் சக்திகள் மிகவும் சமமில்லாதவை என்றாலும், இவற்றில் பொருளாதார இயக்கம் இதுவரை மிக வலிமையான, மிகவும் ஆதிமூலமான, மிகவும் தீர்மானகரமான சக்தியாக இருக்கிறது) இங்கே எல்லாமே சார்பு நிலையானது. எதுவுமே தனிமுதலானது அல்ல - இதை அவர்கள் ஒருபோதும் பார்ப்பதில்லை. - எங்கெல்ஸ் ஸ்மிட்டுக்கு எழுதிய கடிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.7 அடையாள எதிர்வினைகள்

சிங்கள பெருந்தேசியம் தன்னுடைய லங்கா என்ற (முழு இலங்கையும்) தேசத்தின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள மலையகத் தமிழர்களின் குடியுரிமையை பறித்தது, சிங்களச் சட்டத்தினை கொண்டுவந்தது, குடியேற்றங்களை மேற்கொண்டு சிங்களமயமாக்கலை மேற்கொண்டது. பின்னர் தரப்படுத்தல் போன்ற பல்வேறு அடையாள நடவடிக்கைகள் ஊடாக பெருந்தேசியத்திற்கான சந்தையையும், தேர்தலில் வெற்றி கொள்ளும் தந்திரோபாயத்திற்கமைய பிற்போக்கு அரசியல் செயற்பாடுகள் இடம்பெற்றது.

லங்கா என்ற அரசியல் சிந்தனைக் கட்டமைப்பு என்பது பௌத்த - சிங்கள பெருமிதத்தின் மேல் கட்டப்பட்டது. அந்த பெருமிதக் கட்டமைப்பு என்பது முழு இலங்கையையும் தன்னுடைய பௌத்த பூமியாக கருதுகின்றது. இதன் காரணமாகவே பௌத்த அடையாளச் சின்னங்களை தமிழ் தேசமெங்கும் உருவாக்கிக் கொள்கின்றது. இந்த வகையான கலாச்சார ஆக்கிரமிப்பு, அடையாள மாற்றம் என்பதை வரலாற்றுப் போக்கோடும் அணுகுதல் தகும்.

இங்கு பெருந்தேசியம் அரச இயந்திரங்கள் அனைத்தையும் தன் கைவசம் வைத்திருந்து தேசிய இனவழிப்பை மேற்கொள்கின்றது. முன்னர் இனங்குழுமங்கள் வெட்டரிவாள், வேல்கம்பை வைத்து ஒருவரை ஒருவர் கட்டுப்படுத்தியும் பாதுகாத்தும் வந்தனர். இது முதலாளித்துவ கட்டமைப்பில் அரச இயந்திரங்கள் பெருந்தேசியவாதத்திற்கு உதவுகின்றது.

இதற்கு மாற்றாக எதிர்வினையாக ஒடுக்கப்படும் தேசிய இனத்தில் இருந்தும் அடையாள வெளிப்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகியிருக்கின்றது. தமிழர் தரப்பும் சத்தியாக்கிரகம், ஊர்வலம் என பல போராட்ட இயக்கம் என்ற வெவ்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. மிதவாதிகளின் போராட்டத்தில் நம்பிக்கையற்ற இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக உருப்பெற்றனர். ஒடுக்கப்படும் தேசத்திற்கும், தேசிய இனத்திற்கு ஒழுங்கமைக்கப்பட்ட அரச இயந்திரம் இருப்பதில்லை. ஆனால் அது வளர்ச்சிப் போக்கில் தன்னை பாதுகாத்துக் கொள்ள அமைப்பு வடிவத்தை உருவாக்கிக் கொள்கின்றது.

இவ்வாறே இளைஞர் அமைப்புக்களின் தோற்றமும் அடையாளப் போராட்டங்களின் ஊடாக வேகமாக தமிழ் சமூகத்தில் பரவியது. எனினும் தமிழ் தேசத்தின் போராட்டத்திலும் மாற்றங்கள் 1983 பின்னரான காலத்தில் தீடீர் வீக்கத்திற்கு உள்ளாகியது. இது தீவிர ஆயுதப் போராட்டத்திற்கு வித்திட்டது. (1990 பின்னர் மாற்றத்திற்கு உள்ளாகியது. உலக அரங்கில் ஒற்றைத்துருவ ஆளுமையை நோக்கிய அரசியல் போக்கில் அமெரிக்காவின் தலைமை வெகு வேகமாக வளர்ந்து வந்தது.)

தேசியவாதம், தேசியவெறி, இனவெறி என்பது பற்றிய புரிதல் வெவ்வேறு நிலைகளில் ஒவ்வொரு சிந்தனை வடிவத்தின் நியாயம் பொருட்டு வியாக்கியானம் செய்யப்பட முடியும். மனிதர்கள் செய்கின்ற வியாக்கியானங்கள் என்பன ஒவ்வொருவரின் சமூக விஞ்ஞானப் பார்வை சமனாக இருப்பதில்லை. இதனை மூலதனமாக வைத்தே ஒவ்வொரு வர்க்கத்தவரும் தப்பிப் பிழைக்கின்றார்கள். ஒரு குறிப்பட்ட மனித கூட்டத்தின் குறிப்பானின் வெளிப்பாடுகளும், சடங்குகள், சம்பிரதாயங்கள், சமூக உறவும், சமூக அறமும், கட்டுக்கதைகள் என்ற கூட்டு விழுமியங்களின் வெளிப்பாடுகளும் அவர்களின் வாழ்வியலும் ஒன்று குவிந்த ஒரு சமூக பண்பாட்டு சின்னங்கள் அடிப்படையில் இனக்குழுமமாகவும் பின்னர் நிலப்பிரபுத்துவத்துடன் தேசிய இனமாகவும் பரிணமிக்கின்றது.

இங்கு தேசத்தின் உருவாக்கத்தின் போது ஒரு தேசிய இனம் முயற்சிக்கின்ற போது வெளிப்படும் அடையாளப் போராட்டங்கள் என்பது குறிப்பான் மட்டுமேயாகும். தமிழ் தேசத்தின் போராட்டத்தில் இடம்பெற்ற அடையாளப் போராட்டங்கள் என்பது பெருந்தேசியம் தன்தேசியயின சமூகத்தினை முதன்மைப்படுத்தி மற்றைய சமூகத்தினை தரப்படுத்தும் போது ஏற்படுகின்றது.

இங்கு வளர்ச்சிப் போக்கையும், அந்த வளர்ச்சியை அடக்கும் நடவடிக்கைகள் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு புதிய பொருளாதார கட்டமைப்புக்கான வளர்ச்சிப் போக்கினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கிப் பார்க்க முடியாது. மார்க்சிய பார்வையற்ற அரசியல்வாதிகள், ஆய்வாளர்கள் இளைஞர்களின் விரக்தி, வேலையில்லாப் பிரச்சினை, தரப்படுத்தல் என்பதே தான் போராட்டத்திற்கு காரணம் என்று தேசத்தின் வளர்ச்சிப் போக்கை அறியாது தனியே அடையாளப் போராட்டங்களுடன் சுருக்கிவிடு கின்றனர். இது மனித குலங்களின் வர்க்கத்தின் வளர்ச்சியை அறிந்திராத பார்வையாகும். அதேவேளை யார் ஆளுமைக்குள் இருந்தும் செயற்பாட்டிற்குரிய பொறிமுறையும் அவர் தம் நலனை முன்னிறுத்துவது என்பதில் வேற்றுமைகளில் இருந்து முத்தெடுக்கும் சிந்தனை முன்னெடுக்கப்படுகின்றது. மனிதர்களின் ஆற்றாமை, விஞ்ஞான சமூகப் பார்வையின்மை என்பதன் வெளிப்பாடாக இருக்கின்ற வேளையில் வெவ்வேறு வியாக்கியானம் செய்யப்படும்.

சமூக விழுமியங்களின் அறிநெறியும், முன்நோக்கிச் செல்லும் சிந்தனா வடிவம் என்பது இருக்கின்ற சமூக அமைப்பிற்கொப்ப வெளிப்படும் கருத்தியல்வாதத்தில் அமைந்த பெருமிதம் என்பது தேச உருவாக்கத்தில் இடம்பெறுகின்றது.

இது மார்க்சியம் வலியுறுத்துவதும் பூர்சுவா தேசியத்திற்கு மாறான அரசியல் போக்காகும். இந்தவகை கருத்துமுதல்வாத அடிப்படைகளை எதிர்ப்பதுடன் தொடங்குகின்றது. தேசியத்தின் பெயரில் கட்டமைக்கப்படும் புனிதக் கட்டமைப்பு என்பது ஆண்டபரம்பரைச் சிந்தனை வடிவத்தை முற்றுமுழுதாக எதிர்த்து நிற்கின்றது.

இங்கு தேசம் முழுமையாக வளர்ச்சியடைய வேண்டிய ஜனநாயக உரிமை என்பது வேறாகும். இதற்கும் ஆண்ட பரம்பரை கருத்தாக்கத்தினை சுமப்பது மார்க்சியம் அனுமதிப்பது இல்லை. ஆண்டபரம்பரைச் சிந்தனைப் பரப்பிற்கு மாற்றாக முற்போக்கு சிந்தனைகளைக் கொண்ட தமிழ் தேச போராட்ட அமைப்புக்களும் உருவாகியிருந்தது. அந்த அமைப்புக்களின் ஊசலாட்டக் குணாம்சம் பல தீங்குகளை தமிழ் தேசத்திற்கு இழைந்திருந்தது. இதே வேளை இந்த அமைப்புக்கள் பூர்சுவா தேசியவாத தலைமையிடம் தோற்றது. இடது குட்டிமுதலாளிய ஊசலாட்ட அமைப்புக்கள் பூர்சுவா தேசியவாத அணியின் தீவிரத் தாக்குதலுக்கு உள்ளாகி பெரும் சிதைவிற்கு உள்ளாகியது. இதன் வரலாற்றுத் தொடர்ச்சியே ஏகபிரதிநிதித்துவமாக உருப்பெற்று முள்ளிவாய்காலில் முடிவுற்றது. தமிழ்தேசத்திற்கான போராட்டத்தை ஒற்றைத்துருவ சமூக ஒழுங்கில் போராடியது என்பது வரலாற்றில் முக்கியமான வரலாற்றுப் பாத்திரம். எனவே அந்த வரலாற்றை கொச்சைப்படுத்துவது இயங்கியலுக்கு முரணானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.8 முள்ளிவாய்காலில் வீழ்ச்சி

தமிழ் தேசத்தின் போராட்டத்தினை தன்னிலைப்படுத்தி போராடிய தலைமையானது முள்ளிவாய்க்காலில் தோல்வியைக் கண்டது. இது ஆயுதப் போராட்டத்தின் தோல்விதானேயன்றி அரசியலுக்கு ஏற்பட்ட தோல்வியல்ல. இங்கு புலிகளானது தேசத்தினை நோக்கிய பயணத்தில் அரைநிலப்பிரபுத்துவ சிந்தனை கட்டமைப்பைக் கொண்ட எச்சத்தையும், ஏகாதிபத்திய பொருளுற்பத்தி சார்ந்த அரசியல் நகர்வுகள் என்பது மக்களை விட்டு அன்னியப்படுத்தி விட்டிருந்த காரணத்தினால் மக்களை பார்வையாளர்களாக வைத்துக் கொண்டது. இதில் புலம்பெயர் அரைநிலமானிய சமூக உறவைக் கட்டிக்காக்கின்ற பிறகுல (தாமும் உழைப்பாளிகள் என்ற உணர்வு பெறாத) தொழிலாளர்களின் உதவி புலிகளுக்கு கிடைந்திருக்கின்றது. இதன் ஊடாக பெரும் நிதியின் தேவையை பூர்த்தி செய்யப்பட்டது.

சோவியத்தின் உடைவும், மிகை உற்பத்தி, அதற்கான சந்தை, நுகர்வின் வேகம் (உலகமயமாதல், நவதாராள என்ற பின்னவீனத்துவ வரையறைகள்) பொருளாதார உறவிற்கு தேவையற்ற சக்திகளாக புலம்பெயர் புலிகளை உருவாக்கினர். தேசங்களின் எழுச்சியை தென்கிழக்காசியாவில் வைத்திருக்க ஏகாதிபத்திய பொருள் உற்பத்திக்கு ஆபத்தானதாகும். ஆனாலும் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் சமரசம் செய்ய முற்பட்டது, ஆனால் புலிகள் ஒத்துவரவில்லை. யப்பான் பெருந்தொகையாக நிதி கொடுக்க முனைந்தாகவும் செய்திகள் இருக்கின்றது. இதனையும் புலிகள் மறுத்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் தடையை மேற்கொண்டது. பின்னர் மற்றைய நாடுகளும் தடைசெய்தது. மேற்கு (நோர்வே உட்பட இதில் சமாதான தூதுவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிப்பிராயத்தைக நிச்சயம் கேட்டிருப்பார்கள்.) இந்தியா போன்ற வல்லாதிக்கம் முள்ளிவாய்க்காலில் இறுதி சவப்பெட்டிக்கான இறுதியாணியை அடித்தனர். வரலாற்று நிகழ்வுகளை அரசியல் பொருளாதார பண்புகளில் இருந்து ஆராய வேண்டும். தமிழ் மக்களின் போராட்டம் முற்றுப்பெறவில்லை. புலிகளின் போராட்ட முறையே தோல்வியுற்றது. நாம் ஏன் வீழ்த்தப்பட்டோம் எவ்வாறு வீழ்ந்தோம் என்பதை சில சம்பவங்களில் இருந்து கருத்துக் கூறுவதால் மட்டும் எம்மால் முன்னேறிவிட முடியாது.

மக்களை அணிதிரட்டிய போராட்டத்தினை வழிநடத்திராத காரணத்தினால் முள்ளிவாய்க்காலின் வீழ்ச்சிக்குப் பின்னர் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றது. எனினும் தமிழ் தேசத்தின் போராட்டத்தின் தோல்வியை வெவ்வேறு விதமாக வியாக்கியானம் செய்யப்படுகின்றது. இங்கு தமிழ் தேசத்திற்கான போராட்டம் என்பது பூர்சுவா தேசியத்தின் பாதையும் அதுசார்ந்த கோசங்களின் தோல்வியாகும். இங்கு பூர்சுவா தேசியத்தில் பின்னிப் பிணைந் திருந்த பிற்போக்குத் தனம் என்பது மக்களின் உரிமைக்கான போராட்டத்தின் முடிவாக முடியாது. சித்தாந்த தெளிவின்மை, வெற்றுக் கோசங்கள், கருத்துமுதல்வாத போலிச் சிந்தனையோட்டம் என்பதையும் வர்க்கங்களின் முரண்பட்ட வளர்ச்சியையும் தவிர்த்துப் பார்க்கும் நிலையையும் அவதானிக்க முடியும்.

முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியின் பின்னர் தமிழ் மக்களுக்கு அறிவுரை கூறுவதற்கென கருத்துருவாக்கிகள் உருவாக்கப் பட்டுள்ளார்கள். பெருந்தேசிய நிகழ்ச்சி நிரலுக்குப் பின்னால் செயற்படுவதை மறைத்துக் கொண்டு நஞ்சில் தேன் தடவிக் கொடுப்பது போல செயற்படுகின்றார்கள். இதே வேளை பிற்போக்குத் தலைமையில் பலவீனம் தேசத்தின் போராட்டத்திற்கு இடையூறாக இருக்கின்றது. இவர்கள் தேசிய ஒற்றுமை என்பது பௌத்த சிங்கள பேரினவாத மையவாத அடையாளத்தை கட்டியெழுப்புதல் என்ற அரைநிலமானிய - முதலாளித்துவ கோசத் தின் பின்னால் இருக்கும் சக்திகளின் நுண்ணரசியல் என்பது அறியமுடியாது உள்ளனர். சிங்கள ஆட்சியாளர்களும் சிங்கள அடையாளத்தை ஏற்றுக் கொள் என்று மறைமுக நிபந்தனை வைப்பதை தமிழ் தரகு வர்க்கமும் புரிந்து கொள்ளாமல் உள்ளார்கள். சிங்கள பேரினவாதத்திற்கு மாற்றாக தமிழ் மக்களின் உரிமையை இனவாதமாகவும், தேசிய வெறியாகவும் கருத்துருவாக்கம் செய்யப்படுகின்றது. இதன் பொருள் தமிழ் மக்கள் போலியுணர்விற்கு அப்பாற்பட்டவர்கள் என்று பொருள்படுத்த முடியாது. இங்கு தமிழ் தேசத்தின் குரலை நசுக்க எடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேவிபியின் நுண்ணரசியல் என்பது சிங்கள பெருந்தேசிய வாதத்தினை கேள்விக்குட்படுத்துவது என்பது இனவாதம் என்ற மென்போக்கிற்கு அப்பால் செல்வதில்லை. தென்னிலங்கை இடதுசாரிகள் ஆரியம்- பௌத்தம்- சிங்களம் என்ற மையக் கருத்தை சிதைக்க இவர்களால் கடந்த 40 வருட கால போராட்டத்தில் வெற்றி கொண்டார்களா என்பது சிங்கள முற்போக்கு சக்திகள் தங்களை சுயபரிசோதனை செய்யப்படவேண்டும்.

முள்ளிவாய்க்காலின் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகளின் வர்க்கத்தினை உள்வாங்கிக் கொள்வதன் ஊடாகவே அவர்களின் அரசியல் போக்கை விளங்கிக் கொள்ள முடியும்.

1. தமிழ் தேசியக் கூட்டணியின் தலைமையானது தரகு வர்க்கத்தின் கைகளில் உள்ளது. இதனால்

2. பூர்சுவா தேசியவாதத்தை முன்னிறுத்தும்- குட்டி முதலாளிய ஊசலாட்டப் பிரிவு - இது குறிப்பிட்ட நலனை மையமாகக் கொண்டு செயற்படுகின்றது. இதனால் உறுதியான போராட்டவடிவங்களையும், கோரிக்கைகளையும் முன்வைக்க முடியவில்லை.

3. தேசிய இயக்க துயிலெழல் பற்றிய புரிதல் அற்ற வாய்ப்பாட்டு இடதுசாரியம். இவைகள் அமைப்பாக இருக்கின்றது. முற்போக்கு தேசியம் உருவாகினால் தேசிய இனப்பிரச்சனைக்காக போராட முடியும் என்கின்றது.

4.இதற்கு மாற்றாக அடையாள, தலித்திய அரசியலை முன்வைக்கும், ஒத்தோடி அரசியல் குழுக்கள். இவற்றிற்கு மாற்றாக தேசத்தின், சமூகத்தின் விடுதலை நோக்கிய பார்வையை முன்வைத்த சிந்தனை வடிவத்தை கட்ட வேண்டியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.9 போராடுவது பயங்கரவாதம்

அடக்குமுறை, உரிமைக்காக போராடுவதன் ஊடாகத் தான் உரிமையை நிலை நாட்ட முடியும். ஆனால் ஆளும் வர்க்கம் தனக்கு எதிராக அணி உருவாகுவதை எதிர்க்கும், சட்டங்களை உருவாக்கி அடக்கும். ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் தேசத்தின் போராட்டத்தினையும், போராட்ட அமைப்புக்களையும் பயங்கரவாதமாக பிரச்சாரம் செய்யப்பட்டது. இதுவும் குறிப்பான முள்ளிவாய்க்காலின் வீழ்ச்சிக்குப் பின்னர் வேகமான பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

தமிழ் தேசத்தின் போராட்டத்தினை தமிழ்- சிங்கள ஆளும் வர்க்கத்தினால் கொச்சைப்படுத்த முடிகின்றது. தமிழ் சூழலில் தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்கான போராட்டத்தினையும் இனவாத மாகவும், ஆளும் வர்க்கத்தவர்களின் சந்தைக்காகவும் போராடுபவர்களாக பார்க்கப்படுகின்றது. இங்கு ஆட்சியதிகாரத் திற்காக போராடிய போராளிகளை தேசபக்கதர்கள் என்று அழைப்பதில் தவறில்லை.

சிறுவர்களை படைகளில் இணைத்தார்கள், ஜனநாயகக் கட்டமைப்பு இல்லை, பாசிஸ்டுக்கள் என மேற்கின் சிந்தனைத் தாக்கத்திற்கும், புலியெதிர்ப்புவாதத்தின் பிரச்சாரமாக இருந்திருக்கின்றது. புலிகள் அரைநிலமானியத்தின் உற்பத்தி கூறு அதன் பண்பு என்பது முதலாளித்துவ ஜனநாயகம் சாரந்ததாக இருக்க முடியாது தானே? இந்த நிலையில் தமிழ் தேசத்தின் கட்டமைப்பில் இருந்து தானே புலிகளை அளவிட முடியும்.

அரச பயங்கரவாதமும் தனிமனித பயங்கரவாதமும் ஒன்றாக முடியாது. புலிகளின் தலைமையின் பண்பே தேசபக்தர்களாக இளம் போராளிகளை வழிநடத்தியது. தமிழ் தேசத்திற்காக போராடிய 20000 மேற்பட்ட தேசபக்தர்களை பயங்கரவாதிகள் வரையறுப்பது இயங்கியலுக்கு மாற்றானது. நிழல் அரச (De facto government)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்பில் அதிகார வர்க்கமும் உருவாகியி ருக்க முடியும். அதிகார வர்க்கக் கட்டமைப்பில் புரட்சிகர ஜனநாய கத்தை எதிர்பார்க்க முடியாது. முதலாளித்துவ பொருளதாரமும், சிந்தனை வடிவமும் முழுமையான மாற்றத்திற்கு உள்ளாகவில்லை. ஐரோப்பிய- தனித்துவாத ஜனநாயக வடிவத்தில் அதனை அணுகுவது தவறாகும். இதே வேளை அடிமட்டப் போராளிகள் உழைக்கும் வர்க்கத்தவர்களின் பின்னணியில் இருந்து வந்தவர்களாகவும் இருந் திருக்கின்றார்கள். புலிகளை பயங்கரவாதிகள் என்பது அவர்கள் தமிழ் தேசத்தின் ஜனநாயக கட்டத்திற்காக போராடிய பங்கினை மறுப்பதாகும்.

சிங்கள தேசம் தமிழ் தேசத்தின் மீதான நிலஆக்கிரமிப்பு, மொழி, பொருளாதார அழிப்பு, இனச்சுத்தீகரிப்பிற்கு தலைமை தாங்கியது இந்த விடயத்தை கவனிக்காது விடப்படுகின்றது.

தமிழ் தேசத்தின் தலைமையின் தவறை வைத்துக் கொண்டு அதன் வர்க்கக் கூறைக் கொண்டு தமிழ் தேசம் ஆட்சியதிகாரத்திற்காக போராட முடியாது என்று கொள்ள முடியுமா? முன்னர் தலைமை தாங்கிய தரகுவர்க்கம் இணக்க அரசியலை மேற்கொண்டது பின்னர் புலிகள் என்ற குட்டி முதலாளியம் சாகசவாதத்தை பின்பற்றி தன்னை முடித்துக் கொண்டது.

"நீதி மதம் அரசியல், சமுதாயம் சம்பந்தமான எல்லாவித சொல்லடுக்குகளுக்கும் பிரகடனங்களுக்கும். வாக்குறுதிகளுக்கும் பின்னே." ஏதாவது ஒரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதை மக்கள் கண்டு கொள்ள வேண்டும். அனைத்துச் செயற்பாட்டிற்கும் பின்னால் வர்க்கச் சிந்தனை உண்டு. வர்க்கங்களின் அதன் வெளிப்பாடுகளைக் கொண்டு முடிவெடுக்க முடியாது. தமிழ் தேசத்தின் உரிமைக்கான போராட்டத்தின் மையத்தில் இருந்துதான் நிலைப்பாடுகள் எடுக்க முடியுமேயன்றி புலிகள் பிரதிநிதித்துவம் செய்த வர்க்கத்தின் வெளிப்பாடுகளில் இருந்து அல்ல.

தேசிய இனப்பிரச்சனையே வர்க்க முரண்பாடுகளினால் ஏற்படுவதுதான். ஏன் எவ்வாறு என்பதை அடிக்கட்டுமானத்தில் ஏற்படுகின்ற மாற்றத்தைக் விளங்கிக் கொள்வதன் ஊடாகவே விளங்கிக் கொள்ள முடியும். இதில் குறிப்பாக இலங்கை மார்க்சிய அணுகுமுறையாளர்கள் பெரும் குறைவிட்டுள்ளனர். இலங்கையில் பிரதான (சமூக பேரினவாத) அமைப்பாகிய ஜேவிபியின் விளைவும் இதன் குறைபாட்டிற்கு உட்பட்டதே. தேசத்தின் போராட்டத்தில் பிரதிநிதித்துவப் படுத்திய பூர்சுவா வர்க்கத்தின் வெளிப்பாடு குறுந்தேசியவாதமாகத் தான் இருக்கும். அரைநிலப்பிரபுத்துவத்தின் வெளிப்பாட்டில் இருந்து வெளிப்படுத்தும் தேசத்தை அடைவதற்கான செயற்பாட்டு, அணிதிரட்டும் முறை அவ்வளவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.10 பூர்சுவா தேசியவாதத்தின் போக்கு

முள்ளிவாய்க்காலின் வீழ்ச்சிக்குப் பின்னர் தலைமை யேற்றுள்ள தரகு வர்க்கம் என்பது அதளபாதாளத்திற்கு தமிழ் தேசத்தின் சுயநிர்ணயத்திற்கான போராட்டத்தினை கொண்டு செல்கின்றது. இதில் இடதுசாரி சந்தர்ப்பவாதிகளும், பேரின வாதிகளும், தமிழ் தரகு அணியும் ஒன்று சேரும் இடம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து நிற்கின்றது. தரகு வர்க்கத்தை தேசியமாக வரையறுப்பதோ அல்லது தரகு வர்க் கத்தை தேசியமாக பொருத்தி விமர்சிப்பதே வரையறைப் பொருத்தமற்றதாகும். தமிழ் தேசத்தின் போராட்டத்தின் முனைப்பை தடுப்பதற்காகவும், சிதைப்பதற்காகவும் தமிழ் தரகு அணியின் தவறுகளை தமிழ் தேசிய சக்திகளின் தவறான முடிச்சுவிடப் படுகின்றது. ஒத்தோடிகள் இவ்வாறான கருத்தியலை மேற்கொள் கின்ற போது அதனை எதிர் கொள்ள வேண்டிய நிலையில் தான் உள்ளது.

இதில் தமிழ் தரப்பின் போக்கை அறிவதும் அவசியமாகின்றது. இவர்களின் போக்கு எவ்வாறு தடைக்கல்லாக இருக்கின்றது என்பதும் தமிழ் தரகு வர்க்கத்தின் போக்கு அடிப்படையில் ஏகாதிபத்திய விசுவாசம் கொண்டிருப்பதும் தற்செயலானது அல்ல. இந்த நிலையில் திரு சம்பந்தர் வடக்கு கிழக்கு தமிழர்கள் இனிமேல் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்க மாட்டார்கள் என நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். தரகு வர்க்கத்தைச் சேர்ந்த திரு சம்பந்தனின் பேச்சை வலதுசாரி சிந்தனை கொண்டவர்கள் வெவ்வேறாக வியாக்கியானம் செய்கின்றார்கள். ஒரு மக்கள் கூட்டத்தின் உரிமையை தீர்மானிப்பதற்கும், சமூக ஓட்டத்தினை பற்றி விளங்கிக் கொள்ளாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதட்டல்களை எல்லாம் சாணக்கியமாக நம்பும் அப்பாவித் தனம் என்பது மக்கள் கூட்டத்திற்கு பலன் கொடுக்க முடியாது. எனவே சம்பந்தர் தமிழீழம் பற்றிப் பேசவில்லை என்று அங்கலாய்ப்பதாக தட்டையாக விளங்கிக் கொள்வதும், விளக்கம் கொடுப்பது அபர்த்தமான பார்வையாகும். இன்றைய உலக அரசியல் நகர்வுக்கேற்ப செயற்படும் வலதுசாரி அணியாகிய மகிந்த- மைத்திரி- ரணில், சந்திரிக்கா, சுமந்திரன், சம்பந்தர் போன்ற ஆளும் வர்க்க அணி என்பது செயற்படுகின்றது. இது தரகு வர்க்கத்தின் அணிச் சேர்க்கையாகும். இதன் காரணமாக வெளிவரும் அரசியல் என்பது மக்கள் விரோதமே. வலதுசாரியச் சிந்தனை கொண்டவர்கள் சேற்றுக்குள் முத்து எடுக்க முற்படுவது அவர்கள் சிந்தனைக்கு சரியாக இருக்கும். ஆனால் சிங்கள பௌத்த பெருந்தேசியம் என்பது அதன் வேரை என்றைக்கும் இழக்காது தொடரும். அவ்வாறு தொடர்கின்ற போது எவ்வித சாத்தியமான தீர்வுகளும் கிடைக்கப் போவதில்லை

இன்றைய அரசியல் போக்கு என்பது மகிந்த- மைத்திரி- ரணில் - சுமந்திரன்- சம்பந்தன் என்ற (தரகு) ஆளும் வர்க்கக் கூட்டின் செயற்பாடுகள் எவ்வித இடையூறும் இன்றி செவ்வனே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அரைநிலமானிய சிந்தனைவாதிகளே இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற அணியில் பெரும்பான்மையாக அங்கம் வகிப்பதும், குறைந்தபட்சம் முதலாளித்துவ ஜனநாயகத் தன்மை கொண்ட போக்கை கொண்டவர்களாக இல்லை என்பதே வெளிப்பாடாகின்றது. இவர்களின் சிந்தனை, அரசியல் போக்கை வைத்து தேசத்தின் ஆட்சியதிகாரத்தின் நியாயத்தினை அளவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.11 இணக்க அரசியல்

தரகு வர்க்கத்தின், பூர்சுவா- முதலாளித்துவ தேசியப் போக்கும் பல தடைகளை தொடர்ச்சியாக ஏற்படுத்திக் கொடுகின்றது. இணக்கம் பேசும் கயமை அரசியல் என்பது அடிமையாக வைத்திருப்பதற்கான பூட்டு. இது சிங்கள பௌத்த பேரினவாதத்தினை மயில் இறகால் தடவிடும் அரசியலாகும். இணக்க அரசியல் என்பதை இந்த சமூக அமைப்பையும் சுரண்டல் சமூக அமைப்பையும் பாதுகாக்கும் அரசியலாகத் தான் வரையறுக்க முடியும். இன்றைய அரசியல் போக்கும் அதன் இயல்பு என்பதை உள்வாங்கிக் கொள்வதான அரசியல் நிலை என்பது ஆளும் வர்க்க நலனுக்கானது. ஒடுக்கப்படும் மக்களின் நலனில் மேல் அமைந்த சிந்தனை அல்ல. மென்சக்தி (தரகு) (protectionism) என்பது அடிமையாக வைத்திருக்கும் பூட்டுத்தான். ஆண்டைகளுக்கு அடங்கிப் போவதற்கான அறிவுரையாக எப்பொழுதும் இருக்கும். இது பேரினவாதத்தின் ஒரு அங்கம் தான். தமிழ் சமூகத்தின் பிரதிநிதியென்று முழுத் தமிழ் மக்களின் தலைமை அல்லர். தரகு ஆளும் வர்க்கத்தின் ஒரு அங்கம், குறிப்பான நிதிமூலதன தாசர்களின் ஏவலாளர்கள். அவர்கள் ஒடுக்கப்படும் மக்களின் தலைமையாக இருக்க முடியாது. இவர்கள் போலித் தேசியம் பேசுகின்ற விதேசிகள். சுதேசிய சிந்தனை என்பது மக்களின் இறைமையை விட்டுக் கொடுக்காமை. இங்கு இறைமையை தாரைவார்க்க தயாராக உள்ளவர்களே. இங்கு பந்தாடப்படுவது ஒடுக்கப்படும் மக்களாகும். இணக்க அரசியல் ஊடாக பேரினவாதத்துடன் கூடி விளையாடும் விளையாட்டுக்கள் முரண்பாட்டை, மோதலை மூடி மெழுகுவதாகும். இணக்க அரசியலை வைத்து முழுச் சமூகத்தை ஒடுக்குவதற்காக அதிகாரம் வேண்டி நிற்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப்புத்தி என்பது கயிற்றை விட்டு நூலைப்பிடிக்கும் அரசியல் போக்குத் தான் ஆளும் வர்க்கங்களை எதிர்ப்பதாக கருதுபவர்கள், தேசியத்திற்காய் உழைப்பதாக கூறுகின்றவர்கள், சிந்தனையாளர்கள் எல்லோரும் பிரதான போக்கை விட்டு உபபோக்கை முன்னிலைப் படுத்துகின்றார்கள்.

தமிழ் தேசத்தின் உரிமையை கொண்டொழிக்கும் சதிகள் என்பது வெளிப்படையாக தெரிகின்றது. சிங்கள பௌத்த சிந்தனை என்பது அது ஆழ ஊடுவியிருக்கும் ஒடுக்குமுறை சிந்தனை வடிவம். சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனை என்பதற்கு தமிழர்கள் தான் காரணம் என்பது அபர்த்தம். பேரினவாதத்தினையும், பேரினவாதிகளைக் காட்டியே மற்றவர்களை அடங்கிப் போ என்று உபதேசிக்கும் போக்கும் மறைமுக பேரினவாத ஆதரவாகவும், இது இணக்க அரசியலுக்கு வித்திடுகின்றது. சிங்கள பௌத்த கட்டமைப்பினை சமூகத்திலும் ஆட்சியதிகாரத்தில் அகற்றும் பொறுப்பு சிங்கள முற்போக்கு சக்திகளுக்குத் தான் உண்டு.

வரலாறு என்பது முன்னோக்கிச் சென்று கொண்டுதான் இருக்கின்றது. வரலாறு முன்னோக்கி நகர்ந்து செல்வதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக வியாக்கியானம் செய்ய முடியும். ஒரு பொருளாதார அமைப்பு என்பது மாறிச் செல்கின்ற போது அதற்கு போதிய கட்டமைப்புக் கொண்ட ஜனநாயக வளர்ச்சி இல்லை என்றால் அதன் எல்லைகளை மீறித்தான் முன்னோக்கிச் செல்கின்றது. இந்த மாற்றம் சமாதான முறையில் அல்லது பலாத்காரத்தின் ஊடாக நடைபெறலாம். ஆனால் அங்கு முரண்பாடுகள் இல்லாத காரணத்தினால் அல்ல. பழையதற்கும் புதியதற்கும் இடையேயான முரண்பாடு இருந்து கொண்டே தான் இருக்கும்.

நிலப்பிரபுத்துவத்தில் இருந்து முன்னோக்கிச் சென்று முதலாளித்துவக் கட்டத்தை அடைகின்ற போது அதற்கான ஜனநாயக உரிமைகள், உட்கட்டுமானம், நிறுவனமயமாதல் என்பது மாற்றத்திற்கு உள்ளாகித் தான் வந்திருக்கின்றது. மாற்றத்திற்கு உள்ளாகித் தான் இருக்கும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையானது தமிழ் இனவாதிகளாலோ அல்லது ஆயுதக் குழுக்கயாகவோ தான் உருவாக்கப்பட்டதன்று. தேசிய இனப்பிரச்சனை என்பது தனியே இலங்கைக்கு மாத்திரம் பிரத்தியோகமானதல்ல.

முள்ளிவாய்க்காலின் பின்னர் தமிழ் மக்களை இணக்கிப் போங்கள், அரசியல் என்பது சாத்தியப் பாட்டுக்குரிய ஒரு கலையாகும். மாறாக சாத்தியமில்லாதவைகளுக்காக காலத்தை விரையம் செய்கின்ற அரசியலியலாளர்களை கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமானது அழிவைத்தான் சந்திக்கும் என பயமுறுத்துகின்றார்கள். ஒடுக்கப்படுபவர்கள் மாத்திரம் மேலாதிக்கத்திற்கு ஒடுங்கிப் போக வேண்டும்.

ஆட்சியதிகாரம் அற்ற தேசத்தின் சமத்துவத்துவமும், ஆட்சியதிகார உரிமையும் கணக்கில் எடுக்கப்பட முடியவில்லை. இந்த நிலையில் தமிழ் தேசம் சேர்ந்திருப்பதா தனியாக செல்வதா என தீர்மானிக்கும் உரிமை கொண்டது என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. இங்கு சுயநிர்ணயம் என்பதே சேர்ந்திருப்பதா அல்லது தனித்திருப்பதா என்று முடிவெடுக்கும் உரிமையாகும். இங்கு சுயநிர்ணயம் என்றால் வெவ்வேறு விதமாக வியாக்கியானம் செய்யும் அபர்த்த அரசியல் வெளிப்படுகின்றது.

தேசிய இனக்கோரிக்கைகள் கொலனித்துவத்தின் விழைவாக உருவாகியதல்ல. முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு செல்கின்ற போது மொழியின் தன்னாட்சி, பொருளாதாரத்தில் தன்னாட்சி, நிலத்தின் மீதான தன்னாட்சி, கலாச்சாரப் பண்பாட்டு தன்னாட்சி என்று தேசிய இனங்கள் பண்பைக் கொண்டதாக வளர்கின்றது. இந்த வளர்ச்சிப் போக்கை அடைகின்ற போது கோரிக்கைகள் முரண்பாடாக வெளிப்படுகின்றது.

தேசிய இனங்களின், தேசங்களின் உரிமை என்பதை விளக்கிக் கொள்ள வேண்டும். தேசம் - தேசிய உரிமை என்பதை துடக்காகப் பார்ப்பது மாத்திரம் அல்ல அதனை வர்க்கப் போராட்டத்தின் அங்கமாக பார்க்காத பார்வை என்பது தொடர்வது மாற்றப்பட வேண்டும். வர்க்கப் போராட்டமாக கணிக்காத நிலை தான் தேசங்களாகவும், அதிகாரப் பகிர்வே தீர்வு என்றும், சோசலிசத்தில் தீர்வு என்றும் தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வு முன்மொழியப்படுகின்றது.

1920களில் பிரித்தானியாவின் ஆணைக்குழுவில் தமிழர்களுக்கான அந்தஸ்துப் பற்றிப் பேசிய பொன். அருணாசலத்தின் கோரிக்கை என்பது உயிர்ப்புப் பெற்று புதிய தலைமைக்கு 1949 இல் கைமாறியது. சாணக்கியம் என்பது வழிகாட்டும் சிந்தனையில் இருந்து தான் முடிவு பெறுகின்றது. ஒரு தேசிய இனத்தின் போராட்ட வடிவம் காலத்துக்கு ஏற்பவும் புதிப்பிக்கப்படவேண்டும். 1920களிலும் பின்னர் 1948 ஆட்சி கைமாறிய பின்னரான அரசியலை அரசியல் முதிர்ச்சிக்கமைய (தரகு வர்க்கத்தின்) கோரிக்கைகள் வைத்துக் கொண்டு இலங்கை தேசிய அரசு என்ற போலித் தனத்தின் கீழ் உரிமை கேட்கப்பட்டது.

பின்னர் 1977 க்குப் பின்னர் தேர்தல் பாதையை, சமரசவாதத்தை எதிர்த்து ஆயுதப் போராட்டமாக பரிணமித்தது. நாம் விரும்பி ஆயுதப் போராட்டம் தொடங்கப்படவில்லை. ஜே.ஆர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயவர்த்தனா உண்மையான பௌத்தராக இருந்திருந்தால் ஆயுதம் தூக்கவேண்டி வந்திருக்காது என்பது வரலாற்றுப் போக்கு அல்ல. தேசிய இயக்க வளர்ச்சியை தீவிரமாக சிங்கள ஆளும் வர்க்கம் ஒடுக்கியது. அகிம்சைப் போராட்டங்களை மோசமாக அடுக்கியது. சமூக அமைப்பின் வரலாற்று ஓட்டமே எம்மை ஆயுதப் போராட்டத்திற்கு அழைத்தது. சட்டவரம்பிற்கு உட்பட்ட ஜனநாயகப் போராட்டம் ஏதோ ஒரு காலத்தில் முன்னோக்கிச் செல்ல முடியுமேயன்றி பின்னோக்கிச் செல்ல முடியாது. போராட்டங்களில் தடைகள் ஏற்படுவது இயல்பு. முள்ளிவாய்க்கால் ஏன் ஏற்பட்டது என்று சுயஆய்விற்கு உள்ளாக்கிச் செல்கின்ற போதுதான் அடுத்த கட்டத்திற்கான போராட்டம் என்பது வெற்றி கொள்ள முடியும்.

பௌத்த சிங்கள தேசியப் பெருமிதத்தின் மீது கட்டப்பட்ட சிந்தனை என்பது குறுகிய காலத்தில் அல்லது நீண்ட காலத்தில் எவ்வித தீர்வையும் கொடுக்கப் போவதில்லை. பௌத்த சிங்கள சிந்தனை வடிவம் என்பதும், தீர்வு என்பது பௌத்த சிங்கள சிந்தனைக்கு உட்பட்டது. இதற்கு அப்பால் ஒன்றுமில்லை. ஆனால் உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்றால் தரகு வர்க்கத்தை கடந்து தான் செல்லவேண்டியிருக்கின்றது. இதுதான் யதார்த்தம் மற்றவை அர்த்த மற்ற வெற்றுக் கூச்சலாகும்.

தமிழ் மக்களின் எதிரிகளாக சந்தைக்காய் இரத்தக் காடாக்கும் நிதி மூலதனத்தின் ஏவல்களும், அதன் உள்நாட்டு ஏவல்களும் ஆகும். உள்நாட்டு ஏவல்கள் என்பது மகிந்த (சமரசம் செய்யப்பட்ட) மைத்திரி - ரணில் - சம்பந்தர் - சுமந்திரன் அணியாகும். எனவே தரகு அணிக்கும் தேசியத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. தரகு அணியை தேசியவாதிகளாக இட்டுக் கட்டுவதும் வரலாற்றுத் திரிபாகும்.

தேசிய இனங்களின் ஒடுக்குமுறையை தகர்க்காத ஜனநாயகப் போராட்டங்கள் எவையும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான சாத்தியமில்லை. அவ்வாறு சாத்தியம் இருப்பதாக கருதுவதென்பது கற்பனாவாத - அகவுணர்வு பார்வை கொண்ட (குட்டிமுதலாளிய) மேட்டுக்குடிவாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3.3.12 நிறுவனக்கட்டமைப்பை எதிர்ப்பது

ஆட்சியில் முழு அதிகாரத்தினையும் தமது கைகளில் வைத்துள்ள லங்கா தேசம். இலங்கையில் இன்றுள்ள ஒன்பது மாகாணங்களை மூன்று மாகாணங்களாக மாற்றுவதற்கு இலங்கை அரசிடம் ஒரு சதித்திட்டம் உள்ளதாக அறியப்படுகின்றது. இது குறிப்பாக தமிழ் தேசத்தினை பல்வேறு கூறுகளாக பிரிக்கும் திட்டத்துடன் கூடியதாகவே இருக்கும். கண்டி, கரையோரச் சிங்களவர், தமிழர் என்ற வகையில் சமஸ்ரி என்ற நிலையில் இருக்கப் போவதில்லை. அந்தக் கோரிக்கை கூட முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சி என்பது கண்டி, கரையோர முதலாளித்துவ சக்திகளிடையே சமரம் என்பது அவ்வாறான தேவையற்றதாகியது. தமிழ் தேசம் வேகமான சிங்களமயமாக்கலுக்கு உள்ளாகியிருக்கின்ற நிலையில் தமிழர் தேசத்தை பிரிப்பது சிங்களமயமாக்கலில் ஒரு அங்கம்.

இலங்கை அரசாங்கம் உள்ளூர் சபைகளுக்கான அதிகாரங்களை இல்லாதாக்குவதும், அதனை மைய ஆட்சியின் கீழ் கொண்டுவரும் திட்டத்தினை செயற்படுத்த முனைந்துள்ளது. இதன் ஆரம்பமே திவிநெகும திட்டமாகும். ஏற்கனவே சர்வவல்லமை பொருந்திய ஜனாதிபதி முறை இலங்கையில் நடைமுறையில் இருக்கின்றது. திணைக்களங்களின் ஊடாக நிர்வாகத்தை கட்டுப்படுத்த முடியும். பெயரளவிற்கு ஏனும் இருக்கும் மாகாணசபை, மாநகரசபை, நகரசபை, பட்டினசபை போன்றவற்றின் அதிகாரத்தை இல்லாதாக்கும் செயலை அரசு ஆரம்பித்து விட்டது.

கிராம அபிவிருத்திச் சங்கம் (Rural Development Society-RDS, RDO) பிரதேச செயலாளர் கிராமசேவகர் (DS)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்களை வைத்தே அரசு தனது காரியத்தை செய்ய முடிகின்றது. அதிகார வர்க்க ஆவல், நிர்வாக திறமையை மறைப்பது, பதவியைப் பாதுகாப்பது என்று அந்தரத்தில் தொங்கி இருக்கும் நபர்கள் தயாராக இருக்கின்றார்கள். குறிப்பாக இராணுவக் கட்டுப்பாடு இருப்பதால் இசைத்து போதற்கு தயாராக இருப்பதால் தமிழ் எல்லைக்கிராமம் ஒன்றில் காணி அபகரிப்பு. காணி அலுவலர், கிராம சேவகர்களை வைத்தே இலகுவாக செய்து முடிக்க முடிகின்றது. கிராம அபிவிருத்திக் குழுவில் அங்கம் வகிப்பவரை சந்தியப்பிரமாணம் செய்துதான் அங்கத்தவர் இணைக்கப் படுகின்றார். கிராமத்தில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்கள். இந்த நிர்வாக ஒழுங்குமுறையைக் கொண்டே மைய அரசு நிர்வகிக்கின்றார்கள். இவ்வகையான நிர்வாகமுறையை விளங்கி விழிப்புணர்வு ஏற்படுத்த அரசியல் வாதிகள் தயாராக இல்லை.

இவ்வாறே கொழும்பில் சுற்றியுள்ள குடிசைகளை அகற்றுவதும், மாடிவீட்டுத் திட்டத்தை மாநகர சபைக்கு உட்படுத்திக் கொள்ளாது. தனியான வீட்டு நலவாரியத்தை உருவாக்கி நிர்வகிக்கின்றது. கச்சைதீவு நெடுந்தீவு பிரதேச சபைக்கு உட்பட்டதாகும். திருநாள் வேளையில் சகல நிர்வாகக் கடமைகளை படையினரே மேற்கொண்டனர். பிரதேச நிர்வாகம், பொதுமக்களின் பொதுநிர்வாகத்துறை பங்களிப்பு என்பது அறவே இல்லாதாக் கியிருக்கின்றது. நிதி வருவாயும், முழுமையான கடற்படை கட்டுப் பாட்டிற்கு உட்பட்டதாகும்.

முதலாளித்துவ கட்டத்தில் ஏற்படுகின்ற அரசியமைப்பு வளர்ச்சியானது புதிய அதிகார நிர்வாகக் கட்டமைப்புகளை உருவாக்கிக் கொண்டு மக்களை நிர்வகிக்கின்றது. இங்கு முதலாளித்துவ நிறுவனங்களை உருவாக்குவதன் ஊடாக உள்ளூர் ஜனநாயகத்தை பெயரளவிற்கேனும் வழங்குகின்றது. இன்று அதிகாரம் மையம் கொண்டு செயற்படுவது பாசீசத்தின் உச்சத்திற்கு செல்வதை காட்டி நிற்கின்றது. முதலாளித்துவ ஜனநாயக ஆட்சியானது உள்ளூர் மட்டத்தில் அதிகாரத்தை பகிர்கின்றது. முக்கியமான சட்டம், நிர்வாகம், நீதி, நிதி, இராணுவம், நிலம் தவிர்ந்த பல அதிகாரங்களை பட்டினசபை, நகரசபை, மாநகரசபை போன்றவற்றுடன் பகிர்ந்து கொள்கின்றது. இப்போ அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை உள்ளூர் சபைகளை வெறும் கண்துடைப்பிற்கும், பொம்மைளாகவும் மாற்றப்படுகின்றது.

உள்ளூர் தேர்தலில் தெரிவு செய்யப்படுபவர்களின் அதிகாரம் பறிக்கப்படுகின்றது. இதில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களின் இருப்பை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் அமைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்வையே பேரினவாதிகள் செய்கின்றனர். ஏற்கனவே வடக்கு கிழக்கை சட்டரீதியாக பிரித்தனர். இங்கு மாகாணங்களை குறைத்து சிங்கள மக்களை பெரும்பான்மை கொண்ட மாநிலங்கள் ஆக்குவது இனத்துவ பேதங்களை அதிகரிக்கவே செய்யும். மலையக மக்களையும், தமிழ் மக்களையும் சிறுபான்மையாக்கிச் சிதைப்பாகும்.

வரலாற்று ஓட்டத்தை மையப்படுத்தியதாகவும் அரசியல் பொருளாதார வளர்ச்சிப் போக்கை கணிக்காத ஆய்வுகள், சிந்தனைகள், வெளிப்பாடுகள் தீர்வுகள் என்பது வரலாற்றில் எவ்வித புரட்சிகர பாத்திரத்தையும் கொடுக்கப்போவதில்லை. தனிமனிதர் களின் அனுபவம் என்பது அனுபவவாதமாகும் இது வரலாற்று உண்மையல்ல.

தேசிய இனங்களின் ஐக்கியம் நல்லாட்சி என்று வெளியே பிரகடனப்படுத்திக் கொண்டு தேசிய இனங்களின் சுயவளர்ச்சியை தடுக்கின்றது. ஏகாதிபத்திய முதலாளித்துவ பொருளாதார அமைப்பு நிறுவனக் (institutions) கட்டமைப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள நிர்ப்பந்திக்கும். இது ஏகாதிபத்திய காலகட்டத்தில் நிதிநிறு வனங்களின் நிபந்தனையாகும். இங்கு என்ன நடைபெறுகின்றது என்றால் தமிழர்கள் இணைந்த மாகாணசபை என்ற கட்டமைப்பை கூட இறுக்கமாக கட்டமைக்கக் கூடாது என்று சிங்கள பௌத்த பேரினவாதம் எண்ணுகின்றது. இது போலி இடதுசாரிகளும், பேரினவாதிகளும் கைகோர்க்கும் இடமாகும். சமூக வளர்ச்சிப் போக்கில் தமிழர் தேசம் தன்னை அடையாளப்படுத்தி சில பிரேரனைகளை மாகாண சபை கொண்டு வந்துள்ளது. இது நீண்ட கால நோக்கில் ஆபத்தானதாகும். சர்வதேச நீதி விசாரணை, முதலமைச்சர் நிதியம் என்று கோரிக்கையை முன்வைத்தது. இதில் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பு சரியான சிந்தித்து செயற்படுகின்றது.

சமூக பேரினவாத இடதுசாரியான ஜேவிபி "ஒரு தடவை மூர்ப்படைந்தும் மறுதடவை தற்காலிகமாக மறைக்கப்பட்டும் வளர்ந்து வந்த இப்பிரச்சினை பல்வேறு உறுதிமொழிகள், ஒப்பந்தங்கள், இனவாதம் பரவுவதற்கும் இனக் கலவரங்களின் மூலமாகவும் ஆகிய செயற்பாடுகள் காரணமாக 1980 தசாப்தங்களில் பிரிவினைவாத போராட்டம் ஆயுதப் போராட்டமாக வளர்ச்சியடைந்தது. 2009ஆம் ஆண்டு மே மாதம் பிரிவினைவாத யுத்தம் முடிவடைந்த போதிலும் அதற்கு பின்னரான கடந்த நான்கு ஆண்டுகளில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கும், தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக பிரிவினைவாதம் இன்னுமொரு வடிவத்தில் தலைதூக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. இப்போது இந்நாட்டு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அனைவரும் அந்த ஆபத்தின் முகட்டிலேயே நிற்கின்றனர்.

மக்களை தேசிய இன அடிப்படையில் படிப்படியாக பிரித்துதுண்டாடுகின்ற அதன் மூலமாக வர்க்கத்தை பிரிக்கும் திசையை நோக்கி நகர்ந்துள்ள ஆபத்தான நிலையை தோல்வியுறச்செய்து தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பும் திசையை நோக்கி, தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்ப அணுகுமுறையை எடுக்கும் திசையில், தேசியப் பிரச்சினைத் தொடர்பான ஒரு கருத்தாடலை ஆரம்பிப்பது அத்தியாவசிய மாயிருக்கிறது. “ (ஜேவிபி -தேசியப் பிரச்சினை தீர்ப்பதற்கான அணுகுமுறை)

- பிரஜைகளுக்கான உரிமை (சமவுரிமை -நிறுவனமயப்பட்ட உரிமை)
- நிவிநெகும
- கிராம பஞ்சாயத்து

என்ற மூன்று போக்குக்களை அறிய முடிகின்றது. இந்த சிந்தனை உருவாகுவதற்கான மூலத்தினை கண்டடைய வேண்டும். சிங்கள தேசம் கட்டமைக்கப்பட்ட கருத்தியல் என்பது தமிழ் தேசத்தில் உள்ளது போல அவ்வளவு பலவீனமானதல்ல. தமிழ் தேசத்தில் இருக்கின்ற சைவ- தமிழ்- வேளாளம் என்பது தேசியத்திற்கான வேர் இல்லை. அது பல அகமுரண்பாடுகளை உருவாக்கத்தின் ஊடே பலவீனப்படுத்தக் கூடியதாகவே இருக்கின்றது. தமிழ் தேசத்தினை பலவீனப்படுத்த வேண்டிய எதிர்க்கருத்தியல் வேலைகள் பல்வேறு முனைகளில் முன்னிறுத்தப்படுகின்றது.

இதன் வெளிப்பாடாக தலித்தியம்- அடையாள அரசியல் - என தன்னார்வக் குழுக்களின் ஊடாகவும் அதனை பிரபல்யங்களின் ஊடாகவும் ஊக்குவிக்கப்படுகின்றது. தன்னார்வத் தொண்டு ஊழியர்களின் செயற்பாடுகளை இட்டு தமிழ் தேசம் விழிப்பாக இருக்க வேண்டிய தேவையுள்ளது.

தமிழ் தேசத்தின் ஆட்சியதிகாரத்திற்கான போராட்ட வளர்ச்சி என்பது வர்க்கத்தின் வளர்ச்சிப் போக்கிலும் அது சர்வதேச ரீதியிலான வர்க்கப் போராட்டத்தின் ஒரு அம்சமாக இருப்பதே அதன் முற்போக்குப் பாத்திரமாகும். இந்தப் போக்கிற்கு எதிரான தரகு வர்க்கத்தின் வங்குரோத்துத், தேர்தல் நலன் என்பது தமிழ் தேசத்தின் உரிமைக்கான போராட்டத்திற்குச் சம்பந்தம் இல்லை. ஆனால் புலிகளின் பின்னரான அரசியல் வெளியில் முற்போக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையை நோக்கிச் செல்லத்தக்க அமைப்பு இல்லை என்பது தமிழ் தேசத்திற்கான பின்னடைவாகும்.

பேரினவாதத்தின் இந்த கடைந்தெடுத்த பிற்போக்கு நிலையான கருத்துருவாக்கமாகும். இது ஒரு தேசத்தின் அழிவின் மேல் மாளிகை கட்ட முயற்சிக்கும் ஒடுக்குமுறை அரசியல் தான். இந்த வகை அரசியல் வெளிப்பாடுகள் என்பது பெருந்தேசிய மையவாதச் சிந்தனையை தொடர்வதாகும் பிரஜைகளுக்கான உரிமை (சமவுரிமை) - நிவிநெகும- கிராம பஞ்சாயத்து என்ற மூன்று வடிவங்களும் மகிந்த சிந்தனையில் வெளிப்பாடேயாகும். நிறுவனமயப்பட்ட உரிமையை கொடுக்கும் என்பது கூட லங்கா என்ற கட்டமைப்புக்கள் பஞ்சாயத்து மாதிரியான வடிவஅமைப்பிற்கு அப்பால் செல்ல முடியாது. இது போலி இடதுசாரியம் முன்னிறுத்தும் உலகம் அழியும் காலத்தின் போது உங்களுக்கு சுயாட்சி வழங்கப்படும் என்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தைப் பற்றி மூன்று வகை நாடுகள்!!!!

---

'முதலாவதாக, மேற்கு ஐரோப்பாவின் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்த நாடுகளில் முற்போக்கான முதலாளித்துவத் தேசிய இயக்கங்கள் நெடுங்காலத்துக்கு முன்பே முடிந்து விட்டன. இந்த "மாபெரும்" தேசங்களில் ஒவ்வொன்றும் தங்களுடைய நாட்டுக்குள்ளேயும் காலனிகளிலும் மற்ற தேசிய இனங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய ஆட்சி செய்கின்ற தேசங்களில் உள்ள பாட்டாளி வர்க்கத்தின் கடமைகள், பத்தொன்பதாம் நூற்றாண்டில் அயர்லாந்தைப் பொறுத்தவரையிலும் இங்கிலாந்தின் பாட்டாளி வர்க்கத்துக்கு விதிக்கப்பட்ட அதே கடமைதான்.

இரண்டாவது, கிழக்கு ஐரோப்பா, ஆஸ்திரியா, பால்கன்கள் மற்றும் குறிப்பாக ருஸ்யா. இங்கே முதலாளித்துவ- ஜனநாயகத் தேசிய இயக்கங்களைக் குறிப்பிடத்தக்க விதத்தில் வளர்ச்சியுறச் செய்து தேசியப் போராட்டத்தைத் தீவிரமாக்கியது இருபதாம் நூற்றாண்டே. இந்த நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளை- முதலாளித்துவ- ஜனநாயகச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுதல், மற்ற நாடுகளில் சோசலிஸ்டுப் புரட்சிக்கு உதவி செய்தல் ஆகிய இரண்டையுமே- தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்காமல் நிறைவேற்ற முடியாது. ஒடுக்கும் தேசிய இனங்களின் தொழிலாளர்களின் வர்க்கப் போராட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்படுகின்ற தேசிய இனங்களில் உள்ள தொழிலாளர்களின் வர்க்கப் போரட்டத்தோடு ஒன்று சேர்ப்பது தான் இதில் மிகக் கடினமான கடமை- மிக முக்கியமான கடமையாகும்.

மூன்றாவதாக, சீனா, பாரசீகம் மற்றும் துருக்கியைப் போன்ற அரைக் காலனி நாடுகள் மற்றும் எல்லாம் காலனிநாடுகளும். இவை மொத்தம் ஆயிரம் மில்லியன் சனத்தொகையைக் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகளில் முதலாளித்துவ - ஜனநாயக இயக்கங்கள் அநேகமாகத் தொடங் கவில்லை அல்லது அவை இன்னும் நெடுந்தூரம் போக வேண்டியிருக்கிறது. எல்லாக் காலனிகளுக்கும் நட்ட ஈடு இல்லாமல், நிபந்தனையற்ற வகையில் உடனடியாக சுதந்திரம் அளிக்க வேண்டும்- இந்தக் கோரிக்கையின் அரசியல் அர்த்தம் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை- என்பதைக் கோருவதோடு சோசலிஸ்டுகள் நின்றுவிடக் கூடாது. இந்த நாடுகளின் தேசிய விடுதலைக்கான முதலாளித்துவ- ஜனநாயக இயக்கங்களில் உள்ள அதிகப் புரட்சிகரமான சக்திகளுக்கு உறுதியான ஆதரவு கொடுக்க வேண்டும். தங்களை ஒடுக்கிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு எதிராக அவைகளின் ஆயுதந் தாங்கிய எழுச்சிக்கு அல்லது புரட்சிகரமான யுத்தத்துக்கு - அது ஏற்படுமானால்- உதவி செய்ய வேண்டும். (லெனின் 1916 மாசி பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 சிறுபான்மை தேசிய இனம் அல்ல அது ஒருதேசமே!!!

இந்த உலகின் அரசியல் போக்கினை விளங்கிக் கொள்வதில் இருந்து கோட்பாடு வகுப்பது மற்றையது சமூக அமைப்பும் எவ்வாறு இருக்கின்றது. அதனை சமூக விஞ்ஞான ரீதியாக ஆராய்வதன் அடிப்படையில் இருந்து தான் விடயங்கள் முன்வைக்கப்படும், முன்வைக்க முடியும். தனிமனிதர்களின் விளக்கம், நம்பிக்கை அல்லது அகவுணர்வு சார்ந்த நிலையில் வெளிப்படுவது சமூக விஞ்ஞானப் பார்வையற்ற அரைநிலமானிய பெருமைக்கு உட்பட்டதாகும். சமூகத்தின் சிந்தனை வடிவம் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் பெறாதவரையில் மாற்றத்திற்கு உள்ளாக முடியாது. இங்கு சமூக விஞ்ஞான ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்தும் போது ஒவ்வொருவரின் அரசியல் உலகக் கண்ணோட்டம் என்பதே வெளிப்பாடுகளை நிர்ணயிக்கின்றது.

சில விடயங்களுக்கு ஒரு கேள்வி பதில் என்று எதுவும் கொடுக்க முடியாது. சமூகத்தினை ஆராய்வது என்பது சமூகத்தின் அனைத்து தளங்களுக்கும் சென்று அனைத்தையும் கேள்விக்கு உட்படுத்தி ஆராய வேண்டும். சமூகத்தின் அனைத்து தளங்களுக்கும் சென்று ஆராயாது மேலோட்டமாக பார்ப்பது பொதுப்புத்திக்கு உட்பட்டதாக இருக்கின்றது. சமூகத்தின் சிந்தனைப் போக்கு, அரசியல் ஓட்டம் என்பதை பொதுப்புத்தியில் இருந்து அறிவதுதான் வழமையாக உள்ளது.

ஒரு பொருளைப் பற்றிய வியாக்கியானம் அறிவு மட்டத்தில் அமைந்துள்ளது. இவை எண்ணக் கருத்தாக இருக்கின்ற போது அதற்கு மாற்றாக மறுஆய்வுரை வைத்து மாற்றுக் கருத்தைக் கொடுக்க முடியும். சமூகம் முரண்பாடுகள் சமூக மட்டத்தில் சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அமைப்பில் இருந்து தான் சமூகத்தின் தன்னை எந்த நிலையில் இருந்து எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதை வெளிப்படுத்தும் ஆய்வுமுறைக்கு உட்பட்டதாகும்.

இந்த வகையில் பெருந்தேசிய வெறியும் குறுந்தேசியமும் ஒன்றல்ல. தேசியஇனத்தின் முதலாளித்துவ ஜனநாயக புரட்சிக் காலத்தில் எவ்வகையான போக்கு இருக்கின்ற என்பதை வைத்தே ஆய்வில் முடிவிற்கு வரமுடியும். பழைய உற்பத்தி முறைக்கான சமூகத்தின் தேவை மாறி பொருளாதார எல்லைகளை ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது. இவ்வாறான வளர்ச்சிப் போக்கில் தேசிய இனங்கள் தேசமாக வளரும் என்பது இயங்கியல் ரீதியான வர்க்க ஆய்வின் வெளிப்பாடாகும். தேசிய இனம் என்பது தேசமாக வளரும், தேசியத்தின் முதலாளித்துவ ஜனநாயகத்தை மறுத்துவிட முடியாது. அது ஏன் பிரிவினைவாதம் இல்லை, ஏன் தேசிய வெறிக்கு உட்பட்டது இல்லை என்பதை அறிய வேண்டுமானால் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி பற்றி அறிதல் என்பது அவசியமானதாகும்.

சிங்கள பௌத்த நிலமானிய சமூக உறவு முழுமையாக சிதைவடைந்து விட்டதா? ஏன் நடிக்கின்றீர்கள்?

ஒரு விடயத்தை நிறுவ வேண்டுமானால் எண்ணக் கருத்தாக இருக்கின்ற போது அதற்கு மாற்றாக மறுஆய்வுரை வைத்து மாற்றுக் கருத்தைக் கொடுக்க முடியும். இதனை நிறுவ வேண்டும் என்றால் அதனை தரவு ரீதியாக நிறுவ வேண்டும். மேம்போக்காக அல்லாமல் சமூக முரண்பாடுகள் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தில் மேல் கட்டப்பட்ட சமூக அரச இயந்திரம் என்பதை அறிவதன் ஊடாகவேயாகும். உயர்ந்த சிந்தனை - ஜனநாயக வடிவம் கொண்ட சமூகத்தை உருவாக வேண்டும் என்று விரும்புவதும், இவ்வாறான வடிவமாகத் தான் இருக்கும் வேண்டும் என்பதும் எல்லோருடைய அகவிருப்பாக இருக்க முடியும். ஆனால் அந்தச் சமூகத்தை அடைவதற்கு நீண்ட பாதையைக் கடந்து செல்ல வேண்டும், நீண்ட நெடிய போராட்டம் தேவையானது, இதனை குறுக்குவழியில், குறுகிய காலத்தில் அடைந்து விடலாம் என்பது சமூகப் போக்கை விளங்கிக் கொள்ள முடியாத கற்பனாவாதிகளாகத் தான் முடியும். வர்க்கங்களின் வளர்ச்சிப் போக்கில் பயன்படுத்தப்படும் வரைவிலக்கணங்கள் என்பது அந்தந்த பொருளாதார அமைப்பிற்கு ஏற்பவும், தனித்தன்மை வாய்ந்ததாகவும் இருக்கும். இவ்வாறே மூலவர்கள் வளர்ச்சிப் போக்கில் குறிப்பான ஜனநாயக தேசிய இயக்கங்களின் வளர்ச்சியினை குறிப்பிட தேசிய வெறி, தேசியப் பெருமிதம் போன்ற சொல்லாடல்கள் பயன்படுத்தியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.1 ஏகாதிபத்தியங்களை எதிர்ப்பது பற்றி

தேசியவாதம் என்ற சொல்லாடல்கள் பொருளாதார அமைப்பையும் அரசியல் போக்கையும் நிர்ணயிக்கின்றதாக இருக்கின்றது. ஏகாதிபத்திய காலகட்டத்தில் எழும் மூலதனத்திற்கு எதிரான போராட்டங்கள் என்பது தேசிய- சுதேசிய பண்பைக் கொண்டு எழுவதும் நடைபெறுகின்றது. அவை ஏகாதிபத்தியத்தினை எதிர்த்து நிற்கின்றது. இங்கு தேசிய வாதம் பேசுகின்ற போது பிற்போக்கானதாக கட்டமைக்கப் படுகின்றது.

தேசியக் கோசங்களை திட்டமிட்டு சிதைக்கின்றது. இங்கு முரண்பாடு கொண்ட சமூகத்தில் முரண்பாடுகளை மறுத்துக் கொண்டு கறுப்பு - வெள்ளை என்ற இரண்டைப் போக்கு மாத்திரம் உள்ளதாக இட்டுக் கட்டுகின்றது. இது குறிப்பாக சோவியத்தின் வீழ்ச்சியின் பின்னரான உலக அரசியல் அரங்கில் ஏற்பட்ட கருத்துருவாக்கத்தின் தாக்கம் புரையோடிப் போய் உள்ளது. இதிலும் குறிப்பாக 9-11 பின்னராக ஒன்று சாத்தானின் பக்கம் அல்லது நல்லவர்கள் பக்கம் என்ற போக்கினை ஒத்திசைவிற்கு ஏற்பவே கருத்துருவாக்கிகளின் செயற்பாடு இருந்து வந்துள்ளது.

ஏகாத்தியத்தின் சுரண்டலுக்கு எதிரான போராட்டங்களை எதிர்ப்பதே உயர்ந்த மனிதத்துவமாக காட்டிக் கொள்வதை பெருமையாகக் கொள்கின்றார்கள். ஏகாதிபத்திய சதிக்கு துணைபோகும் பின்னவீனத்துவ சிந்தனைப் போக்கே இருக்கின்றது. தேசியக் கோரிக்கை என்பது ஏகாதிபத்திய காலகட்டத்தில் முதலாளித்துவக் கோரிக்கையாக முன்வைப்பது காலங்கடந்த கோட்பாடாகும். தேசிய- சுதேசியத்தை எதிர்த்துக் கொண்டு பெருந்தேசியவாதத்தினையும் நிதிமூலதனத்திற்கு எதிரான போக்கை திட்டமிட்டு திசை திருப்புகின்றது. ஏனெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியம் தேசிய முதலாளித்துவ சந்தையை மறுக்கின்றது. அதற்கு எதிரான எதிர்வினையாற்ற வேண்டியிருக்கின்றது.

அரைநிலப்பிரபுத்துவ சமூகச் சிந்தனையில் இருந்து வெளிப்படும் தேசியக் கோசங்களில் உள்ளதை முதலாளித்துவ-தாராளவாத சிந்தனை மையச் சிந்தனையின் அடிப்படையில் இருந்து அளவிடுவது என்பது அபர்த்தமானதாகும். முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடத்தி முடிக்கப்படவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். இன்று குறிப்பாக இந்துத்துவா தேசியவெறி, வலது தேசிய வெறியும் ஒடுக்குமுறைக்கு எதிரானதையும் ஒன்றொன்றுக்காக இணைத்துவிடும் போக்கு உள்ளது. இங்கு தனிமனிதர்களின், குறிப்பிட்ட வர்க்கத்தின் அகவுணர்வுப் போக்கும், வர்க்கங்களின் வளர்ச்சிப் போக்கில் உருவாகும் முரண்பாடுகளும் ஒன்றல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2 தோழர் லெனினின் இயங்கியல் முடிவு

நிலப்பிரபுத்துவக் கட்டம் முற்றுப்பெற்று தொழிற்துறை வளர்ச்சி ஏற்பட்ட தேசிய இனங்களின் எழுச்சியையும், பின்னர் தொழிற்துறை வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்த பிரதேசங்களில் ஏற்பட்ட தேசிய இன எழுச்சியையும், பின்னர் ஏகாதிபத்திய காலகட்டத்தில் உருவாகின்ற தேசிய இனங்களின் ஜனநாயக இயக்கம் பற்றி தோழர் லெனின் விரிவாக வரையறுக்கின்றார்.

பொருளாதார வளர்ச்சி என்பது தேசிய இயக்கங்கள் உருவாகும் என்பது தனியே கொலனித்துவத்தின் மீதான எழுச்சி மாத்திரம் அல்ல என்பதை தோழர் லெனின் சரியாகவே வரையறுக்கின்றார், --In these countries the bourgeois-democratic movements have either hardly begun> or are far from having been completed. -https://www.marxists.org/archive/lenin/works/1916/jan/x01.htm இந்த நாடுகளில் முதலாளித்துவ - ஜனநாயக இயக்கங்கள் அநேகமாகத் தொடங்கவில்லை அல்லது அவை இன்னும் நெடுந்தூரம் போக வேண்டியிருக்கிறது.--- இங்கு லெனின் தேசிய இனங்கள் தேசத்திற்கான பண்பைக் கொண்டு வளர்ச்சியடைந்துள்ளது அல்லது வளரும் என்று வரையறுக்கின்றார்.

முதலாளித்துவப் புரட்சி நடைபெற்று விட்ட நிலையில் தான் பிரரெஞ்சு அரச வம்சம் வீழ்த்தப்பட்டது. இதன் மாதிரி முதலாளித்துவம் வளர்ந்து வரும் நாடுகளில் பின்னரே வளரும் இதுதான் இயங்கியல் பொருள்முதல்வாதம் இதுதான் அடிப்படை.

இலங்கையில் வரலாற்று ரீதியாகவே இரண்டு தேசங்களாக வளரக் கூடிய ஆற்றல்வளம் கொண்ட தேசிய இனங்கள் இருந்துள்ளது. அவைகள் முதலாளித்துவ வளர்ச்சியினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசங்களைக் கொண்ட பொதுப்பண்புடன் வளர்கின்றது. கொலனித்துவ ஆட்சிகளால் அழைத்து வரப்பட்ட மலையக மக்கள் என்பார் புதிய தேசியஇனமாக ஆகின்றார்கள். இவ்வாறே பாரம்பரியமாக வாழ்ந்து வந்த (இதில் வர்த்தக ரீதியான இடம்பெயர்ந்தவர்கள் ஒன்றிணைந்தும் உள்ளது) தமிழ் பேசும் முஸ்லீம்களின் அடையாளம் என்பது பாதுகாக்கப்பட்டு தன்மை தனிஅடையாளம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

தெற்கில் வாழும் முஸ்லீம் தரகு வர்க்கத்தின் அரசியல் அபிலாசைகளுக்காக பலியிடப்படுவது வடக்கு கிழக்கு முஸ்லீம்கள். தெற்கில் பெரும்பான்மையாக வாழும் நிலையில் அங்கு தீவிர முனைப்பை காட்டாது வடக்கு கிழக்கில் கவனம் கொள்வது பற்றி சிந்திக்கப்பட்டே வந்துள்ளது. தரகு வர்க்கம் மத உணர்வு ஒன்று என்ற நிலையில் அரசியல் தேவை தீர்மானிக்கப்படுவதில்லை. வர்க்கங்களின் தேவைதான் அரசியல் வெளிப்படும். தேர்தல் அரசியல்வாதிகள் தமது நலத்தின் அடிப்படையில் தெற்குப் பிரச்சனையை வடக்கு கிழக்குடன் முடிச்சுப் போடுவது நடந்துள்ளது. வடக்கு கிழக்கில் நடைபெறும் ஆக்கிரமிப்பு அது வேறு வடிவத்தில் தொடர்கின்றது.

ஈழத்தில் முஸ்லீம்கள் தனியானவர்கள் என்று உணர்கின்றார்கள். தமிழகத்தைப் போல முதலாளித்துவ ஜனநாயக மரபிற்கு உட்பட்ட சமூகம் அல்ல. தமிழகம் தந்தை பெரியார் பிறந்து பூமி அவர்கள் ஆற்றிய செயற்பாடுகள் மதங்களை கடந்து தமிழ் தேசிய இனமாகவும் தமிழ் தேசத்தவர்களாக இணைத்து விட்டது. தனியடையாளத்தினை முன்னிறுத்துவதற்கு தமிழ் மக்களின், முஸ்லீம் மக்களிடையே உள்ள அரைநிலமானியச் சிந்தனையும், அவர்களின் வளங்கள் பற்றிய மோதல் என்பது தமிழ் ஒன்றிணைந்த தேசத்தவர்களாக உருவாக முடியவில்லை. இந்த போக்கில் இருந்து தான் பார்க்கப்பட வேண்டும். தனியே யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றியது மாத்திரம் காரணம் அல்ல. 3இல் 2 பகுதியின் தெற்கில் வாழ்கின்றவர்கள் தெற்கு உயர் வர்க்க நலன் கொண்ட அரசியல், மதம் என்பன தேர்தல் அரசியலுக்கு பயன்பட்டு பிரிவினை அதிகரித்துள்ளது. இதேவேளை பிரிவினைவாதத்தினை சிங்கள ஆளும் வர்க்கம் தன்தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டது.

தமிழ் பேசும் முஸ்லீம்கள், தமிழர்களிடையேயுள்ள அரைநிலமானிய சிந்தனை உடைக்கப்படும் போது தமிழ் தேசத்தவர்களாக அடையாளம் காண நீண்ட போராட்டம் நிபந்தனையாக உள்ளது. இந்த நிலையைக் கடப்பதற்கு நீண்ட பயணம் செல்ல வேண்டியுள்ளது. இது புதிய சனநாயகப் புரட்சியும் கடந்து சோசலிச அரசின் ஊடாகவே சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் - சிங்கள என ஆற்றல்வளம் கொண்ட தேசிய இனங்கள் தேசமாக வளரும் கட்டத்தில் இருந்தது. சிங்கள தேசம் பெரும்பான்மை என்ற எண்கணக்கில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. இந்த வகையில் தான் இலங்கை என்பது ஒரு நாடு இரண்டு தேசங்கள் என்று வரையறுக்கப்படுகின்றது. லங்கா என்ற பெருந்தேசியம் இன்னொரு தேசத்தினை (ethnic - national minority) சிறுபான்மை தேசியயினம் என்று கொள்கின்றது. தமிழர் சிறுபான்மை தேசிய இனத்தவர்கள் என்று இடது சந்தர்ப்பவாதிகள் உட்பட பெருந்தேசிய வெறியர்கள் ஒப்புவிக்கின்றார்கள். தமிழர் தேசமாக வரையறுத்து பேசுவதை விடுத்து பெரும்பான்மையினர் சிறுபான்மை என்றே வரையறுக்கின்றார்கள். தேசம் பற்றிய புரிதலை அற்று சிறுபான்மையினம் என்று படித்தவர்கள் தொட்டு பாமரர் வரையில் பயன்படுத்தப்படும் சொல்லாகின்றது. ஆனால் ஜனநாயகக் கோரிக்கையைக் கொண்ட போராட்ட வடிவத்தில் சரியான வரைவிலக்கணம் பயன்படுத்த வேண்டியது அவசியமாகும். தமிழ் தேசத்தவர்களை சிறுபான்மையினர் என்று அழைப்பது தவறான வரைவிலக்கணமாகும்.

தமிழ் தேசத்தின் போராட்ட வரலாற்றை அறிகின்ற போது

1. 1984களில் சமரன் அமைப்பு தமிழர்கள் தேசம் என்று வரையறுத்துள்ளார்கள். http://samaran1917.blogspot.no/2009/03/blog-post_17.html> கட்டுரை உள்ளது.

2. http://padippakam.com/document/NLFT/nlft0007.pdf>(pdf-page 3) NLFT தமிழர்களை தேசமாக குறிப்பிடப்படுகின்றது.

3.http://padippakam.com/document/EPRLF/Publications/eprlfPub1.pdf>(pdf- page 10) தேசமாக குறிப்பிடப்படுகின்றது.

4. திம்புக் கோட்பாட்டில் தேசியம், தன்னாட்சி, தாயகம் என்று வரையறுக்கின்றது. இது தேசத்தின் வரைவைக் கொண்ட பண்பாகும். (மலையக மக்களின் வாக்குரிமை என்ற கோரிக்கை அடங்கும்)

திம்புக் கோரிக்கையில் உள்ள 3 அம்சங்களும் தேசத்தின் பண்பை முன்னிறுத்துகின்றது. இந்த வகையில் 1985களில் தமிழர் ஒரு தேசத்தவர்கள் என்று வரையறுத்துள்ள அமைப்புக்களும் உண்டு. முள்ளிவாய்க்கால் வரையில் (de facto Government) ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைக் கொண்டு தாம் தேசத்தின் உரிமைக்காக போராடியவர்கள் என்ற வரலாற்றும் உண்டு.

தமிழர் தேசம் என்று கூறுவது என்பது ஏதோ இன்று கண்டுபிடித்த ஒரு சொல் அல்ல. ஆனால் தமிழ் தேசத்தின் ஆக்கிரமிப்பு போலிச் சுதந்திரத்திற்குப் பின்னரே அரச அதிகாரத்தை கொண்டு ஒடுக்குதலுக்கு ஆளாகிவந்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் தேசத்தின் இருப்பும் வாழ்வும் என்பது ஆக்கிரமிப்பு உள்ளாகியிருக்கின்றது. இது மிகைப்படுத்திய அரசியல் பார்வையாக குறுக்குவது அபர்த்தமாகும்.

ஒரு விடயத்தை நிறுவுவது என்பது வேறு பரீட்சையில் கணக்கை சோதனையை திருத்தும் முறையில் அல்ல. கணக்கில் ஏற்கனவே பதில் இருக்கும் ஏற்கனவே இருக்கின்ற முடிவிற்கு ஏற்ப செய்து முடிக்கப்பட வேண்டும்.

ஒரு விடயத்தை வாசித்துவிட்டு ஏற்கனவே இருக்கின்ற விடைக்கு திருத்துவது போல வலது தேசியவாதம், தேசிய வெறி, தேசியவாதம் என்று குறுக்கி முத்திரை குத்துவதாகும்.

சமூக வளர்ச்சிப்போக்கை விஞ்ஞான ரீதியாக விளங்கிக் கொள்வது என்பது வேறு முன்னையை நிலைப்பாடுகளை அப்படியே பின்பற்றுவது என்பது வேறு. இவை இரண்டிற்கும் இடையே வித்தியாசம் உள்ளது. ஒரு விடயத்தை அப்படியே ஏற்பது என்பது வேறு. இங்கு மூன்று வகை தேசங்கள் பற்றி லெனின் வரையறுக்கின்றார். அந்தப் பந்தியை வியாக்கியானம் (interpret) செய்தலும் அதனை அப்படியே பின்பற்றுவதும் வேறு.

லெனின் என்ன சொல்கின்றார்? அவர் வரலாற்றுப் போக்கை வகைப்படுத்துகின்றார்.

அவர் எழுதுவது செயற்தந்திரமே, யுத்த தந்திரமோ அல்ல. சுயநிர்ணயம் என்பது பிரிந்து செல்வதா, சேர்ந்திருப்பதா யுத்த - செயற்தந்திரத்திற்கு உட்பட்டது. (அடுத்தது சுயநிர்ணயம் என்பது என்ன என்று விளங்கியும் இருக்கவேண்டும். சிலர் அதிகாரப் பகிர்வைத் தான் சுயநிர்ணயம் என்று வரையறுக்கின்றார்கள். இது ஒருபுறமிருக்க)

லெனின் இயங்கியல் பொருள்முதல்வாதத்தினை முன்வைக்கின்றார். இதனை விளங்கிக் கொள்ளாவிடின் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையை விளங்கிக் கொள்ள முடியாது.

ஒன்றை வியாக்கியானம் செய்வதற்கும் பேராசன்கள் கூறியதை அப்படியே பொருத்துவதற்கும் வித்தியாசம் உள்ளது. தோழர் லெனின் கூற்றை (interpret) வியாக்கியானம் செய்ய மார்க்சியத்தின் மூன்று தோற்றுவாய்களும் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் விளக்க போதுமானது - இது கற்றுத் தரும் அணுகுமுறையைக் கொண்டு சமூகத்தினை ஆராயந்து கொள்ள முடியும்.

மார்க்ஸ்- லெனின் கோட்பாட்டு அணுகுமுறை மாறானது அது வழிகாட்டும், ஆனால் கோட்பாடுகள் வளர்ந்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார சூழலுக்கு ஏற்ப மாறுபடுகின்றது. இதனால் மார்க்ஸ் - லெனின் போன்றவர்கள் வந்தடைந்த கோட்பாடு மாற்றமடைகின்றது.

லெனின் ஒவ்வொரு நாட்டவர்களும் சொந்தக் கோட்பாட்டை வகுக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். தோழர் லெனின் கூறியதை வியாக்கியானம் செய்வதன் ஊடாகவே புதிய இலங்கைக்கான யுத்த - செயற்தந்திரத்தை வகுக்க முடியும். இன்றைய சிந்தனைப் போக்கு என்பதை தனிமனிதர்கள் தீர்மானிப்பது இல்லை. இன்றைய உலகப் போக்கு என்பது பின்னவீனத்துவ ஆய்வுமுறைக்குள் சிக்குண்ட போக்கும், அது சமூக அமைப்பினை மொத்தத்துவமான (holistic approach) பார்வையில் ஆய்வதற்குப் பதிலாக ஆய்வுக்குறுக்கல்வாதத்தினை முன்றுத்துகின்றது.

சுயநிர்ணயம் பற்றி குறிப்பாக 1905 பின்னரான தெளிவு என்பது தோழர்கள் லெனின், ஸ்ராலின் போன்றோர்கள் மார்க்சியத்தினை அடுத்த கட்டத்திற்கு வளர்த்துச் சென்ற பணியைச் செய்தார்கள். இதை வலதுசாரி பிற்போக்கு தேசியவாதத்தினை இணைத்து முடிச்சுப் போடுவது வரலாற்றுக் குருட்டுவாதமாகும். வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் அமைகின்ற சமூக அமைப்பு வடிவங்களை விளங்கிக் கொள்ள வேண்டும்.

தேசம் பற்றிய வரையறையை தோழர் ஸ்ரானின் முன்வைத்தார். லெனின் சுயநிர்ணயம் பற்றிய கோட்பாடு முன்வைத்தார் 1916களில் உலக வர்க்கப் போராட்டங்களின் வளர்ச்சிப் போக்கை தேசங்கள் எல்லைகள் கொண்ட நாடுகளாக பரிணமிப்பதையும், தேசங்கள் தமக்குள் இணங்கி ஒரு நாட்டுக்கள் அடங்குவதையும் வரலாற்று ஓட்டத்தில் சரியாகவே விளங்குகின்றார். இந்த ஆய்வு என்பது ஏகாதிபத்திய காலகட்டத்தில் தேசிய இனங்களின் ஜனநாயக எழுச்சி ஏற்படும் என்ற கூற்று என்பதை மறுத்து நிறுவிட முடியாது. இங்குதான் லெனின் தொழிற்துறை வளர்ச்சியடைந்து கொண்டிருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சுயநிர்ணயம் பற்றி வெவ்வேறான முடிகள் எடுத்திருந்தார்கள்.

இங்கு லெனின் கூறுகின்ற தேசிய இயக்கங்கள் உருவாகும் என்பது ஏகாதிபத்திய காலத்திற்கானது. அவர் சரியாகவே வரையறுக்கின்றார், --In these countries the bourgeois-democratic movements have either hardly begun or are far from having been completed. - இந்த நாடுகளில் முதலாளித்துவ - ஜனநாயக இயக்கங்கள் அநேகமாகத் தொடங்கவில்லை அல்லது அவை இன்னும் நெடுந்தூரம் போக வேண்டியிருக்கிறது.

தேசிய இனங்களின் முரண்பாடுகள் என்பது தனியே கொலனித்துவத்தின் காரணமாகத் தான் உருவாகியது என்பது பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடு மாத்திரம் தான். தேசங்களாக பரிணமிக்கக் கூடிய ஆற்றல்வளம் கொண்ட தேசிய இனங்கள் அவர்கள் விருப்பில்லாமல் இணைக்கப்பட்டது. பின்னர் போலிச் சுதந்திரத்தினை (தரகு வர்க்கம் உள்நாட்டில் முன்னைய கொலனி நாடுகளின் நலனை தொடர்ந்து பாதுகாத்து வந்துள்ளது) அறிவித்துவிட்டுச் சென்றது போது தேசிய இனங்களின் விருப்பை பெறாமலே இணைத்து விட்டுச் சென்றது. இங்கு பெருந்தேசியத்தில் இருந்து ஆளும் வர்க்கத்தின், உயர்வர்க்கத்தின் முரண்பாடுகள் என்பது பதவியை பிரித்துக் கொள்வதில் ஏற்படுகின்றது. இது ஆளும் வர்க்கத்தில் யார் மக்களை அடக்கியாள்வது என்ற தேர்விற்கு உட்பட்டதாகும். இது வர்க்க நலனில் ஆட்சியை கையகப்படுத்தும் நோக்கமாகும். வர்க்க முரண்பாடுகள், கொலனித்துவத்தின் அரசியல் போக்கு, தேசிய இனம் தேசமாக வளரும் என்ற அனைத்தையும் சேர்ந்தே ஆராயப்படவேண்டும்.

இதை விளங்கிக் கொள்ளாவிடின் ஒரு அடி முன்னேற முடியாது. 1916களில் லெனின் எழுதினாலும் இங்கு தேசிய இனங்கள் தேசங்களாக வளரும் என்பதைத் வெளிப்படுத்துகின்றார். அதாவது முதலாளித்துவ - ஜனநாயக இயக்கங்கள் அநேகமாகத் தொடங்கவில்லை அல்லது அவை இன்னும் நெடுந்தூரம் போக வேண்டியிருக்கிறது என்கின்றார். தென் கிழக்காசியாவில் பெரும்பான்மை நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடந்து முடியவில்லை.

கொலனித்துவவாதிகளினால் நிர்வாக நலனுக்காக இணைக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்த தேசிய இனங்கள் தேசத்தின் பண்பைக் கொண்டு வந்தது. இந்த நிலையில் 1920களில் முதலில் தமிழ் தேசத்தின் அரசியல் அபிலாசைகள் பற்றி பொன் அருணாசலத்தினால் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் தரகு வர்க்கத்தின் அரசியல் வறுமை என்பது சரணடைவிற்கும், காட்டிக் கொடுப்பிற்கும் உள்ளாகியது. தேசிய இயக்கத்தின் வளர்ச்சி என்பது பூர்சுவா- குட்டிமுதலாளிய அமைப்பாகிய புலிகளின் தலைமையைப் பெற்றுக் கொண்டது. இது தான் வர்க்கப் போராட்டத்தின் இயங்கியல் வளர்ச்சியாகும். வர்க்கப் போராட்டம் பற்றிய புரிதலைப் பெறுவதற்காக 100 வருடங்களுக்குப் பின்னால் சென்று வர்க்க ஒற்றுமை இருந்தது என்றும், அதனை "இனவாதிகள்" பாழாக்கி விட்டனர் என்பதெல்லாம் இயங்கியல் மறுப்பாகும். தேசிய இயக்கம் துயிலெழலையும், சுதந்திர அரசுகள் அமைவதையும் மறுத்துவிட்டுச் சென்றுவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.3 தமிழ் தேசத்தின் போராட்டம்

தமிழ் தேசத்தின் போராட்டம் என்பது ஆயுதப் போராட்டமாக பரிணமித்த பின்னர் இடதுசாரிய அரசியல் ஆதிக்கம் ஏற்பட்டது. அந்த வேளையில் தமிழ் தேசத்தின் போராட்டம் என்பது தென்கிழக்காசியாவில் புரட்சிக்கான முன்னுதாரனாமாகவும், தமிழ் தேசத்தின் வெற்றி என்பது தென்கிழக்காசியாவில் உள்ள அடிமைத்தனத்தை உடைத்தெறியும் என்று கட்டியம் கூறப்பட்டது. அன்றைய இடதுசாரிகள் சோவியத் என்ற சமூக ஏகாதிபத்தியத்தினையும், இந்தியாவையும் நண்பர்கள் என்று கற்பனை செய்திருந்தார்கள். இந்த நிலையில் தான் இந்திய விஸ்தரிப்புவாத அரசியலை விளங்கிக் கொள்ள வங்கம் தந்த பாடத்தை முன்வைத்தனர். இதில் பிராந்திய வல்லரசு நண்பனா இல்லையாக என்ற சிந்தனைக் குழப்பத்தில் இயக்கங்கள் இருந்துள்ளது.

ஆனால் குட்டி முதலாளிய இடதுசாரியப் போக்கு வீழ்த்தப்பட்டு குட்டிமுதலாளியக் பூர்சுவா வர்க்கத்தவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டமானது முள்ளிவாய்க்கால் வரையில் கொண்டு வந்து விட்டது. இன்று தமிழ் தேசத்தின் போராட்டத்தினை தரகு வர்க்கத்தின் தலைமை ஏற்றுள்ள இன்றைய நிலையில் உள்நாட்டு ஆட்சியாளர்களுக்கும், வெளிநாட்டு ஆதிக்க சக்திகளின் நலனுக்கான சேவை செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இந்தப் போராட்டத்தினை 30 வருடங்களின் பின் அதன் சாரத்தினை விளங்கிக் கொள்கின்ற போது முக்கியமானதாக இருக்கின்றது. தேசத்திற்கான போராட்டம் என்பதே அடிப்படையில் பழைய உற்பத்தி முறையை மாற்றியமைக்கின்ற போராட்டம் என்பது தான் அடிப்படையான சாரமாகும். 'இதுநாள் வரையிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறேயாகும்" என்பதை இங்கு பொருத்திப் பார்ப்பது முறையாக இருக்கும். நிலமானிய உற்பத்தியின் சிதைவுடன் தேசங்களின் பண்பைக் கொண்ட தேசிய இனங்களின் போராட்டங்கள் வளர்ச்சி பெறுகின்றது. இந்த வகையில் பழைய உற்பத்தி முறையை மாற்றியமைக்கின்ற போராட்டம் என்ற வகையில் அவை புரட்சிகரமானதே.

பல ஆயிரம் போராளிகளையும் பல லட்சம் மக்களை இழந்த ஒரு தேசத்தின் போராட்டத்தின் சிதைவு என்பது முள்ளிவாய்க்காலின் பின்னர் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் தேசம் என்பது முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியுடன் லங்கா என்ற தேசத்தின் கீழ் ஆக்கிரமிப்புக்குள் வந்தது. தமிழ்தேசம் ஆக்கிரமிப்பில் இருந்து தமிழ் தேசத்தின் உரிமைக்கான மீளெழுச்சி ஏற்படாதவாது பல்வேறு சக்திகள் சிங்கள பௌத்த அரசின் மேற்பார்வையின் கீழ் செயற்பாடுகின்றார்கள். தேசிய இனங்களின் உரிமையை இனவாதமாக (racism - not national question) முன்னிறுத்தப் படுகின்றது. தேசிய இனங்களின் உரிமையை கொச்சைப்படுத்தி துவேசமாக பார்க்கப்படுகின்றது.

இது தளத்தில் எழுத்தாளர்கள் - இலக்கியவாதிகள் என கலைகலைக்காக சேவை செய்பவர்கள் எனவும் - அரசியல் தளத்தில் தரகு தலைமை என்று தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டு ஆளும் வர்க்கத்துடன் (ஏகாதிபத்திய- சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு துணையாக கட்டமைப்புச் சீர்திருத்தவாதிகள் மேற்கொள்கின்றார்கள்) இணைந்து பயணிக்கின்றார்கள். ஆனால் மற்றவர்களை வாயை மூடிக்கொண்டிரு என்ற அகம்பாவத்தில் செயற்படுகின்றார்கள். " வடக்கு கிழக்கு தமிழர்கள் இனிமேல் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்க மாட்டார்கள் எனவும், தமிழ் தேசம் தன்னுரிமையை கோருவது அடிப்படைவாதம் என்றார் சம்பந்தர்.

புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களும் தாம் தான் புலிகளின் ஏகபிரதிநிதிகள் என்ற போர்வையில் ஏகாதிபத்திய- சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு துணைபோகின்றார்கள்.

-குட்டிமுதலாளிய -இடதுசந்தர்ப்பவாதம் என்பது தேசங்களின் ஜனநாயகப் போராட்டம் என்பதை வர்க்கப் போராட்டத்தின் அம்சமாக பார்க்காது வெறும் பொருளாதாரப் போராட்டமாகவும் உயர்குடியின் கோரிக்கை எனவும் தன்னை சுருக்கிக் கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.4 தேசிய இனங்களை அழிப்பது

கொலனித்துவத்தின் வெளியேற்றத்தின் போது எண்கணக்கில் பெரும்பான்மையான இருந்த நிலையில் ஆட்சிகட்டிலுக்கு வருவதற்கு முன்னரே சிங்கள தேசம் மற்றவர்களை அடக்கும் போக்கைக் கொண்டிருந்திருக்கின்றது. இந்த தேசிய இனமுரண்பாடு 1915 அடக்குமுறை வடிவம் தொடங்குகின்றது. முஸ்லீம்- சிங்கள வர்த்தக மோதல் வெளிப்பாடானது உற்பத்தி உறவில் ஏற்படும் மாற்றத்தில் இருந்து அணுகுதல் வேண்டும்.

முதலில் முஸ்லீம்களின் மூலதனமும் இருப்பின் மீதான தாக்குதல். பின்னர் மலையாளிகளின் மூலதனம்- தொழிலாளர்கள் மீதான தாக்குதல்.

இலங்கையில் மலையாளிகளின் மீதான தாக்குதல் என்பது பலமாற்றத்தை அடைந்துள்ளது. இந்தத் தாக்குதலால் கேரளத்திற்கு திரும்பிச் சென்றவர்கள் சிங்களவர்களாக மாறிய மலையாளிகள், தமிழர்களாக மாறிய மலையாளிகள் என்றும் சிறிய பகுதியினர் வீட்டில் மலையாளமும் வெளியில் தேவைகருதி சிங்கள-தமிழ் பயன்படுத்திக் கொள்பவர்கள் உள்ளார்கள்.

மலையாளிகளைப் பொறுத்தவரை ஒரு மொழிச் சிறுபான்மையினராகக் கூட இலங்கையில் நிலைத்து நிற்க முடியவில்லை. மற்றவர்களை ஒன்றிணைக்கும் - சிங்களமய மாக்குவது (assimilation) புறநிலை அழுத்தங்களாகும்.

இந்த நிலை கடற்கரை தமிழ் சமூகத்திற்கும் பொருந்தும் ஏனெனில் அவர்களும் அழுத்தத்திற்கு ஆளாகிவருகின்ற சமூகமாகும். கரையோரத்தில் வாழ்ந்த மக்கள் அதிகமானோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க மதத்தவர்களே. இவர்கள் இன்று சிங்களமயமாக்கலுக்கு தொடர்ச்சியாக ஆட்பட்டு வருகின்றார்கள். மேற்குக்கரையில் சிங்களமயமாக்கப்படுவதை இட்டு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.

இங்கு கரையோரத் தமிழர்களை சிங்களமயமாக்கியது கத்தோலிக்க மதத்தின் மீது பழிசுமத்திவிட முடியாது. காரணம் கத்தோலிக்க மதக்குருமார்களின் சிந்தனை வடிவம் என்பதே பெருந்தேசியத்தின் மீது கட்டப்பட்டவைதான். குறிப்பாக 1983களின் பின்னரான காலத்தில் ஒடுக்குமுறையை கொழும்பை மையமாகக் கொண்ட அதிமேற்றாணியார் கண்டும் காணாமல் இருந்தார் என்பது வெளிப்படையான உண்மையாகும். கத்தோலிக்க மதத்தின் சுயமான நடவடிக்கையாக மாத்திரம் குறுக்கிவிடுவது சமூகக் கட்டமைப்பை விளங்கிக் கொள்ளாத பார்வையாகும். இந்த நிலையில் சிங்கள பெருந்தேசியத்தில் கலத்துவிடுவது என்ற தொடர்ச்சியான வேலைத் திட்டத்தில் அடிப்படையில் செயற்படுகின்றது.

1949 பின்னர் மலையக மக்களின் குடியுரிமை பறிப்பு. பின்னர் குடியேற்றம் (1.நிலப்பறிப்பு) மொழி உரிமை (2.சிங்கள தனிச்சட்டம்) 3பொருளாதார அழிப்பு (1958. 1961. 1977. 1981. 1983 கலவரம் என்ற போர்வையில்) 4. கலாச்சாரம் அழிப்பும் திணிப்பும் (வடக்கு கிழக்கை சிங்களமயமாக்கல்) இவை நான்கு அம்சங்களின் மீதான அழிப்புக்கள் நடைபெறுகின்றது. இவை நான்கு அம்சங்களை அழிக்கத் தொடங்குவது தான் இனவழிப்பு என்பது. இங்கு ஒரு தேசத்தின் (நேசன்) தேசிய இனத்தின் இருப்பை அழிப்பது தான் இனப்படுகொலை இன்று நேற்றுடன் சம்பந்தப்படுத்தி குறுக்குவது வரலாறு அல்ல. வரலாற்று நிகழ்வுகளை ஒன்று சேர அணுகப்பட வேண்டும். சிங்கள தேசம் இலங்கை முழுவதும் தனது என்றும் மற்றையவர்கள் அவர்களில் நிழலில் வாழ வைத்தல் என்ற அடிப்படையில் இருந்து எழுந்து வருகின்றது. தன்னை பாதுகாத்துக் கொள்ள வீர புருசர்களை முன்நிறுத்துவம் தேசியப் போராட்டங்களில் இயல்பான நிலை தான்.

தொழிற்சங்கங்கள் தொழிலாளர்கள் ஐக்கியப் பட்டுப் போராடினாலும் அதனையும் மீறி இனவெழுச்சி ஏன் உருவாகிய என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஏதோ தற்செயலாக நிகழ்ந்ததாக கருதிவிட முடியாது. முதலாளித்துவப் புரட்சி, சோசலிசப்புரட்சி நடந்து முடியவில்லை. இந்த நிலையில் சமூகத்தில் நிறுவனமயப்பட்ட சிந்தனை, ஆட்சி அமைப்பில் நிர்வனமயப்பட்டிருக்கும் சிந்தனை தீர்மானிக்கும். இதேவேளை ஒரு புறம் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் நல்லெண்ணத்தை காட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றது. இந்த வேளையில் 1972களில் இருந்த முதலாளியம் அலட்சியம் செய்து வந்துள்ளது. மொத்தத்தில் இடதுசாரியம் தேசிய இனமுரண்பாடுகளை சரியாக கணித்து அதனை வழிநடத்தத் தவறிவிட்டது. ஆனால் அவர்கள் சுதாகரித்த போது தமிழ் குட்டிமுதலாளியம் தலைமைப் பாத்திரம் பெற்றுவிட்டது. பல்லினத்தைக் கொண்ட நாடு என்று சொல்லிக் கொண்டு சிறிலங்கா என்று பெயரை மாற்றிக் கொண்டது. இது சிங்கள தேசத்தின் அடையாளப் புதுப்பிப்பது நடைபெறுகின்றது. இதனையே ஐக்கிய இலங்கைப் புரட்சியை வலியுறுத்தும் வாய்ப்பாட்டு இடதுசாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்கு வித்திட்டது வேலையில்லாப் பிரச்சனை, தரப்படுத்தல் என்பது குட்டிமுதலாளிகளை பாதிப்பை ஏற்படுத்தியது. தரப்படுத்தல் (interpret) பலமாதிரி வியாக்கியானம் செய்யலாம். அது அஉைராபையுெ பல்கலைக் கழகத்தில் அல்லது தமிழகத்தில் இருப்பது போன்ற இடவொதுக்கீட்டுக் கொப்ப அரசியல் கொண்டதாக இருந்திருந்தால் ஆனால் அது அவ்வாறு அமையவில்லை. அது தமிழ் தேசத்தின் உருவாக்கத்தினை பின்னடிப்பது அல்லது வளர விடாது தடுப்பதில் இருந்து அமைந்து கொண்டதாகும். நிலம் - கல்லோயாவுடனும், மொழி 1956 என்றும் பின்னர் பொருளாதாரம்- கலாச்சார அடையாளங்கள் என்று இல்லாதாக்கின்ற நிகழ்ச்சி நிரலில் அமைந்ததாகும். தரப்படுத்தலை சுருக்கிவிடுவது அடையாள அரசியலுக்கு உட்பட்டதே. தேசிய ஒடுக்குமுறை என்பதே அனைத்து தேசிய இனங்களில் உள்ள ஒடுக்கப்படும் வர்க்கங்களை பிரிக்கின்றது. தேசிய உரிமைக்கான போராட்டம் என்பது ஒடுக்கும் தேசத்தில் உள்ள ஒடுக்கப்படும் வர்க்கங்களை பிரிக்கவில்லை. தேசிய இனங்களின் உரிமை, தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்பதை (ரொட்கிஸ்டுக்கள்) ஏற்றுக் கொள்வதில்லை. ஏனெனில் தேசத்தின் போராட்டம் என்பது பாட்டாளி வர்க்கத்தை பிரிப்பதாகவும், தேசிய (லங்கா) ஒன்றுமையை சிதைக்கின்றதாம். தமிழ் தேசத்தின் இருப்பை மறுத்துக் கொண்டு செயற்படுத்தப்படும் கொள்கை திட்டங்கள் என்பது நிறுவனமயமாகியிருக்கின்ற போது வேலையில்லாத் திண்டாட்டம், தரப்படுத்தல் என்பது அது ஒரு பகுதிப் பிரச்சனையேயன்றி முதன்மையான பிரச்சனையாக இருப்பதில்லை. ஒடுக்குமுறைக்கு எதிரானதை மேட்டுக்குடியின் நலனில் அமைந்ததாக காட்டுவது குட்டிமுதலாளி, வலதுசாரிய அகநிலை ஆய்வுப் போக்கிற்கு உட்பட்டதாகும்.

இனக்குழுமங்களுக்கிடையேயும், தேசிய இனங்களுக்கிடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் மோதல் என்பது அடையாளம், இருப்பு, வளம் சார்ந்தாக இருக்கின்றது. இது பொதுவான உலக நியதியாக இருக்கின்றது. சமூக முரண்பாடுகளும், மோதல்களும் வெவ்வேறு பருமனில் மாறுபட முடியும். குறிப்பாக மார்க்சியவாதிகளின் மீது உள்ள பெரும் விமர்சனம் என்பது தேசிய இனப்பிரச்சனையை சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை என்பதேயாகும். தேசிய இனங்களுக்கிடையே நடைபெறுவது கூட வர்க்கப் பிரச்சனையேயாகும். தனியே பொருளாதாரப் போராட்டத்தினை மாத்திரமே முன்னிறுத்தி பொருளாதாரப் போராட்டதை மாத்திரமே வர்க்கப் போராட்டமாகச் சுருக்கிக் கொண்ட புரிதல் இலங்கை இடதுசாரிய வரலாறு இன்றுரை தொடர்கின்றது.

சமூக வளர்ச்சிப் போக்கில் முழுமையான அணுகுமுறை ஊடாக அணுகியாராய வேண்டும். இங்குதான் தான் கோளாறு உள்ளது. நாம் பகுதியாக விடயங்களை அணுகுதன் ஊடாக தவறான முடிவிற்கு வரப்படுகின்றது. குறிப்பிட்ட விடயத்தை அடையவதற்கான குறிப்பான் பொதுவாக இருக்கின்றது. இதனை இனவாதம் என்று எமது தேவைக்காக சுருக்கிப் அணுகிட முடிகின்ற குறைபாடு உள்ளது. தேசிய இனங்களை நிலப்பிரபுத்துவம் உருவாக்குகின்றது, தேசங்களை முதலாளித்துவம் உருவாக்குகின்றது (லெனின்- ஸ்ராலின்) ஆனால் தேசிய இரண்டு தேசங்களின் அடையாளம் சார்ந்த முரண்பாடுகளில் இருந்து பிரச்சனையை அணுக வேண்டும். பெருந்தேசியவாதத்தினை புறந்தள்ளிக் கொண்டு இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையை இனவாதம் என்று சுருக்குவது தவறானதாகும்.

தேசங்களிடையேயான முரண்பாடுகள் தான் தேசிய உணர்வை தூண்டுகின்றது. அவை இரண்டும் தன்னிருப்பை, அடையாளத்தை, வளத்தைப் பாதுகாக்கும் நோக்கில் மரபுரீதியாக கடத்தப்படும் ஐதீகங்களை உருவாக்கிக் கொள்கின்றது, இவ்வாறு ஐதீகங்களில் இருந்து உருவாக்கப்படும் தேசிய வீரர்கள், தேசிய சின்னங்களாக முன்னிறுத்தப்படுகின்றது. 'தமிழ் தேசத்தின் ஒடுக்குமுறை அதிகப்படுத்தும் போதும் அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எத்தனிக்கின்ற போது (myth- symbol- national heroes) வரலாற்றுப் பெருமிதம், சின்னங்கள், தேசிய வீரர்கள் என்பது தேசியத்தின் நலனுக்காக உருவாக்கப்படுவார்கள். இது தேசிய அபிலாசைகளை அடைவதற்கு மக்களை ஒரு பண்பு- ஒரு மனச் சிந்தனையை உருவாக்கிக் கொள்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. தேசிய அபிலாசைகளை ஒன்றிணைக்கும் ஒரு தேசியவாதக் கோசம் தான் ஆண்டபரம்பரை என்ற கோசமாகும். அரைநிலப்பிரபுத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச் சிந்தனையில் இருந்து வெளிப்படும் தேசியக் கோசங்களில் உள்ளதை முதலாளித்துவ- தாராளவாத சிந்தனை வடிவத்தைக் கொண்டு அளவிடுவது என்பது அபர்த்தமானதாகும். மாற்றாக வர்க்கங்களின் வளர்ச்சிப் போக்கில் வெளிப்படும் எதிர்வினை என்பதை கணித்திட வேண்டும். அதன் பின்னர் குறிப்பிட்ட இயக்கப் போக்கை யார் கைகளில் வசம் உள்ளது என்பதை கணிப்பிட்டே சமூகத்தின் தேவைக்கான போராட்டங்களின் நியாயத்தை அறிந்து கொள்ள முடியும். தேச (formation of national identity and unity) எழுச்சியின் போது உருவாக்கப்படும் அடையாளத்தின் ஒரு அங்கம். இதனை அறியாது ஆண்டபரம்பரையை நியாயப்படுத்துவதாக திரிப்பது இட்டுக் கட்டிய அறிவியல் குறைபாடாகும். இனவாதம் (Racism) இரத்தவகை சார்ந்த பிரச்சனையாக பொருத்துவது அபர்த்தமாகும்.

இந்த வகையில் விடுதலையை ஆதரிப்பது முற்போக்கானதாகும். இங்கு முன்னர் குறிப்பிடுவது போது வலதுதேசிய வெறியையும் சுதேசிய- ஜனநாயகக் தேசியப் போராட்டத்தையும் ஒரு வகையில் அடக்கி திரிக்கும் போக்குத் தான் இருக்கின்றது. இங்கு தேசிய நலன் என்று ஏகாதிபத்தியங்களை எதிர்க்கின்ற போது அதனை தேசிய வெறி அல்லது தேசியவாதம் என்று ஒதுக்கிவிட முடியுமா? ஏகாதிபத்திய பொருள் உற்பத்தி முறை என்பது தனது சந்தையை எதிர்த்து நிற்பதை பயங்கரவாதமாகக் காட்டுகின்றது. சுதேசிய அடையாளங்களை இல்லாக்கி தமது சந்தையை அடிப்படையாகக் கொண்ட பண்ட உற்பத்தி, நுகர்வு, சந்தையை ஏற்படுத்துவதன் ஊடாக சர்வதேச வேலைப்பிரிவி னையினால் தன்னை தங்கி நிற்கும் நிலையை ஏற்படுத்துகின்றது. இந்தப் போக்கை எதிர்ப்பவர்களை தேசியவாதிகளாக அல்லது பயங்கரவாதிகளாக அல்லது மத அடிப்படைவாதிகளாக ஏகாதிபத்தியம் முத்திரைகுத்துகின்றது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தின் போது கூட வரலாற்றுப் பெருமிதம், சின்னங்கள், தேசிய வீரர்கள் என்பது தேசியத்தின் நலனுக்காக உருவாக்கப்படுவார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்பின் (formation of national identity and unity) எழுச்சியின் போது உருவாக்கப்படும் அடையாளத்தின் ஒரு அங்கமாக இருக்கின்றது.

பின்னவீனத்துவத்தின் எதிரொலியாக நல்லது கெட்டது என்ற ஒற்றைப் பரிமாணத்தில் எல்லாவற்றையும் இணைத்து கருத்துருவாக்கிக் கொள்கின்றது. இங்கு இனவாதம் என்ற வரையறை தன்னார்வம் சார்ந்த வரையறையாகும். முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கில் ஏற்படுகின்ற முரண்பாடுகளை பெருந்தேசியத்தின் இருப்பைப் பாதுகாத்துக் கொண்டு தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சனையை இனவாதமாகப் பார்ப்பது மார்க்சிய அணுகுமுறை அல்ல.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.5 சிங்கள மக்களிடம் செல்ல வேண்டிய அவசியம்

பௌத்த - சிங்கள பேரினவாதம் என்பது நிறுவனப்பட்ட நிலையில் இருக்கின்றது. அதன் அரசியல் செயற்பாடுகளை உருவாக்கிக் கொள்ளும் நிறுவனமைப்பின் அதிகாரம் வர்க்கம் என்பது பேரினப் பெருமிதத்திற்கு அப்பால் சிந்திக்க முடியாது. இதுதான் பண்டா- செல்வா தொடக்கும் 2004 வரையிலான சமரச நடவடிக்கைகள் மீதான சிங்கள பேரினவாத சக்திகளின் எதிர்ப்பு காட்டி நிற்கின்றது. ஆனால் தம்மை முற்போக்கு சக்திகளாவும், தேசிய நல்லிணக்கத்திற்கு தயாராக இருப்பதாக காட்டிக் கொள்ளும் சக்திகள் எவரும் சிங்கள மக்களிடத்தில் நியாயத்தை கொண்டு செல்லப்பட வேண்டும்.

தமிழ் தேசமாக இருப்பதையோ அல்லது இனப்பிரச்சனையானது பிரதான என்பதை ஏற்றுக் கொள்ளாததைத் தான் தென்னிலங்கை சக்திகளிடம் காணமுடிகின்றது. ஒடுக்கும் தேசிய இனத்தில் உள்ள முற்போக்கு சக்திகள் தான் தன்சொந்த தேசிய இனத்திடம் ஒடுக்கப்படும் மக்களின் நியாயத்தை கொண்டு செல்ல வேண்டும். ஆனால் தமிழ் தேசத்தின் உரிமையை பிரிவினைவாதமாகவும், இனவாதமாகவும் வரையறுத்து ஒடுக்கும் சிங்கள தேச இராணுவ- ஆட்சியாளர்களுடன் சேர்ந்து முள்ளிவாய்க்காலில் சவப்பெட்டி அடிக்க ஒத்துழைத்தார்கள். இன்றும் அதில் எவ்வித மாற்றமும் இல்லாதது பிரசைகளுக்கான (தென்னிலங்கையில் தீர்க்கமான சக்தியாகிய ஜேவிபியின் தீர்வு பற்றிப் பார்க்க) உரிமை (ரணில் கிராமிய சபை போல) பிச்சைக்கு சமமான மக்களுக்கான ஜனநாயக உரிமையை சிறுமைப் படுத்துகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கும் தேசமானது சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொண்டு தன் சொந்த தேசத்தின் ஆளும் வர்க்கத்திற்கு எதிராக போராட வேண்டும். லங்கா தேசத்தின் கீழ் மற்றவர்கள் எல்லாம் சிறுபான்மை என்ற ரீதியில் சிந்திக்கும் நிலையில் சிங்கள- தமிழ் உழைக்கும் வர்க்கத்திற்கான ஒற்றுமை என்பதை சிதைக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். - தேசங்களின் இருப்பை மறுத்த தீர்வு அல்ல. இதேபோல பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனை முறைக்கு தேசிய இனப்பிரச்சனைக்கு சாத்தியமில்லாத சமஸ்ரி என்ற தீர்வைக் கூட தமிழ் மக்களில் உள்ள உயர்வர்க்கத்தின் தேவையாக தேசங்களின் இருப்பை மறுதலித்து பிரச்சாரம் செய்யும் இடது சந்தர்ப்பவாதம் பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியத்தின் பெயரில் முன்னிறுத்துகின்றது.

தமிழ் "சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் தான், அந்த மக்களிடம் முற்போக்கான சிங்கள சக்திகள், தனிநாட்டை அமைப்பதற்கான அச்சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள முடியும்" (தோழர் நா.சண்முகதாசன்)

தேசிய ஒடுக்குமுறையை மறைத்துக் கொண்டு எவ்வித யாப்பையும் புரட்சிகரமாக படைத்துவிட முடியாது. இன்றைய ஆளும் வர்க்கம் என்பது தரகு வர்க்கமாகவும், அரைநிலமானியத்தில் கட்டப்பட்டதாகும். இங்கு முற்போக்கு முகாம் என்பது அரைநிலமானியத்தில் மேற் கட்டப்பட்ட போக்கு என்பது தேசிய ஒடுக்குமுறையை லங்கா ஒற்றைத்தேசியத்தினுள் தீர்வை முன்வைக்கின்றது.

ஜேவிபியின் புதிய யாப்புருவாக்கத்தில் இருந்து கள்ளமௌனம் கொள்வது என்பது ஒடுக்கப்படும் மக்களின் உரிமை பற்றிய ஜேவிபியின் நிலைப்பாட்டில் ஐயம் கொள்ள வேண்டியிருக்கின்றது. அவர்களைப் பொறுத்தவரையில் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஒடுக்குமுறை என்பது ஏகாதிபத்தியத்தின்- பிராந்திய வல்லரசின் ஒடுக்குமுறையே பிரதானமானதாகவும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களை சகிக்கும்படி கோரும் நிலையாகும். இது ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திற்கு பலியாகிப் போனதன் விளைவாகும். ஒடுக்கும் தேசம் மற்றைய தேசத்தினையும், தேசிய இனங்களையும் ஒடுக்கிக் கொண்டு இருக்கின்ற வேளையில் சிங்கள தேசத்தவர்களும் சுதந்திரக் குடிகளாக இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மக்களுக்கு மொழியோ, தேசமோ, கிடையாது அல்லது இந்தக் காலத்தில் சாதி யார் பார்க்கின்றார்கள் என்று கருத்திடுவது நடைபெறுகின்றது. ஆனால் ஏற்றத் தாழ்வான சமூக அமைப்பு என்பது தனியே தனிமனிதர்களின் உணர்வு சார்ந்து இருப்பதில்லை. அது இருக்கின்ற பொருளாதார அமைப்பின் சிந்தனையின் படி இயக்கப்படுகின்றது. மதவாதிகள் கூறுவது போல இறைவனின் முன் ஏழை, பணப்படைத்தவர் என்ற பேதம் இல்லை. இவ்வுலக வாழ்வில் கிடைக்காததை விண்ணுலக வாழ்வில் சுகவாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை போல சோசலிச வாழ்வில் உரிமை பெறமுடியும் என்ற சிந்தனை ஊட்டுவது என்பதே சமூக விஞ்ஞானப் பார்வையற்றதாகும்.

முதலாளித்துவத்தை வளர்க்க மாட்டோம் ஆனால் நாங்கள் சோசலிசத்தால் முதலாளித்துவத்தை எதிர்த்துப் போரிடுவோம். மக்கள் சுரண்டப்படுகின்றார்கள், தேசிய, மத, மொழி, குல ரீதியாக பிரிந்திருப்பது பாட்டாளி வர்க்க நலனைப் பாதிக்கும். அதுவும் தேசிய ஒடுக்குமுறையே இந்தக் உழைக்கும் வர்க்கங்களின் ஒன்றிணைவை தொடர்ந்தும் உடைந்து வந்துள்ளது. தேசிய இன, மத, மொழி கடந்து அனைவரும் போராட வேண்டும். இது வெளிப்படையான சரியானதாகத் தோன்றினாலும் ஒடுக்கப்படும் வர்க்கங்களின் தேசிய இன, மொழி, மதம் ஒன்றிணைவைத் தடுப்பது இலங்கை சமூக பொருளாதார அமைப்பாகும்.

பூர்சுவா தேசிய இயக்கங்களை பிரிவினைவாதமாக பிரச்சாரப்படுத்துகின்றனர். மறுபுறத்தில் ஒடுக்குமுறை என்பது அதிகரிக்கின்ற போது ஒடுக்கப்படும் தேசிய இனம் தன்னை பாதுகாத்துக் கொள்ள ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கின்றது. தமிழ் தேசம் தனது அரசியல் உரிமைக்காக ஆயுதங்கள் கொண்டு பெரும் சமர்கண்ட போராட்டத்தை கொண்டதாகும்.

'ஒரு அரசியல் போராட்டத்தின் அதியுயர்ந்த கட்டத்தில், அதியுன்னத வடிவமாக எழுவதே ஆயுதப் புரட்சிப் போராட்டமாகும்' என்றார் லெனின். அரசியலில் 'இரத்தம் சிந்தும் அரசியலே ஆயுதப் போராட்டம்' முள்ளிவாய்க்கால் வரையில் போராடி மாண்ட போராளிகளும், அங்கு கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட 149000 மக்களின் அழிவுடன் தான் தமிழ் தேசம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியது. லங்கா தேசத்தினால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ள தமிழ் தேசம் விடுதலைக்கு எதிராக பல போக்குகளை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இலங்கையில் பௌத்த பேரினவாதக் கட்டமைப்பு என்பது சிதைக்கப்பட வேண்டுமென்றால் உற்பத்தி முறை மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும். மாற்றத்திற்கு உள்ளாக எவ்வித மாற்றமும் கட்டமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தவாதத்திற்கு உட்பட்டதே. தேசிய இனங்களின் ஒடுக்குமுறையை தகர்க்காத ஜனநாயகப் போராட்டங்கள் எவையும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான சாத்தியமில்லை. அவ்வாறு சாத்தியம் இருப்பதாக கருதுவம் என்பது கற்பனாவாத- அகவுணர்வு பார்வை கொண்ட (குட்டிமுதலாளிய) மேட்டுக்குடிவாதமாகும். ஒடுக்கப்படும் - தேசத்தின் தேசிய இனங்களில், ஒடுக்கும் தேசத்தின் மக்களின் ஒத்துழைப்பு இல்லாது ஒரு போராட்டத்தினை வெற்றி கொள்ள முடியாது. இதனை எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். இங்கு முதலாளித்துவ ஜனநாயக இயக்கம் என்பது நிலபிரபுத்துவத்தின் சிதைவுடன் உருவாக்கப்படுகின்றது. இதுவும் ஜனநாயகக் கட்டத்தைச் சேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.6 "இனப்பகமை - தேசிய பகமை பாட்டாளிகளை பிரிக்கின்றதாம்"

நிலப்பிரபுத்துவத்திடம் இருந்து அடுத்த கட்டத்திற்கு நகர்வதும், தேசிய ஒடுக்குமுறையில் இருந்து தன்னை மீட்பது மாத்திரம் அல்ல ஒடுக்கும் தேசத்தின் உழைப்பாளிகளின் விடுதலைக்கு உதவுவதும், தன்னை ஏகாதிபத்திய நுகர்த்தடியில் இருந்து விடுவிப்பததையும் நோக்காகக் கொண்டது. இந்த நிலையில் பௌத்த சிங்கள பெருந்தேசியத்திற்கு மேல் கட்டப்பட்ட சமூக அமைப்பை உடைக்காது, புதிய உற்பத்தி முறையை மாற்றியமைக்காது அந்தக் கட்டமைப்பு மாறிவிட முடியாது. இதனை உணர்ந்ததாக அல்லது அறிந்த யுத்த- செயல்பாட்டுத் தந்திரம் என்பது உரிமையை அங்கீரித்த தென்னிலங்கை இடதுசாரி களிடம் இருந்து இதுவரையும் முக்கிய கருத்துருவாக்க அமைப்பாகிய ஜேவிபி யிடம் இருந்து வரவில்லை. ஜேவிபி என்பது அடிப்படையில் சமூக பெருந்தேசியவாத அமைப்பாகும். இவர்களின் அரசியல் செயற்பாட்டை கவனத்தில் கொள்ளாது அரசியல் போக்கை கணித்துக் கொள்ள முடியாது.

ஜேவிபியின் குட்டி முதலாளிய சந்தர்ப்பவாதம் என்பது மலையக சிங்களவர்களை மக்களை இந்திய விஸ்தரிப்புவாதம் என்பதில் இருந்து தமிழர் தலைமை தாங்குவதா என்ற எதிர்ப்பு நிலையில் இருந்து 2009 மூர்க்கமாக இருந்துள்ளது. நாம் ஜிஜி பொன்னப்பலத்தை எவ்வாறு துரோகம் செய்தவர்கள் என்று விமர்சிக்கின்றோமோ, அதேயளவு துரோகத்தைத் தான் ஜேவிபியும் மலையக மக்களைப் பொறுத்தவரையில் செய்திருக்கின்றது. இதிலும் ஜிஜி பொன்னப்பலம் நிலப்பிரபு, தரகுமுதலாளித்துவ வர்க்கத்தைச் சேர்ந்தவர். எனினும் தந்தை செல்வா பிரிந்து புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி ஆரம்பித்ததையும், அந்த வரலாற்றும் இருட்டடிப்பு செய்யப்படுகின்றது.

தமிழ் தேசத்தின் போராட்டம் பயங்கரவாதம், பிரிவினைவாதம் என்று அழித்த இலங்கை இடதுசாரியமாக தொடர்கின்றது. தேசிய கோரிக்கை என்பது பாட்டாளி வர்க்கத்தை பிரிப்பதாக கூறுகின்றதுடன் தேசிய இனங்களின் ஜனநாயகக் கோரிக்கை மறுக்கின்றது. ஆனால் உண்மையில் தேசிய இன ஒடுக்குமுறையை பாதுகாப்பதே வரலாற்று ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் தேசத்தை ஒடுக்கும் பெரும்பான்மை பெருந்தேசியம் என்பது சொந்த மக்களை அடக்குவதன் மூலம் மற்றைய தேசிய இனங்களையும் ஒடுக்கின்றது. பௌத்த பெருந்தேசியவாத உலகக் கண்ணோட்டத்தை பாதுகாத்துக் கொண்டு அதன் மேல் பெருந்தேசிய இருப்பை பாதுகாப்பதில் குட்டிமுதலாளி சந்தர்ப்பாத இடதுசாரியம் துணைநிற்கின்றது.

தமிழ் தேசத்தின் போராட்டம் என்பது ஜனநாயக கட்டத்திற்கான போராட்டமே. இங்கு பிரிவினைவாதமாக, தேசிய வெறியாகக் காட்டுவது என்பது மார்க்சியமாக முடியாது. சந்தைக்காய் அலையும் ஏகாதிபத்திய சந்தையில் இருந்து விடுதலை என்பது சுதேசிய சந்தையை உருவாக்கிக் கொள்வதாகும். இங்கு சுதேசிய சந்தையை முன்நிறுத்துகின்ற போது அதனை அடிப்படைவாதமாக- தேசிய வெறியாக பிதட்டி ஒடுக்கப்படும் தேசங்களின் மக்களை பிற்போக்குவாதிகளாக காட்டுகின்றது. ஒரு சமூகம் என்பது பண்பட்ட சமூகமாக இருக்கத் தேவையில்லை என்று நிதிமூலதனம் வகுப்பு வைக்கின்ற போது அதனை ஆமோதித்து தேசிய இனங்களின் அடையாளங்களை முன்னிறுத்துகின்ற போது பிற்போக்குத் தனமாக காட்டுகின்றது. (இங்கு நாசிச- சாதிய- சியோனிச- பெருந்தேசிய -சோவனிச- ஒடுக்கும் சிந்தனையைப் பற்றி இங்கு உரைக்கவில்லை. பிற்போக்குத் தேசியக் கூறுகளை சுதேசிய- முதலாளித்துவ ஜனநாயக இயக்கங்களுடன் இணைத்து இட்டுக்கட்டும்) அதாவது சுதேசியம் என்பது தன்னிறைவு சார்ந்தும், இயற்கையை நேசித்தும் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியும்.

ஒடுக்கும் தேசமானது சுயநிர்ணயத்தை ஏற்றுக் கொண்டு தன் சொந்த தேசத்தின் ஆளும் வர்க்கத்திற்கு எதிராக போராட வேண்டும். லங்கா தேசத்தின் கீழ் மற்றவர்கள் எல்லாம் சிறுபான்மை என்ற ரீதியில் சிந்திக்கும் நிலையில் சிங்கள- தமிழ் உழைக்கும் வர்க்கத்திற்கான ஒற்றுமை என்பதை சிதைக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். - தேசங்களின் இருப்பை மறுத்த தீர்வு அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இடதுசந்தர்ப்பவாதமும், சிங்கள பெருந்தேசிய மையவாதமும் வர்க்கச் சுரண்டலைக் கொண்ட ஒடுக்கு முறையையும் (class oppression) தேசிய (genocide) அழிப்பையும் ஒரே வரையறைக்குள் கொண்டு வருகின்றார்கள். சமூகத்தை இல்லாதொழிக்கும் அரசியலும், வர்க்க ஒடுக்குமுறையும் ஒற்றைத் தட்டில் வைத்து அணுகுவது அபர்த்தமான சிந்தனைப் போக்காகும். இலங்கையில் தமிழர் தேசமும், மற்றைய தேசிய இனங்களின் இருப்பும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றது. இங்கு தேசிய இனப் பிரச்சனையும் ஒரு வர்க்கப் போராட்டம் தான் அது தன் இருப்பையும் அரசியல் உரிமையையும் வேண்டி நிற்கின்ற போராட்டமாகும். இனவழிப்பை எதிர்த்து நிற்பது தமிழ் தேசியவெறியாக இட்டுக்கட்டி பெருந்தேசிய அரசியலை ஏற்றுக் கொள்கின்றது. முள்ளிவாய்க்காலுடன் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு கிடைத்துவிட்டது அதாவது பிரிவினைவாதம், தீவிரவாதம் முடிவிற்கு கொண்டு வந்துவிட்டதாக எண்ணிக் கொண்டால் கூட அது இயங்கிலாக அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.7 வரலாற்றுப் போக்கில் இருந்து விடயங்களை அறிந்து கொள்வதா அல்லது ஒப்பிப்பதில் இருந்து வரலாற்றைக் கற்றுக் கொள்வதா??

தமிழ் தேசத்தின் ஜனநாயகக் கட்டத்திற்கான போராட்டத்தை எதிர்ப்பது, மறுப்பது, எவருக்கும் உரிமை இல்லை. தமிழ் தேசத்தின் உரிமைக்கான போராட்டம் என்பது இனவாதமோ, பிரிவினைவாதமோ அல்ல. தமிழ் தேசத்தின் உரிமையை மறுதலிக்க எவருக்கும் உரிமை. தமிழர்கள் ஒரு தேசம் - சுயநிர்ணயம் உடையவர்கள். சுயநிர்ணயம் என்பதை அதிகார பரவலாக்கல் என்று கொச்சைப்படுத்துவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இவற்றிற்கு எதிரான காத்திரமான எதிர்வினையாற்ற வேண்டிய தேவையிருக்கின்றது. சுயநிர்ணயம் என்பது மறுக்க முடியாத குறைந்தபட்ச ஜனநாயக உரிமை.

சிங்களவர் - தமிழர்- முஸ்லீம் என்று கதைப்பது இனவாதம் என்று பிரச்சாரப்படுத்தப்படுகின்றது. இதனை வெளிப்படையாகப் பார்த்தால் துவேசங்களை முன்னிறுத்துவதாகத் தென்படும். ஆனால் பௌத்த சிங்கள மேலாதிக்கவாதம் என்பது நிறுவனமயப்பட்டுள்ளது. இது அரச அதிகாரத்தில் மாத்திரம் அல்ல அனைத்து நிறுவனக் கட்டமைப்பு, மக்களின் சிந்தனை எங்கும் புரையோடிப் போயுள்ளது.

இங்கு இனவாதமாக வரையறுப்பதன் ஊடாக அரச கட்டமைப்பை மூடிமறைப்பது நடைபெறுகின்றது. இவர் ஒடுக்குமுறைக்கு உள்ளாகிவருகின்றவர்களின் வெளிப் பாடுகளையும் நிறுவனமயப்பட்ட (institutionalized discrimination and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

spontaneous reaction) பெருந்தேசிய சிந்தனையையும் ஒன்றிணைப்பது என்பது பெருந்தேசிய நிறுவனக் கட்டமைப்பை நியாயப்படுத்தி ஒடுக்கப்படும் மக்களையும் இருக்கின்ற நிறுவனக் கட்டமைப்புகள் ஒன்று கலக்கும் சிந்தனைக்கு அப்பால் வேறு எதுவும் இல்லை. ஆக எல்லாம் இனவாதம் என்பது ஒற்றைப் பரிமாணமாக பார்ப்பது என்பது நிச்சயம் இந்த சமூக அமைப்பை பாதுகாப்பதாக இருக்கின்றது. இனவாதம் என்று வரையறுத்து பிரச்சாரம் செய்வது என்பது தேசிய இனப்பிரச்சனை இருக்கின்றது என்பதையும் மறுத்திருக்கின்றது.

லங்கா என்ற அரசியல் சிந்தனைக் கட்டமைப்பு என்பது பௌத்த - சிங்கள பெருமிதத்தின் மேல் கட்டப்பட்டது. அந்த பெருமிதக் கட்டமைப்பு என்பது முழு இலங்கையையும் தன்னுடைய பௌத்த பூமியாக கருதுகின்றது. இதன் காரணமாகவே பௌத்த அடையாளச் சின்னங்களை தமிழ் தேசமெங்கும் உருவாக்கிக் கொள்கின்றது. இந்த வகையான கலாச்சார ஆக்கிரமிப்பு, அடையாள மாற்றம் என்பதை வரலாற்றுப் போக்கோடும் தேசங்களுக்கான உரிமை என்பது ஏதோ ஒரு பெட்டிக்கடை நடத்துவது போல ஏதோ அதனைக் கொண்டே வாழ்வை நடத்து என்று கருதும் ஜனநாயக விரோதப் போக்கைக் கொண்டதாகும்.

தமிழ் தேசத்தின் போராட்டத்தினை தமிழ்- சிங்கள ஆளும் வர்க்கத்தினால் கொச்சைப்படுத்த முடிகின்றது. பௌத்த தேசியவாதத்தினை பாதுகாத்துக் கொண்டு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். போலி இடதுசாரியம் பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியமாக கருத்துருவாக்கப்படுகின்றது. அதாவது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணயத்தை ஒன்றுபட்ட இலங்கைக்குள் காண முயற்சிக்கும் குட்டிமுதலாளிய இடதுசந்தர்ப்பவாதம் முன்னிறுத்துகின்றது.

லங்கா என்னும் சிங்கள பௌத்த தேசம் (நேசனுக்குள் சிறுபான்மை) - என்ற இலங்கை ஒற்றையாட்சி நாட்டினில் சிங்கள பௌத்த அதிகார வர்க்கம் மற்றைய தேசிய இனங்களை பயன்படுத்த முற்படும் நிகழ்ச்சி நிரலுக்குள் இருந்தே பல கருத்துருவாக்கங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. (institutional rights are different from right to self determination)

இறுதியாக ஆண்டபரம்பரை என்ற காரணத்திற்காக தமிழ் தேசத்தின், மற்றும் தேசிய இனங்களின் சுயநிர்ணயத்திற்கான போராட்டம் என்பது அவசியமற்றது என்று குறுக்கி விடுவது இயங்கியல் அல்ல. மாறான தோழர் லெனின் வார்த்தைகளில்- தேசிய விடுதலைக்கான முதலாளித்துவ- ஜனநாயக இயக்கங்களில் உள்ள அதிகப் புரட்சிகரமான சக்திகளுக்கு உறுதியான ஆதரவு கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டுக்குடிவாதத்திற்கும், ஒடுக்குறையாளர்கள், ஏகாதிபத்திய கருத்துருவாக்கிகளுக்குமான பதில் "புரட்சிகளை ஒரு சில கிளர்ச்சியாளர்களின் தீய எண்ணங்களால் ஏற்படுவதாக கற்பிதம் செய்யும் அந்த மூட நம்பிக்கை காலம் என்றோ மலையேறி விட்டது. எங்கெல்லாம் புரட்சிகரக் குமுறல் ஏற்படுகின்றதோ அங்கெல்லாம் பின்னணியில் ஒரு சமுதாய தேவை கட்டாயம் இருந்தே தீர வேண்டும், என்பதை இன்று ஒவ்வொருவரும் அறிவர். அந்த தேவை தன்னைத்தானே நிறைவு செய்வதை நைந்து போன நிறுவனங்கள் தடை செய்கின்றன. இத்தேவை வலுப்படாமலும், உணரப்படாமலும் இருக்கலாம். ஆனால் பலவந்தமாக இத்தேவையை ஒடுக்குவதற்கு செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியும், அது தனது தளைகளை உடைத்து எறியும் வரை, மேலும் பலத்திற்கு மேல் பலம் பெறவே வகை செய்யும். அதற்குள் நாம் தோற்கடிக்கப்பட்டிருப்போமானால், நாம் ஆதி முதல் மீண்டும் துவங்குவதை தவிர வேறு வழி இல்லை.

அதிர்ஸ்டவசமாக இயக்கத்தின் முதல் அங்கத்தின் முடிவுக்கும், இரண்டாம் அங்கத்தின் துவக்கத்துக்கும் இடையில் நமக்கு கிடைக்கும் ஒய்வு இடைவேளை, மிகவும் அவசியமான, அடுத்த வேலையை துவங்குவதற்கான அவகாசத்தை தருகிறது. சமீபகாலத்திய திடீர் கிளர்ச்சி மற்றும் தோல்வி இரண்டையும் தவிர்க்க முடியதாக்கிய முகாந்திரங்களை ஆய்வு செய்யவே அந்த அவகாசம்.

இந்த முகாந்திரங்களை ஒரு சில தலைவர்களின் தற்செயலான முயற்ச்சிகள், திறமைகள், பிழைகள் அல்லது துரோக செயல்களில் தேடி காண முயல் கூடாது. மாறாக அதிர்ச்சிக் குள்ளான தேசங்கள் ஒவ்வொன்றின் பொதுவான சமூக அமைப்பு வாழ்க்கை நிலைமைகளில் தேட வேண்டும். தவிரவும் புரட்சிகர கொந்தளிப்பு ஏற்பட்டது மற்றும் புரட்சி அடக்கப்பட்டது இரண்டுக் குமான காரணங்களை ஆராய்ந்து அறிவதும், அவற்றை விரித்து உரைப்பதும். வரலாற்று நோக்கு நிலையில் தலையாய முக்கியத்துவம் உடையவை."--பிரெட்ரிக் எங்கெல்ஸ் --தேர்வு நூல்கள் தொகுதி 3 .பக்கம் 8 -9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 சமூக மாற்றமும் தேசிய உரிமையும்

இன்றைய உலகத்தில் மதம் சாதி இனம் என்றும் வர்க்கமாகவும் பிளவுபட்டிருக்கின்ற மக்கள் கூட்டத்தினை இணைத்து ஒரு சுரண்டல் அற்ற சமூகத்தை நோக்கிய பயணத்தில் தடையாக இருப்பது மனிதர்களிடையே இந்தப் பொருளாதார அமைப்பு ஏற்படுத்தியுள்ள பிளவுகள். இந்தப் பிளவுகளை இல்லாது ஒழிப்பது நம்முன்னே இருக்கும் பெரும் கடமையாகும். தமிழ் தேசத்தில் இருக்கின்ற அகமுரண்பாடு கொண்டதாக இருக்கின்றது. உற்பத்திமுறையும், சமூகச் சிந்தனையும் மாற்றத்திற்கு உள்ளாகின்றது. இந்த நிலைமாறும் காலங்களில் ஏற்படுகின்ற சமூக முரண்பாடுகள், சமூகப் பிரச்சனைகள் பற்றிய போதிய விழிப்புணர்வு அவசியமாகின்றது. சமூகத்தில் ஏற்படும் பிரச்சனையின் மூலத்தை அறிவது, அதற்கான தீர்வை வைப்பது, சமூகத்தை ஐக்கியப்படுத்துவது, முன்னேறுவது என்ற இலக்கை கொண்டதாக இருக்க வேண்டும். ஒரே மொழி பேசுகின்ற சமூகங்களின் ஐக்கியம் என்பது கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. தமிழ் தேசத்தில் அடங்க முடிகின்ற சமூகத்திற்குள் ஜனநாயகமயப்படுத்தல் அவசியமாகின்றது. தேசிய இனம் தேசமாகவும், தேசிய இனங்களில் மற்றைய தேசிய இனங்கள் ஐக்கியமாவதும் சகஜனமானதாகும்.

அதேவேளை தேசிய இனங்களுக்கிடையேயுள்ள அவநம்பிக்கை அச்சம் பகைமை குரோதம் போன்றவற்றை இல்லாது போக்குவது ஒன்று இரண்டு நாட்களில் நடைபெற்று விட முடியாது. இவற்றைப் போக்குவதற்கு தற்சமயம் புரையோடிப் போயிருக்கின்ற பிரச்சனைக்கான ஒரு தீர்வினை முன்வைக்க வேண்டும். ஆனால் தமிழ் தேசம் இருப்பிற்கு உத்தரவாதம் தேடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடிக் கொண்டு வருகின்றார்கள். போராட்டப்பாதையில் வெவ்வேறு வர்க்கத்தை பிரதிபலித்த சக்திகள் போராட்டத்தை தலைமையேற்று நடத்தியிருக்கின்றன. இந்தச் சக்திகளின் வர்க்க நிலைகாரணமாக தலைமைப் பாத்திரத்தை வலுக்கட்டாயமாக தம்மகத்தே கைப்பற்றியதும் அவர்கள் பின்னர் சர்வதேச சதிவலையில் வீழ்த்தப்பட்டு அழிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களிடையே அரசியல் வெற்றிடம் இருக்கின்றது.

2009 வைகாசிக்குப் பின்னர் கடும் கண்காணிப்புக்குள்ளும் கடுமையான உளத்தாக்கத்தினுள்ளும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். குறிப்பாக முன்னாள் போராளிகள் கடும் கண்காணிப்புக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் கண்காணிப்பு ஒன்றில்லை, படையினர் முகாம்களில் முடங்கியிருப்பதாக தோற்றத்தை கொடுத்து வருகின்றது. இந்த மக்களுக்கான தேவையை பெருந்தேசியம் எவ்வாறு கையாளப்போகின்றது? அதிலும் குறிப்பாக மார்க்சீயர்கள் எவ்வாறு கையாளப்போகின்றார்கள் என்பது முக்கிய விடயமாகும். தேசிய இனங்களின் சுயநிர்ணயம் என்பதை பாட்டாளி வர்க்க நலனை அடைவதற்கான ஒரு கருவியாக (Instrumental) பயன்படுத்தப் படுகின்ற கருத்து இருக்கின்றது. சுயநிர்ணயத்தை கருவியாக பயன்படுத்துவது என்பது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் நலனில் பால் அமைந்திட வேண்டும். இது நாட்டிற்கு நாடு பிரத்தியோகமான வரலாற்றைக் கொண்டே தீர்மானிக்க முடியும். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான கருவி என்ற கருத்து என்பது இனக்குழுமங்கள், தேசிய இனங்கள் தேசமாக வளர்ந்து வருகின்ற நாடுகளில் மாறுபடும். தேசிய ஒடுக்குமுறை, தேசிய ஜனநாயகக் கட்டம் என்பதை மறைப்பதே நடைமுறையில் உள்ளது. சுயநிர்ணயத்தை கருவியாகப் பயன்படுத்துவது என்பது தேசிய இயக்கம் வளர்ச்சியை விளங்காத நிலையாகும்.

தென்னிலங்கையில் தேசிய இனப்பிரச்சனை பற்றிய பிரச்சனையில் வெளிப்படையான கருத்துக்கள் வருவது பற்றாக் குறையாக இருப்பதை அவதானிக்க முடியும். கடந்த காலத்தில் எவ்வாறு பூர்சுவா தேசியவாதம் தன் கையில் எடுத்துக் கொண்டது என்பதை கவனத்தில் கொள்ளவில்லை. பூர்சுவா தேசியவாதம் தலைமை தாங்கியது எனினும் தனது கொள்கையில் உறுதியாக இருந்தது. தற்கால நிலமைகளையொட்டிய பிரச்சனைக்கு தீர்வும் அடுத்த நிலைக்கு நகரும் படியான அரசியல் திட்டம் தேவையானதாகும். 40 வருட கால இடைவெளியில் 3 பெரும் அழிவுகளைச் சந்தித்தும் எது விடைகிடைக்காது வீரம் வீணாகியது. எந்த இடத்தில் தொடங்கப்பட்டதோ அதே இடத்தில் எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவும் அற்று வந்திருக்கின்றோம். மக்களிடையே தோல்வி மனப்பான்மையை ஏற்படுத்துவது அல்ல. போலி இடதுசாரிகள் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்டமைப்பை சிதைப்பதற்கு தயாராக இல்லை. பௌத்த சிங்கள பெருந்தேசியவாதக் கட்டமைப்பை உடைக்காது இனப்பிரச்சனைக்கான, சமூகப் புரட்சிக்கான சாத்தியமே இல்லை. ஆனால் கடந்த காலத்தை வைத்து தோல்வி மனப்பான்மையை தமிழ் மக்களிடம் போலி இடதுசாரிகள் விதைக்கின்றார்கள்.

இந்த அவலநிலையில் தேசிய இனங்களுக்கு இடையேயான மனக்கசப்பை இல்லாதாக்குவது என்றால் சிங்கள முற்போக்காளர்கள் தம் தேசத்தினுள் போராட வேண்டும். ஏனெனில் தமிழ் மக்கள் தமது ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிக் கொண்டுதான் உள்ளார்கள். இனகுரோதத்தினை போக்க வேண்டும் என்றால் தமிழ் தேசத்தின் விடுதலையே முன்னிபந்தனையாகும். மார்க்சீயம் என்பது தத்துவம் அதில் இருந்து எமது தேசத்திற்கான பொருந்தக் கூடிய கோட்பாட்டை உருவாக்க வேண்டும். அதேபோல மார்க்சீயம் என்பது ஒவ்வொரு நாளும் சமூக நிகழ்வுகளில் இருந்து கற்றுக் கொள்வதும் ஆகும். இன்றையப் பிரச்சனைகளுக்கு தீர்வு ஒரு சமதர்ம சமுதாயத்திற்கான புரட்சிதான். அதற்காக விண்ணுலக வாழ்வுக்காக ஏங்கும் மதவாதம் போல் சிந்திக்க முடியாது. சோசலிசத்தை கடக்க வேண்டிய பாதை வெகுதூரத்தில் இருக்கின்றது. அதாவது நாம் கனியை உண்ண வேண்டுமெனில் முதலில் குறிப்பிட்ட கனிக்கான மரத்தை நடவேண்டும். அதற்கு தண்ணீர் ஊற்றி, பாதுகாத்து வளர்க்க வேண்டும். அந்த மரம் பலகட்டமாக வளர வேண்டும். அந்த மரம் பூக்கவேண்டும், பிஞ்சாகி, காயாகி, கனியாகின்ற பருத்தை அடைய வேண்டும். இவை எதுவும் செய்யாது கனவு கண்டு கொண்டு இருக்க முடியாது. மந்திரத்தினால் மாங்காய் பிடுங்க முடியாது. சமூகம் என்பது ஒவ்வொரு கட்டங்களும் கடந்தே முன்னோக்கி நகர முடியும். சமூக மாற்றத்தினை திடீரென நடத்திவிட முடியாது.

ஆனால் பிரச்சனைக்கான இடைக்காலத் தீர்வு நோயாளிக்கு அறுவைச் சிகிச்சைதான் செய்யவேண்டுமென்பது வைத்திய ஆலோசனை நல்லது முடிவு. அறுவைச் சிகிச்சை செய்யும் வரையும் வேறு மருந்துவகை கொடுத்து நோயாளியின் வலிக்கு ஆறுதல் கொடுப்பது தவறாகுமா? அதேபோல தான் முதலாளித்துவக் கட்டத்தினை அடைவதற்கு அதன் வரலாற்றுக் கடமையை முடித்துக் கொள்வதற்கும் அடுத்த நிலையை அடைவதற்குமான வழியாகும்.

பேரினவாத அரசும் சரி, ஏகாதிபத்தியங்களும் சரி தேசிய இனப்பிரச்சினைகளை திசைதிருப்புவது, அல்லது தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமுரண்பாட்டை அதிகப்படுத்துவது, அல்லது பயங்கரவாதம் என்ற போர்வையில் போராட்டத்தை திசைதிருப்புவது, நசுக்கும். ஏகாதிபத்தியத்தைக் முன்னிறுத்தி தேசிய இன ஒடுக்குமுறையை ஆதரிப்பதாகும். ஆனால் தேசிய இனத்துவ மோதல் என்பது தேசிய இனங்களுக்கிடையில் பகை ஊட்டப்பட்டுள்ளது. இரத்தம் சம்பந்தப்பட்டுள்ள காரணத்தினால் உணர்ச்சி அதிகம் கொண்டதாகவும் இருக்கின்றது. இது தமிழர்களால் சிங்கள தேசத்தவர்களுக்கு ஊட்டப்படவில்லை. சமூக அமைப்பில் இருந்தே விரோத மனப்பான்மை வெளிப்படுவதாகும். இதனை ஆட்சியதிகாரத்தைக் கொண்ட சிங்கள தேசத்தின் ஆட்சிக்கான போட்டியில் பயன்படுத்தும். ஆளும் வர்க்கம் பகையை தணிக்க எந்த முயற்சியும் எடுக்காது. தமிழர்களின் இனவாத என்றவாதம் தேசிய இயக்கம் துயிலெழல் பற்றி புரிதல் அற்ற நிலையாகும்.

ஐக்கிய இலங்கைக்கான புரட்சி என்பது சாத்தியமில்லாத நிலையில் தொடர்ச்சியான உழைக்கும் வர்க்கம் பிரிக்கப்பட்டடே வருகின்றது. இந்த நிலையில் தமிழ் தேசத்தின் விடுதலை என்பது முக்கிய நிபந்தனையாக இருக்கின்ற வேளையில் அகமுரண்பாடுகளை களைவதாயின் தமிழ் தேசத்தின் போராட்டம் என்பது புதிய சனநாயகத் திட்டத்தில் அமைந்ததாகவேண்டும். அவ்வாறு அமைகின்ற போது தமிழ் தேசத்தின் போராட்டம் என்பது உயர்ந்த ஜனநாயக தேசிய வடிவம் கொண்டதாக அமையும். சமூகத்தில் உள்ள சிந்தனை வடிவம் எதுவும் உடனடியாக மாறுவதில்லை. அகமுரண்பாட்டை தீர்த்து விட்டு தமிழ் தேசத்திற்கான போராட்டத்தை மேற்கொள்வது என்ற இயங்கியல் மறுப்பு சிந்தனையாகும்.

“எந்த சமூக அமைப்பும் அதற்குப் போதுமான உற்பத்தி சக்திகள் அனைத்தும் வளர்ச்சியடைவதற்கு முன்பாக ஒருபோதும் அழிக்கப்படவில்லை, புதிய உயர்வான உற்பத்தி உறவுகள் தாங்கள் நீடித்திருக்கக்கூடிய பொருளாதார நிலைமைகள் பழைய சமூகத்தின் சுற்றுவட்டத்துக்குள் முதிர்ச்சியடைவதற்கு முன்பே பழைய உற்பத்தி உறவுகளை ஒருபோதும் அகற்றுவதில்லை. எனவே மனித குலம் தன்னால் சாதிக்ககூடிய கடமைகளையே தனக்குத் தவிர்க்க முடியாதபடி விதித்துக் கொள்கிறது. ஏனென்றால் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய பொருளாதார நிலைமைகள் முன்பே இடம் பெற்ற பிறகு அல்லது குறைந்த பட்சம் உருவாகிக் கொண்டிருக்கும் பொழுதுதான் அந்தப் பிரச்சினையே தோன்றுகின்றது என்பது அதிக நுணுக்கமாக ஆராயும் பொழுது புலப்படும்." மார்க்ஸ்"

நாம் கடக்கவேண்டிய பாதையில் முதலாளித்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தை அடைந்த பின்னர் தான் சோசலிசத்தை அடையமுடியும். பிற்போக்கு கருத்தியலையும், அகமுரண்பாட்டை தீர்ப்பதற்கான போராட்டமும் உள்ளவாங்கப்பட வேண்டும். எவ்வாறு புதிய பொருளாதார கட்டமைபில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டுமோ அதே போல புதிய சமூகத்தின் கட்டுமாணங்களில் பழைய நிறுவனங்களில் உள்ள அனைத்தையும் மாற்றத்திற்கு கொண்டு வரவேண்டும். பாராம்பரிய தமிழ் இடதுசாரியம் தன்னியல்புக்குள் வீழ்ந்த அவலம் தொடர்கின்றது.

புரட்சியின் பின்னரான சீனாவில் நடைபெற்ற கலாச்சாரப் புரட்சியில் பழைய உற்பத்தி முறையில் ஏற்பட்ட சிந்தனை கூறுகளுக்கு முடிவுகட்டும் நோக்குடன் நடைபெற்றதும் வர்க்கப் போரின் தொடர்ச்சிதான். அதில் உள்ள சாதகமான பாதகமான வெற்றி தோல்விகளை நாம் கற்க வேண்டியுள்ளோம். எவ்வாறு லெனின் சோவியத் புரட்சியின் பின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிகர கடமையை நிறைவேற்றும் படி கட்சிக்கு அறைகூவல் விடுத்தார். கலாச்சாரப் புரட்சியிலும் பழைய உற்பத்தி உறவில் இருந்து பிற்போக்கு தனங்களையும் சோசலிசப் புரட்சியின் பின்னரும் வர்க்கங்கள் இருக்கும் என்பதினால் ஏற்பட்ட வர்க்கப் போராட்டத்தின் ஒரு அம்சமாக பார்க்கத் தவறுகின்றதை திட்டத்தில் அவதானிக்க முடிகின்றது.

சோசலிசத்தின் மூலம் எல்லாவற்றிற்கும் விடைபெற கிடைக்கும் என்ற நிலைப்பாடானது இன்றைய உலகில் உனக்கு கிடைக்காததை இட்டு கவலை கொள்ளாதே விண்ணுலக இராட்சியத்தில் எல்லாம் கிடைக்கும் என்ற கருத்து முதல் வாதத்திற்கு ஒப்பாகும். புரட்சிக்கான வேலைத்திட்டமானது அனைத்து இனங்களின் முதலாளித்துவ ஜனநாயக உரிமையான தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிப்பதாக இருக்க வேண்டும். தேசிய இனங்களின் (national questions) சுயநிர்ணயத்தை அங்கீகரிப்பதன் மூலமே ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத வேலைத் திட்டமான இன்றைய நாடாளுமன்ற பாதையை அலங்கரித்துக் கொள்ளும் சிதைந்த கட்சிகளின் வேலைத் திட்டங்களுக்கு அப்பால் முன்னேறவில்லை. புதிய ஜனநாயகப்புரட்சியை சீரளித்த தேர்தல் பாதையின் மூலம் வெற்றி கொள்ள முடியாது. முன்னர் குறிப்பிட்டது போன்று சோசலிசம் தான் தீர்வு. சோசலிச ஆட்சியை கைப்பற்றிய பின்னர் அனைவருக்கும் உரிமை கொடுக்கப்படும் அது உண்மை. போகும் பாதை நெடுந்தூரம் உள்ளது அதனை கடப்பதற்கு நேச சக்திகளின் உதவிதேவை. ஆனால் சோசலிசத்தை அடைவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச வர்க்கங்களின் தேசிய இனங்களின் முதலாளித்துவ ஜனநாயக உரிமையை அங்கீகரிக்காது அவர்களை இணைத்துக் கொள்ள முடியாது. இவ்வாறு அங்கீகரிக்காத இடதுசாரி இயக்கங்களின் குறைபாடுதான் பூர்சுவா தேசியவாதம் போராட்டத்தை கையில் எடுத்தார்கள். புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அவசியமானது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் நேச வர்க்கங்களின் முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கைகளை அங்கீகரித்து அவர்களை இணைத்துக் கொள்வதாகும் சோசலிசம் கிடைந்த பின்னர் எல்லாம் கிடைக்கும் என்பதும் அதுமட்டும் பொறுக்க வேண்டும் என்ற வாதமே 1970 தொடக்கம் இருக்கின்றது. அப்போது சிங்கள இடதுசாரித் தலைமை பிரிவினை வாதப் போராட்டமாகப் பார்த்தார்கள். ஆளும் வர்க்கத்துடன் நாடாளுமன்றப்பாதை போலி கம்யூனிஸ்டுக்களும் ஒடுக்குமுறையாளர்களின் ஆட்சியில் பங்கேற்றார்கள். தேசிய இனத்தின் மீதான யுத்தத்தை வெறும் காகிதத்தில் மறுத்துக் கொண்டு ஆட்சியில் பங்கேற்று யுத்தங்களுக்கு ஆதரவு அழித்தார்கள். இவ்வாறான நிலையில் தமிழ் தேசத்தினதும் சிறுபான்மை தேசிய இனங்கள் ஏற்றுக் கொள்ளும் படியான வேலைத் திட்டத்தை முன்வைத்தல் வேண்டும்.

தென்னிலங்கை சக்திகள் தேசியம் என்பதற்கு பிரிவினைவாதமாக பார்ப்பது என்பது ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தின் விழைவாகும். தென்னிலங்கை சக்திகளின் வேலைத்திட்டத்தை வாசிக்கின்ற போது முதலாளித்துவம் தேசத்தினை உருவாக்குகின்றது என்ற புரிதில் குழம்பிக் கொண்டிருப்பதையும் கண்டுகொள்ள முடியும்.

தமிழ் தரகு, பூர்சுவா தேசியவாதிகளின் இணக்க அரசியல், கனவான் அரசியல், அரசியல் நீக்கம் என்பற்றிற்கு எதிராக காத்திரமாக போராடுவதன் ஊடாகவே பாட்டாளி வர்க்கத்திற்கான புதியபாதையை திறந்து விட முடியும். தேசியப் போராட்டத்தினை பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் இடம்பெறுவதன் ஊடாக பூர்சுவா தேசியத்தின் வேரை அறுக்க முடியும். தேசத்தின் வளர்ச்சி என்பது முதலாளித்துவ பொருளாதார நிறுவன அமைப்புச் சார்ந்ததாகவும் தேசிய இனங்களின் வளர்ச்சிப் போக்கை மறுத்துக் கொள்ளும் போக்கானது பிற்போக்குச் சக்திகளை முன்னோக்கி வளர்த்துவிடவே செய்யும. இதுதான் கடந்த ஒரு நூற்றாண்டு கால வரலாறு காட்டிநிற்கின்றது. எனவே சுயநிர்ணயம் என்பதை பிரிவினைவாதமாகவும், தேசத்தின் கோரிக்கைகளை இனவாதமாகக் கொள்வதும் தவறான சிந்தனைப் பார்வையின் வெளிப்படாகும். ஊனமுற்ற சமூக அமைப்பை மாற்றியமைப் பதற்கும், தமிழ் தேசத்தின் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு புதிய ஜனநாயகப் புரட்சிக்கான வேலைத்திட்டமே தீர்வாக இருக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 இறுதியாக

சரணடைந்த ஆயிரக்கணக்காணவர்கள் எங்கே? (சரணடைந்த ஆயிரக்கணக்காணவர்களை தனியே காணாமல் ஆக்கப்பட்டோர் என்ற கபட சுலோகத்தினுள் அரசியல் செய்ய முடியாது.)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

பிரிவினைவாத எதிர்ப்புச் சட்டமான 6 ஆவது திருத்தச் சட்டம் என்பது தேசிய இனங்களின் அடிப்படை உரிமையை மறுக்கின்றது.

இராணுவ முகாங்கள் புனரமைப்பும் - குடியேற்றத்திற்கான முன்னேற்பாடுகள்

நில ஆக்கிரமிப்பு

பௌத்த மயமாக்கல்

இராணுவம் சார் பொருளாதாரம்

கடல்வளம் பறிபோதல்

காட்டு இலாகா என்ற பெயரில் பெருந்தேசிய ஆக்கிரமிப்பு

கைதிகள்- சரணடைந்தவர்கள்

நிலத்திற்கான போராட்டம்

வேலையில்லாதவர்களின் போராட்டம்

சிங்கள ஊர்ப்பெயர்கள் மாற்றம்

பௌத்த மயமாக்கல்

பௌத்த அகழ்வுத் தடயங்கள் என்றால் அது சிங்களவர்களுக்குத் தான் சொந்தம் என்ற மனப்பாங்கும், அதனைச் சுற்றி பௌத்த அடையாளத்தை அமைத்துக் கொள்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவுகளை கடற்படைவசமாக்குதல் தமிழக கடல்தொழிலாளர் கொல்லப்படுவதற்கு தடைசெய்யப்பட்ட கடல்தொழில் சாதனங்கள் மாத்திரம் காரணம் என்ற அபர்த்த அரசியலையும் செய்ய முடியாது. இப்படி எத்தனையோ உள்ளது. இது பற்றி பேசுங்களேன் இது பேசாதவர்கள் மார்க்சிய இயங்கங்களாக இருக்க முடியாது. குறைந்த பட்சம் மேல் உள்ளவற்றை சிங்கள மக்களிடம் கொண்டு செல்ல முடியாத நிலையில் தான் இடதுசாரியம் உள்ளது. தேசியக்கட்டத்தை விளங்காது தமிழ் தேசிய வெறியை தூண்டிவிட்டு லாபம் தேடுவோர், வர்க்க சிந்தனையற்ற தேசியவாதம் எந்த பலனையும் தராது என வகுப்பெடுத்துக் கொண்டே இருக்க முடியும்.

இன்று சந்தையை கைப்பற்றிக் கொள்ளும் முனைப்பில் ஈடுபட்டிருக்கும் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளின் யுத்தவெறியை எதிர் கொள்ள வேண்டியிருக்கின்றது. ஒவ்வொரு தேசங்களும், நாடுகளும் சுயசந்தையை பாதுகாப்பதும் அவசியமாகின்றது. தேசிய இனங்களையும், தேசங்களை மேலான்மை ஊடாக ஏகாதிபத்தியங்களும், தரகு வர்க்கக் கூட்டாளிகள் ஊடாக அச்சுறுத்துகின்றது. இதற்கு ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள புரட்சியாளர்கள் தங்கள் சொந்த தேசத்தில் உள்ள ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராகப் போராட வேண்டும். சொந்த தேசத்தின், நாட்டின் ஒடுக்குமுறையாளர்களுக்கு எதிராக போராடாது விட்டு தம் சக்திக்கு ஏற்ப இயங்கும் சக்திகளை மொத்தமாக இயங்கவிடாது செய்யும் சிந்தனை வடிவம் என்பது ஆளும் வர்க்கத்திற்கான ஒத்தோடி அரசியலாகும். ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடாது தம்மை புனிதவாதிகளாக முன்னிறுத்தும் மேட்டுக்குடிவாதமாகும்.

முதலாளித்துவ தேசிய அரசுகளை உருவாக்குவது என்பதும், தேசிய அரசுகளை பாதுகாப்பது என்பதும் ஏக போக மூலதனத்திற்கு எதிரான போராட்டத்துடன் சம்பந்தப்பட்டது தான். உலகம் முழுதும் ஒரேயடியாக புரட்சியை நடத்திவிட முடியாது. ஏக போகத்திற்கு மாற்றாக தேசிய சந்தையை பறிகொடுப்பதற்கு எதிரானது. இது ஈழம் தேசம் எதிர் கொள்ளும் சவாலாகும். ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சி தேசியச் சந்தைகளை இல்லாதாக்கு கின்றது. இந்த வேளையில் முதலாளித்துவ பொருள் உற்பத்தியின் ஊடாக புதிய தேசங்கள் வளர்ந்து வருகின்றது. இதனை கவனத்தில் கொண்டு பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையின் பெயரால் தேசங்களின் இருப்பை மறுத்துக் கொண்டு ஒரு அடியும் முன்னேற முடியாது. ஏனெனில் இதுதேசிய இன இயக்கங்கள் துலியெழும் காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை


மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள்- முனனேற்றப் பதிப்பகம் 1985

மார்க்ஸ் ஏங்கெல்ஸ் தேர்வு நூல்கள் 1) சோவியத் முன்னேற்றப்பதிப்பகம் 1983

மார்க்ஸ் ஏங்கெல்ஸ் இந்தியாவில் பிரிட்டிஸ் ஆட்சி, தொகுதி 3 சோவியத் முன்னேற்றப்பதிப்பகம்

க. கட்சி அறிக்கை சோவியத் முன்னேற்றப்பதிப்பகம் 1975

குடும்பம் தனிச் சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் - சோவியத் முன்னேற்றப்பதிப்பகம்

லெனின் 1916 மாசி பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதம்) சோவியத் முன்னேற்றப்பதிப்பகம்

லெனின்-நூல் திரட்டு 1 சோவியத் முன்னேற்றப்பதிப்பகம்

மார்க்சியமும் தேசிய இனப் பிரச்சனையும் ஸ்ராலின்

பதிப்பாசிரியர் நா. வானமாமலை மக்களும் மரபுகளும் NCBH 1993

வேலுப்பிள்ளை தமிழர் சமய வரலாறு

தினக்குரல் 19022017- கோகர்ணன்

https://www.facebook.com/mano.ganesan.3

http://www.workers.org/2011/us/african_americans_0224/>

https://www.marxists.org/archive/lenin/works/1916/jan/x01.htm




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் நடைபெற்ற போராட்டங்கள் அனைத்தும் வெற்றிபெற முடியவில்லை. ஆனால் இலங்கையில் பல மாற்றங்களை ஏற்படுத்தித் தான் இருக்கின்றது. இலங்கையில் நடைபெற்ற போராட்டங்களின் தோல்வி என்பது இன்னொரு போராட்டம் நடைபெறக் கூடாது என்பதல்ல. அது ஆயுதப் போராட்டமாகவோ அல்லது வேறொரு வடிவத்திலோ அமையத் தான் போகின்றது. எவ்வகையான ஆயுதம் ஏந்த வேண்டும் என எதிரிகளே தீர்மானிக்கின்றார்கள்.

புதிய குரல் வெளியீட்டகத்தின்
3ஆவது வெளியீடு

https://www.facebook.com/Tholar.Velan
http://velanவேலன்.blogspot.fr/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org